கடவுள் துணை.

பூலோகவிநோதக்கதைகள்.

[அநுபவஞான நூல்.]

அனுபந்த வால்யம்.

THE

Mysteries of the World.

By

B. A. A. RAJAIDRAM PILLAY,

Editor "Maha Vigadathoothan"

இவை

சென்னை "மஹா விகடதூதன்" பத்திராதிபர்

பா. அ. அ. இராஜேந்திரம் பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டன.

MADRAS

Printed at the Mercury Press

1922.

Registered & Copyright.

இக்கதை, இரண்டாவது வால்யத்தில்
ஞானப்பெண் தயாநிதி கதைக்குத் தொடர்பாய்ச் சேர்க்கப்பட்ட

அநுபந்தம்.

ஞானப்பெண் தயாநிதி, பிரசாத் என்னும் சிறுவனுக்குத் தன்னைத்தான் அறியும் ஞானத்தைச் சொல்லாமற் சொல்லிக் காட்டிய விநோதம்.

விநோதகவி.

மெய்யோ டபிர்நட்பின் விஞ்ஞானம் ஞானமெனக்
கைகாட்டி னளொரு பெண் காண்.

(கதை) படிப்பு துட்டுள்ள வரையில் கிடைக்கும். எவ்வளவு பணம் செலவழிக்கிறோமோ, அவ்வளவு படிப்பும் தற்காலம் கிடைத்து வருகிறது ஞானம் அப்படியல்ல, அது பணத்தால் வாங்கக்கூடியதுமல்ல, பணத்திற்கு விற்கப்படுகிறதுமல்ல, ஆனால் அது கிடைக்கக்கூடியவர்களுக்கு இலவசமாகவே அகப்பட்டு விடுகிறது ‘ஞானம் வாசலில் நின்று கூப்பிடுகிறது” என்று ஒரு பூதஞானி சொல்லியிருக்கிறார். “ஏக உருவாய்க் கிடக்கிற” தென்று இந்துஞானிகள் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல அதை கண்டடையக் கூடியவர்களுக்கு அது சர்வ சாதாரணமும் சாமான்யமுமாயிருக்கின்றது. ஆயினும் உன்னதமான தன்மை பெற்றது. பெரும்பேறெனப் பேர்பெற்றது சாத்தியத்திற்குள்ளாகாதது. எனவே ஞானம் வேறுதான், கல்வி வேறுதான். ஒவ்வொருவர் கூடைகூடையான படிப்பைப் படித்துச் சுமைசுமையான புஸ்தகங்களைத் தூக்கிச்சுமந்து உலகப்பெருமைக்காஸ்பதமான பெரும்பட்டங்களைப் புனைந்து தோன்றுகிறவர்களாயிருந்தும் ஞானமான யாதொரு ஏற்பாட்டையும் அவர்களால் சாதிக்கக்கூடாமல் போய்விடுகிறது. ஏழைக் குடியிற் பிறந்தவர்களும், தாய்தந்தையற்ற அநாதையாய் எங்காவது ஒண்டிப் பிழைத்தவர்களும், கல்விச்சாலைகளில் பெரும்படிப்பு படிக்கச் சக்தியற்றுக் கிடந்தவர்களும், சிறுவத்திலிருந்தே பள்ளிப்பாடங்களைக் கவனமாய்ப் படியாமல் சர்வமூடரைப்போலும், மந்தபுத்தி யுடையவர்களைப்போலும்விளங்கி; உபாத்தியாயர், உடன் மாணாக்கர்கள், மற்றுமானவர்கள் மகா கேவலமென்று நிஷேதிக்கப் பட்டவர்களுமான இப்படிப்பட்டவர்களெல்லாம் ஒவ்வோர் காலத்தில் உலகத்தையே ரட்சணை செய்வதற்கேதுவான பரமஞானங்களைக் கண்டுபிடித்து, மகா அருமையான சாஸ்திரங்களை வரைந்து உலகத்திற் குபகரித்துவைத்து பெரும் ஞானிகளென்ற பேர்படைத்தார்களென்று நாம் சரித்திரங்களில் வாசித்திருக்கலாம். இப்படிப்பட்டதெல்லாம்

பிறப்பின் கூறுபாட்டிலேயேயன்றி படிப்பின் வியாபாரத்தாலல்லவென்று அறிவாளிகள் அவதானித்துக்கொள்ளக்கூடும். பூவுலகத்திலே நிறைந்துள்ள ஜீவகோடிகளில் மானிடபிறப்பு, அதாவது மனுஷ பிறவிபேதம் 9 நூறாயிரமென்று இந்துஞானிகள் கணக்கிட்டிருப்பதில் அத்தொகைபோலவே அவ்வொன்பது நூறாயிர மனுஷவர்க்கங்களும் பிறப்பின் தன்மையால் மனுஷரூபமாகவே காணப்பட்டபோதிலும், ஒவ்வொரு மனுஷனையும் ஊன்றிப் பார்த்தும் உற்றுக் குறிப்பிட்டும்வந்தால் மேற்படி ஒன்பது நூறாயிரத்தின் விரிவான அநேககோடி மனுஷரும் முகபேதத்தாலாவது, அங்கவுறுப்பின் பேதத்தாலாவது, ஒருவருக்கொருவர் மாறுபட்ட அச்சு அதாவது உருவமாகவே காணப்படுவார்களன்றி ஒரே சாயலாக இருக்கமாட்டார்களென்பது பிரத்தியக்ஷம். இங்ஙனம் உருவம் எப்படி ஒருவருக்கொருவர் மாறுபட்டு நிற்கின்றதோ, அதேபோலவே ஒவ்வொருவருடைய சுபாவமும் ஒவ்வோர் விதமாய் மாறுபட்டுநிற்குமென்பதும் நாம்சொல்லாமலே விளங்கும். இப்படி ரூபங்களே மாறுபட்டு நிற்கும்போது சுபாவமும் மாறுபட்டு நிற்குமென்பது ஒருவர் சொல்லிக்காட்டத்தேவையில்லையே. ஆகவே ஒவ்வொருத்தருக்கும் ஒரோர்வித சுபாவம் இருக்கிறதென்பது உண்மை.

இப்படிப்பட்ட சுபாவ பேத லக்ஷணங்களில், ஞானானுக்கிரகம்பெற்றவர்களிடத்திலெல்லாம் ஒருவித நூதனசெய்கைகள் காணப்படுகின்றன. அவர்கள் முகத்தில் சந்தோஷக்களையே இருக்கிறதில்லை. என்னத்தைபோ லக்ஷம் பத்துலக்ஷம் ஆஸ்தியைப் பறிகொடுத்துவிட்டவன் எண்ணமும் ஏக்கமுங்கொண்டில்லையா. அதுபோல ஏதோ சிந்தனையைச் சாதிக்கிறதில் முகத்திற் கனிவேதோன்றுகிறதில்லை. சிலருக்குத் தங்களையும் அறியாமலேயே ஒருவித செய்கை நிகழ்ந்துகொள்ளுகிறது அதாவது கூர்ந்த அறிவுடையவர்களாயாவது, ஞானிகளாயாவது, பரம ஆப்ஸ்ஸ்தவர்களாயாவது ஆகிறவர்கள் அடிக்கடி தங்களையுமறியாமல், தம்இருகரங்களின் பத்துவிரல்களின் நுனியையும் நுனி பொருந்தவைத்து, அதாவது ஐந்து விரல் நுனியோடு ஐந்து விரல் நுனியை அழுத்தி, நகக்கண்களைப் பார்த்துப்பார்த்துப் பிரிக்கிறதுதான். இந்த வழக்கமுடையவர்கள் எப்படியாவது ஒருவிதஞானத்தை அடைகிறார்கள். ஆனல் இவ்விதச்செய்கையை வழக்கப்படுத்திவந்தால் அதனல் ஞானம்வருமென்று மற்றவர்களும் ஆவலாதி கொள்வார்களெனினும், அப்படியே செய்தாலும் அனைவருக்கும் அது சித்தியாவது கூடாதகாரியம் மேற்படி வழக்கமுடையவர்களுக்குங்கூட அது அவர்களுக்குந் தெரியாத நேரங்களில் கைக்குறும்பு அல்லது சேஷ்டையைப்போல நிறைவேறிக்கொண்டு வருகிறதேயன்றி மற்றபடியல்ல. ஆகவே அதுஎல்லாருக்கும் ஆகிறதில்லை.

யோகிகளாயாகிறவர்களுக்குள் ஒருவித சுபாவமிருக்கிறது. அதாவது அவர்கள் எப்போதும் தங்கள் இருபாதத்தின் பெருவிரல் நகங்களின்மேல் நாட்டப்பண்ணுகிறதுதான். இந்தவழக்கம் அவர்களையும் அறியாமலே அவர்களால் நடந்தேறிவருகிறதாகத்தெரிகிறது. மேலும் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் சிலகுறிகளை இத்தேசத்தின் ரிஷீஸ்வராள் சொல்லி வைத்திருக்கிறார்கள். யோகிஞானியென்று பேர்படைக்கிறவன் விட்ட குறை தொட்ட குறையைச்சம்பந்தித்து வந்தவனாயிருக்க வேண்டுமென்பதொன்று; துலாராசியிற் பிறப்பதொன்று; சந்திரகலை பதினாறில் ஓடும்போது கருதரிக்கப்பெறுகிறதொன்று; அதோடு அவன் வலக்கண் உறைந்து தள்ளியிருக்குமென்றும், இடமும் வலமும் ரேகையிருக்குமென்றும், முதுகில் மச்சமிருக்குமென்றும், இருபுறமும் தனரேகையிருக்குமென்றும், நெற்றியில் சுக்கிரனிருக்குமென்றும், இருபுறமும் சக்கரமிருக்குமென்றும், மார்பில் பிறைபோல் மச்சமிருக்குமென்றும், உண்ணாக்கில் மவுனரேகையிருக்குமென்றும், அமிர்தசக்தியுள்ளவனாயிருப்பானென்றும் இவ்விதமெல்லாஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இவ்வளவுதூரம் இங்கு ஏன்சொல்லவேண்டியிருந்ததென்றால் ஞானம் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் கைவல்யமென்றும் இவர்களுக்கே அகஸ்மாத்தாக கஷ்டமின்றிக் கிடைத்துவிடுகிறதென்றும் அது இலவசமான ஒரு யென்றுந் தெரிந்துகொள்ளுவதற்காகவேதான்.

இதுபோலவே அமிர்தசரஸ் என்னும்நாட்டைப் பரிபாலனம்பண்ணும் மானதன் என்னும் மன்னனுக்கும், மதிதேவி என்கிற இராணிக்கும் இரண்டுபிள்ளைகளிருந்தன. மூத்தபிள்ளை லோகநாயகிஎன்னும் பேர்கொண்ட பெண்குழந்தை, இளைய பிள்ளை பிரசாத் என்னும் பேருடைத்த ஆண்குழந்தை. இவ்விரண்டுபிள்ளைகளும் தம் தாய்தகப்பன்மார்களுக்கு இரு கண்மணிகளைப்போல் இருந்தன. அவ்வளவு அருமையாய்ப்பேணி வளர்க்கப்படுகிறார்கள். ஒருகடைக்காரன் தன் தராசிற்பூட்டிய இருதட்டுகளின்மீதும் எப்படி ஏற்றத்தாழ்வு வராதிருக்க கண்ணோட்டமிடுகிறானோ அதேபோலவே இருபிள்ளைகளின்மீதும் பெற்றோர்கள் சரி சமான அன்பு பாராட்டி அவர்களை நிமிஷநேரமும் தங்கள்கண்களை விட்டகலாதிருக்கும்படியான பாதுகாப்பில் வைத்து வளர்த்து வந்தனர்கள். பிரசாத் என்பவன் இராஜ புத்திரனாயிருந்தும், இராஜ கோலாகலத்தில் அனேகமாயுழலக்கூடியவனாயிருந்தும், அவன் நாட்டமுஞ் செய்கையும் வேறாகவேயிருந்தன. அதோடுகூட அவனது உள்ளம் ஒருவித மமதையின்மீதும் ஆசனமிட்டுக் குந்தியிருந்தது. அரசர்களுக்குச் செல்வச்செருக்கால் மிகுதியான கர்வமிருக்கிறதென்றால் ஞானிகளுக்குப் பரமாம்ஸமென்கிற செருக்கால் அரசர்களிலும் மேலான கர்வம் உண்டாயிருக்கிறதுவழக்கம். 'து

றவிக்கு வேந்தன் துரும்பு' என்பதும் மூதுரையல்லவா? அரசனின்வாக்கு அவன்ஊர் எல்லைவரைக்குஞ் செல்லும்; ஞானியின்வாக்கு பூமண்டலத்தின் கடைபாந்தர எல்லைகள் வரைக்குஞ் செல்லும் அரசனின் செங்கோல் அவனின் இராஜ்யபாரத்தை மட்டுந்தான் தாங்கும், ஞானயோகியின் யோகதண்டமானது உலகுமுழுவதையுஞ் சுமைதாங்குமென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு எவரும் நிகரல்லவென்கிற கர்வம் மெத்த, அதுபோலவே இந்தப்பிரசாதுக்கும் ஒருவித மமதையிருந்தது.

பிரசாதும் தன் சகோதரியும் வளர்ப்பில் எவ்வளவு மேன்மையாகவும் கரிசனையாகவும வளர்க்கப்படுகிறார்களோ, அதுபோலவே கல்வியிலும் வெகுமீசுரமாகப் பயிலப்பட்டுவந்ததில் இருவரும் இணைபிரியாது பள்ளிக்கூடத்திற்குப் போவதும்வருவதுமாயிருப்பார்கள் அதோடுகூட பிரசாதின் சகோதரி லோகநாயகிக்குத் தன்ஒரேதம்பியின்மீது மெத்தபாசம். அவளுயிருக்குயிராய் அவனைப்பாவித்தாள். நிமிஷநேரமும் அவனைக் கவனியாம லிருக்க மாட்டாள் அவள் சாப்பிடுவதிலும் படுப்பதிலும், எந்தெந்த விஷயத்திலும் அவன்மீது கண்காணிப்பாயிருப்பாள். கூடப்பிறந்த பிறப்பு, ஒரே இரத்தமென்கிறதைக் கவனிக்குந் தன்மை அவளிடத்தில்தான் மற்றோர் கற்றுக்கொள்ள வேண்டியதான அவ்வளவு அன்பைக்காட்டி வந்தாள். எப்போதும் மூத்தசகோதரிகள் தங்கள்தம்பிமார்மீத ஒருவித பெரும்பக்ஷத்தை வைக்கிறது உலகத்தில் வழக்கந்தானென்றாலும் லோகநாயகி காட்டிய பக்ஷமோ, இப்படிப்பட்டதற்கெல்லாம் மேலானதும் அளவறுக்கப்படாததுமாயிருந்தது. இப்படியாக இவர்கள் வளர்ந்துவருகையில் லோகநாயகி பருவதசையடைந்து சுந்தரமங்கையாய் விளங்கினள். அப்போதுந் தன் சகோதரனைத் தூரவிலக்கினவளல்ல அவனையே கிருபாநோக்கத்தோடு பார்க்கிறதும், மந்தகாசத்தோடு வார்த்தைகளாடி அவனைப்போஷிப்பதும், உத்தமமான சம்பாஷணைகள் புரிவதுமாயிருந்ததில் பிரசாது மநல்லபாலியதிசைக்கு வரவர தன் சகோதரியின் ஐக்கியபாசத்திலேயே அன்பளாவியிருந்தான். இப்படியிருக்க சிலநாள்களுக்குள் மேற்படி ஐக்கியபாசதோஷத்தால் அவனுக்கு தன்சகோதரிமீது சாதலுண்டாகி அவளைக் கலந்துவிட வேணுமென்கிற எண்ணங்கொண்டான். துஷ்கருமமான இப்படிப்பட்ட எண்ணம் அவனுக்கு உற்பத்தியானது அவனுடைய அகங்காரத்தன்மையினு லல்ல. அவன் ஞானக்கூறில் உத்பத்தியாகி, ஞானநாட்டமுடையவனு யிருந்ததில் ஞானிகள் காலதேச வர்த்தமானங்களை கவனிக்காதவர்களானதால் அதேபோல இவனுக்கும், சிறியோர் பெரியோர், தாய் தங்கை, குமாரத்தியென்கிற பேதங்கெட்டு எல்லாம் சமமேயென்கிற ஒரு கோட்பாடு அவனை மருவினதாலும் நாள்தோறுந் தன் சகோதரியின் அழகுரூப

த்தைப்பார்த்து வந்ததாலும், அவளோடு அதிநேசபாசமாய்ப் புழங்கி வழங்கியிருந்தாலும் அந்தப் பழக்க வாசனையானது அப்படி அவனைக்கிளப்பினது ஆகவே இந்த எண்ணத்தைக் குடிகொண்டு வெகுநாளாக அவள் கையைப் பிடிக்கக் காத்திருக்கிறான். லோகநாயகிக்கு இவனெண்ணந் தெரியாது. அவள் தன் உடற்பிறப்பின் பாத்தியதையைக்கோரி யாதொரு சங்கையுமின்றி தாராளமாகத் தன் தம்பியை ஆசித்து வருகிறாள்.

இப்படி வெகுநாள் நடந்தேறி வருகையில் ஒருதினம் லோகநாயகி தோட்டத்திலிருந்து ஒரு கிச்சிலிப்பழத்தை அறுத்து வந்து அதின் ஒருசுளையை வாயில்போடும் அந்தநேரம் தன் சகோதரனின் ஞாபகம் சட்டெனத்தோன்றி அவன்மீதுள்ள தன் பேரன்பின் பெருக்கால் வெகுகனிவோடு 'அடா தம்பீ! பிரசாது இப்படி வா ஒன்றுதருகிறேன்' என்றுஅழைக்கவும், பிரசாதுக்கு அவ்வார்த்தையை கேட்டவுடன் ஒரு பீரங்கியானது அவன் காதில் வெடித்ததுபோல அதுவசைய சுக் காணப்பட்டு மகாகோபம் உண்டாகித் தன்காலை பூமியிலுதைத்து முகங்கடுகடுத்து 'ஆ! என்சகோதரி என்மீது மகாஆசை கொண்டிருக்கிறாளென்று இதுநாள் நினைத்திருந்தேன்;இவள் ஆசைப்பெருக்கால் என்னைக்கூடுவாளென்றும்எண்ணினேன்; கடைசியாக இவள் என்னை என்னஒரு ஈனமாகப் பாவித்து அடாஎன்றுகூப்பிட்டாளே; நான் ஆண்பிள்ளையல்லவா! இவள் கேவலம் பெட்டைச்சி, எந்தநாளையிலும் கீழ்ப்பட்டவள்; நான் உலக விவகாரங்களில் ஊடாடி சகலபரிபாலனமும் பண்ணத்தக்கவன்; ஆண்பிள்ளைகளுக்கு மகிமை அவர்கள் சுதந்தரமாயிருக்கிறது; பராக்கிரமம் அவர்கள் வாகுவில் விளங்குகிறது; சிரேயசு அவர்கள்மேலுலாவி நிற்கிறது; பெருமையும் பேரும் அவர்கள் பங்காயிருக்கிறது; ஆண்பிள்ளைகளே உலகத்தை நிர்வகிக்கிறவர்களா யிருக்கிறார்கள்; பெண்கள் ஒரு விஷயத்திலும் கூட்டிராத நடைப்பிணங்கள் போலத்தானே; இவர்கள் இல்லங்களில் சிங்காரித்திருக்கிற சித்திரவிசித்திரப் பிரதிமைபோலத்தானே, ஆண்மக்களின் கஷ்டார்ஜிதத்தை செலவினால் அழிவு படுத்திக்கொண்டு உண்ணுவதும் உடுத்துவதுமாயிருந்து வீணேஅழிந்துபோகிற சாமான்யப் பிறவிகள்தானே; இவர்கள் ஆண்மக்களுக்கென்று பிறந்து ஆண்மக்களுக்கென்று வாழ்ந்து ஆண்மக்களுக்கென்று உழைத்து ஆண்மக்களுக்கென்றே பாடடைந்து ஆண்மக்களின் சுகதுக்கங்களில் உடனாளிகளாயிருந்து அவ்வளவிலேயே ஒழிந்து போகிறவர்கள் தானே; இவர்களுக்குப் பேரேது, பெருமையேது, உலகமேது, உன்னத மகிமை ஏது? இன்னாள் இன்ன பேருடையாள், இன்ன தகைமையாள், இன்ன மகிமையுடையாள்,இருந்தாள் போயினாள் என்கிற கியாதிஎது? இவர்கள் சாதாரணமாய் ஒருதொழிலாளிக்கு தன்கையாயுதமானது அவன்வேலைசெ

ய்வதற்குபயோகமாவதுபோல ஆண்மக்களின் கையாயுதமாகத்
தானே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெண்வர்க்கங்களில் ஒரு
த்தியான இந்த என் சகோதரி ஸர்வமகத்துவம் பொருந்திய ஆ
ண்மகனாகிய என்னை அச்சமின்றியும் பயமின்றியும் அடக்கமின்றி
யும், தன் வாய்திறந்து என்னை 'அடா என்று கூப்பிட்டாளே' எ
ன்று மகா கோபத்துடனே தனக்குத்தானே பேசிக்கொண்டு அ
ப்பொங்கார விசனத்துடனே தன் தாயாரிடத்தில் ஓடி, 'அம்மா
என் அக்காள் லோகநாயகி என்னை 'அடாஎன்று அவசங்கைப்ப
டுத்திக் கூப்பிட்டாள். அது எனக்குமிகவும் மனவருத்தமாயிருக்
கிறது அவள் பெண்பிள்ளை, நான் ஆண்பிள்ளை. கொஞ்சமேனும்
ஆண்பிள்ளையென்ற மட்டுமரியாதையின்றி என்னை அப்படி அ
ழைக்கலாமா' என்று மூர்க்கமாய்ச் சொல்லுகின்றான். தாய் இரா
ணி இதைக்கேட்டதும் 'அடா மகனே! இதற்காகவா இத்தனை
பெரிய கோபம் கொண்டு சொல்ல வந்துவிட்டாய், உன் அக்காள்
உனக்குப் பெரியவளல்லவா? உன்மீது அவள் வைத்திருக்கும் அ
ன்பின் பெருக்கினாலேயே அப்படி அழைத்திருக்கலாம். அதிலே
யாதொருபழுதுமில்லை. உனக்கு முன்பிறந்தவள் உனக்கு மாதா;
இது நமதுசாஸ்திரசட்டம் ஆகவே உன் தாய் உன்னை அன்போடு
அழைத்ததுபோல பாவித்து நீ அவளை கனம்பண்ணவேண்டும். இ
தைப்பற்றி நீ கொண்டகோபத்தை அப்பாலுதறிப்போட்டு மன
க்குரோதமின்றி உன் அக்காளோடு அன்புபாராட்டி சுகித்திரு. ம
கனே இதுதானுனக்கு நான்சொல்லவேண்டியதன்றி லோக நாய
கியைப்போய் விசாரிப்பதற்கு யாதொரு ஏதுவுமில்லை' என்றுசா
ந்தமாய்ச் சொன்னாள். அக்காள் அடாவென்றதினாலேயே பேயா
வேசம் கொண்டவனைப்போல பொங்கார கோபத்தோடு வந்தவ
ன், இங்கு தன்தாயாராலேயும் அடா என்று அழைக்கப் பட்ட
தைக் கேட்டதும் ஒரு பேயேறியிருப்பவன்மீது இன்னொருபேய்
ஏறினதுபோல இவனை மகா ஆட்டம் ஆட்டிவிடவும், தனக்கெழு
ம்பிய கோபத்தைத் தானே அடக்கிக்கொள்ளச் சக்தியற்றவனாய்
அதேநேரமே, வீட்டைவிட்டு வெளிப்புறப்பட்டுவிட்டு இனி ஸ்தி
ரிஜாதி முகத்திலேயே விழிக்கக் கூடாதென்று பரதேசம் செல்ல
வழி பிடித்துக்கொண்டான்.

உலகத்திலே மூத்த சகோதரிகளாயிருக்கிற பெண்கள், தங்
களுக்கு ஒருவருஷம் குறைந்த வயதுடைய சகோதரனாயிருந்தா
லும் அவனை "அடா தம்பீ போடா வாடா" என்று கூப்பிடுகிற
து பெரும்பாலும் வழக்கமாயிருக்கிறது. சிலபெண்கள் தங்கள் ச
கோதர உரிமையின் அன்பினாலே அப்படி ஆசையாய்க் கூப்பிடு
கிறார்களென்று ஒப்புக்கொண்டாலும் சிலர் சிலாக்கியத்திற்காகி
லும் தங்கள் சகோதரரை அடா, அடா வென்று அனுவதித்துக்
கூப்பிடுகிறதுண்டு, சிலர் தமது தம்பியரை அடா என்று கூப்பிடு

வதில் தங்களுக்கு அதில் என்னமோ பகிமையிருக்கிறதுபோல எண்ணிக்கொண்டு கூப்பிடுகிறார்கள். சிலர் தன் சகோதரர் எவ்வளவு பெருமையும் பேரும் பெற்றவர்களாயிருந்தாலும், "அவர்கள் நமக்குச் சின்னவர்கள் தானே; நாம் என்ன மரியாதை கொடுக்கிறது" என்ற செருக்குகொண்டு அடா என்று கூப்பிடுகிறார்கள். இன்னொருவிதமான பெண்கள், அவர்கள் தாங்கள் அடாபோடா, வாடாவென்று கூப்பீட்டுக்கொண்டிருக்கிறதற்கு ஒரு தம்பி வேண்டுமென்று வரங்கேட்டிருந்திருப்பார்களோ என்னமோ; அம்மம்ம! தப்பித்தவறி ஒரு தம்பி இருந்திட்டால் போதும், நூறுதரமாவது அவனை ஒரு சின்ன சின்ன பேச்சுக்கெல்லாம் அடா அடாவென்று கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். சில பெண்கள் தம் சகோதரருடைய சிநேகிதர் யாராவது அவர்களோடு வந்திருக்கும் நேரங்களில் அந்தச் சிநேகிதர்களுக்குத், தாம் இன்னாரென்று காட்டிக்கொள்ளவும், அல்லது அந்த சிநேகிதர் தம்மை ஒருகவுரவமாய் எண்ணிக்கொள்ளவும், அல்லது அந்த சிநேகிதரிடத்தில் தாமும் பேச்சுகொடுத்து பேச்சுப் பிடுங்கவும் அல்லது அவர்களிடத்தில் பேசுகிற பாவனையாய் எண்ணியும் எங்கடா, எதடா என்று வழங்குகிறதுமுண்டு. இதுவும் பெண்களுக்குள்ள ஒரு வழக்கந்தான். ஆனால் இவ்வித எண்ணங்களைக் கொண்டழைக்கும் சந்தர்ப்பமானது பெரும்பாலும் வெகு கெடுதிக்கிடமாயிருக்கின்றதென அவர்களுக்கு விளங்குகிறதில்லை. இது மரியாதைக் குறைவுக்கும், சகோதர பிரிவுபாட்டுக்கும், அன்பின் வெறுப்புக்கும் காரணமாகிறது. சிலவேளைகளில் அவகேடான உதாசீன வார்த்தைகளால் தூறிச் சண்டையிட்டு அதோடு சகோதரபாவமே பிரிந்துபோகும்படியான பெரும்பிளப்பை இது உண்டாக்கிவிடுகின்றது. எனவே, லோகநாயகி இப்படிப்பட்ட ப்ரீதசிந்தை யுடையவளாயில்லாமல் தன் அன்பின் பெருக்கையும் மாத்ரு தன்மையையும் கொண்டு அடா என்றழைத்ததாயிருந்தாலும் அது இந்தநேரத்தில் வினைக்கிடமாய்ப் போச்சுது.

இங்கே, பிரசாது தன் தாயார்மீதும் சகோதரிமீதும் பெருங்கோபப் பண்ணிக்கொண்டு வெளிப் புறப்பட்டதும், அன்று தொட்டு ஸ்திரீகளின்மீது ஒருவித வைராக்கியத்தையும் அதோடுகூட ஒருவித விசாரணையையும் கிளப்பிக்கொண்டான் அதாவது "ஸ்திரீகளை உலகத்தில் ஒன்றுமில்லாதவர்களாயாக்கிப் போடவேண்டும்; அவர்கள் ஆண்களைப்பெற்ற தாயாயிருந்தாலும் தாய் தகப்பனைப்பெற்ற பாட்டியாயிருந்தாலும் பாட்டியைப்பெற்ற பூட்டியாயிருந்தாலும் அவர்களை ஆண்மக்களுக்குக் கீழாயிருப்பவர்களாகவே ஆக்கிப்போடவேண்டுமென்பதே. இந்த எண்ணத்தைக்கொண்டு விசாரணையிலிறங்கி ஒவ்வொரு மதஸ்தர்கள் ஒவ்வொரு கொள்கைக்காரர்களிடத்திலெல்லாம் போய் "ஆண்முக்

தியா பெண்முந்தியா" என்கிற கேள்வியைப் போட்டுக்கொண்டே வருகிறான். ஒரு நாஸ்திகனிடத்தில் போய் 'ஆண் முந்தியா பெண்முந்தியா' என்றுகேட்க அவன் "உலகம் முந்தியா கடவுள் முந்தியா" இதை முன்னே நீ எனக்கு விவரித்தால், நான் உன் சங்கைக்குச் சமாதானம் சொல்லுகிறேனென்றான். அவனை விட்டு ஒரு வேதசாஸ்திரி யிடத்தில்போய் 'ஆண்முந்தியோ பெண் முந்தியோ' என்றான். அவன் 'வேதம் முந்தியா சப்தம் முந்தியா' இதைத் தெரிந்துரைத்தால், உமது கேள்விக்கு உத்தரவு கிடைக்கும் என்றான். அவனைவிட்டு ஒரு தத்துவ சாஸ்திரியிடத்தில்போய் 'ஆண் முந்தியா பெண் முந்தியா என்ன, அவன் 'பெட்டை முந்தியா முட்டை முந்தியா' இதைத் தெரிந்துரைத்தால் அதை விவரிக்கக்கூடும் என்றான். அவனையும் விடுத்து ஒரு பூத தத்துவ சாஸ்திரியிடத்தில் சென்று 'ஆண் முந்தியா பெண்முந்தியா' என்று வினவினன். அவன் 'வித்து முந்தியா செடி முந்தியா' என்று தெரிந்தால் இது தெரியும் என்ன, அவனைப் புறக்கி, ஒரு வானசாஸ்திரி யிடத்தில்போய் 'ஆண் முந்தியா பெண் முந்தியா' என்ன அவன் 'ஒளி முந்தியா இருள் முந்தியா' இதைத் தெரிவியுமென்றான். அவனைவிட்டு ஒரு கவிராயனிடத்தில் போய் 'ஆண் முந்தியா பெண் முந்தியா' என்று வினவினன் அவன் 'சொல் முந்தியா பொருள் முந்தியா' என்று எனக்கு நீர்சொல்லும், அதன்மேல் இதற்கு அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம் என்றான்.

பிரசாது, இப்படி கண்ட கண்ட விடங்களிலெல்லாம் சுற்றிச் சுற்றி அங்கங்கும் மேற்படி கேள்வியைப்போடுகிறதும், சம்பாஷணைகள் புரிவதும் அவர்கள் கேள்விகளுக்கு இவனாலானமட்டும் உத்தரவுகள்கொடுக்கிறதும், இப்படியான உபயப்பிரஸ்னைகள் புரிந்துகொண்டுவந்தும், தன் மனதிற்குச் சரியான சமாதானங் கிடைக்காமற்படி ஏதோ ஒரு பைத்தியம்பிடித்தவன்போல யார்முகத்தையுந்திரும்பிப் பாராமலே 'கல்லடி சித்தன் போனவழி காடுமேடெல்லாந் தவிடுபொடி' என்றமாதிரியாக கண்முகந்தெரியாமல் நடக்கிறான். இவன் நடையின் போக்கில் சிலபோது இரண்டு மூன்று நாள் வரையில் அன்னந் தண்ணீரே கிடைக்கிறதில்லை. சிலவேளை இரவுபோனதும் பகல்வந்ததும், பகல்போனதும் இரவுவந்ததும் கூட கணக்குத் தெரியாமல் நாலுநாள் ஐந்துநாள் ஒரே மூச்சாக நடந்து செல்வான். சிலவேளை, நடையின் மும்முரத்தில் மலைமேலேறி இறங்கினனோ, ஏரியில் மதகுகளில் வீழ்ந்து கடந்தானோ, குளங் குட்டைகளில் வீழ்ந்தெழுந்தானோ ஏதொன்றும் தெரியாமற்படியே நடப்பான். சிலவேளை, யானை, கரடி, புலி முதலிய துஷ்ட மிருகங்கள் நிறைந்துள்ள அகோர பயங்கரமான அடவிகள், சிறு காடுகள், பெருங் காடுகள் முத

லானவைகளிலெல்லாம் யாதொரு அச்சம் பயங்கரங்களின்றியே எங்கு இருக்கிறோம் எங்குநடக்கிறோம் என்பதொன்றுமே தெரியாமற்படி நடை நடைப்பான். ஒவ்வொரு தொடர்ச்சியான ஆரண்யங்களுள் புகுந்தானானால் எட்டுநாள் பத்துநாட்கள் வரையில் சூரியனென்பது என்னவென்றே தெரியாதிருக்கும்; அப்படிப்பட்ட இருண்ட கானகங்களினுள் ளெல்லாம் புகுந்து புகுந்து வழிபிடித்துச் செல்வான். இப்படியாக நடந்து கடந்து வரும்போது, மகிதலமென்கிற பட்டணத்தில் சந்நியாசிப்பெண் தயாநிதியம்மாள் ஸ்திரீ ஜனங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருக்கவும், அப்பிரசங்கத் தோரணையில், "உலகத்தின் எல்லா ஆண்மக்களும் பெண்களிடத்தில் நின்றே பிறந்தவர்கள்" என்று சொல்லிக்கொண்டிருக்க, "அ ஆ இங்கேதான் நமது சந்தேகத்திற்குச் சரியான விடைகிடைக்கும்" என்று, சந்நியாசிப் பெண்ணை நோக்கி "சந்நியாசியம்மாளே, ஆண்முந்தியா பெண்முந்தியா?" என்று கேட்கவும், சந்நியாசிப்பெண், அந்த ஸ்திரீகளின் கும்பலில் இப்படிப்பட்ட கேள்விக்கு விடை கொடுப்பதற்கு அங்கு சரிப்படாதென்று தனக்குள் எண்ணி, "இன்னொரு நாளையில் இதற்கு உத்தரவு சொல்லுகிறேனென்று ஆகாயத்தில் மறைந்தாப்போல மறைந்து ஸ்திரீகளின் கும்பல் கலைந்த, அடுத்த அதேநேரமே பிரசாதுவுக்குத் தோன்றித், தம்பி நீ கேட்ட "ஆண் முந்தியா பெண் முந்தியா" என்னும் கேள்வியைத் தெரிந்துகொள்ள, அதற்கு முன்னதாக "ஆத்துமா முந்தியா உடல் முந்தியா என்கிற சங்கையை அறுத்துக்கொள்ளவேணும்; என்னோடு வாரும்" என்று வெகுதூரம் நடத்திப்போய் ஜம்னாநதிதீரத்தில் கொணர்ந்து நிற்கவைத்துத் தென்திசையாகத் தன் விரலைச் சுட்டி 'இதோ பார்' என்றனள். (கல்வியல்ல கேள்வியல்ல கைகாட்டும் காரணம் என்று ஞானிகள் சொல்லியிருப்பதையும் இங்கு கவனிக்கவேண்டியது.) இவன் திரும்பிப் பார்த்ததும் சந்நியாசிப் பெண்ணைக் காணோம்.

அங்கு சுற்றுமுற்றும் நோக்கினான். இவன்நோக்கிய சற்று தூரத்தில் ஒருமண்மேடு தெரிந்தது. அந்த மண்மேட்டினடியில் மலையைக்குடைந்து ஒரு சிறுகோவில் ஏற்படுத்தியிருப்பதுபோலவும், இவன் கண்ணுக்குப் புலப்படவும், அங்கேபோனான். போய்ப்பார்க்கையில் ஒரு யோகீஸ்வரர் நிஷ்டையில் குந்தியிருப்பதையும் அவர்மேல் பெருமண்மேடிட்டுப்போயிருப்பதையும், அந்த மண்மேட்டின்மேல் நூறு இருநூறு வருஷக்கணக்கான வேப்பமரம், அரசமரம் முதலானவை பிரமாண்டமாய் வளர்ந்து தழைத்திருப்பதையும், அம்மரஞ் செடிகளின் ஜல்லிவேர் முதலானவைகள் இந்த ரிஷீஸ்வரரின் சிரசு கைகால் உடல் முழுதும்பாய்ந்து சுற்றிக்கொண்டிருப்பதையும், மரங்களின்மீது கூடுகட்டிக் குஞ்சுபொரித்துவாழும் காக்கைகள், மற்றும் பக்ஷிகள் தங்கள் உச்சிடங்களையும் எச்



சங்கிலையும் கழித்திருப்பது அவர்மீது வழிந்தொழுகிப் படைப டையாய் ஒட்டிக்கொண்டிருப்பதையும், அவர் முதுகின்மீது பா ம்புப் புற்றுகளெழும்பி அதில் பாம்புகள் குடிகொண்டிருப்பதை யும், அவர் கைகால் நகங்கள் மண்ணோடுபாய்ந்து சொருகிக்கொ ண்டு வளைந்து கொக்கிமாட்டினதுபோல மாட்டிக்கொண்டிருப்ப தையும், அவர் தேகம் மனுஷதேகமா யல்ல: ஒரு ஆயிரம் வருஷங் களுக்கு முன்னிருந்த கல்தச்சனெவனோ ஒருத்தன் கருங்கல்லா ல் விக்கிரகமொன்றைச் செதுக்கிப்போட்டு வைத்திட்டிருக்கிறதி ல்லையா. அம்மாதிரியாய்க் கிடைக்கிறதையும் பிரசாது சற்றுநேர ம் உற்றுநோக்கி "ஐயையோ! இந்தப் பரமாத்மா எத்தனை ஆயிரம் வருஷகாலமாய் இந்தநிலையில் நின்றுவிட்டிருக்கிறாரோ பாபம், இ வரைப்பாதுகாத்துக்கொண்டு பூசனைபுரிந்திருப்பவர்கள் இங்கொ ருவருமில்லையா; நாமாவது நம் கர்மந்தொலைய இவர் பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொள்ளலாம், என்று சாஷ்டாங்கமாய் விழுந்தா ன். விழுந்த அந்தநேரத்திற்கு ரிஷீஸ்வரரின் கண்கள் சடுக்கெனத் திறந்து மூடிக்கொண்டதுமன்றி அவர் மூக்கிலிருந்து ஒரு பெரிய சுவாசம் புறப்பட்டது (இந்த யோகீஸ்வரருக்குப் பன்னிரண்டு வ ருஷத்திற்கொருமுறை இப்படி ஒரேவினாடி நேரத்தில்கண்திறந்து ஒருமூச்சுவெளிவந்து மறுபடியும் அடைபட்டுப்போய் யோகநிஷ் டையில் நின்று விடுகிறது வழக்கமாகலான், அந்தநேரம் இந்தப் பிரசாது அவருக்கு எதிர்ப்பட்டநேரமாய்வந்து சம்பவித்துக்கொ ண்டது, எனவே) யோகீஸ்வரர் விழிதிறந்த மாத்திரைப்பொழுது கடாக்ஷம் பிரசாதின்மேற்பாயவும் உடனே இவனொருவித மாயை யால் மூடப்பட்டான். இவனை மாயையானது மூடுகிற அந்தப்போ து யோகியின்மூச்சு வெளிகண்டதை இவன்கேட்டானானதால் அ தே மூச்சு சப்தமே இவனுக்கொரு பிரஜண்டமாருத ஓசைபோல உண்டாய்விட்டது அம்மூச்சு ஆகாயத்தையும் பூமியையும் அப்படி யே சுருட்டி அலைக்கழிக்கத்தக்க ஒருபெருஞ் சுழல்காற்றாக அவ னுக்குக் காணப்பட்டது. அக்காற்று அஷ்டதிசையும் பரவி மலை களையும், மரஞ்செடிகளையும் அப்படியப்படியே பேர்த்துப்பேர்த் துச் சுழற்றிப்போவதையும் காணுகிறான் உலகம் முழுவதும் செ ந்தூள் கருந்தூள் மயமாகிறதையும் பூமண்டலமெங்கும் அந்தகா ரப்படலம் மூடிக்கொண்டதையும் பார்க்கிறான். இப்பெருங்காற் றின் நடுவே இன்னொரு நூதனமான சுழல்காற்றொன்று கிளம்பி வெகு மூர்க்கமாகவும் வேகமாகவும் வந்து பிரசாதை அப்படியே அந்தரமாப்த் தூக்கி அவனைச் சுழற்றிச் சுழற்றி அடித்துக்கொண் டுபோகிறது. அக்காற்றின் மோதுதலால் அவன்தேகம் கண், கா து, முகம் முதலானவைபெல்லாம் யானையின் துதிக்கையால் அ டிபடுவதைப்போன்ற நோக்காடு கொடுக்கிறது. இவனை இப்படி பெரும் பிரஜண்ட மாருதமானது சுருட்டிச் சுருட்டி முன்னே அ

டித்துக்கொண்டு போகவும், பின்னே உலகமுழுவதும், வானத்திற்கும் பூமிக்குமாய் எழுந்து வளர்ந்த பெருந்தீயின் பிரவாகம்போல காடாந்தகாரமாய் எரிந்துகொண்டே வருகிறது. இப்படி இவனைமுன்னே பிரஜண்டமாருதம் அடித்துப்போகவும், பின்னே உலகம் எரிந்துகொண்டேவரவும் இடைநடுவிலே ஒரு சப்தமொன்று கிளம்பி "திரும்பாதே திரும்பாதே! பிரசாதே; திரும்பிப்பாராதே" என்று சொல்லிக்கொண்டே வருகிறது; மேற்படி சப்திக்கிற வார்த்தைகளுக்கு இவன் அஞ்சினவனாய் வெகுதூரம் மனம் பிடித்துக்கொண்டு அக்காற்றில் சுழலடிப்பட்டுக்கொண்டிருந்தானாயினும் அவனுக்கு அடுத்து பின்னாலேயே உலகம் மடால் மடாலெனவும் படீர் படீரெனவும் பற்றி எரிந்துகொண்டு வருவதால் அந்தப் பயங்கரத்தை நோக்கிச் சடுக்கென திரும்பிப்பார்த்தான். அப்படி திரும்பிப் பார்த்த நிமித்தம் உடனே அவன் குற்றவாளியாய்ப் போனதும், திடீரென அவனெதிரில் ஐந்து எமகிங்கரர்கள் ஆயுதங்களோடும் கட்டுச் சங்கிலிகளோடும் வெகு பயங்கரரூபமாய்த்தோன்றி உடனே இவனைக் கால்கட்டு, கைகட்டு முன்கட்டு பின்கட்டாய் உடல் நெளியக் கட்டிக் குந்தக் குந்தத் தள்ளி அவ்வூர் அரச சன்னிதானத்திற் கிழுத்துப் போனார்கள்.

குற்றவாளியாகிய பிரசாதை விசாரணைக்குச் கொண்டுபோய் நிறுத்திய நாட்டின்பெயர் சிதாகாஸ் அந்நாட்டை தர்மபரிபாலனம்புரியும் அரசன் பெயர் அகண்டாகண்டன். சாரணர்களாகிய கிங்கரர்கள் பிரசாதுவை இந்த மசாமண்டலேஸ்வரனின் சன்னிதானத்தின்முன் குற்றவாளியாகக் கொண்டுபோய் நிறுத்தினதும், மன்னன் இவன் குற்றத்தை விசாரிக்க வாய் திறந்தது திறவாததற்குமுன், இன்னும் இரண்டு குற்றவாளிகளை ஒரே ஜதையாகக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இவர்கள்யார் என்றால், சற்று நேரத்திற்கு முந்தி உலகம் காடாந்தகாரமாய் எரிந்து வந்ததில் அதன்நடுவில் இவர்களிருவரும் "நானல்ல டழிகாரன்; நீயல்ல பழிகாரன்' என்று ஒருவருக்கொருவர் பெரும்போர் இட்டுக்கொண்டிருந்த ஆத்துமநாதன் சாரீரகன் என்பவர்களே. இவர்களுடைய வழக்கைத் தட்சணமே விசாரித்துத் தண்டனை கொடுக்க வேண்டியது அந்நேரத்தில் மன்னனுக்குத் துரித அலுவலாய்த் தோன்றினபடியால், பிரசாதுவை ஒரு மூலையில் நிறுத்திவிட்டு மேற்படி ஆத்துமநாதன் சாரீரகன் என்னும் குற்றவாளிகளின் விசாரணையைத்தொடங்கினார். இந்நேரத்திலே பிரசாதுவும் இந்த இருகுற்றவாளிகளைப்போலத், தானும் ஓர் குற்றவாளியானதால் இவர்களுக்கு எற்படும் தண்டனையே நமக்கும் என்கிற பயத்தின் மீது ஓர் மயிர்க்கடைபிரமாணமும் தன்எண்ணத்தை இந்தண்டை அந்தண்டை ஓடவிடாமல் விசாரணையின்மீதே தன்நாட்டத்தைச் செலுத்தி மூச்சைப்பிடித்துக்கொண்டு நின்றிருக்கிறான். அவன்

நின்றிருக்கிற நிதானத்தில் அயலான் ஒருவன் ஒரு கருக்குள்ள பட்டயத்தைக்கொண்டுவந்து அவன் கழுத்தைவெட்ட ஓங்கின போதிலும் அதன்மீது அவன் கவனம் செல்லாத தன்மையாயிருந்தது. அவ்வளவான நிதானத்தை அவ்விசாரணையின்மேல் வைத்து எதிர்நோக்கியிருந்தான்.

இங்கே அகண்டாகண்ட ராஜன்முன், ஆத்துமநாதன் சாரீரகன் என்னும் இரு குற்றவாளிகள் நிறுத்தப்பட்டதில், ஆத்தும நாதன், தான் உலகத்தின்கண் வாழ்ந்திருந்த நாட்களிலெல்லாம் தான் யாதொரு குற்றத்திலும் சம்பந்தப்படாதவன் என்று ரூபிக்கிக்கும்படியாக 'சகல காரணங்களுக்கும் முதன்மையாய் விளங்கும் மஹாராஜே! ஆத்துமநாதனாகிய நான் அறிவும் உணர்வும் அழியாத தன்மைபொருந்தியவனுமாயிருப்பினும், நான் சூக்ஷ்மமான ஆவியாயிருக்கிறேன். உண்ணல், உடுத்தல், ஆடல்பாடல், போகம் மோகம் முதலானவைகள் யாவும் அரூபமான எனக்குரிமையானதல்ல. ஒருபிடி அன்னத்தையாகிலும் அனுபவிக்கிறதும், அனுபவைக்கப் போகிறதும் ஒன்றுமேயில்லை. சாரீரகனாகிய இந்த சரீரமே சகலமுமனுபவித்தது சரீரமென்ற இந்த என்பங்காளி என்னை இழுத்த வழிகளிலெல்லாம் நானிவனோடு கூடப்போனதேயொழிய மற்றப்படி சகல கிருத்தியங்களுக்கும் நான் நீங்கலாகவே இருக்கிறேன். நான் ராஜாதி ராஜனாகிய உமது கைக்கீழ் வந்து அடைக்கலம் புகவேண்டியவனாயிருப்பதால் நானடிக்கடி சரீரத்துடனே காணப்பட்ட எந்த கிரியைகளும் அவசியம் அவசியமல்லாதெனவும், உனக்குத்தானே வேண்டுமென்றும் நீயே நிதானமாய் தேடிக்கொள்ளவேண்டுமென்றும் எனக்கதுபற்றி அவசியமேயில்லையென்றும் எச்சரித்ததுண்டு. ஸ்தூலதேகியாகிய சரீரமே சகல தீமைக்குங் காரணமாயிருந்ததேயொழிய சூக்ஷ்மதேகியாகிய நான் ஒன்றுக்கும் காரணமாயில்லையென்பது உமது தயாளசமுகத்திற்கு நன்றாய் விளங்கும் ஆகவே என் ஐயனே! அருட்சோதி நாதனே! ஒன்றுமறியாத என்னை இந்தச்சாரீரகன் இந்நேரத்தில் தொந்தரவு கொடுத்து உலக பஸ்மீகரத்திற்குள் நான்தான் உடன்பட்டு அழியவேண்டுமென்று வாதிக்கிறான். இதற்குத்தாங்களே தர்ம நீதி செலுத்தவேண்டும்'' என்று பாதத்தில் விழுந்தெழுந்து ஒரு புறமாய் நின்றான்.

இதைக்கேட்ட அகண்டாகண்ட மன்னர், சாரீரகனை நோக்கி உன் வாக்குமூலமென்னவென்று உசாவினர். சாரீரகன் வெகு மேரை மரியாதையோடு அரசனை மும்முறைவணங்கி 'சகல மகத்துவமும் பொருந்திய சாக்ஷாத் மஹாராஜனே! சரீரமாகிய நான் அறிவும் உணர்ச்சியுமற்ற மண்ணாங்கட்டி மனிதன். நான் ஒரு மரப்பாவைபோல அசைவற்றிருக்கிறேனேயன்றி எனக்குள் சுயல்பாய் யாதொரு சக்தியுமில்லை. எனக்கு ஆசை, சிநேகம், துக்கம், பயம்,

மோகம், லோபம், கோபம், சித்தம், புத்தி முதலான யாதொன்று மில்லவேயில்லை. கட்டுகிறதும், இடிக்கிறதும், எடுக்கிறதும் அதாவது உண்டாக்குகிறதும் அழிக்கிறதுமான எந்த தொழிலேயும் நானுகச் செய்கிறதேயில்லை. இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும்பற்றிய சிந்தனையானது எனக்கில்லவேயில்லை. நன்மையாகிலும் தின்மையாகிலும் நடத்துவதற்கு எனக்கு யாதொரு பலமுமில்லை. நான்கொஞ்சநாளிருந்து ஒரு புகையைப்போல உருவழிந்து போகிறவனுயிருக்கிறேன் ஆனல் வல்லமையும் அறிவும்,பெலனும் தத்துவமுமுள்ள இந்த ஆத்துமநாதன் என்னேடுசேர்ந்துகொண்டு இவன் என்னை நடத்தியபடி யெல்லாம் நான் நடந்தேன். நன்மைக்கும் தீமைக்கும் எனனேடிருந்த இவனே காரணமாயிருந்தானன்றிச் சூத்திரப்பாவை போலிருக்கும் என்னல் ஒன்றும் நடந்தேறினதேயில்லை. சூத்திரதாரி எப்படி ஒட்டுகிறனே அப்படியே யந்திரமும் ஒடுகிறதுபோல நான்ஒடினேனே யொழிய வேறில்லேயே; ஒங்கிவெட்டின கையின்மேல் குற்றமோ, கத்தியின்மேல் குற்றமோ! அப்படிபோல் ஸ்தூலதேகியாகிய என்னல் ஒருகாரியமும் சாயக்கூடுமானதாயில்லை யென்பது தமது திருவுளத்திற்குப் பூரணமாய்த் தெரிந்த விஷயமே' என்று வெகு பரிதாபமாகத் தனது முறைப்பாட்டைச் சொல்லிமுடித்தான்.

இந்நேரத்திலே ஷை அகண்டாகண்ட மன்னவரின் சித்விலாஸ் என்னும் பேர்பூண்ட நீதிசபாலயத்தில் ஆசனமிட்டிருந்த லாயர்கள் என்று சொல்லும்படியான நியாயதுரந்தரர்களில் இரண்டுபேர் சடுக்கெனவெழுந்து ஒருவன் ஆத்துமநாதனுக்கும் மற்றவன் சாரீரகனுக்கும் நியாயவாதிகளாய் உடன்பட்டுநின்று தங்கள் வாதத்தைத்தொடங்க, அகண்டாகண்டா மன்னருக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டார்கள், அரசன் அவ்வாதிகளுக்கு உத்தரவு கொடுப்பதற்கு முந்தி குற்றவாளிகளைநோக்கி ஒ! குற்றவாளிகளே! நீங்களிருவருமே தண்டனைக்குட்பட்டவர்களாய் காணப்படுகிறீர்கள். எப்படியெனில் ஒருவனுக்குத் தேகம் சுத்தமாயில்லாதிருந்தால் அப்படியே அவன் ஆத்துமாவும் சுத்தமில்லாதிருக்கிறது அவன்தேகம்ஒரு அடியைப்பட்டால் அவன் ஆத்துமா அதற்காக துக்கப்படுகிறது ஒருவன் ஆத்துமா கவலேயுள் மூழ்கினல் அதனுலேயே அவன் தேகம்மெலிவடைகிறது.ஒருவன் திருடப்போனல் ஆத்மா அவனுக்குப் பக்குவஞ் சொல்லிக்கொடுக்க அவன் கால் கை அப்பக்குவத்துக் கேற்றதுபோலவே இசைவாய் திருட்டுச் செய்கை செய்கிறது. ஒருவன் விபசாரம் செய்வதில், தன் சோரக் கலவிநேரத்தில் அவன் ஆத்துமாவில் எவ்வளவு திகிலிருக்கிறதோ அப்படியே தேகமும் சுகத்தை படையாமல் நடு நடுக்கத்தைக் காட்டுகிறது.ஒருவன் குடிவெறியினல் இருதயத்தில் எவ்வளவு ஆநந்தங் கொள்ளுகிறனே அவ்வளவுக்குத் தேகத்தில் திமிரும் உற்சா

கமும் உண்டாகி அதுகொண்டு ஏனையோரை அடிக்கவும் உதைக்கவும் ஏற்பட்டுக் கையைக் காலைக்காட்டுகிறான். கொலை பாதகனுகிய ஒருவன் மற்றொருவனைக் கத்தியால் வெட்டுவதற்கு அவனிருதயம் எவ்வளவு துணிகரம் கொடுக்கிறதோ அவ்வளவுக்கே அவன் தேகமும் பலத்தை உண்டாக்கிக்கொள்ளுகிறது. அந்நேரத்தில் அவனிருதயம் கொஞ்சம் அச்சப்பட்டால் தேகத்திற்கும் வலுவுகுறைந்து கொல்லுந் தன்மை பின்னுக் கிழுத்துக்கொள்ளுகிறது. இப்படியாக இரண்டும் சம்பந்தா சம்பந்தமாயிருந்து உலகவிஷயங்களில் உழன்று அனுபவித்து வந்ததால், நீங்களிருவருமே அந்தந்த விஷயத்திற்கு அவ்வெவ் வரைப்பட்ட குற்றவாளிகளாகிறீர்கள். ஆகவே உங்களிருவரையுமே தண்டிக்கவேண்டும் என்று சொன்னதும், ஆத்துமநாதனுக்கு நியாயதுரந்தரனுகத் தோன்றிய ஆன்மவாதி (லாயர்) எழுந்து சொல்லுகிறான்.

"சகலத்தையும் தம்முளடக்கித் தாமே சர்வமுமாய் நின்றரசு செய்யும் எங்கள் அண்ணலே, அரசே! நீர் மேற்கூறிய நியாயம் சரியேயெனினும் நான் ஆத்துமாவுக்கெனப் பரிந்து பேசும்படி தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறேன். ஆதலால் உமது வார்த்தைக்கிடையில் நான் எழுந்து பேசவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதைப்பற்றி என்னை க்ஷமிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என் ஆண்டவனே! நீர் இருவரையுமே தண்டிப்பேனென்பது என் கோட்பாடுகளுக்கு ஒத்ததாயில்லை. எங்ஙனமெனில், தேகம் அசுத்தமாயிருந்து ஆத்துமா அசுத்தமில்லாததாயிருப்பினும், அசுத்தமாயிருக்கும் அந்ததேகமானது அசுத்தமில்லாதமேற்படி ஆத்துமாவைப் பலவிதத்திலும் தன் வசப்படுத்தித் தன்னைப்போல அதனையும் அசுத்தப்படுத்திவிடுகின்றது. வழக்கத்திலேயே தெரிகிறபடி தேகமானது ஒரு கெட்ட செயலில் பாத்தியப்பட்டிருந்தால், அதனேடு இருக்கும் ஆத்துமாவை எப்பொழுதும் தன் கெட்ட செய்கைக்கு இழுத்துக்கொண்டு, தானடைகிற கெட்ட பங்கைத் தனதாத்துமாவுக்கும் கொடுத்துக்கொண்டு, அதனை அசுத்தத்திலேயே அழுத்திவிடுகிறது. இது அனுபோகத்தில் வெகுபேருக்குத் தெரிந்திருக்கலாம். உதாரணமாக ஒரு அழகுடையவன் கல்வியிலும் நன்ருய்ப் பயிற்சி அடைகிறான். அக்கல்விப் பயிற்சியானது அவன் ஆத்துமாவைச் சுத்தத்தில் வைக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அவ்வாத்ம சுத்தத்தால் அவன் வெகு ஒழுங்காய் நடந்துகொண்டுவருகையில் ஒரு தாசியானவள் அவன் கல்விக்காக அல்ல, அவன் முக அழகுக்காக, அவனைத் தன் வசப்படுத்திக்கொள்ளுகிருள். அப்போது அவன் தேகம் அவளுக்குடன்படுவதில் அதோடுகூடவே அவனது சுத்தமாயிருந்த ஆத்துமாவும் தன்கல்வியின் ஒழுங்கையெல்லாம் எங்கோ உதறிப்போட்டு அந்தத் தேக இசைக்குள் சம்பந்தப்பட்டுவிடுகிறது இப்

படி எத்தனையோபேரிருக்கிறார்கள். இதனால் தெரிகிறதென்னவென்றால், தேகமேதான் ஆத்துமாவைக் கெடுத்துவிடுகிறது இதற்காகவேதானே தவசிகளும், பெரியோர்களும், விசுவாசிகளும், தங்களாத்மா எங்கே கெட்டுப்போகப்போகிறதோ என்று பயந்து, அது கெட்டுப்போகாதிருக்கும்படி முதலாவது தங்கள் தேகத்தை அகோர தவத்தினால் ஒடுக்குகிறார்கள். அதற்கும்மேலாக ஐந்துபுலன்களின் சேஷ்டைகளை அடக்குகிறார்கள். தேகத்தை வாதையில் வருத்திக்கொள்ளுகிறார்கள். ஆகவே குற்றவாளி சாரீரகனேயன்றி என்னைச்சார்ந்தவனான ஆத்துமநாதனல்ல; இவனை உமது தயைபாலித்து விடுதலை செய்திடவேண்டும், ஐயனே' இதுவே எனது விண்ணப்பம் என்றான்.

இங்ஙனம் இவன் சொல்லித் தன்னாசனத்தில் உட்கார்ந்தவுடனே, சாரீரகனுக்கென்று வாதிக்க ஏற்பட்ட சரீரவாதி சடக்கெனவெழுந்து நின்று அகண்டாகண்ட அரசுக்கு வந்தனம் சமர்ப்பித்துத் தன் வாதிப்பைத்தொடங்கி "அண்டபகிரண்டமும் அளவிடாவெளிமுழுவதும் எங்கும் பூரணமாய் நிறைந்து ஏகசெங்கோலோச்சும் எந்தலே! தயைசெய்து செவிகொடுத்தருளும். ஆதிவஸ்துவாகிய சரீரம் அனாதிவஸ்துவாகிய ஆத்துமா இவ்விரண்டும் தத்தம்வரையில், இருவரும் குற்றவாளிகளென்று தாங்கள் தீர்மானமிட்டீர்கள், அங்ஙனம் தீர்மானித்ததை ஆன்மவாதி நிராகரித்து, ஆத்துமா, சரீரத்தின் ஏவுதலினாலேயே, தான் சுத்தமாயிருந்தாலும் அசுத்தப்பட்டுப் போகின்றதேயொழிய ஆத்துமா தன் சுயேச்சையாய்ப் பாவத்துக் குட்படுவதில்லையென்கிறார். ஆனால் அவ்விரண்டுக்கும் நான் சொல்லவேண்டியதென்னெனின்: ஆத்துமாவின் தூண்டுதலினாலேயே சரீரம் பாவத்துக்குட்படுகிறதேயல்லாது மற்றபடியல்ல திருஷ்டாந்தமாக ஒருவன் ஒரு குதிரையின்மீது ஏறி அதன் கடிவாளத்தைப்பிடித்து நடத்தினால், குதிரைக்கென்று தான் அதனை நடத்துகிறவன் மேலே ஏறிக்கொண்டிருக்கிறான் என்றெண்ணாமல், தனக்காக, தான்போகவேண்டிய வழிகளிலெல்லாம் அதனை ஓட்டிக்கொண்டு போவதற்காகவே அக்குதிரையை வாங்கினானெனவும் அதின் கடிவாளத்தைப்பிடித்து நடத்துகிறானெனவும், நினைக்கவேண்டுமல்லவா? அப்படி நடத்திக்கொண்டுபோகும்பொழுது பராக்குத்தனமாய் மேட்டுப்பாங்கான பூமியின்மேல் அக்குதிரைக்கும் குதிரையின்மேலேறி யிருப்பவனுக்கும், படுகாயம் உண்டானால் இதற்குக் குற்றவாளி யாரெனின், மேலே ஏறிக்கொண்டிருப்பவனேயல்லாமல் குதிரையல்லவே? அதுபோலச் சரீரமென்னும் குதிரையின்பேரில் ஆத்துமா என்னும் குதிரைக்காரன் ஏறிக்கொண்டு தன்னிஷ்டப்பிரகாரம் அதனை நடத்தித் தன் மதியீனத்தினால் தன்னையும் கெடுத்துக்கொள்வதன்றித் தான் ஏறிச்செல்லும் சரீரத்துக்கும் வினைவருவிக்கிறான், எஜமான் குதிரையின்பேரிலேறிச் சவாரிசெய்ய இஷ்டப்படாதிருக்குங் காலத்தில் குதிரை சும்மாதான் லாயத்தில் அடைபட்டுக் கிடக்கும். அவன் ஏறி நடத்தினாலே அது ஓடும் அப்படியே ஆத்துமாவும், சரீரத்தை நடத்தினால்தான், அது வினைசெய்யும்

அல்லாவிடில் கட்டையைப்போல்தான் விழுந்து கிடக்கும் ஆத லால் ஆத்துமாதானே சரீரத்துக்குத் தெரியாமல் சரீரத்தை நஷ் டப்படுத்தித் துன்புறுத்துகிறதே யல்லாமல். சரீரம் ஒருக்காலும் குற்றவாளியல்ல. எனவே முழுக்குற்றமும் ஆத்துமநாதன் பேரி லேயே சுமத்தி, என் தரப்பு சாரீரகனை விடுதலை செய்திடவேண் டுமென்று உமது மேலான கனத்தை மிகவும் பிரார்த்திக்கிறேன் என் அரசே' என்று தன்வாதத்தைச் சொல்லி முடித்தான்.

ஆன்மவாதி:—ஓய் சரீரவாதியே! ஆத்துமநாதன் சரீரத்தை நடத்துகிறதென்றும், சரீரம் ஆத்துமாவை நடத்தவில்லையென்று ம் உமக்கு எப்படித் தெரியும்? இதோ நான் சொல்லுகிறேன்; ச ரீரமென்னும் எஜமான் ஆத்துமாவென்னும் குதிரையின்பேரிலே றித் தன்னிஷ்டப்பிரகாரமாகவே ஆத்துமாவை நடத்துகிறானேய ல்லது மற்றபடி யல்ல. எனவே! மேற்படி நீர் சொன்னதை ருசு ப்படுத்துகிறீரா ?

சரீரவாதி:—'ஆ ஆ ருசுப்படுத்தத் தயாராயிருக்கிறேன். நா ன் முன்சொன்னபடியே தேகத்துக்கு ஆதி வஸ்துவென்றும், ஆ த்துமாவுக்கு அனாதிவஸ்துவென்றும் பேர். இவ்விரண்டிற்கும் நா மங்கள் வந்த காரணங்கள் என்னவெனில்; முதலாவது ஆதி வஸ் துவென்னும் சரீரம், ஆண்மக்களின் சுக்கிலமும் பெண்மக்களின் சுரோணிதமும் அருகு நுனியினின்ற பனித்துளி யளவாய் ஒன் றுக்கொன்று அக்காலத்தில் சம்பந்தப்பட்டு ஒன்றையொன்று மூ டி கருவூரின் ஆசனத்தில் கொலுக்கொள்ள அங்கு சோணிதம்அ திகமானால் பெண்ணாகவும், சுக்கிலம் அதிகமானால் ஆணாகவும் ஏ ற்பட்டு ஐந்துநாட்களில் மிளகு அளவும், பதினைந்துநாளில் கச் சைக்காய் அளவும், முப்பதுநாளில் முட்டையளவும் பருமனடை ந்து, இரண்டாம் மாதத்தில் தோல்களும் சிரசுமுண்டாய்த் துளிர் விட்டு வியாபித்து, மூன்றும் மாதத்தில் வயிறும் கால்கைகளு மு ண்டாய், நாலாவது மாதத்தில் நாடி நரம்புகளுண்டாகி ஐந்தாவ து மாதத்தில் பஞ்சேந்திரியம் தோன்றி ஆறுவது மாதத்தில் ஆ மையைப்போல கைகால்கள் ஏற்பட்டு, ஏழாவதுமாதத்திலேயே தான் எழுபத்தீராயிரத்திருநூறு நாடி நரம்புகளும், பஞ்சபூதங்க ளும் இன்னும் எல்லாவித அம்சங்களும் ஏற்படும். எட்டாவதுமா தத்தில் தாய் புசிக்கும்போஜனபதார்த்தத்தில்அந்தர்ப்பூதங்களா ன குரூர பதார்த்தங்களைத் தொப்பூழியின் வழியாக வுண்டு வள ர்ந்து வேதனை பட்டுக்கொண்டிருக்கும். ஒன்பதாவது மாதத்தில் உரோமத்துவாரங்கள் உண்டாகி ஜராயு என்கிற கர்ப்பப்பையினா ல் கட்டப்பட்டு அவயவங்களை அசைக்கச் சக்தியற்று இனி கர்ம பூமியில்போய் தாம் அனுபவிக்கப்போகிற சுக துக்கங்களை கியா னம் திர்ஷ்டியினால் தெரிந்துகொண்டு பகவானைத் தியானித்துக்

கொண்டே பத்தாவது மாதத்தில் தேவதத்தனென்கிற வாயு தலைகீழாய் புரட்டிவிட, தனஞ்சயனெழுந்து உதை உதையென உதைத்துத் தள்ள அபானன் என்கிற வாயு கிளம்பி ஒரே தாக்காய்த் தாக்கித் தாயின் வயிற்றினின்று வெளியே தள்ளிப்போட, அப்படி ஜெனித்த ஒரு முகூர்த்தகாலத்திற்குள் (அதாவது மூன்றே முக்கால் நாழிகைக்குள்) அங்கே கடாட்சிக்கப்படுகிற பகவானை இச்சிசு தரிசிக்கவும், உடனே பகவான் அந்தர்த்தானமாகி விடுகிறா பின்பு இச்சிசு ஜடமென்கிற அக்கியானவாயுவினால் கட்டப்பட்டு, கர்மபூமியில் சுகதுக்கங்களை அனுபவிக்கிறது. இப்படியாகத் தொண்ணூற்றாறு தத்துவங்களுடனும் ஜனித்துப் பூலோகத்திற்கு உருபடியாய் வெளிப்படுவதற்கு முன் சரீரமென்னும் நம நாற்றமே காணோம். கருவூரில் உதித்தபிறகு தான் சரீர முண்டாயிற்றே யல்லாமல் அக்கருவூரில் உவர்ப்பாகிய சுக்கிலம்பாய, புளிப்பாகிய சுரோணிதம் அதனைமூடி அஷ்டபந்தனம் செய்து உருவாக்கி வைப்பதற்கு முன்னம், பிண்டம் இருந்த தென்னும் அத்தாட்சியே கிடையாது. இதுகொண்டே தான் சரீரத்திற்கு ஆதி வஸ்துவென்றபேர் உண்டாயிற்று. ஆனால் ஆத்துமாவோ ஜனிப்பதற்கு ஒரு வித்துமல்ல; அது குந்தி உருவெடுப்பதற்கு ஒரு ஆசனமுமில்லை; அதனை வளர்ப்பதற்கு ஒரு போஷணையு மில்லை. இப்படியாக அது தனக்கு தானாய்தான் தனியா யிருப்பதினாலும் ஒரு துவக்கம் முடிவு அல்லது தோற்றம் அழிவு என்கிற இரண்டு மற்றிருக்கிறதினாலும் இரதியும் மதனும் ஸ்திரீ புருஷா ளிடத்தில் குடிப்புகுந்து சுக்கில சுரோணிதத்தைப் படைக்குமுன்னமேயே ஆத்துமா தனக்குத் தானாயிருந்து சுக்கிலம் அருகு நுனி பனித்துளி யளவாய் பாயும்போது அதினடுவிலுள்ள பிராண வாயுவென்னும் ஆசனத்தின்மீது மேற்படி ஆத்துமா சடுக்கென ஏறிக் குந்தி அதனோடுகூட கருவூருக் கேகுகின்றதாதலாலும் அவ் வாத்துமாவுக்கு அனாதி வஸ்துவென்கிற பேர் உண்டாயிற்று. இந்த உண்மையால் அனாதி வஸ்துதான் ஆதி வஸ்துவை நடத்துமேயல்லாமல் (அதாவது ஆத்துமாவே சரீரத்தை நடத்துகிறதேயல்லாமல்) ஆதிவஸ்து அனாதிவஸ்துவை நடத்தாது இதுவும் போந்த திர்ஷ்டாந்தமா யில்லாவிடினும், ஆத்துமா சரீரத்தை நடத்துகிறதே யல்லாமல் சரீரம் ஆத்துமாவை நடத்தவில்லை யென்று இன்னொருவிதமாய் ரூபகாரம் காண்பிக்கிறேன். அதாவது சுக்கிலத்தைக் காக்க சுரோணிதம் உண்டாகின்றது. சுக்கிலமோ தனக்குள் அடங்கியிருக்கும் பிராண வாயுவைக் காக்கின்றது. பிராணவாயுவோ ஆத்துமாவை தனக்குள் அடக்கி அதற்கு ஆசனமாயிருக்கவும் அதற்கு ஏவற் பணிவிடைகள் செய்யவும் உற்பத்தியாகின்றது. இந்த நியாயத்தால் ஆத்துமாவுக்கெனப் பிராணவாயு உண்

டானதென்றும், பிராணவாயுக்கென சுக்கிலம் உண்டாயிற்றென்றும், சுக்கிலத்திற்குச் சுரோணிதம் அமைந்ததென்றும் நமக்குஸ்பஷ்டமாய் விளங்குகின்றதல்லவா? இப்படி இருப்பதால் ஆத்துமாவுக்கென்று தான் சரீரம் உண்டாயிற்றுவென்றும் நீரேநிதானித்துக்கொள்ளவும். ஆத்துமாவுக்கென்றே சுக்கிலமானது ஜனித்த சரீரமானபோது ஆத்துமாதான் சரீரத்தை நடத்தவேணுமேயல்லாமல் சரீரம் ஒருக்காலும் ஆத்துமாவை நடத்தவே நடத்தாது. எனவே, குற்றத்திற்கு உடந்தையாளி சரீரமேயல்ல.

ஆன்மவாதி:—ஆ ஆ, சரி சரி, நன்றாய்ச்சொன்னீர்; ஆத்துமாவுக்காகவா சரீரம்உண்டாயிற்று? சரீரத்திற்கென்று ஆத்துமா ஜனித்ததென்று சொல்லப்போகாதோ? இதோ நான் விவரிக்கிறேன். கிறிஸ்துவர்கள், கடவுள் ஆதாம் என்னும் ஆதி மனிதனை மண்ணினால் உண்டாக்கி அதன்பிறகு ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினாரென்றும் அவன ஜீவாத்மாவானனென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியே முகமதியரும் கடவுள் நரஜென்மங்களைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு ஹிப்லீஷ் என்னும் தூதனை ஏவி, ஒருபிடி மண் கொண்டுவர உத்தரவு செய்தாரென்றும், அப்படியே ஹிப்லீஷ்தூதன் செங்கடலுக்கு அருகாமையிலுள்ள ஐபிராத் நதியைச்சார்ந்த பாலைவனாந்தரத்தினின்று மண்கொண்டுவர குதா அந்தமண்ணினால் மனிதரூபம் உண்டுசெய்து அதன்பிறகு தன்சுவாசத்தை அதற்குள் ஊதினார் என்றும் சொல்லுகின்றனர். அன்றியும் எசுர்வேதத்தில் சொல்லியபடி தேவர்களெல்லாம் ஒருகாலத்தில் ஒன்றுகூடி பெருத்தயாகமொன்று செய்து அந்த யாகத்தினிடமாய் விராட்டுப் புருஷனைச் சிருஷ்டித்ததாகவும் இவனைக்கொண்டே சகல ஜீவராசிகளும் படைப்புண்டு உயிர்பெற்றனவென்றும் தெரியவருகிறது. இப்படியே பலமதங்களும் சாட்சி பகர்வதினால் உமது புத்தி சபலிக்காமல் ஊனறிக்கவனிப்பீரேயானால் உயிரை நியமித்துக்கொண்டு உடலைப் படைக்கவே இல்லையென்றும் உடலுக்காக ஆத்துமா அமைந்ததென்றும் தெளிவாயறிந்துகொள்ளலாம். இதிலும் தெளியாதாகில் பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னப்பட்ட பஞ்ச பூதியங்களும் ஒன்றோடொன்று சேர்ந்து உரு அமையும் வகையினாலாவது தெரிந்துகொள்வீராக. அஃதெப்படியென்றால் மேற்படி ஐந்து பூதங்களும் சேர்ந்துருவானது தேகம். இது உருவானபோதிலும் முதலிலே இயங்குந் தன்மை இல்லாதிருந்து அதற்கென பிந்தி ஆத்துமாவைத் தன்னுடைய வேலைகளுக்கெனத் தேடிக் கொண்டு இப் பஞ்சபூத தேகமானது ஆத்துமாவைச் செலுத்தவேண்டிய பிரகாரம் நடத்தி மோட்சத்தை தேடிக்கொண்டாலும் சரி, நரகத்தைத் தேடிக்கொண்டாலும்சரி, எந்த விதத்துக்கும் ஆத்துமா

ஒரு கையாயுதமாய் நின்றதேயல்லாமல் மற்றபடி செய்கர்த்தா சரீரமேயன்றி ஆத்மாவல்ல என்று நான் சாதிக்கிறேன். ஆதலால் எதுவித குற்றத்திற்கும் சரீரமே உத்தரவாதியாயிருந்து அக்குற்றத்திற்கு இடப்படும் தண்டனையை அதுவே தான் அனுபவிக்க வேண்டும்.

(இச் சம்பாஷணை நடுவில் பஞ்சாயத்தார் தோன்றினர்.)

பஞ்சாயத்தார்:—சாதாரணமாய் ஒரு அழகிய ஸ்திரீயை மனிதனது சரீரத்தின் நேத்திரங்கள் கண்டால் கண்டவுடனே ஆத்துமா இச்சிக்கின்றது. இச்சித்தும் சரீரத்தின் தத்துவங்களாகிய பாதம், பாணி உபஸ்தமென்னும் மூன்று கருவிகளும் தவிக்கின்றன. அப்போது புத்தி, மனம், அகங்காரம், சித்தமென்னும் நாலும் தாங்களின் அந்தகரணசேஷ்டைகளினால் உடலைப் பூரிப்பித்து ஆனந்திக்கும்படி மயக்கத்தையும் அதிகரிப்பித்துக் கொண்டு பசியையுமடக்கிச் சம்ஸர்க்கம்செய்து தானும் திருப்தியாய் ஆத்துமத்தையும் திருப்திசெய்கிறபடியால், இக்குற்றத்திற்குச் சரீரகன் பார்க்கவும் ஆத்துமா ஏவவும், சரீரம் செய்யவும், ஆத்துமா சரியெனவும் இப்படியாக இருவரும் சம்பந்தப்பட்டிருப்பதால் இருபேரும் ஏக குற்றவாளிகளா யிருக்கிறார்கள். இருவரையுமே தண்டிக்கவேண்டும். நியாயவாதிகளாகிய நீங்கள் வீணில் வாதிட்டுக் கொள்வதில் பிரயோஜன மில்லை.

(பஞ்சாயத்தார் இப்படியான பொது நியாயத்தைக் காட்டி ஆத்துமநாதனையும் சரீரகனையும் பொதுப்பட இருவரையுமே தான் ஒன்றித்த குற்றவாளிகளென்று தங்கள் அபிப்பிராயத்தைக் கூறவே, ஆன்மவாதி, சரீரவாதி, பஞ்சாயத்தார் ஆகிய இம்மூத்திறத்தாருக்கும் பொதுவாய் விளங்கும்படி இராஜேஸ்வரனவர் ஒரு நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார்.)

அரசர்:—ஆத்துமா துன்பத்தால் நிறைந்து அங்குமிங்குமாய் அங்கலாய்த்துக் கவலைப்பட்டுக்கொண் டிருப்பவனுக்குத் தேகத்தில் யாதொரு வியாதி, சுகவீனம், அங்கவீனம் முதலியவை இல்லாமல் நன்றாயிருக்கிறது. அப்படியே தேகம் சுகமா யில்லாமல் அங்கவீனத்தோடு அலைந்து திரிபவனுக்கு ஆத்துமா கவலையின்றிச் சுகமாய் உல்லாசித்திருக்கின்றது. இப்படி யிருப்பதால் ஆத்துமாவும் சரீரமும் அனுபவிக்கிற சுகாசுகங்களுக்கு அவை தனித்தனியே பாத்தியப்பட்டவைகளா யிருக்கிறதேயல்லாமல், ஆத்துமா துன்பப்படுகிறதே யென்று சரீரமும், சரீரம் துன்பமடைகிறதே யென்று ஆத்துமாவும் விசனிக்கப் போகிறதில்லை. அன்றியும் சரீரம் ஆத்துமாவாகிய இவ்விரண்டும் உடனாளிகளாய் ஒன்றித்திருந்தும் இவ்விஷயகாரணாதிகளில் எப்போது தனித்ததாய் உபாதைப்படுகின்றனவோ அப்போதே சரீரத்தினால் ஆத்துமா கு

ற்றத்திற்குள்ளாகவில்லை யென்றும், ஆத்துமாவினால் சரீரம் குற்றத்திற்குள்ளாகவில்லை யென்றும், சம்பாஷணைகள் விளக்கிக்கொள்ளலாம். இப்படியிருக்க சரீரத்தினால் ஆத்துமா கேடடைந்ததென்றும், ஆத்துமாவினால் சரீரம்கேடடைந்ததென்றும், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று உபபலமாயிருந்து ஒருங்கே கேடடைந்தனவென்றும், சாக்குப்போக்கிடுதல் கூடாது. சரீரத்தின் குற்றம் சரீரத்துக்குத்தான், ஆத்துமாவின் குற்றம் ஆத்துமாவுக்குத்தான் ஆகவே அவரவர்மட்டில் இருவருமே குற்றவாளிகளாதலால் இருவரையுமே தண்டிக்கவேண்டும். அல்லாமலும் ஸ்திரீ சம்பந்தத்துக்கு அயோக்கியதையான தேகம் (அதாவது அண்ணகப் பிறவியைக்கொண்ட தேகத்தோடொன்றித்த ஆத்துமாவானது) தன்னுடைய மனக்கண்ணினால் ஒரு சௌந்தரியம் பொருந்திய ஸ்திரீயைக்கண்டு மாய்கையின் அந்தகார பலாக்கிரமத்தால் இச்சித்து அவ்வாத்மா மையல் கொள்ளுமேயாயின் மேல்படி தேகம் அதாவது பேடித்தன்மையான சரீரம் அச்செய்கைக்கு உதவியற்றதாயிருப்பதால், அதற்கு அது உடந்தையானதல்ல; ஆனபடியால் முடிவில் நியாயவிசாரணைக்குக் கொண்டு வரும்போது ஆத்துமா ஸ்திரீயை இச்சித்தபடியால் அது ஒன்றுமட்டுந்தான் தண்டிக்கப்படுமே யல்லாமல் சரீரமுங்கூடத் தண்டிக்கப்பட மாட்டாது. அப்படியே ஸ்திரீகளின் சினேகம் வேண்டவே வேண்டாமென்று ஆத்துமாவானது முற்றுப்வெறுத்து அதைத் தள்ளிவிட்டிருக்க, திடும்பிரவேசமாய் ஒரு ஸ்திரீ பக்கத்தில் வந்து நின்று தனது கோமளதேகத்தை அவ்ஆண்தேகத்தின்மீது பொருத்த, உடனே ஆத்மாவிற்குந் தெரியாதபடி அத்தேகத்தில் ஒருவித ஸ்பரிசக் கிளர்ச்சி யுண்டாகி அந்தச் சரீரம் அந்தப்பெண்ணை அநுபவிக்குமேயாயின் குற்றம் சரீரத்தினதே யல்லாமல், ஆத்துமாவினுடையதல்ல. ஆகவே அவரவரின் குற்றத்தின் பிரகாரமே தண்டனையும் படவேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

(அரச ரிவ்வணம் சொல்லவும் மறுபடியும் நியாயவாதிகள்ளெழுந்து கொண்டார்கள்.)

சரீரவாதி:—தன்னிகரற்றுச் சர்வகோடி யண்டமும் தன்னுளடக்கித் தனுகரண புவனபோகங்களுக்குக் காரணமாயும்காரியமாயும் நின்றரசுசெய்யும் எங்கள்கோமானே! என்வார்த்தைக்குத் தயைசெய்யவேணும். சிறிதும் பெரிதும் ரூபாரூப வஸ்துவுமான ஆத்துமாவானது மும்மலாதிகளின் வலுவுக்கேற்பச் சங்கற்ப விகற்பமாய்த் தான்கொண்ட ஒரு எண்ணத்தைச் சரிசரியென்று நிச்சயித்து அவ்வெண்ணத்தினால் வரும் இச்சையை நிவாரணம்செய்யாமல் தன்னைத் திருப்தி செய்துகொள்ளும் பொருட்டு அவ்வாத்மாவே சரீரத்தை அடிமை கொண்டிருப்பதால்,

(இங்கே அரசர் குறுக்குவெட்டாக ஒரு கேள்வி கேட்கிறார்.)

அரசர்:—சரீரவாதியே நில்லும்! நில்லு! சரீரம் ஆத்துமாவுக்கு அடிமைப்பட்டதா யிருக்கிறதென்று நீர் எங்ஙனமாய்த் தீர்மானித்தீர்? (மறுபடியும்)

சரீரவாதி:—இதோ சொல்லுகிறேன் ஆண்டவனே! அனாதி வஸ்துவென்னப்பட்ட ஆத்துமாவானது தான் தானாகவே பரத்தை நோக்குவதற்குமுன் நான்குதோற்றம் எழுபிறப்பு, எண்பத்து நான்கு நூறாயிரம் அச்சுபேதங்களிலும் புகுந்து புகுந்து பிறக்கவேண்டு மென்பதாய் தம்முடைய திருவுளத் தீர்மான மிருக்கிறது. இவ்வெண்பத்துநான்கு நூறாயிரம் அச்சுபேதங்களிலும் மாறிமாறிப் பிறப்பதற்காய் நியமிக்கப்பட்ட ஷை அனாதி வஸ்துவான ஆத்துமாவானது ஒவ்வொரு ஜென்மத்திலும் தான் செய்யும் கர்மங்கள் எவ்வெவ்வளவோ அவ்வவ்வளவு கர்மத்திற் கேற்க மறு ஜென்மங்களில் பலவிதமான அச்சுபேதவழியாகப் பிறந்து தன்னைப் பற்றிக்கொண்டிருக்கும்படியான ஆணவம், காமியம், மாயை என்னப்பட்ட இம்மும்மலங்களின் கசட்டைப்போக்கி ஒவ்வொரு ஜென்மத்திலும், தான் பூரணப்பட எடுக்கும்படியான காரணதேகத்தின் உபபலத்தால் சம்பூரண சேர்ச்சியடைந்து தான் தானே ஆதிமத்தியாந்த ரஹிதோத்மகுண பராக்ரமத்தோடு கலந்து நித்தியானந்த பொருளாய் வாழ்ந்திருக்க நியமிக்கப்பட்டிருப்பதால், மைலுக்கு மைல் கட்டப்பட்டிருக்கும் சுமைதாங்கியைபோல ஒவ்வொரு ஜென்மத்திலும் சுமையின் பாரத்தை லகுவுபடுத்திக்கொண்டு போகவேண்டியதா யிருக்கிறது. அல்லாமலும் ஆத்துமாவுக்குச் சரீரம் சத்திரத்தை நிகர்த்திருக்கிறபடியால் ஆத்துமாவுக்குச் சரீரம் அடிமையே

ஆன்மவாதி:—ஆன்மமானது தானே தனியாய் முட்டை, பை, வியர்வை நிலமென்னும் நான்கு தோற்றங்களினின்று வெளியான சுரர், நரர், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னப்பட்ட எழுபிறப்பினிலும், ஒவ்வொரு பிறப்பிலும் உற்பத்தியான எண்பத்து நான்கு நூறாயிரம் அச்சுபேதங்களிலும் தனது மும்மலங்களின் வலுவிற்கேற்க புகுந்து புகுந்து பிறக்குமென்பதாய் உமக்கு அறிவு போதித்தது யார்? இந்துஞானிகளில் அநேகரும் 'இறந்துபோன மானிடர் இனி பிறப்பதில்லையென்று சொல்லியிருக்கிறார். கிறிஸ்துவ சித்தாந்தத்திலும் முதல் மனிதனை ஆதாமுக்கு கடவுளால் "நீ சாகவே வேண்டும்" என்ற இடப்பட்ட சாபம் எல்லோரின்பேரிலும் இருள்காட்டிச் சகலரையும் பாவத்திற்குள்ளாக்கினதால் அதினின்று எல்லோரும் சாகவே சாகவேண்டுமென்றும், ஆதாமினால் விளைந்த ஜென்ம கன்மத்திற்கு மரணமே பலனென்றால் அவனவனும் பூலோகத்தில் ஜெனித்து தன் சித்திபுத்திகளால் செய்யும் நன்மை தீமைகளுக்கு பிரதிபலனைத் புகாந்தகால தீர்ப்பில் மோட்சமோ, நரகமோ ஏ

தாவதொன்றுடைய ஒவ்வொரு ஆத்துமாவும் அக்காலம்வரையில் ஏதேனும் ஓரிடத்தில் கிடக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகின்றதே யல்லாமல் மறுஜெனனம் உண்டென்று சொல்லவே யில்லை. உலகத்தின் முழு ஜனத்தொகையாகிய ஏறக்குறைய 140 கோடி ஜனங்களில் முப்பத்தைந்துகோடியே அறுபதுலட்சம் கிறிஸ்துவர்கள் வரையில் மறுஜன்மம் உண்டென்று நம்பவில்லை. அப்படியே பதினெட்டுகோடி மகமதிய சித்தாந்தத்தவர்களும் மறுஜென்மத்தை நம்புகிறார்களில்லை. ஒரு கோடியே நாற்பது லட்சம் யூத ஜனங்களும் இதை நம்புகிறதில்லை

இங்ஙனமிருக்க உமது யுக்திக்கேற்ற ஓர் கதையை நீர்சொல்லவந்ததென்ன? எழுபிறப்புண்டென்றால் ஒரு பிள்ளைதானும் கைகொட்டி நகைக்குமல்லவா? ஜென்மங்களாகிய எழுபிறப்பானது இல்லவே யில்லையென்றும், சரீரத்தைவிட ஆத்துமா ஒருக்காலும் விசேஷித்த தல்லவென்றும், இதோ நான் சொல்லிக் காட்டுகிறேன். சற்று கவனித்துக்கேளும்! கடவுளின் சிருஷ்டி, திதி, சங்காரமென்னும் மூன்றுவித தொழிலுக்கும் காரணம் சாத்வீக குணம், ரஸோகுணம், தமோகுண மெனனப்பட்ட மூன்று வித குணங்கள் இருக்கின்றன. இம்மூன்றுகுணங்களில் சாத்வீககுணம்,ரஸோ; குணம் என்பவைகளின் விவகரிப்பாக ஓர் மகத்துவம் பிறந்தது அந்த மகத்துவமே லிங்கமாய் முறிந்தது. இந்த லிங்கத்துக்குச் சப்தமுண்டாயிற்று பிறகு லிங்கம் தன் ரூபத்தை விகாரப்படுத்திப் பஞ்சபூதங்களி லொன்றாகிய மஞ்சள் நிற ஆகாயமாய் முறிந்தது. அதிலிருந்தே படிப்படியாய், பச்சைநிற வாயுவும், கறுப்பு நிறத் தேயுவும், சிவப்புநிறத் தண்ணீரும், வெள்ளைநிறப்பூமியும் உண்டாகி அதினின்றே மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் பொறி புலன்களோடு ஒரு ரூபமுண்டாயினது. அதன் பிறகு தான் அதற்கு ஆத்துமா கொடுக்கப்பட்டது என்றிருப்பதால் சரீரந் தான் முன். எனவே ஆத்துமா எழுபிறவியில் சுழன்று ஜன்மமெடுத்து வருமென்பது அபத்தத்திலும் சுத்த அபத்தமே.

சரீரவாதி:—நில்லும் நில்லும் என்ன சொன்னீர்? மறுபடியும் சொல்லும்.

ஆன்மவாதி:—சரீரமே முன்னானதால் அதுவே தண்டனைப்பட வேண்டும்.

சரீரவாதி:—ஐயா! நன்றாய் சொன்னீர்? வெகு நேர்த்தி; பாட்டிக் கதையும்; புராணக் கதையும் குழுகுழுவென கலந்து சொன்னீரோ! அல்லது உம்சொந்த யுக்தியோ? சரீரமா ஆத்துமாவிலும் விசேஷித்ததென்று சொல்லுகிறீர்? அன்றியும் அப்படி விசேஷித்ததானபடியால் ஆத்துமத்திற்கு எழுபிறப்பு இல்லை என்றும் தீர்மானிக்க வந்தீரோ; சரி! சரி! ஆத்துமாவே முதன்மையாயிருந்து இந்தப் பஞ்ச மகா பூதியங்களையும் பிறப்பித்து, தானே

யாவையும் நடத்திவைக்கிறதென்று சொல்லப்போகாதோ? பராபரத்திலிருந்து பரந்தோன்றி, பரத்திலிருந்து சிவந்தோன்றி சிவத்திலிருந்து சத்திதோன்றி, சத்தியிலிருந்து நாதந்தோன்றி, நாதத்திலிருந்து விந்துதோன்றி, விந்துவிலிருந்து சதாசிவமும், சதாசிவத்திலிருந்து மயேசனும், மயேசனிலிருந்து ருத்திரனும், ருத்திரனிலிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிலிருந்து பிரம்மாவும், பிரம்மாவிலிருந்து ஆன்மாவும், இப்படியாக ஒன்றினிடமாக ஒன்றாய்த்தோன்றி கடைசியாக ஆன்மாவிடத்திலிருந்து ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிரிதிவு முதலிய பூதங்கள் பிறந்தனவே யல்லாமல் பூதங்களுக்குப் பிறகு ஆன்மா உண்டாகவே இல்லை. இப்படி உண்டான ஆன்மாவானது ஆணவத்தையே பூஷணமாகக்கொண்டு அவ்வாணவ அந்தகாரத்தினால் செய்யும்படியான மனோவாக்குக் காயகர்மத்திற்காக கடவுளால் ஏழு நரக மென்னப்பட்ட எழுபிறப்பில் தள்ளப்பட்டு வதைக்கப்படுகிறது. ஆகையினால் ஆத்துமாவே காரிய காரணமாக இருந்து நடப்பிக்கிற செயலுக்கென்னவிதமாய்ச் சரீரமும் காரணமாயிருக்கும்? இதோ கேளும்.

ஒருகாலத்தில் நிமிச் சக்கரவர்த்தியானவர், தாம் நிறைவேற்றுவதா யிருந்த ஒரு யாகத்திற்கு வசிஷ்டமுனியை அழைப்பிக்க அதற்கு வசிஷ்டர், இந்திரனுடைய யாகத்திற்குப்போய் அதனை நிறைவேற்றித் திரும்புமளவும் காத்திருமென்று அவருக்குச்சொல்லியும், சக்கரவர்த்தி தான் மதிக்காமல் தன் யாகத்தை நிறைவேற்றிவிடவே, முனிவர் சக்கரவத்திக்கு ஒருசாபம்போட சக்கரவர்த்தியும் இவருக்கு மறுசாபமிட்டதனால் முனிவர் தம்முடைய கர்மத்தின்பொருட்டு உடல் விட்டு வேறு ஜென்மம் எடுக்க நேர்ந்து மறுஜென்மத்தில் அகஸ்திய மஹா ரிஷியாய், குடும்பத்தினிடமாகப், பிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா? அன்றியும் அகஸ்தியர் ஒருவிடத்தில் பிரம்மாவுக்கும் சரஸ்வதிக்கும் குடும்பத்தினிடமாகப் பிறந்தாரென்றும், மற்றோரிடத்தில் புலஸ்தியருக்கு அவிற்பு என்பவளிடத்தில் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? மேலும் நாரதமுனிவர் ஒருபிறப்பில் தாசியினுடைய பிள்ளையாய்ப்பிறந்து இன்னொருபிறப்பில் பிரம்மாவினிடமாகப் பிறந்து ஞானமடைந்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கிற தல்லவா? சிசுபாலக வக்கிர தந்தாளென்னும் இரண்டு பாண்டு புத்திரர்கள் யாரென உமக்குத்தெரியுமா? பூர்வத்தில் இவர்களிருவரும் துவாரபாலகாளல்லவா? இவர்கள் ஜனகாதி முனிவர்களுக்கு உக்கிரமான சினத்தை மூட்டினதினால் அந்த ஜனகாதி முனிவர்களால் சபிக்கப்பட்டு இரண்டு ஜன்மங்கள் இராட்சத ஜன்மங்களாகவும் மூன்றாவது ஜன்ம க்ஷத்ரியர்களாகவும் பிறந்து அந்த ஜன்மத்தினீற்றி லெல்லாமல் பக்தியைக் காணலாகாதென்று பூலோகத்தில் தள்ளப்பட்டவர்களல்லவா? அப்படியே இவர்கள்

மும்முறை ஜென்மமெடுக்க நேர்ந்து முதல்ஜன்மத்தில் கசிப ரிஷிக்கு திதிதேவியிடமாக இரணியகசிபு இரணியாக்ஷன் என்னும் இரண்டு அரக்கர்களாய்ப் பிறந்து, தானென்ற அகங்காரம் படைத்ததால் மஹாவிஷ்ணுவினுடைய சிங்காவதாரத்தினால் ஒருவனும், வராகவதாரத்தினாலொருவனும் கொலையுண்டு, அந்தஜன்மத்தைவிட்டு மறுஜன்மத்தில் விகர்வசுஎன்பவருக்கு கேசி என்பவளிடமாய் இராவணன் கும்பகர்ணன் என்னும் இரண்டு ராக்ஷதப் பிள்ளைகளாகப் பிறந்து அந்த ஜன்மத்திலும் இராமச்சந்திரனால் சம்ஹாரம்செய்யப்பட்டதாகவும் அந்த ஜன்மத்தையும் விட்டு கடைசியான மூன்றாம்ஜன்மத்தில் பாண்டுவமிசத்தில் க்ஷத்திரிய புத்திரர்களாய்ப்பிறந்து கைலாயம் சேர்ந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? இதெல்லாம் நீரறிகிலையோ? இதுவுமன்றி "இறந்துபோன மானிடர் இனிப் பிறப்பதில்லையே" என்று ஞானிஒருவர்சொல்லிவிட்டிருப்பதைப்பற்றி வற்புறுத்திப்பேச வருவீர்? அதற்கும் நான் விடைகொடுக்கிறேன்; இறந்துபோன ஒருவன் அதே தேகத்தில் இன்னொருஜென்மத்தில் பிறக்கமாட்டான் என்பதேயல்லாமல் அதன் கருத்து வேறல்ல. அல்லாமலும் இதனை இன்னொருவிதமாய் அர்த்தஞ்செய்யினும், தன்மையில் முக்கியமாய் இரண்டுவித தன்மைகளுண்டு. அதாவது தெய்வீகம், மானுஷீகம், இவைகளிரண்டும் ஒன்றுக்கொன்று ஒப்புறவாகுந் தன்மை யுடைத்தது. மற்றத்தன்மைகள் இவைகளோடு ஒப்புறவாகாது. ஏனெனில் மானுஷீகமற்றது அஞ்ஞானமென்று சொல்லப்படும் தெய்வீகம், மானுஷீகமென்னும் இவ்விரண்டே மெய்ஞ்ஞானமாம். மானுஷிகத்தையுடையவன் தெய்வீகத்தை யுடையவனாகிறான், தெய்வீகத்தை அடைந்தால் யாது ஜனனமரணமும் கிடையாது. ஆகையால் மானுஷீகத்தை உடைய ஒருவன் விபோகமானால் அவனுக்குபிறப்புமில்லை, இறப்புமில்லை. அவன் தெய்வீக சம்பந்தனாகிறான். இப்படியல்லாமல் மானுஷீகமற்று இறந்துபோகிறவன் அவ்வித தன்மையானது தன்னில் ஒளிருமளவும் பிறந்துகொண்டும் இறந்து கொண்டுமே இருக்கவேண்டும். இதுவே அதின் இரண்டாம் அர்த்தமாகும். ஓய்! ஆன்மவாதியே! எழுபிறப்புண்டென்பதும் நிச்சயம், அதன்படி ஆத்துமாவே தண்டனைக்குள்ளாகவும் வேண்டும்.

ஆன்மவாதி:—ஓய் சரீரவாதியே! எழுபிறப்புண்டென்று உமக்குமட்டும் தெரிந்துகொண்டால் நானும் உலகமும் நம்புவதெப்படி? அதற்கு திர்ஷ்டாந்தம் வேண்டுமே. கண்டில்லாத கேட்டில்லாத சங்கதி யொன்றைச் சொல்வதாயிருந்தால் வாஸ்தவத்துக்கு ரூபகாரமாவதெப்படி? நல்லது நீர் எழு பிறப்புண்டென்று ஒப்புக்கொண்டாலும் அதற்கு நீர் அடியில் வரும் சொற்ப கேள்விகளுக்கு மட்டும் விடை பகருவீராக.

முதலாவது:—ஒரு ஆத்துமாவானது ஏதோ ஒரு பிறப்பில் ஜனனமாகி அந்தப்பிறப்பின் ஜீவியகாலம்வரையில் ஜீவித்திருந்து அதின் அந்தியகாலத்தில் தான் எடுத்த அந்த உடலைவிட்டு இறந்துபோகுமானால் அது இன்னொரு அச்சுவழியாக இன்னொரு ஜென்மமல்லவோ எடுக்கவேண்டும்? அப்படி போகும்படியான ஆத்துமாவுக்கு வணக்கமும் தேவையில்லை, வழிபாடுந் தேவையில்லையே! அல்லது ஏதோ ஒரு இடத்தில் தங்கியிருக்கிறதென்று நம்பவும் தேவையில்லையல்லவா? அப்படியிருக்கும் பட்சத்தில் இந்து சாஸ்திரோக்தமாய் தெரியவந்திருக்கும் தென்புலத்தாரென்று கேள்விப்பட்டிருப்பீரே? அந்த தென்புலத்தாரென்றவர்கள் இறந்த நமது இனஜனமாகிய பிதுர் தேவதைகளென்றும், இவர்களெல்லாம் ஓரிடத்தில் தங்கியிருக்கிறார்களென்றும் அவ்விடமானது தென்திசையென்றும் இந்த ஆன்மாக்களுக்குக்காவல் யமதர்மராஜனென்றும், அவனுக்குப்பேர் தென்திசைக்கோன் என்றும், அவனடைக்கலத்தில் இவ்வாத்துமாக்கள் சுகித்திருக்கின்றனவென்றும், அவைகளுக்குப் பூமியின்மீது வசிக்கிற நம்மைச்சந்திக்க, வருஷத்தில் சிலநாள் விடுமுறையுண்டென்றும் அந்த நாட்களில் திதி திவசமென்று மனிதர்கள் பிதுர்தேவதைகளை வழிபட்டுவருகிறார்களென்றும், பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறதே; இதற்காகவே பேர்போன இந்துமுனிகளும் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்று" என நமது சம்பாத்தியத்தில் ஆறுபங்கு போட்டு அதில் ஒருபங்கு முதலாவது தென்புலத்தாராகிய பிதுர் தேவதைகளை அதாவது இறந்துபோனவர்களை வழிபடுவதற்கென்று ஏற்படுத்தியிருக்கிறார்களே. இப்படியிருக்க, இறந்துபோன ஆத்துமா இன்னொரு அச்சுவழியைத் தேடிக்கொண்டு போய்விடுகிறதாயிருந்தால் இத்தென்புலத்தார் என்பவர் யாவர்? அந்த ஆன்மாக்கள் எது? இதுமட்டுமோ; கிறிஸ்து வேத சித்தாந்தத்தின்படி கிறிஸ்துவுக்கு முன் தூதனாய்வந்திருந்த யோவான் ஸ்நானகனின் சிஷியர்கள் அவர் இறந்துபோனபிறகு அவருக்கு உபவாசமிருந்திருக்கவில்லையா? மேலும் நமது அனுபவத்திலேயே இறந்தவர்கள் சொப்பனங்களில் வருகிறதில்லையா? இப்படியெல்லாமிருக்க இறந்தஆத்மாக்கள் ஒவ்வொரு அச்சுவழியாய் போய்விடுகிறதென்றால் மேற்கண்ட தென்புல ஆத்மாக்களெனபது எவை? மீண்டும் மீண்டும் புதிதாய்ச் சிருஷ்டிக்கப்படுகிற ஆத்துமாக்களோ?

2-வது:—நீர் சொல்லிவந்தபடியே சுரர், நரர், விலங்கு, பறப்பன, நீர்வாழ்வன, ஸ்தாவரம் ஆகிய ஏழுவகைத் தோற்றங்களிலும் ஆத்மாவானது ஏதோ ஒன்றை அடைந்துகொள்ளுகிறதாக தெரிகிறதல்லவா? இதிலே முதற்பிறப்பாகிய சுரருக்கும், மற்றைய ஜீவன்களுக்கும் உண்டாயிருக்கிற பேதம் இந்திரிய ஓட்டமே. மனிதர்களுக்குப் பிணி மூப்பு சாக்காடென்னும் சம்பவிப்பு இ

திரியத்தின் நியமிப்பினால் நிகழ்கிறது. சுரருக்கோ இந்திரிய ஒட்டுமில்லை, மேற்கூறிய மூப்பு சாக்காடு நிலைமைகளுமில்லை. ஆகவே, சுரர், நரராவது கூடாதகாரியம். மற்றப்படி மனிதர்முதல்மற்றைய ஜீவாகளெல்லாம், சப்த, ரூப, ஸ்பரிச, ரச, கந்தமென்னும் ஐந்துநுகர்ச்சிகளினாலே பிரிக்கவேண்டியதில், புல் பூண்டுவிருக்ஷங்களாகிய ஸ்தாவரங்கள் காற்றை ஸ்பரிசிக்கும்படியான ஓரறிவுயிர் உடைத்ததும்; சிப்பி சங்கு, நத்தை, மட்டி, ஊமச்சி, முதலானவை ஸ்பரிச அறிவோடுகூட நாவினால் ருசிக்கிற இரண்டறிவுயிர் உடைத்ததும்; கறையான், எறும்பு முதலான வருக்கங்கள் ஸ்பரிசம் ரசத்தோடுகூட மூக்கினால்மோரும் மூன்றறிவுயிர் உடைத்ததும்; தும்பி வண்டு முதலான வருக்கங்கள் ஸ்பரிசம் ரசம் கந்தம் என்னும் மூன்றறிவோடு கண்ணினால்பார்க்கும் ரூப அறிவாகிய நான்கறிவுயிர் உடைத்ததும்; மனிதர் மிருகம் முதலானவை மேற்படி, ஸ்பரிச ரூப ரச கந்தமாகிய நான்கறிவோடுகூட காதினால் கேட்டறியும் சப்த அறிவாகிய ஐயறிவுயிர் உடைத்ததுமாயிருப்பதாக சாஸ்திரவிதி. இங்ஙனமிருக்க, ஒருவன் கர்மலாபத்தினால், மனித ஜென்மத்தைவிட்டுச் சிங்கமாகப் பிறந்தானென்று வைத்துக்கொள்ளுவோம். சிங்கம் தனக்காகாரமாக ஒருமுயலை அடித்துத்தின்றால் தன் பசிக்குத்தேடிய ஆகாரத்திலேயே கர்மத்தைக் கட்டிக்கொள்ளுகிறானே அல்லது அவன் மாடாய்ப்பிறந்தாலும் ஓரறிவுயிராகிய புல்மேய்ந்து பசிக்காகாரந் தேடிக்கொள்வதில் அதினாலும் கொலைபாவத்தைத் தேடிக் கொள்ளுகிறான். அதிலிருந்து ஒரு மைனாப்பறவையாகப் பிறந்தாலும் அது தன் பசிக்காகச் சிறுபூச்சிகளைப் பிடித்துச் சாப்பிடுகிறது; இதினால் மூன்றறிவுயிராகிய ஜீவனைக் கொலைசெய்த பாபத்தைக் கட்டிக்கொள்ளுகிறான். அதிலிருந்து ஒரு எறும்பாய்ப்பிறந்தாலும் அவ்வெறும்பும் ஓரறிவுயிராகிய தானியங்களைச் சாப்பிட்டு அதினாலும் கொலைபழியைக் கட்டிக்கொள்ளுகிறான. ஐயா, கடைசியாக புல்லாகவே பிறக்கிறானென்று வைத்துக் கொள்ளுவோம்; அந்தப் புல்லானதுகூட ஸப்தம் ஸ்பரிசம் ரூப ரசம் என்னும் நான்கு அறிவு பூதமாகிய அப்பு, அதாவது ஜலத்தைத் தன்பசிக்கு ஆகாரமாகக்கொண்டு வளருகிறதால் இதிலும் நாலறிவுயிரைக் கொலைசெய்த பாபத்திற்கு ஆளாகிறான். ஆகவே இத்தனை ஜென்மங்களிலும் இப்படியாகக் கர்மத்தைச் செய்துகொண்டே வந்து கடைசியான ஏழாம்பிறப்பாகிய ஸ்தாவர பிறப்பை அடைந்தும், இங்கும் நாலறிவுயிராகிய ஜலத்தைக்கொண்டு பாபத்தைத் தேடிக் கொள்ளுகிறானே. இந்தப் பாபத்திற்கு எந்த ஜென்மமெடுக்கிறது? எட்டாவது ஜென்மந்தான் ஏதாவது உண்டா? அல்லதொன்பதாவது பிறப்பு எடுக்கிறதா? அல்லாமலும் மனிதன் கொலை களவுகாமாதிகள் செய்வதுதான் பாபமென்றும், அந்தப் பாவத்திற்குத்

தான் மறுஜெனனமென்றும் காட்டியிருப்பதால் ஒரு மனிதன் ஓரறிவுயிராகிய தானியங்களைச் சாப்பிடுவதும் கொலை; கீரை, கிழங்கு காய்கனிகளைச் சாப்பிடுவதும் கொலை; ஒரு துளி நீரில் பரமாணுவுக்கு நிகரான எத்தனையோகோடி கிருமிகள், அதாவது பூச்சிப்புழுக்கள் நிறைந்திருப்பதை தூரதிருஷ்டி கண்ணாடியில் பார்க்கத் தெரிகிறதே; அப்படியானால் ஒருநாளையில் அவன்பானம்பண்ணும் ஒருபடி தண்ணீரினால் எத்தனையோகோடி ஜீவன்களை கொல்லுகிறானே! இதுவுங் கொலையல்லவோ? இப்படி தன் ஆகாராதியாலேயேகொலைபழியை தேடிக்கொள்வதென்றால், மற்றப்படி எதைத்தான் மறுஜென்மத்திற்கு போகாமல்வைக்கும் உத்தம செய்கை என்றுதேடிக்கொள்ளுகிறது அப்படியானால் ஜன்மமென்பதேது?

3-வது:—ஜென்மத்திலேயே ஒருவன் பாபம் தொலைகிறதாயிருந்தால் வேதங்களிலே சொல்லப்பட்ட ரவுரவாதி நரகங்கள் என்னத்திற்கு? பிரதிமனுஷனும் தன்மனோவாக்குக் காயங்களினால் செய்யப்படாநின்ற கர்மங்களுக்காகப் பட்டுத்தொலைப்பதற்கென ரவுரவமென்றும், மஹாரவுரவமென்றும், தாமிசிரமென்றும், அந்ததாமிசிரமென்றும், கும்பிபாகமென்றும், காலசூத்திரமென்றும், அகிலத்ரவுணமென்றும், சூகர முகமென்றும், அந்தகூபமென்றும், கிருமி போஜனமென்றும், சத்சங்கிசமென்றும், சூர்மியென்றும், வஜ்ரகண்டகமென்றும், ஜலழலீவென்றும், வைதர்ணியென்றும், பூயோதமென்றும், பாணரோதமென்றும், வைச்சமென்றும், லாலாபடிகமென்றும், சாரமேயாதனமென்றும், விசிர்யுபாகனமென்றும், ஷாரகர்த்தபமென்றும், ரக்ஷோகண போதனமென்றும், சூலப்புரோதமென்றும், தெந்தசூகமென்றும், வடதிரோதானமென்றும், பரியாவர்த்தனமென்றும், சூசீமுகமென்றும் இங்ஙனம் இருபத்தெட்டு நரகங்கள் ஈஸ்வரசித்தமாய் வகுக்கப்பட்டிருக்கிறதாகவும், இவ்விருபத்தெட்டுநரகங்களுக்கும்யமதர்மராஜனே சிரேஷ்ட செங்கோலோச்சுகிறதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நரகங்களிலே முதன்மையான ரவுரவநகரத்தில், தானென்றஅகங்காரம்படைத்து மதிப்பற்று திரியும் தான்றோன்றிகளே தள்ளப்பட்டு வதைப்படுகிறார்களென்றும். அன்னியனுடைய பொருள்பொக்கிஷம் மனைவி மக்களை அபகரிக்கிறவர்களாகிய சண்டாளர்கள் தாமிசிரமென்னப்பட்ட அகோரநரகத்தில் தள்ளப்படுகிறார்களென்றும், மிருகம் பக்ஷிமுதலிய ஜீவன்களைப்பிடித்து பிராணனோடு வதைக்கிறவர் கும்பீபாகமென்னும் நரகத்திற்தள்ளப்பட்டு அந்த தாமிசிரத்தில் தளதளவென்றுகொதிக்கும்படியான தயிலக்கொப்பறைகளில் முழுகச் செய்யப்படுகிறார்களென்றும், மாதா பிதாக்களுக்கும் ஈஸ்வர பக்தர்களுக்கும் துரோகஞ் செய்யும்படியான பாபிஷ்டிகள் காலசூத்திரமென்னும் நரகத்தில் தள்ளப்பட்டு தாம்பிரபாத்திரத்தில் மேலுங்கீழுமாய் எச்சரிக்கப்படுகிறார்களென்

றும், சன்மார்க்கம்விட்டு வேறு மார்க்கங்களைத் தழுவி அம்மார்க்கங்களில் நடக்கும் பாஷாண்டமத பாஷாண்டிகளான அவிவேகிகள் அஸிபத்ரவண மென்னப்பட்ட நரகத்தில் தள்ளப்படுகிறார்களென்றும், நிர் அபராதிகளான பக்தசீலர்களை யாதும் அநுதாபமின்றித் தண்டனை செய்யும் குரூரர்கள் சூகரமுக மென்னப்பட்ட நரகத்திற் றள்ளப்படுகிறார்களென்றும், சகல ஜீவர்களிலும் மனுஜென்மமே விசேஷித்ததென்னும் அகங்காரங் கொண்டு, தாழ்ந்த ஜீவன்களை வதைப்படுத்தும் அக்ரமிகள் அந்தகூப மென்னப்பட்ட நரகத்தில் தள்ளப்படுகிறார்களென்றும், தாம் சம்பாதிப்பதைத் தாமே அனுபவித்து ஏழைகளுக்கு அன்னதான தர்மங்கள் செய்யாமலும், ஈஸ்வரனை முன்னிட்டுச் செலவு செய்யாமலுமிருக்கும் உலோபிகள் கிருமி போஜன மென்னப்பட்ட நரகத்தில் தள்ளப்படுகிறார்களென்றும், வழிபறிக்கொள்ளை முதலிய அகாலகொள்ளை செய்கிறவர்கள், சதங்கிஸமென்னும் நரகத்திற் றள்ளப்பட்டு சிவக்கக் காய்ந்த இருப்புத் தறடுகளினால் சுட்டுப் பிடுங்கிச் சதைக்கப்படுகிறார்களென்றும், தாம் அடையக் கூடாத ஸ்திரீகளைப் பலாத்காரமாயிழுத்துப் பாதாரகமனம் செய்கிறவர்கள் சூரமியென்னும் நரகத்தில் தள்ளப்பட்டு தீக்ஷண்யமான ஜாட்டிகளினால் அடியுண்டு அக்கினிமயமான தூண்களை ஆலிங்கனஞ்செய்யவற்புறுத்தப்படுகிறார்களென்றும், தராதரமும் வம்பு நிலையுமில்லாமல் பலஸ்திரீகளையும் மணந்து சகல பிராணிகளையும் இம்சித்து வதைசெய்விக்கிற துரோகிகள் வஜ்ரகண்டகமென்னும் நரகத்தில் தள்ளப்பட்டு கூர்மையான முட்களால் நிறைந்த இலந்தைமரத்தில் பரிதாபமின்றி ஏற்றப்படுகிறார்களென்றும், வைதீகமரியாதைகளைக் கெடுக்கும் அதிகாரிகள் வைதரணிய மென்னும் நரகத்திற் றள்ளப்படுகிறார்களென்றும், மனோகுஜோத்தியமான வேட்டையாடி நிஷ்காரணமாகவே வாயில்லாத ஏழை ஜீவன்களைக் கொன்று நாசஞ்செய்யும் மவுடீகர்கள் பாணரோத மென்னப்பட்ட நரகத்திற் றள்ளப்பட்டு யமபுருஷாளின் பாணங்களினால் பிளக்கப்படுவார்களென்றும், சாக்ஷியிலும் லேவா தேவியிலும் வியாபாரத்திலும் பொய்கள்பேசி வயிறுவளர்க்கும் அனாசார பூதிகள் விசிரயபாணமென்னும் நரகத்தில் தள்ளப்படுகிறார்களென்றும், அகோர தீக்ஷண்ய செயல்களினால் மாற்றாரையும் மற்றும் ஜெந்துக்களையும் எப்போதும் பீதிப்படுத்தும் துஷ்ட சாவான்கள் தெந்தசூகமென்னும் நரகத்திற் றள்ளப்படுகிறார்களென்றும், கூன் குருடு செவிடு ஊமையான பிராணிகளையும் மற்றும் ஜெந்துக்களையும் படுகுழிகளிலும், பாழ்வீடுகளிலும், கூண்டுகளிலும் அடைத்துவைக்கும் துஷ்ட மனுஷாள் வடதிரோதானமென்னும் நரகத்தில் தள்ளப்படுகிறார்களென்றும்; பிச்சை கேட்பவர்களைச் சிட்சை செய்பவர்கள் பரியாவர்த்தன மென்னும் நரகத்திலும், ஐஸ்வரிய

வான்களென்கிற கர்வத்தினால் மமதை யுடையவர்களாய் எல்லாரிடத்திலும் சங்கோசங்கொண்டு தம்முடைய கிரகங்களிலேயே தம்மைப்போற்றிப் போஷித்துக்கொண்டு இருக்கிறவர்களும் சூசீமுகமென்னும் நரகத்திற் றள்ளப் படுகிறார்களென்றும், இப்படியாக சொல்லப்பட் டிருக்கிறதே; ஆன்மாக்கள் கர்மத்திற் கேற்ற ஜென்மங்களெடுப்பது நிஜமாக இருக்குமாயின் இந்த நரகங்களென்னத்திற்கு? அன்றியும் கிறிஸ்தவர்களும், மனிதர்களின் ஆத்துமா, தம் தம் கர்மத்திற்கேற்க, ஷிஹோல், ஆதேஸ் முதலான ஆறு ஏழு ஸ்தலங்களுக்குப் போகிறதாக அபிப்பிராயப் படுகிறார்களே; இப்படியாக நரகங்க ளிருக்கும்போது ஜனனமென்பதென்னத்திற் குண்டாயிருக்கும்?

4-வது:—இறந்தபிறகு உடலை விட்டுப் பிரிந்த ஆத்துமாக்களில் சிலது கன்மத்திற்கேற்ற ஜென்ம மெடுக்க வேறு அச்சுவழியப்போகாமல் காளி, கூளி, முனி, காட்டேரி, குட்டிச்சாத்தான், கொள்ளிவாய்ப்பேய், இரிச்சி முதலான துஷ்ட ஆவிபெனப் பேர்வகித்துப் பூலோகத்தின் பல விடங்களிலும் திரிந்து அநேகரைத் தொந்தரைசெய்து வருகின்றனவே; பிணி கொண்ட ஆத்துமாக்கள் மறு ஜெனனமெடுப்பது வாஸ்தவமேயாயின் இவைகள் இப்படி ஆவேசங்களாய்த் திரிவானேன்? இப்படிக்கொற்ற ரூபங்கொண்ட ஆத்துமாக்களின் கோஷ்டங்களையும் இவைகளின் ரூபங்களையும் கண்டவாகள் அநேகர் சாட்சி பகர்வார்கள். அன்றியும் சிலர் இவைகளைத் தத்தம் சக்கரங்கள் பிரகாரம் மணிமந்திரங்கள் நூற்றெட்டுரு, ஆயிரத்தெட்டு உருவென்று ஜெபித்து பூசை முதலானதுசெய்து பொங்கலிட்டுப் பலிகொடுத்தும் தூபதீபங்காட்டி வசியப்படுத்திக்கொண்டு பேதனம் மாரணம் முதலான துஷ்டஆட்டங்களாடியும் வருகிறார்கள். இவைகளைக் கொண்டே பில்லிசூனியம் முதலிய துஷ்டகிரிகைகள் செய்கிறார்கள். அப்படியேகிறிஸ்தவேதமும் மோலாக், ஓரஸ், ஆஸ்மதேயு, பேலியல், ஆதர்மலேக், சாத்ரன், நிஷராக், ஜோவ், மாரோன், சொபிஸ், அஸ்ஸாயேல், பீலஸ், ஆக்ரான், ஸ்ட்டிரிகஸ், மல்ஷிபார், சீமாஸ், காஷிடர், வாலீம், ஆஷ்படராக், அஸ்டார்டி, லெத்திகன், தாமோஸ், பியல்ஸிபப், டேகன், லூசிபர், ரிம்மன், பாயேல், ஔரைசிஸ், ஐசிஸ் முதலான அநேகவிதப்பேய்கள் இருப்பதாகவும், பேய்விஷயத்தில் தொந்தப்பட்டிருந்த அநேக மாந்திரீகர்கள் யூத ஜனங்களுக்குள் இருந்திருந்ததாகவும், அநேகம்பேர் தங்களுக்கு வசியப்பட்டிருந்த பேய்களி னுதவியால் பணம்வாங்கிக் கொண்டு இறந்துபோனவர்களின் ரூபங்களைக்காட்டி வந்ததாகவும், திருஷ்டாந்தமாக இறந்துபோன சாமுவேல் தீர்க்கதரிசியின் ஆவியை ஒரு சூனியக்காரி தன் மந்திரசக்தியா லழைத்துச் சவுல் இராஜனுக்குக் காட்டினதாகவும், அன்றி, மோசேயென்பவரை மோவாப் தேச

க்கிற்து எதிரேயுள்ள ஒரேப் என்கிற பள்ளத் தாக்கில் மிகாவேல் தூதனால் அடக்கம்பண்ணப்படப் போகும்போது ஒருபேயானது மிகாவேல்தூதனிடம்வந்து அந்தபிரேசக்தை எனக்குக்கொடுஎன்று கேட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, பேய் உண்டென்பது வாஸ்தவமாகவே காணப்படுகிறது. அப்படி இறந்த ஆத்துமாக்கள் பேயாவதானால் ஜென்மங்களில் புகுந்துபிறக்கிற ஆத்மாக்களேது? இதனால் ஜன்மமில்லையென திருஷ்டாந்தமாகிறது.

5-வது:—ஆத்துமா அகண்டமேயன்றி கண்டமல்ல. அகண்டமென்றால் எங்கும்வியாபித்ததும், கண்ட மென்றால் ஓரிடத்திருக்கையில் இன்னேரிடம் இராததுமேயாம். அகண்டமென்பது ஆகாயத்திற்கும் கண்டமென்பது நமதசரீரததிற்கும் ஒப்பிடலாம். ஆகாயமென்றால் ஏதுமில்லாத சூன்யமான வெட்ட வெளி. இவ்வாகாயமாகிய சூன்யதலத்தை எங்குமே நாம் காணலாம். காற்றிலிருக்குமோவென்றால், காற்றை நீக்கி அதற்குள்பார்த்தால் அங்கும் அதுஉண்டு பூமியைப்பிளந்து அங்கு பார்த்தால் அங்கும் அதுஉண்டு. அக்கினியிலும் அதுவுண்டு. ஆகாயம் எங்குபார்த்தாலும்உண்டு. ஆனால் சரீரமோ காசியிலிருக்கிற ஒரு சரீரத்தை ராமேஸ்வரத்தில்தேடினால் அது அங்குஇராது. சென்னையிலிருக்கும் உடலைச் சீமையில்தேடினால் அது அங்கேஇராது. அப்படியின்றி ஆத்துமா எங்குமே வியாபித்ததாயிருத்தலால் சரீரத்தைப்போல் ஓரிடத்தில் இல்லையென்று சொல்லப்போகாது. ஆகவே சரீரத்தைப்போலல்லாமல் ஆகாயத்தைப் போன்ற எங்கும் வியாபித்திருக்கும்படியான இவ்வாத்துமாவானது சரீரத்தைவிட்டகன்றால் மறுபடியும் அதே ஆத்துமா பிரிந்தவண்ணமாகவே இன்னொருஜென்மத்திலும் புகுந்ததென்றும் கர்மத்திற்கேற்ற ஜன்மமிருக்கிறதென்றும எப்படிச் சொல்லக்கூடும்? திருஷ்டாந்தமாக கடாகாசத்திற்கும் மகாகாரத்திற்கும் உள்ள வித்தியாசத்தைச் சற்று கவனிப்பாம். கடமாகிய பானையிலுள்ள தென்னவோ அதே தான் மகாகாசமாகிய வெளியாகாசத்தின் தன்மையும்; கடாகாசத்திற்கும் மகாகாசத்திற்கும் யாதும் ஒருவிஷயத்தில் பேதாபேதங் கிடையாது கடத்தைபுடைத்தால் அதிலிருந்த ஆகாசம் மகாகாசத்தில் கலந்துவிடுகிறது மறுபடியும் அதைப் பிரிக்க ஒண்ணாது, கடமுடைந்த அதேவிடத்தில் இன்னொரு கடத்தைவைத்தால் இதில் வந்துநிறையும் ஆகாயமானது மேற்படி உடைந்த கடத்தினின்று வெளிப்பட்ட அதே ஆகாயந்தானென்று நாம் நினைக்கவே போகாது அன்றியும், அகண்ட ஒருசமுத்திரத்தின்கண் ஒருவன் ஒரு கைஜலம் எடுக்கிறானென்று வைத்துக்கொள்வோம்; அவன் அதை மறுபடியும் ஊற்றிவிட்டுத் தான் ஊற்றின அதேஜலத்தை திரும்ப அள்ளக்கூடுமா? கூடாதே இதுபோலவே ஆத்துமாவானது 84 நூறாயிரம் அச்சுபேதங்களிலும் அந்தந்த அச்சிலும் தனித்தனியா

யநின்றதுபோலக் காணப்பட்டாலும், எல்லாம் உடலைவிடுங்கால த்தில் ஒன்றாகத் தான் சேர்ந்துக்கொள்ளும். சேர்ந்துகொண்ட பி றகு அதற்குப்பிரிவினை கிடையாது. அரூபமும் அகண்டமுமாகை யால் அப்படிச் சேராமலும் இராது. எல்லா ஆத்மாவும் அகண்ட மென்றால் கொள்ளுதற்கிடமெங்கே? 84 நூறாயிரம் ஆத்மாக்களெ ன்றால் கணக்கெங்கே? எல்லாம் ஒன்றே; ஒன்றேயானால் அதைஎ ண்ணுவதெப்படி? பிரித்து அதற்கு ஜன்மமுண்டென்பதெப்படி?

6-வது.—ஜன்மமுண்டென்றே நீர் சொல்லுகிறீர். நல்லது நான் அதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் போன ஜென்மத் தில் என்னென்ன விதமாயிருந்தோம், எப்படி வளர்ந்தோம், எ ப்படி குடித்தோம், எப்படி ஜீவித்தோம், எப்படி செத்தோமெ ன்று ஆத்துமகோடிகளுக்கு சற்றேனுந் தெரியாமலிருக்கிறதே; பிறந்ததும் ஜீவித்ததும் வாஸ்தவமாகவேயிருக்குமாகில் கிஞ்சிற் றாயினும் ஆன்மாக்களுக்குக் கியாபகம் இருக்கவேண்டுமல்லவா! அப்படிச் சற்றுமில்லாமல் முற்றும் மறைவாய் மூடியிருப்பதற்கு க் காரணமென்னே? எத்தனையோ வருடங்களுக்கு முன் நடந்த சங்கதிகள்கூட வெகு அற்பமாயிருப்பினும் மிகு கியாபகத்தோடு சொல்லுகிறார்களே! இதுமட்டுங் கியாபகத்திற்குப் படாமற்போ வது என்னத்திற்கு?

7-வது.—சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்னும் பஞ்சபுலன்களே ஆத்துமாவென்று சிலர் கூறுகிறார்கள். இந்தப் பஞ்சஞான விஷயங்களும் உயிர்போகும்போது ஐந்து ஐந்துவழி யாய் ஒட்டம் பிடிக்கின்றன. அதாவது சப்தம் ஆகாசத்திலும், ஸ் பரிசம் காற்றிலும், ரூபம் நெருப்பிலும், ரசம் ஜலத்திலும், கந்தம் மண்ணிலுமாய்க் கலந்து விடுகின்றது. அப்போது ஆத்துமா எங் கே! அதற்கு மறு ஜென்மமெப்படி?

8-வது.—சிலர் உதிரத்திலுள்ள சூக்ஷமாக்கினிச் சத்தே ஆத் துமா வென்கிறார்கள். எப்படியெனில் உதிரத்தினாலேயே வலிமை கொள்ளும் இச்சத்தியானது உதிரம் சுத்தமாயிருக்கிறவரையில் ப ஞ்சஅறிவுகளுக்கும் நல்ல சுத்தமான கியானம் கொடுத்து வருகிற தென்றும் உதிரங்கெட்டுப் பலட்சயப்படுங்காலத்தில் அதின் சூக் குமசக்தியும் பலவீனத்தை அடைந்து அந்தப் பலவீனத்தினால் க ண்கள் மயங்கி காதுகள் அடைந்து, வாய்குளறி, ஸ்பரிசஉணர்ச் சி, நாவின்ருசி, நிலையானபுத்தி இவை யாவுமில்லாமல் அழிவடை கிறதென்றுந் தெரிகிறதே, அப்படியிருக்க பிரத்தியேகமான ஆத் துமாவென்று ஒன்று உண்டானால் மேற்படி விஷயமெல்லாம் அ ந்தப்படிக்கு தடுமாற்றம் கொள்ளாதிருக்குமல்லவா? அப்போ து ஆத்துமா ஒன்றுண்டென்பது ஏது? அதற்கு ஜென்மமேது?

9-வது:—சிலர் பிராணவாயுவையே ஆத்துமாவென்கிறார்கள். ஜீவன்விட்ட பிறகு வாயு, வாயுவிலே கலந்துபோகும். கலந்தது கலந்தவண்ணமே மீளவும் திரும்பாது. அப்போது அதற்குஜென்மமேது?

10-வது:—சர்வமும் பிரம்மம், அதாவது கடவுளின் சொரூபமாயிருப்பதால் ஒவ்வொரு ஜீவனின்உள்ளும்புறமும் பிரம்மமாகவேயிருக்கின்றது அப்போது சமஸ்தமும்பிரம்மசெயலேதான் அப்படியானால் கன்மமென்பதேது, தர்மமென்பதேது? கர்மம் செய்கிறதார்? அதைக்கேட்கிறதார்? தண்டிக்கிறதுயார்? படுகிறதுயார்? எல்லாம் அதுவேயானால் ஜென்மம் என்னத்திற்கு?

(இங்கே பஞ்சாயத்தார் குறுக்குப் பேச்சாக)

சரி!சரி! வெகு லட்சணமாகக்காணுதே. சரீரவாதி பேசினார்பேசினார் சபையோர் அனைவருக்கும் தூக்கம்வந்து விட்டதென்று அவரைச் சற்று அடக்கி ஒழித்துக் குந்தினோமென்றால், இப்போது நீரும் இப்படி வெறுப்புச்சலிப்பில்லாமல்நியாயமொன்றிருக்க வேறுவேறு காரியங்களை யெல்லாம்குழப்பிக்கொண்டிருக்கிறீரே! உமது நெடும் வாதத்தைச்சற்று நிறுத்தும்.

ஆன்மவாதி:—பஞ்சாயத்தாரே; சற்றுக்ஷமிக்க வேண்டும். விருதாவில் ஆத்துமத்தைத் தண்டித்து விட்டால் அது நீதியாகாது. நான்கேட்ட இந்தப் பத்துக் கேள்விகளுக்கும் சரீரவாதி என்ன உத்திரவு சொல்லுகிறாரோ, அதன்மேல் உங்கள் காரியத்தை நடத்துங்கள்.

அரசர்:—நல்லது ஆகட்டும்: ஆத்மவாதி பேசட்டும்.

ஆன்மவாதி:—ஏனையா சரீரவாதியே! நான்போட்ட கேள்விகளுக்கு என்ன உத்தரவு சொல்லப்போகிறீர்?

சரீரவாதி:—ஐயா! ஆன்மவாதியே! போயும், போயும்இந்தக்கேள்விகளைத்தானா வெகு பிரமாதமாகக் கேட்கவந்தீர்; நான்நினைத்தேன் ஆனையளவு, ஒட்டையளவு பருமனும் பெரிதுமாயிருக்குமென்று, கடைசியில் பார்த்தால் மலைவிழுங்கி மரியாத்தாளுக்குக் கடுகு சுண்டாங்கியா? என்கிற கதையாச்சுது உமதுகேள்விகள். இதோ நீர்கேட்ட முதல்கேள்விக்குவிடை:-

கவனியும் ஒவ்வொரு மனிதனும் சாயுச்யபதவியென்னும்கடவுளோடு ஐக்கியமாகவேண்டியவனாயிருப்பதால் அந்தத்தன்மைக்குப் பக்குவப்படுவதற்குமுன் அவன் யாதோ காரணத்தால் இறந்துபோனால் அப்படிபட்டவனுடைய ஆத்மமேபிதுர்லோக முதலிய உலகங்களில் சேர்க்கப்பட்டு ஈஸ்வர ஆக்ஞைக்கு எதிர்பார்த்திருக்க வேண்டியதாயிருக்கிறது அந்தக் காலங்களில் அவ்வாத்துமத்தின் பாடுகுறைவதற்காகப் பூலோகத்திலுள்ள அவன் சந்ததியார்கள் திதி திவச முதலிய பிதுர்பூஜைகளை நடத்தி

வருகிறார்கள். அந்தசாயுச்சியபதவி காலம்ஏற்படுகிறவரையில் மறுபடியும்ஜென்மசக்கரத்திலுழலவேண்டியதே. ஆகவே இதனால் ஜென்மமுண்டென்று அறிவீராக. நிற்க,

இரண்டாங் கேள்விக்கு விடை:—ஒவ்வொரு ஆத்துமாவும் அதன் பிறப்பின் தன்மைக்கேற்றதுபோல ஓரறிவு ஜீவனையோ ஈரறிவுஜீவனையோ,மூவறிவுஜீவனையோ,நாலறிவுஜீவனையோ, ஐயறிவுஜீவனையோ, இதில் எதையோ ஒன்றைத் தனக்கு ஆகாரமாக்கிக் கொள்ளுகிறது. இப்படி ஆகாரமாக்கிக் கொள்ளுவதனால் ஒவ்வொருஜென்மத்திலும்ஆத்துமாக்கள் கர்மத்தைத்தான் அதிகமதிகமாய்அனுசரித்துக்கொண்டிருக்கிறதேயல்லாமல் ஒழிந்தபாட்டைக்காணோமேயென்று நினைக்கவேபோகாது.ஒருஜென்மத்தில் மனிதனாய் அவதரிக்கும் ஆத்துமாவானது, அந்த ஜென்மத்தின் பஞ்சாங்க விதிக்கு ஏற்க நீடித்திருக்குங் காலம்வரையில் நூற்றுஐம்பது மூட்டை அரிசியும், மூவாயிரத்துஐந்நூறு ஆடுகளும்,நூற்றுஎழுபத்தைந்து கோழிகளும், பத்துலட்சம் தாவரவர்க்கங்களும், ஐயாயிரம் காலன்ஜலமும் இன்னும் மற்ற உயிர்ப்பிராணிகளும் ஆத்துமாவுக்கு இரையாயினவென்று வைத்துக்கொள்ளுவோம்; இவ்வளவு உயிர்ப்பிராணிகளையும் அவ்வாத்மா பட்சித்து விட்டபோதிலும், இவ்வளவுஉயிர்களும் அவைகளின் ஜென்மஜென்மங்களில்இவ்வாத்துமாவைத் தனித்தனியே பட்சித்துஇருக்கலாம் நான் அடித்தேன்,அதனால் நீயடித்தாய் என்கிறபடி முன் ஜென்மங்களிலேஇந்தஆத்துமாவை அவைகள் பட்சித்திருக்கக் கூடுமாதலால்இந்த ஜன்மத்தில் இந்த ஆத்துமாவும் அவைகளைப் பட்சிக்கநேரிட்டது. இப்படியாகப் பிரதி ஆத்துமாவும் ஒன்றக் கொன்று செய்துகொள்ளும்படியான கருமங்களும் வினைப்பயன்களும் ஒழியுந்தனையும் ஒவ்வொரு ஆத்துமாவும் ஒன்றையொன்று அந்தந்தப் பிறப்புகளில் பட்சித்துக்கொண்டும் ஒன்றையொன்று கொலைசெய்துகொண்டும் ஒன்றையொன்று அடித்துக்கொண்டும் அபகரித்துக்கொண்டும் ஒன்றையொன்று கொடுப்பனைகொள்வினையில் அடிமைப்படுத்திக்கொண்டும் இப்படியாக கர்ம நிவாரணம் பண்ணிக்கொண்டு மிருக்கும். இவை அனைத்தும்முடிந்து, ஞானப்பேற்றையடைந்து பசிதாகம் முதலியவைகளைத் தவிர்த்துப் பரத்தை நோக்கிப் பூரணத்தோடு கலந்துவிடும் இப்படியாகத்தான் கர்ம நிவாரணமாகிப் புண்ணியபதவியைத் தேடிக் கொள்ளவேண்டுமே யல்லாமல் மற்றப்படிக்கில்லை எனவே, ஆத்துமாக்கள் எப்போதும் கர்மத்தில் உழன்றுகொண்டிருக்கிறதென்பது துணிபு. ஓய் ஆன்மவாதியே! உமது 3-ம் கேள்விக்கு விடையைக்கேளும்.

3-வது பிரதிமனுஷனுக்கும்அவனவன் கர்மத்திற்கேற்றமூன்றுவிததண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அத்திதெய்

வீகம், அத்திபௌதீகம், அத்திஆத்மீகம் என்பவைகளே. இவற்றில்முதல்தண்டனை அத்திதெய்வீக மென்பதெப்பேர்ப்பட்டதெனிலோ, ஒரு சிசுவானது கருவூரில் பிண்டோற்பவமாய் சரியான மனுஷ ரூபத்திற்கு வந்து ஆறுமாதமுதற்கொண்டு பத்தாம் மாதம் வரையிலும் வயிற்றிலுள்ள உதிரம், அழுக்கு, மலம்முதலிய வைகளில் சிக்குண்டு கிடந்து, அதிலேயே பூசப்பட்டதாய் உச்சுவாச நிச்சுவாசங்களில் திக்கு முக்காடி அந்தண்டை இந்தண்டை புரளுவதற்கும் கைகால்களை நீட்டி முடக்குவதற்கும், கரண விஷயாதிகளில் மனதைச் செலுத்திச் சுகிப்பதற்கும் சாத்தியப்படாமல் துக்கசாகரத்திலமிழ்ந்து கடைசியாகப் பத்தாம் மாதத்தில் தாயின் பிராணவாயும், அபானவாயும், சுழிமுனைவாசல் வழியாய் நெருக்கிப் பிழிந்து விரைந்துதள்ள, தனஞ்செயனென்னும் வாயு தலைபக்கமாய் நெருக்கித் தலையில்மோத இவ்வளவு கஷ்டத்தோடு கூ கூ வென்று கூச்சலிட்டுக்கொண்டு வெளியே வந்து விழுவதுதான். இதுவே அத்தி தெய்வீகம். 2-வது தண்டனையாகிய அத்தி பௌதீகத்தின் குணங்களோ, மேற்சொன்ன அத்தி தெய்வீகத்தின் அவ்வளவு கஷ்டங்களையும் ஒருவன் அனுபவித்து ஜெகத்தில் மனுவாய்ப் பிறந்தும், ஈ, எறும்பு, அரணை, பாம்பு, செய்யான், பூரான், பேய், நாய்முதலிய விஷஜெந்துக்களாலும், சிங்கம், புலி, கரடி, நோணுப், யானைமுதலியகொடுஞ் சரச்சுகளாலும்; கத்தி, சுத்தி, ஈட்டி, வாள்வேல் முதலிய ஆயுதங்களாலும்மருந்தீடு, சதிமுதலிய தந்திரங்களாலும்; மழை, இடி, மின்னல், சுவரிடிதல், மரம்வீழல், தீயெரிப்பு, வெள்ளம்முதலிய அகாலவிபத்துக்களாலும், அதிக போஜனம் மாரடைப்பு முதலிய விக்கினங்களாலும் இன்னும் மற்றவைகளாலும் நேரும்படியான பயங்கர துன்பங்களுக்கெல்லாம் உட்பட்டிருக்கவேண்டியது. இதுவே அத்திபௌதீக தண்டனை. 3-வதான அத்தி ஆத்மீகமென்னும் தண்டனையோ, பிரதி ஆத்மாவும் ஸ்தூலத்தோடுங் கூடிச்செய்த பாபங்களுக்கு, அதன் ஸ்தூலத்தை விட்டது முதல் மறுஸ்தூலம் அடைகிறவரையில் இடையிலுள்ளகாலத்தில் அனுபவிக்கிறதண்டனை — இதையே இருபத்தெட்டு வகைகளாகப் பிரித்து, ரவ்ரவாதி இருபத்தெட்டுநரகங்கள் இருப்பதாய் வியாசரிஷி, தம் புராண காவியங்களில்காட்டிப்போயிருக்கிறார்.— ஆனாலும்ஒன்று; மேற்சொன்னபடி ஸ்தூலத்தை விட்டதற்கும் மறுஸ்தூல மெடுப்பதற்கும் இடையிலுள்ள காலங்களில் அனுபவிக்கும் தண்டனையோடு மட்டும ஆத்மாக்களின் கர்மம் ஒழிந்து போகிறதென்று நினைக்கப்போகாது. சூட்சமத்தோடுங்கூடி ரவ்ரவாதி நரகங்களில் அனுபவித்த தண்டனைபோக மீதியான கர்மதண்டனையைமறுபடியும் இன்னொரு ஸ்தூலமெடுத்து அந்த ஸ்தூலத்திலும் கூன், குருடு, செவிடு, ஊமை முதலிய அங்கப்பழுதுகளாலும் கால், கைமுதலிய அங்க

ங்களினளவுகள் குறைவதினாலும், குஷ்டம்முதலியபெரும்பிணிக ளாலும், இன்னும் நாலாயிரத்து நானூற்றுநாற்பத்தெட்டு வியா திகளாலும், அனுபவித்து உத்தரிக்கவேணுமாயிருக்கிறது. இதோ டு முடிந்ததென்று நினைக்கப்போகாது, மறுபடியும் அந்தந்த ஜெ ன்மத்தில் செய்யும் கர்மங்கள்ஏதெதுவோ அதுபோலவே மறு உ லகத்திலும், மறு ஜென்மத்திலும் அனுபவிக்க வேண்டியதாகும். இப்படி ஜென்மங்கள்தோறும் ஆத்மாக்கள தன்னைத்தானறிகிற வரையில் தண்டனையடைந்து கொண்டிருக்கிறதென்று நீரறிந்து கொள்வீராகவும். ஓய் ஆன்மவாதியே! உமது 4-ம் கேள்விக்கு இ தோ விடைகூறுகிறேன்.

4-வதுவிடை:— நீர்சொன்னதின்படியே முனி. இரிச்சி. கா ட்டேரி, ஜின் முதலிய அனேக பிசாசுகளும், அசுத்த ஆவிகளும் உண்டென்பதற்கு யாதும் சமுசயமில்லை. இவை எல்லாம் உண்டு தான் இவைகளைமதியிலிகள் பூசிப்பதும், தொழுவதும்வாஸ்தவந் தான் இவைகளைக்கொண்டே கர்மப்பிணிகொண்டமாந்திரீகர்கள் யந்திரம், சக்கரம் முதலியவைஇயற்றி ஓம், சுவாஹா என்னும் அ ட்சரங்களுக்குஇடையில் அந்தந்தப்பேய்க்கு ஏற்றப்போல்வர்ண னை வார்த்தைகளைச் சேர்த்து மந்திரங்களை உண்டாக்கி நூற்றெட் டு மணிகள்கொண்ட ருத்ராட்சமாலையாலும், மிளகு மாலையாலும் துளசிமாலையாலும்மற்றும்மல்லிகைமுதலியபுஷ்பங்களாலும், உரு க்கள்ஜெபித்து சுடலைக்கரு;ஐங்கோலக்கரு,ஐங்காயக்கரு, நாவிந் துக்கரு, முதலிய கருவுகளால் யந்திரங்களின் நடுவில் சக்ராதி களின் பேரைவரைந்து, அதன்மேல் குந்தி மாரணம், பேதனம், முதலிய துஷ்கர்மங்கள் ஆடி வருவதும் நிஜமே ஆனால் மறுஜெ ன்மமென்பது ஒன்றுண்டேயானால் இப்படி இவர்கள் பேயாய் அலைவதுஎன்னத்திற்கு என்பதல்லவோ உம்முடைய கேள்வியா யிருக்கிறது? இதைப் பன்னிப்பன்னிப் பேசுவதில் ஒன்றும் பிர யோஜனமில்லை. ஒரே வார்த்தையில் சொல்ல, மனிதர்கள் பஞ்சா ங்ககால விதிப்படி பூலோகத்தில் நீடித்திராமல் அதற்கு முன்பா கவே வேணுமென்றே உடலை வருத்தி மாய்த்துக்கொள்வார்க ளேயானால், அத்தகைய ஆத்துமாக்கள் தான் மீதிக்காலம்வரை யிலும் பேயாய் சூட்சமதேகத்தோடு அலைந்துகொண்டிருக்கும். காலம் நேர்ந்ததும், அவைகளும் வேறு அச்சு, அதாவது உடலைத் தேடிக்கொள்ளும். இதோ உமது 5-வது கேள்விக்கு விடை.

5-வது, ஆத்மா அகண்டமேபனறி கண்டமல்ல. ஆத்துமா வியாபிக்காதவிடமுமில்லை, அதுசிருஷ்டிக்காத பொருளுமில்லை; அது காணுதகாட்சியுமில்லையென்பது சரிதான். என்றாலும், அது பிண்டத்திலல்லாமல் தன்னைத்தான் அறியப்போகிறதேயில்லை அகண்டதத்துவத்தின்படி அதுமகத்துக்கு மகத்தானதாயிருந்து ம், அணுவுக்குள் அணுவாய் இருக்கும்படியானசக்தியும் அதற்கு

ண்டு. ஆணவாதிமும்மலங்களால் அது சூழ்ந்திருக்கும் வரையில் தான் யாரென்றும் தம்ரூபமென்ன வென்றுங்கூட அறிந்து கொள்ளாதிருந்து முடிவில் தானே தனியென்று அகங்காரங் கொண்டிருந்த அதி கருவிகரணங்களெல்லாம் ஒய்ந்து பூரணப்படுங்காலத்தில் ஏதுமில்லாமல் ஏகமௌனத்திலடங்கி மௌனமே ரூபமாயிருக்கும். பேரறிவு நிராலம்ப பரா பர வெளியிலே கலந்து விடுகிறது.

ஆகவே, ஆத்துமா அகண்டமென்று நீர் நிலைநிறுத்தினபோதிலும் உலக வியாபிப்புக்காக அதுமாயையின் கூத்தால் நானுபேத அச்சுகளிலும் நுழைந்து அச்சுக்கேற்ற நன்மைகளையோ தீமைகளையோ புரிந்து, உடலைவிடுங் காலத்தில் மீண்டுங் கர்மத்திற்கேற்ற ஜன்மங்களை எடுக்கிறதென்று இதனால் நான்நிலைநாட்டக்கூடியவனுயிருக்கிறேன். ஆத்துமா ஜன்மமெடுப்பதில்லையென்னும் உம்முடைய சித்தாந்தப்படியே பூலோகத்திலனேகம்பேர் அபிப்பிராயப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அபிப்பிராயப்படுவதில் அனேக பேதங்களுண்டு. ஒருகக்ஷிக்காரர் என்ன சொல்லுகிறார்களெனில் ஆத்துமா அகண்டமா யிருந்தபோதிலும் (அல்லது பிண்டத்திற்கேற்க அனேகமாய்ப் பாகுபாடடைந்த போதினும்) பிண்டத்தைவிட்டபிறகு அது ஆகாயத்தில் ஏகமாய்க் கலந்துவிடுமென்றும், பிறகு அவ்வாத்மா பிறவியில் நுழையப்போகிறதுமில்லை, தான்செய்த கர்மதர்மங்க ளெவ்வளவோ அதற்கேற்ற துன்ப இன்பங்களை அனுபவிக்கப் போகிறது மில்லை என்றும், ஆனால் பிறவியென்பதின் பிரகாரம் ஒரு மனிதன் பூலோகத்தில் ஜனித்து அவன் சரியான வயதுக்குவந்தபின் பிள்ளைகளைப்பெற்று இப்படியே பிள்ளைகளுக்குப் பிள்ளைகளையும் தலைமுறை தலைமுறையாய்ப் பயிர்செய்து வைப்பதுதான் பிறவி என்றும் இதுவுந் தவறினால் தினமொன்றுக்கு ஒருவனின் குணம் எவ்வளவு விதங்களாக பேதப்பட்டுப் போகின்றதோ அவ்வளவு பேதங்களும் ஜன்மங்களேயென்றும் சொல்லுகிறார்கள். மற்றொரு கட்சியார் ஆத்துமா ரூபமற்றதாயிருந்தும் அது அப்போதைக்கப்போது கடவுளால்நவீனமாய் உண்டாக்கப் படுகிறதென்றும், உண்டாக்கப்பட்டு மனிதனுக்கேயன்றி மற்றவைகளுக்கு அதுகொடுக்கப்படுகிறதில்லையென்றும், ஆத்துமாவையுடைய மனிதன் இறந்தபிறகு அவனின் ஆத்மா உலகமுடிவுபரியந்தம் ஓரிடத்திற்போய் ஒதுங்கிக்கொண்டிருக்கிறதென்றும்,உலகமுடிவுபரியந்தம் கடவுளால்மோக்ஷமோ நரகமோ அதற்கு அளிக்கப்படுகிறதென்றும்அபிப்பிராயப்படுகிறார்கள். இன்னும் அனேக முண்டெனினும் அவைகளை இங்குவிவரிப்பது அனவசியமென்று விடுத்து மேற்கண்ட இருதிறத்தாரின் அபிப்பிராயத்தோடு உம்முடைய ஞாயத்தைப்பற்றியும் இங்கு உதகரிக்கிறேன்.

முதற் கக்ஷிக்காரரின் அபிப்பிராயத்தை முன்னுதாய் கவனிக்குமளவில் பூலோகத்தில் கடவுள் ஆத்மகோடிகளை ஜனிப்பித்ததென்னத்திற்கு? ஆத்துமாக்கள் தங்களின் ஜீவியகாலத்தின் நன்மை தீமைகளுக்கேற்க ஜன்மங்களெடுத்து நன்மை தீமைகளை அனுபவியாமற்போனால் அப்பேர்பட்டசிருஷ்டிப்பினால் நேர்ந்த பயனென்ன? இப்படி சிருஷ்டிப்பதைவிட கடவுள் சும்மாவே மவுனத்திலிருந்துவிட்டால் நலமாயிருக்குமல்லவா? அப்படி அவர் சிருஷ்டித்தாலும் எல்லோரையும் ஒரேவண்ணமாய்ப் படைத்து முடிவுகாலத்தில் ஒரேவிதமாய் எடுத்துக்கொள்ள வல்லவோ வேண்டும்? இங்ஙனமின்றி, சிலரைக்கல்விவந்தராகவும் சிலரைத் தனவந்தராகவும், சிலரை ஏழைகளாகவும்' சிலரைக் கோழைகளாவும் சிலரை இளம் பருவத்திற்கும் சிலரை முதிர் பருவத்திற்கும். சிலரை சுகமுற்றவராகவும்,சிலரைச்சுகமற்றவராகவும் இப்படி பலவிதமாய்ச் சிருஷ்டித்து உலகத்தைக் காலாகோலப் படுத்தியிருக்கிறாரே' ஈதென்னத்திற்கு? அப்போதுகடவுள் பைத்தியக்காரராவென்று இப்படியான சில கேள்விகளைப் பிறப்பிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால் இதற்கு ஒரு சாட்டு அகப்பட்டுக் கொண்டிருக்கிறது; அதாவது பூலோகத்திலே சிருஷ்டியான பிறகுஆத்துமாக்கள் தமக்குத்தாமே கல்விகற்று ஞானத்தில் நுழைந்து பூரணப்படவேண்டுமென்பதே இதைநான் ஒப்பமாட்டேன், அப்படி பூரணப்படுவான் படமாட்டான் என்று கடவுள் அறியாரோ இவ்விதமாய் வீணே மனிதரைப் பலவிதமாய் படைத்து அவர்களை வித்தியாசப்படுத்தி வைத்திருப்பதினால் அவருக்கு வந்த பயனென்ன? சுத்த பைத்தியக்காரனாய் ஒருவன் பிறக்கிறான், அவன் தன் ஆயுள் நாளெல்லாம் பித்தனாகவே யிருந்து செத்துப்போனால் அப்பேர்ப்பட்ட அவனைக் கடவுள் என்பூலோகத்தில் பிறப்பிக்கவேணும்? அவனை என் சாகடிக்கவேணும்? அவன் கல்விகற்று ஞானமடையவாவது அறிவைத் தந்தாரா? இல்லையே. இப்படியானால் இது கடவுளின் விளையாட்டா? விளையாடுவதற்குக் கடவுள் சிறுபிள்ளையா?

நிற்க, இரண்டாவது கக்ஷியின் அபிப்பிராயத்தை கவனிப்போம். அப்போதைக்கப்போது ஆத்துமாவைச் சிருஷ்டித்து மனிதனுக்குமட்டும் அதையளித்து அவனைஉலகில்வாழவைத்து அவன் செய்யும் நன்மை தீமைகளுக்காக உலகமுடிவில் அவ்வாத்மாவுக்கு மோட்சநரகங்களை வெகுமானமாய்க் கொடுப்பதென்றால் இதென்ன அனியாயமான காரியம்; சூட்சதாரி கடவுளாயிருக்க யந்திரமாகிய மனிதன் என்னத்தை செய்வான்; கயிருபிடித்திருப்பவன் எப்படி ஆட்டுகிறானோ அப்படிக்கெல்லாம் ஆடும்பிரதிமையைப் போல மனிதனுமிருக்க, இவனைக் கடவுளே ஆட்டி யலக்கழித்துப் பாவத்துள்ளாக்கி நரகத்தில் வதைத்தால் இதுகடவுளுக்கு லட்ச

ணமா; இதுநியாயமா? ஒருக்கால் அப்படியே உண்டென்றுவைத்துக்கொண்டாலும் ஆத்துமா ரூபமற்றதும் அகண்டமுமாயிருக்கும்போது யுகமுடிவிலுங்கூட அதை அநேகமாய்ப்பகுத்து மோக்ஷநரகங்களைக்கொடுப்பது சாத்தியாகுமா? மாய்கையினாலேயே அநேகமாய்ப்பிரிந்த ஆத்துமா முடிவிலும் அநேகமாயிருக்குமென்பதைப்பற்றி நகைக்கவேண்டுமேயல்லாமல் இது ஒருபெரிய நியாயமென்றுபேச எனக்கே வெட்கமாயிருக்கிறது. எனவே, ஹேஆன்மவாதியே! ஆத்துமா அகண்டமும் ஏகமுமாயிருந்தாலும்மாய்கையினால் அநேகமாய் வழங்கப்பட்டுக் கர்மஜென்மங்களில் உருண்டு கர்மங்கள் உள்ளவரையில் அப்படியே பிரிந்ததைப்போலிருந்துஎல்லாம்ஒழிந்ததும், அது ஏகமாய்ப்பூரணப்பட்டுப் போகுமென்று இதனால் அறிந்துகொள்வீராக. இதோஉமது ஆறுவதுகேள்விக்கு விடையைக்கேளும்:—

6-வது—ஐயாவே, போனமாதம், இருபத்துமூன்றுந்தேதி இரவில் நீர் குடித்த ஜலம் எவ்வளவு; உண்ட சோறு எவ்வளவு; ருசித்தபதார்த்தவகை என்ன? அல்லது நீர்பிறந்ததுமுதல்இதுவரையில் எத்தனை தடவை க்ஷவரகனிடம் உம் தலையைக்கொடுத்து சிரைத்துக்கொண்டீர்? கடந்தமூன் றுவருஷங்களில் எத்தனை தடவைமழைபெய்தது. இவைபோன்றகேள்விகளுக்கு நீராகிலும் உம்முடையகூட்டாளிகளாகிலும் நிஜார்த்தமானவிடைபகரஇயலுமா? சொற்பம் இதுவேகூடாமற்போகும்போது, நீர்பிறந்துமூன்றுவயது வரையிலும் நடந்த சங்கதியைச் சொல்லும்; நீர் கருப்பைக்குள் இருக்கும்போது என்னென்ன நடந்தது; ஏதேது அதிசயங்கள் கண்டீர்? உம் தாய் உம்மை எப்படி வைத்துக்கொண்டிருந்தாள்; எப்படிப் பேணினாள்; எப்படி கர்ப்பந்தரித்தாள் என்னும் இத்தகைய வினாக்களுக்கு எப்படி விடைதரப்போகிறீர்கள்? வயது வளர வளரத்தான் பஞ்சேந்திரியங்களின் விஷய சம்பந்தமாய் அறிவு விசாலித்துக் கியாபகசக்தி உண்டாகுமேயல்லாமல்,விஷயபோகமின்றி கியாபக முண்டாகாது. மாணிக்கத்தை மெழுகால்மூடிவைத்ததைப்போலக் கர்மங்களானது ஆத்துமாவென்னும் இம்மாணிக்கக்கல்லை முற்றிலு மூடிக்கொண்டிருக்கிறபடியால் இந்த விஷயபோகங்களான ஜ்வாலிப்பு அம்மெழுகு உண்டையின்மீது சூடுகொண்டு தாக்க அம்மெழுகுண்டை நாளுக்குநாள் கரைவதுபோலக் கர்மங்களும் கரைந்தொழிந்துகொண்டுசாக்காட்டுக்குமுன்னதாகவே மாணிக்கக் காந்தி நாலாப்பக்கமும் வீசுவதுபோல ஆத்துமாவும் சகலதனுகரண புவனபோக இருள்களிலெல்லாம் ஜ்வாலித்து தானெடுத்த ஜென்மங்களையும் அந்தந்த ஜென்மத்தில் நடந்துகொண்ட வகைவிஷயங்களையும் அனுபவ பூர்வமாய் அறிந்துகொள்ளுகிறதென்று நீர் அறியாமற் போனதென்ன? இப்படிப்பட்ட பூர்வஞானமுடையர்வகளுக்கே மேற்படி ஜென்ம விஷயங்க

ள் தெரியுமன்றி அஞ்ஞானத்தால்நிறைந்துள்ள சாதாரண மனிதர்கள் எப்படி தெரிந்து சொல்லக்கூடும்? நிற்க, இதோ உம்முடைய ஏழாவது கேள்விக்கு, விடையைக்கேளும்

7-வது:—சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்என்னும் இவ்வைந்து விஷயங்களே ஆத்துமாவென்று சொல்லுகிறபடியால் உயிர்விடும்போது இவ்வைந்தும் ஐந்துவழியாய்ப் பிரிந்து விடுகிறதே, அப்போது ஆத்துமாவென்பதெங்கேயென்று, நீர்கேட்கும் இக்கேள்வியை நியாயவழியில் நுழைக்கும்போது இதுசரியேதான் ஆனாலும் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அதாவது ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும் ஐந்துபடிகள் இருக்கின்றன. அவைகள் ஸ்தூலம் சூட்சுமம், காரணம், கூடஸ்தம், பிரம்மம் என்பவைகளே. அவைகளில் ஸ்தூலமென்பது ஜீவர்களுடைய தற்கால உடம்பு, பிரம்மமென்பது அந்தஜீவர்களின்ஆத்துமா. இங்கே மேற்படி ஐந்துதேகமென்றுசொல்லப்படும் ஒருமனிதன் செத்தால் அவனுடைய ஸ்தூல உடம்புமட்டும் பிரிந்து அந்தஸ்தூலத்திலிருந்து பஞ்சஸ்தூல பூதியங்களும் அதினதின் பூதியத்திற்போய் ஒடுங்குகிறது. அப்புறம் அவனுக்கிருப்பது நாலே உடம்பு. அதாவது சூட்சுமம், காரணம், கூடஸ்தம், பிரம்மம் என்பதே ஸ்தூலதேகத்தோடிருக்கும் பாவியானமனிதனுக்குஸ்தூலபார்வை ஒன்றேயுண்டு. இந்த ஸ்தூலபார்வையினால் மனிதனானவன் சாவதை அவன் பார்க்கும்போது இது தான் முடிவு என்று நினைத்துக் கொள்ளுகிறான். ஏனெனில் மற்ற சூட்சம முதலிய பார்வைகள் கர்மத்தினால் அவனுக்கில்லாமையினாலேயே கர்மத்தையொழித்து மற்ற நான்கு பார்வைகளையும் பெற்றிருக்கும் ஞானிகள் வெகுவாய் இதனைத்தெளிவு செய்திருக்கிறார்கள். எனவே, பிரதி ஆத்துமாவும் பஞ்சதேகங்களோடு பஞ்சதேகப்பார்வையும் பெற்றுச் சாகர்மற்படிக்கு, ஒன்றிலொன்றை ஒடுக்கிக்கொண்டிருக்கும்படியாகவே சுயமபிரகாசமானசாட்சாத்காரவள்ளல் பெருமானுக்குப்பிரியம் மனிதன் தன்சொந்தவினையினாலும் மடமையினாலுமே ஸ்தூலத்தை அடிக்கடி இழந்துவிடுகிறான். ஸ்தூலத்தை இழந்து ஞானமடைவதற்குக் கூடவேகூடாது. ஸ்தூலத்தோடிருந்தே ஞானமடையவேண்டும் ஆனமவாதியே! ஸ்தூலகண்ணுக்கு, மற்றும் பிரகிருதகேகம் அழிந்ததாய் காணுமேயொழிய மற்றத் தேகங்களும் அழிந்ததென்று சொல்லவே கூடாது. இதைப்பற்றிப் பேசவேண்டுமானால் !வெகு தூரத்திற்கு நெடும் பிரசங்கமாய் வரையறையில்லாமல் பெருகுமாகையால் சுருக்கமாய் முடித்தேன் பின்னும் இதோஉமது எட்டாவது கேள்விக்கு விடையைக் கவனியும்:—

8-வது விடை:—ஆ! ஹா! ஆன்மவாதியே! இந்த உமது எட்டாவது கேள்வியினால் உதிரமே ஆத்துமாவென்று சொல்லும்சில பகுப்பாருடைய சித்தாந்தமானது அடிக்கடி மோட்சம் நரகம் முதலியனஉண்டென்று நம்புகின்றவர்களையும் மேற்படி சித்தாந்தமானது அடிக்

கடி சந்தேகத்தில் ளாழ்த்துகிறது. ஆயினும் இதைக்கூர்ந்து யோசிக்கின் பாலர்களாயிருக்கும்போது அவர்களது பஞ்சபூதிய உடலங்களில் சரியான உதிரமில்லாமல், கொழுமையும் சூடும் நிறைவற குறைந்திருக்கிறபடியாலும் (உதிரத்தின் ஓட்டத்தினலேயே சக்திவாய்ந்து மேலான விதமான கொழுமைக் கொள்ளும்) தலை மூளையில் அதிகமான உப்பும் சுண்ணம்பும் சத்தும் நிதான அளவாய் இல்லாமையினலும்; விரைந்தோடி வட்டமிட்டுவரும் உதிர ஓட்டத்திற்கு இலகுவான உதிரதாரைகளில் திறப்பு அதிகமாயில்லாமையினலும் இக்காரணத்தினலேயே அக்குழந்தைகளுக்குப் புத்தியும், அறிவும், கபடமில்லாமலிருந்து நாளாவர்த்தியில் வளர வளரத்தான் உதிரத்தில் சூடும் கொழுமையும் பெற்று, ஏறஏறக் கியானங்கொண்டு அறிவில் விசாலித்த விர்த்தியடைய ஏதுவாகின்றது. அப்படியே இரத்தத்தின் செழுமை கொழுமையினலேயே ஆள்பருவத்திற்குவந்து சரியான உலகியான மடைந்த மனிதாகள் மேகரோகங்களினல் தங்கள் உதிரத்தைக் கெடுத்துக் கொண்டு இப்படியாய்க்கெடுத்துக்கொண்ட, உதிர அசுத்தத்தினல் மெய், வாய். கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் கெட்டு, பித்தநீரும் மேகநீரும் சமரசமாய் மண்டைக்கேறி மூளையை ஒன்றுக்கும் உதவாமல் செய்தும் விடுகின்றது. சிறுமை, பாலியம், பருவம் மூப்பு என்னும் நான்குவித காலச்சக்கரச் சுழற்சியும் உதிரத்தினலேயே நடப்பதோடு ஜன்மமும் உதிரத்தின் செயலாகலாம். எப்படியெனில் தாஷ்டிகமான மனிதர்கள் தங்களுக்கு உடம்பில் உதிரத்தினல் போதுமான சூடும், மூளையிலும், முதுகெலும்பிலும், நரம்புத்தாரைகளிலும், போதுமான அளவுக்குச் சுண்ணம்பும், உவாசத்துமிருக்குமானல் அதினல் ஆண்மையும், வீரமும், மண்டைக்கு ஏகாங்கமாய்க்கொதித்துப் பொங்கி சுரதநீரும் அதிகரித்து, ஸ்திரீ சம்வர்க்கத்திற்கு ஏற்றவர்களாய்ப் பிள்ளையுண்டாக்கச் சக்தியுடையவர்களாய் ஆகிருர்கள் இவையெல்லாம் உதிரத்தின் செயலே. உதிரமே ஆத்துமாவென்று சொல்லும் சித்தாந்தத்திற்கு இப்படிப்பட்ட அனேக திருஷ்டாந்தங்களிருக்கின்றன. நல்லது, இவ்வளவும் உதிரத்தின் குணகுணபேதாபேதிப்புகளேயன்றி மற்றென்றுமல்லவென்பதாய்ச் சாதிக்கும் அன்னேரின் கோட்பாட்டின்படி சில சமயம் படிப்பும் முதிர்ந்த அறிவுங்கூட உதிரச் செய்லே யென்று சொல்லலாம். ஏனெனில் இதற்கும் அநேக திருஷ்டாந்தங்களெல்லாம் உண்டு, அவற்றையிங்கு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. ஆகவே ஒய் ஆன்மவாதியே! உதிரமே சகலத்திற்கும் காரணபூதமாய் நின்று எல்லாவற்றையும் தன் செயலாகவே செய்கிறதென்று சாதித்தாலும் அந்த உதிரமே வரையறையில்லாமல் அதிக்கிரமிக்குங் காலையில் அதை அடக்கவும், சோம்பற்கொள்ளும் காலையில் அதைத் தூண்டவும் இன்னும் மற்ற மற்ற கா

யங்களிலும்மேலான அதிகாரத்தைக்கொண்டு உதிரத்தின்மேல் ஆளுகை செலுத்தவும் அதிகாரம் பெற்றிருக்கும் இன்னொரு பெரிய பொருள் உண்டென்று நம் அனுபவத்திலேயே தெரியவில்லையா? இதோபார், உதிரத்தினாலேயே சிற்றறிவு பிறந்ததென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால் இந்த அறிவு எப்போதும் உதிரத்திற்குக் கீழ்ப்படிந்ததாகத்தானே இருத்தல்வேண்டும். அப்படிக்கின்றி இவ்வறிவு அவ்வுதிரத்தையே தன் சொந்தப்பிரியப்பிரகாரம் நடத்திவருதலை நாம் அனுபோகத்திலே கண்டுவருகிறோமே, எப்படியெனில் உதிரம் அதிகமான கொழுமைகொண்டு சும்மாவிருப்பவனை அடிக்கும்படியாகவும், அங்குமிங்கும் ஓடி யாடும்படியாகவும் பலஸ்திரீகளை இச்சிக்கும்படியாகவும், போக்கிரி விஷயங்கள் செய்யும்படியாகவும் வைக்கிறது. இப்படியாக உடலில் பூரிப்புகொள்ளுங்காலத்தில், நிதானந்தெளிந்த அறிவாயிருந்தால் அப்போதைக்கப்போது அந்த உதிரசேஷ்டைகளைக் கண்டித்து அப்படிச்செய்யாமலிருக்கும்படி நிறுத்தி விடுகின்றது அறிவாளிகளுக்கு இதுவிளங்காமல் போகாது ஆனால் சில பேருக்கு உதிர அதிகாரமே அதிகம் உண்டேயொழிய அறிவின் மகத்துவம் சற்றும் காணோமே என்ற ஓர் ஆட்சேபனை இடைநடுவில் பிறந்தாலும் பிறக்கலாம் அதற்கும் நியாயமுண்டு; ஒரேவித தழையும் புல்லும் சாப்பிட்டு ஜீவிக்கும் யானைக்கும் கழுதைக்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ அவ்வளவே உதிரத்தை அடக்கி ஆளும்படியான திறமைகொண்ட அறிவாளிக்கும், அதை அடக்கவியலாத அறிவிலிக்கும் உண்டென்று சொல்லலாம். அதிலும் அறிவாளி அறிவிலியென்பது எப்படியெனிலோ, அதையுஞ் சொல்லுகிறேன்; யானையுங் கழுதையும் ஒரே விலங்கினப் பிறப்பாயிருந்தும் இரண்டும் பழக்கின காலத்தில் கழுதையைவிட மேலான அறிவு யானைக்குமட்டுமிருப்பது என்னத்திற்கு? இதற்கிருப்பதும் உதிரம்தான் அதற்கிருப்பதும் அதுவேதான்; அப்படியிருக்க உதிரமே அறிவுக்குக் காரணமென்ற ஞாயம் சரிப்படாதல்லவா? இவை இரண்டும் வேவ்வேறுவிதப் பிறப்புகளாயிற்றே யென்ற ஞாயம் குறுக்கே வரினும் பிறப்பின் ரூபம் மாத்திரம் பேதமேயன்றி இரத்தம் ஒரேவிதமாய் இருக்கும்போது அறிவும் ஒரேவிதமாய்த்தானே இருத்தல்வேண்டும்! அப்படிக்கில்லாமல் வித்தியாசப்படுவதற்குக் காரணமென்ன? காரணம் உதிரமென்று சொல்லப்போகாது. தலையிலும் மூளையிலும் வித்தியாசமிருக்குமென்று ஒருவேளை சொல்லவருவீரோ. உம்முடைய கருத்திற்கு அந்தஞாயம் இங்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆனால் இதற்குக் காரணம் கருமமேயல்லாமல் வேறல்ல இந்தக்கரும கனதியினாலேயே கழுதைக்கு மடமையும் யானைக்குச் சிற்றறிவுமுண்டாயிற்று; இப்படியே மனிதர்களுக்கும் அவரவர் கருமத்திற்குத் தகுந்தாப்போல அறிவில் மடமையும் அறி

வில் தெளிவும் உண்டாகிறதென்று அறிவீராகவும். ஆகவே அறிவுதான் ஆத்துமாவேயொழிய உதிரம் ஆத்துமாவல்ல. அன்றியும் அறிவுக்கு உதிரம் காரணமுமல்ல, மண்ணால் வீடானதுபோல உதிரத்தால் இந்தப் பஞ்சபூதிய தேகமுமாயிற்று. தேகத்திற்கு இயக்கமும் உண்டாகிறது. இந்தவிடாகிய தேகத்தில் அறிவாகிய ஆத்துமா சஞ்சாரஞ்செய்கிறதேயல்லாமல் உதிரத்தை ஆத்துமாசேர்ந்ததுமல்ல. உதிரம் ஆத்துமாவை நடத்துவதுமல்ல. எனவே ஆன்மவாதியே, உதிரம் ஒருக்காலும் ஆத்துமா ஆகவே ஆகாது. இதோ உமது ஒன்பதாவது கேள்விக்கு விடையைக் கேளும்.

9-வது விடை:—பிராணவாயுவையே ஆத்துமாவென்று அபிப்பிராயப்படுகிறீர். இதனால் உயிர்விடும்போது வாயு, வாயுவிலே கலந்துபோக, அவ்வாயுவாகிய ஆத்துமா மறுஜென்மமெடுப்பதேது என்பதல்லோ உமது அபிப்பிராயம்? நீர் சொன்னதுபோலவே ஆத்துமாவைப் பிராணவாயுவென்று நினைக்கப் பல திருஷ்டாந்தங்களுண்டு தான். அதுவேதான் ஜீவன் நிலைப்பதற்கு ஆதாரமாயிருக்கிறது. அதுவேதான் பிண்டோற்பத்திக்குக் காரணமாயிருக்கிறது. அதுவேதான் வாசியோகத்திற்குங் காரணமாயிருக்கிறது. இப்படியே சகல காரியங்களுக்கும் பிராணவாயுவே ஆதாரமாயிருக்கிறபடியினால் அதுவேதான் ஆத்மாவென்று அநேகர் அபிப்பிராயப்படுவது வாஸ்தவமே. நல்லது, இப்போது நான் இவ்வபிப்பிராயத்தை நிராகரிக்கிறேன் கேளும்! புராதனமான ஞானிகளும் ரிஷிகளும் தபோதனர்களும் மற்றவர்களும் தம் தங்களின் பரோட்ச அபரோட்ச ஞானங்களுக்கு எட்டினவரையிலும் கண்டுபிடித்ததில் மனிதனுக்குள் நிசுவாச உசுவாசங்களாய் உலாவிவரும் வாயுவானது பத்துவிதமாய் பகுப்படைகிறதென்று தீர்மானித்தார்கள். அதாவது; பிராணன், அபானன், சமானன், வியானன், உதானன், கூர்மன், தேவதத்தன், தனஞ்செயன் என்பவைகளே. இவற்றில் பிராணவாயுவே மற்ற ஒன்பது வாயுக்களுக்கும் பிரதானமானதும் ஜீவனுக்கு ஆதாரமானதுமாயிருக்கிறபடியால் மற்ற வாயுக்களைவிட இதனையே மேலானதென்றும் ஆத்துமாவென்றும் தன்னிகரற்ற சுயம்பிரகாச நித்தியவஸ்துவென்றும் வழுத்தி இப்பிராணவாயுவே மஹாமேருவென்றும் சாஸ்திர இதிகாசங்களில் குறிப்பிட்டு வைத்தார்கள். இம்மகாமேருவின் அடிமுடியை யாராலுங் காணக்கூடாதென்றும் இதன் முனையில் ஓர் கற்பகவிருட்சமிருக்கிறதென்றும் அக்கற்பக விருட்சத்தின் கனிகளிலுண்டான இரசங்கள் ஒரு ஆறுகப்பாய்கிறதில் அவ்வாற்றின் ஜலத்தைப் பானம்பண்ணுகிறவர்களுக்கு ஜனனமரணங்கள் அற்றுப்போகிறதென்றும், இம்மகா மேருவானது அக்கினி சூரிய சந்திர மூன்று மண்டலங்கள் வரையில் அளாவியிருக்கிறதென்றும் பலவிதமாய் வர்ணித்து எழுதியிருக்கிறார்கள் இம்மகா

மேருவைக் குறித்த கதைகளெல்லாம் பிராணவாயுவையே குறிக்கிறதென்று அறிந்துகொள்ளாதவர்கள் மகாமேருவென்ற ஒரு பெரிய மலை நிச்சயமாகவே பூலோகத்தில் இருக்குமோவென்று சந்தேகிக்கிறவர்கள் சிலரும், பூகோள சாஸ்திரம்படித்து ஆங்காங்கு யாத்திரைகள்செய்து ஆராய்ச்சிபண்ணி மகாமேருவென்ற ஓர் பர்வதம் இருபத்தொன்பதாயிரத்து இரண்டடி உயரங்கொண்ட இமயகிரியைத் தவிர வேறெங்கும் இல்லவேயில்லை யாகையால் புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் சொல்லியிருப்பதெல்லாம் சந்தேகத்திற் கிடமானதென்று சிலரும் சாதித்து மறுதலிக்கிறார்கள். ஆனால் பிராணவாயுதான் மற்ற ஒன்பது வாயுக்களுக்கும் ஆதாரமாயிருக்கின்றபடியாலும் இவ்வாயுவின் முனைமுகடாகிய சிரகிரி பரகிரியிலிருந்தே கற்பகவிருட்சத்தின் பழச்சாறுபோன்ற (காயசித்திக்குரிய) ஆனந்த மதியமிர்தம் பொழிந்துகொண்டிருப்பதாய் யோகிகள் தங்கள் யோகாப்பியாசத்தில் அனுபோகங்கொண்டிருப்பதாலும் அப்பிராணவாயுவானது ஓங்கார ரூபமானதால் அதினிடமாகப் பிறந்த மூன்றெழுத்தால் முப்மண்டலங்களான அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் மூன்றுபிண்ட மண்டலங்களை அளாவியிருக்கின்றபடியாலும் ஞானிகள் இப்பிராண வாயுவை அவ்வளவு சிறப்பித்து மகாமேருவென உருவகப்படுத்தியிருக்கிறார்களென்று நன்றாய் தெரியவருகிறது. எனவே நானிங்கு சொல்லவந்ததெல்லாம் பிராணவாயு அளாவும்படியான மூன்று மண்டலங்களைப்பற்றியே. இம்மூன்று மண்டலங்களும் மூன்றுபாழ். அதாவது; சத்திபாழ், சிவம்பாழ் பரம்பாழ் இவைகளின் முடிவென்றறிக. இம்மூன்று மண்டலங்களையும் கடந்து பிராணவாயுவைத்தாண்டி நிராமயபர வெளியிலே கலந்தவர்களையன்றி மற்றோரை ஞானியரென்று அழைக்கவேபடாது. இதுவே பிரமாணம்.

ஆகவே, ஓய் ஆன்மவாதியே நீர்சொன்ன பிராண வாயுவே ஆத்துமாவென்று ஸ்தாபிக்கிறதற்கு இங்கெங்கே இடமுண்டு? பிராணவாயுவே ஆத்துமாவென்றால், தானாய் நின்ற ஆத்துமா தனக்குள்ள சத்தானே தான் ஒடுக்கமாகவேணும் அதாவது பிராணவாயுவ சாயுச்சியமாய் முடிவுறவேணு மல்லவா! அப்படிக்கின்றி பிராணவாயுவின் முனைமுகட்டையுங் கடந்த ஆகாய வெட்டவெளியே சாயுச்சியமென்றும் அவ்வாகாயத்தில் நுழையும்போது நீர்குறித்த பிராணவாயுவை எப்படி ஆத்துமாவென்று சொல்லக்கூடும்? அன்றியும் ஆத்துமா அறியாத ஓர் அநுநிநித்திய வஸ்துவாகவல்லவோ இருக்கவேணும் அழிகிற வஸ்துவாயிருந்தால் அவனவனும் மோட்சம்மோட்சமென்று அலைவானேன்? வாயு அநுநித்திய வஸ்துவென்று எப்படி சொல்லக்கூடும். பிரிதிவு, அப்பு, தேயு அழிவதுபோலவே வாயுவும் அழிந்துபோகும். எல்லாமழிந்து கடைசியாக நிற்கப்போகிறது ஆகாயத்தைவிட வே

றென்ன உண்டு? ஆகவே. ஆத்துமா இந்த ஆகாய ரூபமாகத் தான் இருக்கவேண்டுமே யல்லாமல் வாயு ரூபமாய் இருக்குமென்பது கூடாத காரியமல்லவா? ஏனெனில் வாயு அழிந்துபோகும். ஆத்துமாவோ அழியாதவஸ்து; ஆனால் பிராணவாயுவானது நிராட்சேபமாய் மனம்சமா யிருக்கின்றபடியால் மனதை நிறுத்தி அதைச் சூன்யத்திலே லயப்படுத்தும்படியான இடகலை பிங்கலை என்னும் கடிவாள நாணைப்போன்றதா யிருக்கிறதே யல்லாமல் மற்றபடி அது ஆத்துமாவல்ல. மறுபடியும் இவ்வாகாய ரூபமான ஆத்துமாவுக்குக் கன்மத்திற்கேற்ற ஜன்மம் எப்படியெனிலோ, அதனை என் ஐந்தாவது விடையிலே விளக்கியிருக்கிறேன்; கண்டு கொள்க இப்பால் உம்முடைய பத்தாவது கேள்விக்குவிடை:—

10-வது விடை:—ஆம், சர்வமும் பிரம்மம்; எல்லாம் பிரம்மமே யன்றி வேறல்ல ஆயினுங் கருதற்கரிய அனாதி நித்திய நிர்மல சிற்சொரூபமானது, சதாகாலமுந் தன்னோடு நிர்த்தொந்த லயமாயிருக்கும்படியான மூலமாயையோடு தானே தன் ரூபத்தை விகாரப்படுத்தினபோது பிரபஞ்சத்தின் சமஸ்தமும் தானாகவே ஆயினது எவ்விதமெனில், இதில் இப்பரமாத்மா மூலமாய்கையை ஏறெடுத்துப்பார்க்க அதினாலான பிரதி பிம்பாகாரத்தால் ஜீவர்களுக்குள்ள ஜீவாத்துமாக்களுண்டாயின. அந்த ஜீவாத்துமாக்கள் தம்மையும், தலைவனையும் அறியாதிருக்கும்படியான அஞ்ஞானத்தில் சூழப்பட்டன. (இங்கே பதியென்பதை பிரம்மமென்றும் அதினாலான பசுவென்பதை ஆத்துமாவென்றும் இவ்வாத்துமாவை அந்தப்படுத்துவதான உடலையும் மும்மலங்களையும் பாசமென்றும் நினைவுகூர்வோமாக) எனவே, பதியைவிட பசுவில்லை பசுவைவிட பதியில்லை. பதியே பசுவும் பசுவே பதியுமாய் ஒன்றையொன்று ரேகித்து, ஒன்றிலொன்று வியாபித்ததாயிருந்தாலும் நியாயவாயிலாய் நுழைந்துநோக்கினால் பதிவேறு பசுவேறு என்றே எடுத்துக்கொள்ளப்படும். எப்படியெனில், அனேக பாண்டங்களில் ஜலத்தை நிரப்பி அப்பாண்டங்களுக்குள்ளாகச் சூரியகிரணத்தைச் செலுத்திப் பார்ப்போமானால், எத்தனை பாண்டங்கள் வைத்தோமோ அத்தனை பாண்டங்களுக்குள்ளும், அத்தனை ஒரேவித சூரியன் பிரதி பிம்பித்திருப்பதைக் காணலாம். அத்தனை பிம்பங்களும் நிஜார்த்தத்திற்குச் சூரியனல்ல; சூரியனைவிட வேறுமல்ல. நிஜமானசூரியனின் பிரதிபிம்பத்தினால், தானே அப்பிரதிபிம்ப சூரியர்களாகவும், தன்னைவிட அப்பிம்பங்கள் வேறல்லவென்பதாகவும், உற்றுநோக்கில் அப்பிம்பங்கள் தானல்லவென்பதாகவும் எங்ஙனமிருந்ததோ, அங்ஙனமே பதியாகிய பிரம்மமும் தன்னாலுண்டான மாயையினாலேயே சிருஷ்டிக்கப்பட்ட தனுக்களாகிய ஜீவராசிகளுக்குள் தன் பிரமத்தையே ஜீவாத்மாவாகப் பிரதிபிம்பித்து, தானே அவ்வாத்

துமாக்களாகிய பசுவாகவும், தன்னைவிட அப்பசுக்கள் வேறல்ல வென்பதாகவும், உற்றுநோக்கிடில் தானல்ல அப்பசுக்கள் என்ப தாகவுமிருக்கின்றது. இங்கே பாண்டமாகிய கடத்தில் பிரதி பிம் பித்த சூரியர்கள் அப்பாண்டங்கள் உள்ளவரையிலும் ரூபத்தைக் காட்டி பிரதி பிம்பித்துக்கொண்டிருந்து அப்பாண்டங்கள் நாளடைவில் சிதைந்து ஜலம்தனையில்முற்றும்சிந்தி, அதுகெடரூபமற் றுப் போகுங்காலையில், அப்பிரதி பிம்பத்தை அவ்விடங்களில் கா ணோம். தரையினிலுமில்லை, சூரியனுமில்லை,மற்றெங்குமில்லை அப் படியே ஜீவர்களுக்குள்ளும் பிரதி பிம்பித்துக்கொண்டிருந்த ஆத் துமாவாகிய பசுக்கள் ஜடலம் விழுந்து விடுங்காலையில் அவைகள் போனவழி தெரியாது. அதாவது ஒரே வார்த்தையில் முடிக்கவே ண்டுமானால் மறுபடியும் அப்பசுக்கள் (அதாவது ஆத்துமாக்கள்) இல்லவே யில்லை. ஒருவேளை பதியில் ஒடுங்கிற் றேவென்று சந்தேகிக்கும்பட்சதில் அது அப்படி ஒடுங்கியிராது எனெனில் பசுவானது பதியில் ஒடுங்கும்போது, இப்படி ஒடுங்கி ற்றென்று சொல்லுவதைவிட இறந்த எல்லா ஆத்துமாக்களும் ச ந்தேகமற பிரமத்தோடு ஐக்கியமாகி மோட்சம் அனுபவிக்கிறது என்று ஒரே சாதனையாய் சாதிக்கிறதற்கு வழியுண்டாகும். ஆன படியால் ஓய் ஆன்மவாதியே; சூரியன் எங்கும் ஜ்வாலித்து அதி ன் பிரதிபிம்பங்கள் தத்தம் கட அளவுக்குமே சுருங்கி ஜ்வாலிக்கிற துபோலவே பரபிரம்மமானது எங்கும் சர்வ வியாபியாய் பூரண ஞானமாய் நிறைந்து சுவாலித்தபோதிலும் அதின் பிரதி பிம்பங் களான பசுக்களானவை அதாவது ஆத்துமாக்கள் சரீர அளவிற் குச் சிற்றறிவுடையவைகளாய் தம் தேகத்தையே தாம் சரியாய்த் தெரிந்துகொள்ளக் கூடாதவைகளாய் மயங்கிக் கிடக்கின்ற மையால்ப திக்கும் பசுவுக்கும் நெடுந்தூரம் வித்தியாசமுண்டு.இரண்டிற் சம்சம்பந் தமே கிடையாது கடமுடைந்தவிடத்தில் இன்னொருகடம்வைக்க அதி லும் சூரியபிம்பந்தோற்றும்; அதை உடைத்து விட்டு இன்னொருகடம் வைக்க அதிலும் பிரதிபிம்பந்தோற்றும். இப்படியே எத்தனை கடங்க கள்உடைந்து, உடைந்தவிடத்தில்வேறே எத்தனை கடங்கள் வைத்தா லும் முறையே ஒவ்வொரு சூரியனைப் பிரதிபிம்பித்துக்கொண்டேதா னிருக்கும். இப்படியேஸ்தூலதேகமாகிய ஜீவர்களின்பிரதிஉடல்களுக் குள்ளும்பிம்பித்துக்கொண்டிருக்கும்படியான ஆத்துமாவாகியபசுக்கள் இவைகள் குடியிருந்த தூலங்கள் எத்தனைதடவை உண்டானாலும் அத் தனை தடவையும் அழிந்து அப்பசுக்கள் நுழைந்து கொண்டேதா னி ருக்கும். கன்மமே, தூலங்கள் விழவும் மறுபடியும் உண்டாகவும் பசுக் கள் நுழையவும் மறுபடியும் மறையவும் அவத்தை செய்கிறதென்று ந ன்றாய்த்தெரிந்துகொள்ளும் சன்மம் ஒழிந்தால் தேகமும் நிற்கும். கன் மமிருந்தால் ஜனனவட்டமாகிய அச்சுபேதங்களில் சுழன்றுகொண்டே யிருக்கும். இதுவேபிரமாணம். கன்மங்களானது ஒழிவதாயிருக்குமானா ல் உலக இன்பங்களில் அதிகமாய் இச்சைதராமல் பக்தியும்நாளுக்குநா ள் பலத்து உரங்கொண்டுவளரும்.காயசித்தி செய்து காயத்தை வளர் திக்கொள்ளுவார் போக, பக்தியுடையோர் தங்கள் பத்தியின் உறுதியி

ஞாலேயே மூலாக்கினியினால் தேகத்திலுள்ள சர்வ வியாதிகளையும் சங்காரஞ்செய்து தேகத்தை வளர்த்துக்கொண்டு இவர்களும், சிற்சில காலங்களில் காயகற்பமுண்போரும், தம்மூலதேகங்களை சூக்மதேகங்களாகமாற்றி அச்சூக்மத்தைக் காரணமா யாக்கிகொண்டு முன்தேகத்தில் சிற்றிவுபட்டு மயங்கிக்கிடந்த ஆத்துமாவை எங்கும் வியாபகமாய் இருக்கக்கண்டு, அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்னும் அஷ்டமாசித்திகளையும் அடைந்து தம்மிடத்தில் பிரதிபிம்பித்துக்கொண்டிருந்த பசுவாகிய ஆத்துமா இதுவே பதியென்றும் அறிந்து இப்பசுவைத்தாங்களாகவே பதியோடு சேர்த்து லயிக்கக்கூடுமான வல்லமை பெற்றவர்களாய் இரண்டறக்கலந்து தாங்களே பரப்பிரம்ம சொரூபமாய் ஆனந்தித்திருப்பார்கள். பிரதி பிம்பமாகிய ஆத்துமாவை மெய்ப்பிம்பமாகிய சின்மயமாக்கிக்கொள்ள காயவிருத்தியைத் தேடிக்கொள்ளும் அனேகர் அனேகவிதான காயகற்பங்கள் சாதித்து உபரசங்களெல்லாம் வெண்ணெயைப்போல சாப்பிட்டு அமுரி மூலப்புளி அந்திசந்தி அப்பியசித்து, அனேக சகஸ்திராண்டுகளுக்கும் நிலைநிற்கும்படியாகச் செய்துகொண்டு ஞானங்கிடையாமல் கன்மவசத்தால் ஒருக்கால் காயத்தை இழந்துங்கொள்ளுகிறார்கள். ஏனெனில் கன்மமுள்ளவரையில் ஜனன மரணங்களுண்டு ஆகவே. ஓய் ஆன்மவாதியரே! எல்லாம் பிரமமாகவேயிருந்தபோதினும் எப்படி சூரியனுடைய பிரதி பிம்பங்களானது ஒப்பற்றதும் பற்றற்றதும் அநித்தியமானவைகளுமா யிருக்கின்றனவோ, அப்படியே மனத்திரயத்தினால் விகாரமடைந்த பரப்பிரம்மத்தின்பிரதி பிம்பங்களாகிய ஆன்மகோடிகளும் பரப்பிரமத்தோடு யாதும்தொந்தமில்லாதவைகளாய் கனம்முள்ள வரையிலும் அவ்வக கன்மத்திற்கேற்ற ஜென்மங்களெடுத்துக்கொண்டு அலையுமென்று நீர் நன்றாய் அறிந்துகொள்ளவும் இதோ நீர் வினவிய பத்துக்கேள்விகளுக்கும் விடைபகர்ந்தேன். ஆகவே ஜன்மங்களுண்டானபடியால் ஜன்மங்களெடுக்கும் ஆத்துமாவே யல்லாமல் உடலம் விசேஷித்ததல்ல. ஆனதுகொண்டு ஆத்துமா செய்த சகல குற்றங்களுக்கும் ஆத்துமாதான் தண்டனை யடையவேண்டுமேயல்லாமல் சரீரம் யாதொருதண்டனைக்கும் உட்பட நிமித்தமேயில்லை,

அரசர்:—ஆன்மவாதியாரே சரீரவாதியரே! போதும், போதும்; நீங்கள் நெடுநேரம் பேசிவிட்டீர்கள் இருவரும் ஒரு வருக்கொருவர் தோற்பு கெலிப்பில்லாமல் பேசி வருகிறீர்களானதால் இன்னும் ஒரு சரியான முடிவுக்கு வரகாணோம். ஓ! பஞ்சாயத்தாரே! இப்போது நீங்கள் கேட்டுவந்த இவ்விருவர் வாதத்தாலும் உங்கள் அபிப்பிராய மெப்படி?

பஞ்சாயத்தார்:—ஓ எங்கள் ஞாதுரு, ஞான, ஞேயவடிவே சத்து சித்தாநந்தமே, அடியேம் நாங்கள் என்னத்தைச் சொல்ல மாட்டுவோம். ஆன்ம்வாதி, ஆத்துமாவரையிலும் பழிகழித்து

வாதாடுகிறார். சரீரவாதி சரீரத்தின் வரையில் வாதாடுகிறார். இதனால் இவற்றைச் சிக்கறுத்துத்தீர்மானிக்க எந்தண்டையும் வழி காணேம். எங்கும் பிடிப்பில்லை. ஆதலால் எதற்கும் இன்னொரு யுக்திசெய்வது நலமாய்காணுகிறது. அதாவது ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் இமைப்பிசகாத் தொழிலாளர்போல தொண்ணூற்ருறு பேர்வரையில் பனி செய்கிருர்கள். அவர்களுக்கே அனேக காரியங்கள் தெளிவாய்த் தெரியுமாதலால், அவர்களை சாக்ஷியம் விசாரித்தால் ஒருக்கால் முடிவு கிடைத்தாலும் கிடைக்கலாம் அரசே!

அரசர்:—யார் அவர்கள்!

பஞ்சாயத்தார்.—அவர்களே தொண்ணூற்ருறு தத்துவங்களென்று வழங்கப்படுவார்கள்

அரசர்:—அப்படியானல் அவர்களை அழையுங்கள் அவர்கள் பெயரென்ன?

பஞ்சாயத்தார்:—அடியேம் இதோ சொல்லுகிறேம். 5- பூதங்கள். 5-பொறிகள். 5-புலன்கள் 5-கன்மேந்திரியங்கள் 5-கன்ம விஷயங்கள் 4-அந்தக்கரணங்கள். 1-அறிவு. 10-நாடிகள். 10-வாயுக்கள். 8-ராகங்கள். 5-கோசங்கள். 5-வசையங்கள். 7-தாதுக்கள். 6-ஆதாரங்கள். 5-அவஸ்தைகள். 3-மலங்கள். 3-பிணிகள். 2-வினைகள். 3-ஆசைகள். இவைதான் அவர்களின் நாமங்களாகும்.

அரசர் இப்போது 96 தத்துவங்களையும் சாக்ஷியம் விசாரிக்கிருர்.

அரசர்:—ஹே! பஞ்ச பூதியங்களே! உங்களின் தனித்தனியான பெயரென்ன?

ஐந்துபூதியம்:—அடியேம் எங்களின் பெயர் பிரிதிவு, அப்பு, தேயு; வாயு, ஆகாயம என்றழைக்கப் படும்.

அரசர்:—உங்கள் ஐவரிலும் வரிசையிலும் முதலாவதுயார்?

பிரிதிவு:—அடியேன் ஆஜர்.

அரசர்:—உன் பெயரென்ன, உன் பெயரின் பொருளென்ன உன் பரிமாண சங்கைகளென்ன, உன் தொழிலென்ன;உன்னலானதென்ன; ஆத்தும நாதன் சரீரகன் என்னும் இவ்விருவரின் வழக்கு விஷயமாய் உனக்குத் தெரிந்ததென்ன? தெளிவாகவும் சுருக்கமாகவும் சீக்கிரமாய்ச் சொல்.

மண் (பிரிதிவு) சாக்ஷி

'நிரஞ்சனதீத பரஞ்சோதி பொருளாய், உண்டு இல்லை என்னும் இருவிவாதமும் உன் மயமாய் நின்ற என்சின்மயானந்தமே; அடியேன் பேர் பிரிதிவு. இதுவடமொழி (தமிழ் அர்த்தத்தில் இதற்கு

மண்ணென்று பொருள் படும்.) காலத்தை அனுசரித்தே இப்பிரிதிவு அண்டத்தின் அளவு பிரமாணத்தைச் சொல்லவேண்டுமானால்; என்ரூபத்தை, (என்னை அண்டமென் றழைக்கிறபடியால்) முட்டைக்கே ஒப்பிடலாம். ஆயினும் என்னிலே பெரும்மலைகளும் ஆறுகளும், பள்ளத்தாக்குகளும், குன்றுகளும், மரங்களும், செடிகளும், ஜீவராசிகளும் நிறைந்து, என் பட்டத்திற்கு உயர்ந்தும் தாழ்ந்தும் பேதப்படுகிறபடியாலும், அயனவீதியிலே சூரியனைச் சுற்றிஎன் வேகங்களைக்காட்டி, அதி துரிதமாய் சுழன்றுவருகையில் வடக்குத்தெற்குமாகிய என் தலைகால்கள் உள்ளுக்கமுங்கி, நடுமத்தியமான இடைநடு ரேகைகள்பிதுங்கி குப்பலாகிறபடியாலும், அது ஒரு கிச்சிலிப்பழத்தின்பேரிலுள்ள வேர்க்குரைப்போன்ற பொறிப்புகளுக்கும்; மேலும் கீழுமாக அமுங்கி தொப்பை ஒரு விதமாய் பெருத்திருப்பதற்குமே சமமாகிறபடியால் என்னை ஓர் கிச்சிலிப்பழத்திற்கே ஒப்பிடலாம். 1760 கஜங்கொண்ட இங்கிலீஷ் மைல் அளவின்பிரகாரம் என் அண்டகோளத்தின் சுற்றளவைக் கவனிக்கில் ஏறக்குறைய இருபத்தையாயிரம் மைல் ஆகிறேன். நான் என்னை நானே ஒருதடவைச் சுற்றிக்கொள்ள சரியாய் இருபத்திநாலுமணி நேரமும், (ஒன்பதுகோடியே இருபத்திநாலு லக்ஷமைலுக் கந்தண்டையில் என்போல் பதின்மூன்றுலக்ஷம் அண்டங்கள்சேர்ந்த ஒரு மகா அண்டம்போலிருக்கும் அந்த மகத்தண்டமாகிய) சூரியனைச் சரியாய் ஒரு தடவைச் சுற்றிவர 365-நாள் 6-மணி நேரமும் சொல்லுகிறது. இது நிற்க, ஆகாயம், வாயு தேயு, அப்பு, பிரிதிவு என்னும் பஞ்சபூதியத்தில் பிரிதிவுஎன்னப்பட்ட மண்ணாகிய நானே, தூலசூக்ஷம, காரண, கூடஸ்தமென்னும் ஐந்துவித அங்கங்களும்; சிருஷ்டி திதிசம்மாரமென்னும் மூன்றுவித செயல்களும் படைத்தவனாயிருக்கிறேன். முதல் முதல் ஐந்துவித அங்கங்கள் எனக்கெப்படி யுண்டானிலோ சொல்லுகிறேன்: கெட்டியாய், ஸ்தூலமாய், கந்தமுடையவனாய், மண்ணாயிருக்கும் நானென் அணுக்களைச் சற்று தளர்த்துவேனாயின் ஜலத்தைப்போல் கந்தமில்லா சூக்ஷமதேகியாகிவிடுவேன். அப்படி சூக்ஷமமாய் மெதுவாய் கந்தமல்லாத ரசமுடையவனாய் ஜலமாயிருக்கும் நான் என் அணுக்களை இன்னும் தளர்த்துவேனாயின் நெருப்பைப்போல் ரசமில்லா காரணதேகி யாகிவிடுவேன்; அப்படி காரணமாய் மெதுவில் மெதுவாய் கந்தரசம் இரண்டுமல்லாமல் ரூபமுடையவனாய் நெருப்பாயிருக்கும் நானென் அணுக்களை இன்னும் தளர்த்துவேனாகில் வாயுவைப்போல ரூபமில்லா கூடஸ்த தேகியாகிவிடுவேன். அப்படி கூடஸ்தமாய் பிடிப்புக்கடங்காமல் கந்தரசரூப மூன்றுமில்லாமல் ஸ்பரிசமுடையவனாய் வாயுவாயிருக்கும் நானென் அணுக்களை இன்னும் தளர்த்துவேனாயின் ஆகாயத்தைப்போல் கந்த ரச ரூப ஸ்பரிசம் நான்குமில்லாத பிரமதேகியாகி

விடுவேன். கடைசியாக ஸ்தூலமாய் மூக்குக்கு முகரவும், நாக்குக்கு ருசிக்கவும், கண்ணுக்குபார்க்கவும்,கைக்கு ஸ்பரிசிக்கவுமாயிருந்த நான், அதாவது நானாகிய மண், என் அணுக்களை விரிக்கவிரிக்க முடிவில் ஒன்றுமில்லாமல் அகண்டவெளியில் ஏகபெரும்ஓசையாய் நாதம் ஒன்றுமே உடையவனாய் எங்கும் பிரம்மத்தைப்போல்பரிணமித்துப் பூரித்து நிற்பேன். இதே பிரமாணத்தில்அணுக்களானவை ஒன்றோடொன்று சேரும்போது நான் சிறியவனென்றும் அவ்வணுக்கள் விரியும்போது நான் பெரியவனென்றும் சொல்லலாம். முடிவாக இஃதை திருஷ்டாந்தப்படுத்துவ தெப்படியெனிலோ, செம்பு என்கிற உலோகச்சரக்கு இறுகுகிற வஸ்துவாயினும் அஃதைத் தீயிலிட்டு உருக்கும்போது அணுக்கள் தளர்ந்து ஜலம்போல் மாறும்; பின்னும் அனல் அதிகப்படின் புகையாய் மாறும், அப்புகை வாயுவாய் திரிந்து, இன்னும் சூடு அதிகரிக்குமாயின் ஆகாயமாகவே விரிந்து ஒன்று மில்லாமல் அருபப்பட்டுப்போகும். நிற்க,

இரண்டாவது எனக்குப் பஞ்ச விஷயமுண்டென்ற தெப்படியெனில்; என்னைத் தட்டுகிறவர்களுக்குச் சப்தமும், தொடுகிறவர்களுக்கு ஸ்பரிசமும், காணுகிறவர்களுக்கு ரூபமும், ருசிக்கும்பேர்களுக்கு ரசமும் முகருகிறவர்களுக்குக் கந்தமுமாயிருக்கிறேன். இதை விரிக்கிற் பெருகும். பெருகுவதோடு வீண் அலுப்பாகவும் காணப்படுவதென்று விட்டு விடுகிறேன். மூன்றாவது சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொழிலும் எனக்கெங்ஙனமுண்டாயினவெனிலோ, அதையும் விவரிக்கிறேன்; பரதகண்டவாசிகளாகிய ஆரியரால் சொல்லப்பட்ட நவகண்ட பேதங்களாகவும், ஐரோப்பிய ஆராய்ச்சியின் அனுபவ கொள்கைப்படி பஞ்சமா கண்டங்களாகவும் பகுப்படைந்திருக்கும் பூச்சக்கரமாகிய என்னில் நிறைந்திருக்கிற சகல ஜீவராசிகளுக்கும்; பொன், வெள்ளி, செம்பு இரும்பு, ஈயமென்னும் அஞ்சுவித லோகங்களுக்கும். மாணிக்கம் கெம்பு, ரவை, வைடூரியம், புட்பராகம், கோமேதகம், மரகதம், முத்து, பவளமென்னும் ஒன்பதுவித நவமணிகளுக்கும்; மலைகள், குன்றுகள், வெற்பு, அஷ்டகஜம், தீவு தீவாந்தரங்களுக்கும்நானே சிருஷ்டிகர்த்தாவாயிருந்து சிருஷ்டித்து வருகிறேன். அப்படி சிருஷ்டிக்கப்பட்டவைகள் தேவர்களென்றும், கடவுளென்றும், ரிஷிகளென்றும், முனிவர் தபோதனர்களென்றும், சித்தர்களென்றும், ஞானிகளென்றும், வித்வான்களென்றும், அஞ்ஞரென்றும், அறிவிலிகளென்றும் உன்மத்தரென்றும், ஆண்பெண்ணென்றும், பெரியோர்சிறியோரென்றும், கீழோர் மேலோரென்றும், குலமக்கள் இழிமக்களென்றும், தாய்தந்தை பிராதா புத்திரர் முதலிய பந்துக்களென்றும் விதவித தொழிற்புரியும் தேவர்களென்றும், விதவித நிற அந்தஸ்தான மனிதர்களென்றும், விதவித கு

ணம்பாவனைகளான விலங்குகளென்றும், விதவிதநிறம் செயல் உபயோக முதலியனவுள்ள பக்ஷிகளென்றும், விதவிதமானமீன்களென்றும், விதவித ஔஷதபிரயோஜனவேலை உபயோக உலோகசத்துக்களென்றும், இவற்றிற்கு விர்த்திசெய்யும் மோகவித்தென்றும், அப்படியே உலோகங்களும் பொன் செம்பாகவும், செம்பு பொன்னாகவும், ஈயம்வெள்ளியாகவும், இரும்பு ஈயமாகவும், பேதிப்புகளென்றும்; இவற்றோடுகூட நவமணிகளும் பலவிதங்களாய் நிறமாறி கற்புதைத்த பலவித பணிபூண் ஆபரணங்களாகவும், செம்பு தவலை கிண்ணி பாத்திரம் யந்திரங்களாகவும் வேறுபதார்த்தங்களாகவும், திதிசெய்கிறேன். பிணி மூப்புச்சாக்காட்டு சக்கரங்களினாலும், பழமைப்படுதலினாலும். பூகம்பங்களினாலும், பூமியிலே புதைக்கப்படுவதினாலும், சுத்தியினாலும்கத்தியினாலும், குண்டினாலும், பீரங்கியாலும் இன்னும் பற்பல யுத்தாயுதங்களினாலும் மலைவீடு முதலிய இடிந்து விழுதலினாலும் நஞ்சுபாஷாணமுதலிய ஆலகால விஷங்களினாலும் ஒன்றையொன்று கொன்று இரையாக்குவதினாலும் அதிகச் சாப்பாட்டினாலும், சாப்பாடின்மையாலும் மனோ சஞ்சலத்தாலும் மடமையினாலும் பெண்போகத்தாலும் உப்பு சாரத்தினாலும் இன்னும் அனேகவிதமான ஏதுக்களாலும் சஞ்சாரஞ்செய்து அழித்துவருகிறேன். இப்படிப்பட்டசிருஷ்டி திதி சங்காரமென்னும் மூன்றுவித தொழில்களும் எனக்குரித்தானது. ஆயினும் சிருஷ்டியே விசேஷமாக என தொழிலாகையால் ஞானிகள் என்னை பிரம்மாவென்று அழைப்பார்கள். கண்ணால்கண்டு அதிகச் சுளுவில் அளந்துகொள்ளுகிற இக்காலபூதலத்தில் ஏறக்குறைய எல்லாமேநானாயிருக்கிறன். நானில்லாமல் புத்தகச் சுவடிகளில்லை. நானில்லாமல் கப்பல் இரதங்களில்லை. நானில்லாமல் வீடுவாசல்களில்லை. நானில்லாமல் ஆடையாபரணங்களில்லை. நானில்லாமல் நவதானியங்களில்லை நானில்லாமல் ஆடுஞ்சரக்கு அறுபத்தினாலுமில்லை. நானில்லாமல் மிளகு, கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம்ஆகிய மலைபடுதிரவியம்ஐந்தும்; இறால் அரக்கு தேன் மயிற்பீலி காவி ஆகிய காடுபடு திரவியங் ஐந்தும்; செந்நெல் சிறுபயிறு கரும்பு வாழை செவ்விளநீர் ஆகிய நாடுபடு திரவியம் ஐந்தும்; அரசன் பித்தன் மந்தி யானை கண்ணாடி ஆகிய நகர்படு திரவியம்ஐந்தும், உப்பு முத்து பவளம் சங்கு ஒக்கோலை ஆகிய கடல்படு திரவியம் ஐந்தும், இவைகளான திரவியங்களுமில்லை மலைச்சார்பான குறிஞ்சி, நீரில்லாக் கடுநிலமானபாலை, காட்டுச்சார்பான முல்லை, வயல்சார்பான மருதம், கடல்சார்பான நெய்தலெனகிற ஐந்திணை நிலபேதங்களுமில்லை நானில்லாமல் கோவிலில்லை குளமில்லை தானமில்லை தருமமில்லை கொடுக்கலில்லை வாங்கலில்லை. எடுத்து நினைக்கின் எதுவும் இல்லையாகவே முடிவாகும் என்றாலும் அரசே! இதோ! இந்தியாயஸ்தலத்தில் ஒரு

வரையொருவர் பிரதிவாதித்து நிற்கும் ஆத்மநாதன் சாரீரகன் எ ன்பவர்கள் வழக்கில் எனக்கொன்றும் தெரியவராது. எல்லாம் நி ன் அந்தரங்க ஆக்ஞாபனையின்படியே நான் எதுவும் அறிந்து கொள்ளச் சக்தியில்லாதவனு யிருக்கிறேன் எனக்குத் தெரிந்த தெல்லாங்கூடி சரீரத்தோடு கொஞ்சம் சம்பந்தப்பட்டிருக்கிறேன் எங்ஙனமெனில், சரீரத்தின் தசை எலும்பு நரம்பு மயிர் நகம் ஜவ் வு இவையெல்லாம் என்மயம். இருந்தாலும் இவற்றில் எதற்குமே சுவபாவத்திலே வலுமையும் சக்தியும் உணர்ச்சியும் கிடையாதா கையால் யாரோ அரூபமான சிலர் இவற்றை நடத்தினதாகமட் டுந் தெரியுமேயல்லாமல் நடத்தினவர் இன்னாரென்று நான் அறி யமாட்டேன். எனக்குத் தெரிந்ததெல்லாங்கூடி இவ்வளவுதான், என்னாண்டவனே க்ஷமிக்கவேண்டும்.

அரசர்:— நல்லது நீ போ, இரண்டாவது சாக்ஷிபார்; வரு ம்படிச் சொல்.

தண்ணீர்(அப்பு)சாக்ஷி.

"சகலபுவன கர்த்தவ்யமே! அடியேன் பேர் அப்பு. இது த மிழர்த்தத்தில் தண்ணீரென்று சொல்லப்படும். ஐரோப்பியதத்து வக்கியானிகளின் தத்துவ ஆராய்ச்சியினிற் கண்டதுவரையில் எ ட்டுப்பங்கு ஒருபங்குமாக சேர்ந்த ஆக்ஸஜன், நைட்ரோஜன் எ ன்கிறஇரண்டுவித விசேஷ வாயுசத்துக்கள்கூடி நான் ஒரு பூதிய மாய் நிற்கிறேன். நான் ஏறக்குறைய இப்பூச்சக்கரத்தின் மூன் றில்இரண்டுபாகத்தை மூடியிருக்கிறேன். என்றாலும் என் அதிக் கிரமிப்புகளுக்குக் கண்டகோடரிபோல் தடையாயிருக்கச் சந்திர ன் படைக்கப்பட்டிருக்கிறதாகையால் இச் சந்திரனே எனக்குக் கடிவாளத்தைப்போல யாவத்காரியமும் கிரமத்தோடே நடத்தி வர ஆதரவாயிருக்கிறது. பூமியாகிய மண் எப்படியோ அப்படி யே நானும் அணுத்திரள். என்குளிர்ச்சியினால் நெருக்கப்பட்டா லல்லாமல் மற்றப்படி அணுக்கள் சற்று தளர்ந்திருக்கிறபடியால் பூமியைப்போல் மலையாய் வளரவும் குன்றாய்க் குவியவும் பள்ள மாய் உள்ளிடவும் எனக்குச் சுபாவமில்லை நான் எந்தெந்த விடங் களில் ஸ்தாபனமாயினும் அந்தந்த விடங்களிலும் தட்டையாகவே சமநிலைப்படுவேனல்லாமல் குவிந்து நிற்கேன். சிறிய ரந்தரமட்டு முண்டாயின் காற்றிலலா விடங்களிலெல்லாம் வெகு சுளுவாய் நுழைந்து வருவேன். இது நிற்க, மஹாஸ்தூல பூதியங்களாகிய பஞ்சபூதியங்களிலும் பிறப்பின்படி நாலாவதும் இருப்பின்படி இ ரண்டாவதுமாகிய அப்புவென் றழைக்கப்படும் ஜலமாகியநான்உ த்தரதக்ஷண குண குடகாகிய இப்பிரபஞ்சத்தின் நாற்பாங் கெல் லைகளிலும். பூமியைச் சுற்றி வட்டமிட்டோடி அந்தந்தத் திக்குக ளுக்கும் ஏற்குமாறு வடசமுத்திரமென்றும் தென் சமுத்திரமெ ன்றும் மேற்குசமுத்திரமென்றும் இந்துசமுத்திரமென்றும் சாந் த சமுத்திரமென்றும் பஞ்சமகா சமுத்திரங்களாக பகுப்படைந்

து கடல் ஆறு, நதி தடாகம் மதகு ஏரி வாவி குளம் கிணறு என்
னும் எல்லாம் உதகங்களிலும் நானே நிறைந்துநின்று பூமியினு
டைய எல்லாப்பாகங்களிலும் வியர்பித்து, ஊற்றுஜலங்களாகவும்
காற்றில் வியாப்தமாகி குளிர்காற்றை வீசியும் ஜலவாயுவாக ஆகா
யத்திற்கிளம்பி மேகமாய்மாறி மழையாகவும், பனியாகவும், பெய்
தும் இப்படியாக உலகமுழுதும் நானே வியாபித்து ரேகித்து பூ
ரித்திருக்கிறேனாதலால் மற்ற நான்கு பூதியங்களைவிட நானே வி
சேஷித்தவனாயிருக்கிறேன். பிரிதிவாகிய மண்ணுக்குரிய கந்தம்
அதாவது வாசனை விஷயமட்டும் எனக்கில்லாமற் போன போதி
லும் சிருஷ்டி திதி சங்காரமென்னும் மூன்றுவித தொழிலையும்
நானே நடத்தி வருகிறவனாயிருக்கிறேன். பிரிதிவு தன் சுபாவப்
படி ஸ்தூலமாயிருப்பதுபோல நான் என் சுபவத்தில் சூக்ஷமஅம்
சமாய் விளங்குகிறேன். (இதைப் பிரிதிவு சாட்சியில் சொல்லிக்
காட்டியிருப்பதினால் மீண்டுமிங்கு விவரிக்கவேண்டிய தவசியமில்
லைபோலும்) நிற்க; எனக்கு சிருஷ்டிதிதி சங்காரமென்கிற முத்
தொழிலும் நடத்தும் சுபாவமெப்படியெனிலோ, இதோ சொல்
லுகிறேன்: நானும் என்னுடைய அப்சமாகிய உவர் என்னும் உப்
பும் அந்தந்த ஜீவர்களிலும் பூரித்து ஆண் பெண்ணையும், பெண்
ஆணையும் கவரும்படியான விரகதாப மகாமாயானந்த மோகத்
தைமூட்டி ஒருவரையொருவர் சம்யோகிக்குமாறு கூட்டி, சுக்கில
சுரோணிதங்களைக் கருவூரில் நாட்டி இவை யிரண்டும் ரேகித்துப்
பிண்டமாய் வெளியிற் காட்டுகிறேன். இப்படியே தாவரவர்க்கங்
களையும் பூவாய் பிஞ்சாய் காயாய் பழமாய் வளர்த்து அதற்குள்ளி
ருக்கும் விதையைக் கொண்டே வேறுவேறு தன்னினமான மரங்
செடிகளையும் ஆகாயத் துளிநீரால் பலநிறமான நவமணிகளையும்
உவரின் அதாவது உப்பின் இறுகலால் வழலையாதி அநேகவிதமா
ன லவணங்களையும் பச்சைநாபி வீரம் பூரம் துருசு கெந்தகம் மு
தலிய அநேகவகையான பாஷாண வர்க்கங்களையும் இப்படியான
எண்ணிறந்தவிதங்களான வஸ்துக்களைச் சிருஷ்டிக்கிறேன். ‘துப்
பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாயதூஉ ம
ழை என்பதுபோல, இப்படியாகச் சிருஷ்டிசெய்யப் பட்டவைக
ளை ஜலத்தாலும்; ஜலத்தால் விளைந்த துவர்ப்பு கைப்பு தித்திப்பு
புளிப்பு கார்ப்பென்னும் ஷட்ருசி பதார்த்தங்களாலும், லவணம்
இக்ஷு சுராசர்ப்பி ததிக்ஷீரம் சுத்தோதகமென்னப்பட்ட சத்தசா
கரங்களாகிய உவர்நீர் கருப்பஞ்சாறு கள்ளு நெய் தயிர் பால் சுத்
தஜலமென்னும் ஏழுவகைஜல பானங்களாலும் உயிர் ஜீவன்களை
வளரவும் குறையவுமாக திதிசெய்தும் அதாவது இரட்சித்துவருகி
றேன். வெள்ளப்பெருக்கு, மிகுமழை, கடல்பொங்குதல் ஜலப்பி
ரளயம் மிகுஊற்று முதலியவைகளினாலும் அப்படியே தாழ்ஜீவன்
களையும் மூல வர்க்கங்களையும் ஒன்றை ஒன்றிற்கு இரையாக்குவ
தினாலும் ஒன்றை யொன்றுதாக்குவதினாலும் உப்பினாலான கொ

டுஞ்சரக்குகளை அதிகப்படி உண்ணலினாலும், அதிசபானத்தாலும் பானக் குறைவாலும், நீர்ச்சுருக்காலும், மேசநீரால் நேர்ந்தவெட்டை முதலிய பல அகோர வியாதிகளாலும் பித்த சிலேத்தும ங்களாலும், சுசிவு மிகுதியாலும், இப்படியாகச் சங்கரித்தும், மூன்றுவித தொழில்களையும் நடத்திவருகிறேன். நானில்லாமல் பூலோகத்தில் ஒன்றுமேயில்லை. வீடுகள் கட்டஜலமும், உப்பால் நீற்றசுண்ணாம்பும் நானே; வீடுகள் இடியவும் மலைகள் நகரவும் செய்பவன் நானே; பன்னிப் பன்னிப் பேசுவதில் பிரயோஜனமில்லை; ஒரேவார்த்தையில் முடிக்கவேண்டுமாயின் நானில்லாமற் போனால் பூலோகமும் பூலோகத்தில் மனிதர்களும் உலக நீடிப்பும் ஒருக்காலுமிராது. கடைசியாக கடவுளும் இல்லையாக முடியும். இதனாலேயே பண்டைய காலத்துப் பிரபலஞானிகள் என்னைஓர் கடவுளாகப்பாவித்து அநேகவிதமான உபசரணைகளெல்லாம்புரிந்து என்னைத் துதித்துவந்தார்கள். வேதாந்திகள் என் சத்தாகிய உப்பைமாய்கையென்றும் என் திதித்தொழிலை விசேஷித்ததாய்க் கண்டு எனக்கு விஷ்ணுவென்று பேர்சூட்டி யிருக்கிறார்கள். உப்பு உள்ளவரையில் மாய்கையுண்டு உப்பு உலகை விட்டொழிந்தால் மனிதர்களெல்லாம் ஞானியாவார்கள். உலோகச் சரக்குகளெல்லாம் பொன்னாகிவிடும். மற்ற தாதுவர்க்கங்களெல்லாம் கட்டிப்போகும். ஆகவே ஆண்டவனே! நான் இவ்வளவு காரியஸ்தனாயிருந்தாலும் இதோ வழக்கிட்டுநிற்கும் சரீரத்தினிடத்தில் மூளை சுக்கிலம் உதிரம் கொழுப்பு இந்த நான்குமட்டும் தான் அவனுடையஅம்சமாய்த் தங்கி யிருக்கின்றன. இதில் கொழுப்போ அசைவற்ற அம்சம்; அசைக்கப்படும் அம்சங்கள் மூன்றே மூன்று; அதாவது மூளை, சுக்கிலம், உதிரம். இம்மூன்று தானுமோ தமக்குத் தாமாகவே அசைகின்றவைகளல்ல ஏதோ ஒரு சூட்சும சத்துவந்தான் இவைகளை அசைக்கிறதுபோலத் தோற்றப்படுகிறது. ஆயினும் அது யாரென்றே எனக்கு தெரியாது. இவ்வளவேதான் எனக்குத் தெரியுமன்றி மற்றொன்றுமறியேன் வந்தனம், அடியேனைப் பொறுத்தருள வேண்டும்.

அரசர்:—அடுத்த சாக்ஷி யார்? சீக்கிரம் சாக்ஷி கூறுக.

நெருப்பு (தேயு) சாட்சி

"சர்வஞான, சத்து சித்தானந்தமெய்ப்பொருள்விலாசா! சரணம். இதோ தேவரீர் சமுகமுன் என் சாக்ஷியத்தைச் சொல்லக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். அடியேன் பேர் தேயு. இத்தேயுவென்னும் பதம் சாதாரணமாய் சமஸ்கிருதமொழியாகவே எண்ணப்பட்ட போதினும் நெருப்பென்னும் நிஜார்த்தத்தைக் காட்டும் தமிழ்ப் பதமாகிய தீ என்கிற திராவிடமொழியே அங்ஙனம் மருவியதாய் ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். இப்பதத்திற்கு அக்னியென்றும் நெருப்பென்றும் வன்னியென்றும் அநேகவிதங்களாய்

ப் பேர் கூறலாம். ஆகவே, பஞ்சபூதியங்களிலும் மகா மேலான நிலைமைபெற்றவனும் சர்வலோகங்களிலும் வியாபித்து எங்கும் பறந்து யாவர் உள்ளத்தும் நிறைந்தும் பெரிய சிறிய என்னும் பரிமாண சங்கைகளற்றும், உண்டு இல்லை என்னும் இருவிவாதங்களையும் அனுசரித்தும், சிருஷ்டி, திதி, சங்கரம் திரௌபவம், அனுக்கிரகம்என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்திவருவதுநெருப்பாகிய நான் ஒருவனேயன்றி வேறல்ல. இதோ சற்றுநேரத்துக்குமுன் எனக்கு முன்னதாக சாட்சியங் கூறினவர்களாகிய பிரிதிவு அப்பு என்னும் இவ்விரு பூதகோஷ்டிகளுங்கூட சிருஷ்டிதிதி சங்கார காரணங்களை நடத்திவருகிறவர்களா யிருந்தபோதிலும் என்போல ஸ்தூலமாகவும் சூட்சுமமாகவும் இருவிதரூபங்களாய் நடத்தி வருகிறவர்களாகவும் முடிவிலே யாவும்ஒழிந்து காணப் படுகிறவர்களாகவுமான அவ்வளவு திறமைபெற்றவர்களா யிருப்பார்களென்று நான் நினைக்க ஒன்றும் ஏதுவில்லை. பிரகிருதி லோகபூத தத்துவஞானிகளாய் விளங்குகிறவர்களும் விளங்கிவருகிறவர்களுமான ஆரியரும் ஐரோப்பியர்களும் தத்தம் தத்துவ ஆராய்ச்சினால் அநேக மகத்தான ஞாயங்களெல்லாம் கண்டுபிடித்து அவற்றில் அதிக முக்கியமாக பூமியின் அளவு இவ்வளவென்றும் தண்ணீர் அளவு இவ்வளவென்றும் வாயுவின் அளவு இவ்வளவென்றும் எழுதி, ஆகாயத்தினளவு சிறிதுமல்ல ரூபமாய்க் காணக் கூடியதுமல்ல; அது அகண்டமய நிராலம்ப வெட்டவெளியென்றும் கணக்கிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் என்றாலும் நானாகிய தேயுபூதியத்தை மட்டும் சரியாய் கணக்கிட்டவர்களில்லை. என் அளவேதெரியாதாயின் என் தொழில்களும் இவ்வளவென்று யார் குறிப்பிடுவார்? 500—600 (பாகை) டிகிரிக்கு மேற்படாமல் ஒரு வஸ்துவை நான் பற்றி நிற்கும்போது அங்கே புகையுமின்றி ரூபமுமின்றி ஸ்பரிசவுணர்ச்சி மட்டும் தெரியப்படும்படியான சூடு ஒன்றே உடையவனாகும். இந்த 500—600 டிகிரிக்கும் அதிகப்படப் பற்றும்போது ரூபமும் புகையும் பொருளுக்கேற்ற நிறமுமுடையவனாய் அக்னி மயமாக விகாரமடைந்து இதனால் முறையே சூட்சமஸ்தூலமென்னும் இருவித அங்கங்களும்படைத்தவனாயிருக்கிறேன். இதற்குத் திருஸ்டாந்திரமாக தேகத்திலுள்ள அக்கினிச் சூட்டையும் செத்தைகள் எரியும் அக்கினி ரூபத்தையும் தெரிந்து கொள்ளலாம் என் பஞ்சகிருத்தியங்களாகிய சிருஷ்டிதிதி சங்காரம் திரௌபவம் அனுக்கிரகளைச்சொல்லுகிறேன் .—

ஒளியானது நெருப்பின் அம்சமேயன்றி வேறல்ல. பிண்டாண்ட.ஜகமுதல் சராசரங்களெல்லாமும் அந்த என்ஒளியின் அம்ஸமாகவே பூரித்து அதனாலேயே நிலைத்து என் அம்ஸமாகவே ஒளி விடுத்துக் கொண்டிருப்பதினால் சூரியசந்திரநக்ஷத்திராதிகள் எல்லாவற்றிலுமே என்பிரகாசத்தைக்காணலாம். என் பிரகாசம்அங்கே

நிலைகொள்ளாதாயின், அவற்றிற்கு ஒளியுமில்லை, கண்ணுக்கும் புலப்பட மாட்டாதென்று மறியவும். என் வலிமையினாலே பிரதியண்டமும் தன்தன் யதாஸ்தானங்களில்நின்று யாதும் புரளாமல் நிலைகொண்டிருக்கின்றன, இவ்வாகாய வெட்ட வெளியிலே வீசிக்கொண்டு தேஜோமயமாய் விளங்கப்படாநின்ற அநேக கோடி சூரியர்களும் தம்தம் ஸ்தானங்களில் யதாப்பிரகாரம் நிலைத்திருந்து இந்தச்சூரியகாந்திகளே பிரதி கிரகங்களிலும் கர்ப்பீகரித்து அவ்வக்கிரக அண்டங்களிலுள்ள சகல தாபர சங்கமங்களையும் விழாமற்படிக்கு இழுத்துப் பிடித்துக்கொண் டிருக்கிறதென்றும், இக்கவர்ச்சி வேகத்தின் பலங்களில்லாமல் எதுவுமே யில்லையென்றும் அறியக்கூடியதாயிருக்கிறது. நிற்க, நானே அந்த மகாரூபங்கொண்டகோளாண்டமாகிய சூரியனிலும் பூரணாங்கிதமாய் நிறைந்து நின்று இப்பூலோகத்திலுள்ள சகலவுயிர்களையும் படைத்து காத்து அழித்தும்வருகிறேன். அதிலும் என் யதார்த்த தேஜஸ் எவ்வளவோ அதில் எத்தனையோ கோடியில் ஒருபங்கு காந்தியைமட்டுந்தான் சூரியனிலமைத்து அந்த அற்ப பிரகாசத்தையும்முழுதுமாகவே பூலோகத்திற்குச் சுடராய்வீசினால் பூவுலக முழுவதுமே தீய்ந்து சாம்பராகிவிடுமெனவுன்னி, அதிலும் 2:8 கோடியே 10 லக்ஷம்பங்கில் ஒருபங்கு சுடரைத்தான் அனல்வீசி இதன் எதுவாலேயே பஞ்ச கிருதியங்களையும் நடத்திக்கொண்டு வருகிறவனுமாயிருக்கிறேன். அதாவது என் சிருஷ்டிக்கிரமங்களை நேர் நிதானமாய்ச் சேர்த்துக்குமளவில்நானென் சூக்ஷம ரூபத்தைக்கொண்ட பிரதிஜீவனின அடிநடுமுடி என்னப்பட்ட மூலம் இருதயம் கபாலம் என்னு மூன்றுஸ்தானங்களிலும் நின்று தேகமுழுதும் பூரித்துக் காமத்தைமூட்டி காமரூபமாகவே சத்த தாதுக்களையும் உருக்கிமுறுக்கிப் பிழிந்து சுரதநீராய்மாற்றி காபாலத்திற் கிழுத்துக்கொண்டுவந்துநிறுத்தி கருவூரிலேசேர்த்து என் அனலைக்கொண்டே பத்து மாதம்வரையில் புடமிட்டு ஓர் உயிராக்கி அவ்வுயிருக்குள்ளும் நானாகவே குடிகொண்டு கரணஓட்டங்களினுள்ளும் நானே அதிகாரியாக மூலாக்கினியாகவுந் தங்கி ஜீவர்களை பூலோகத்திற் கொண்டுவந்து விடுகிறேன். இப்படியே மற்ற உயிர்களையும் நான்படைத்துவருகிறேனென்பதற்கு யாதும்சந்தேகமில்லை. இங்கு ஒருவிஷயம் செல்லமறந்தேன், அதாவது, ஸ்தூலமாகவும் சூக்ஷமமாகவும் இருப்பதுபோலவே நான் காரணமாகவும் எல்லா வஸ்துக்களுக்குள்ளுமிருக்கிறேன் எங்ஙனமெனில், மூங்கிலென்பது ஓரறிவுள்ள தாவரப்பிராணி, இதிலேநான் உயிர்களுக்குத் தோணும்படியாய் ஸ்தூலமாகவும் சூக்ஷமமாகவும் காணப்படாவிடினும் காரணமாகவே அடங்கியிருக்கிறேனென்பதை மேற்படி காட்டில் விளையும் மூங்கில்கள் ஒ·ஒ ரேடொன்றிழைந்து 500-600 டிகிரிக்கு அனல்மீறி திடீரெனப் பற்றிக்கொண்டு எரிகிற விஷயத்தினால் தெரிந்துகொள்ளலாம். இப்படியே ஒவ்வொரு வஸ்துவிலும்

நான் காரணமாகநின்றிருந்து, உயிர்கள் உண்ணும் தண்டுல பிண்டி பேதங்கள்வழியாக உடலுக்குள் நுழைந்து பிராணிகளைக் காத்து போஷித்துச் சூட்டினாலேயே எல்லா வித் கிருத்தியங்களையும் செய்யும்படியாய் நடத்தி வருவதுமன்றி மூலாக்கினியையே இடைவிடாமல் சுழிமுனைக்கு ஏற்றும்படியான வழக்கமாகிய படித்தல், சிந்தித்தல், கேட்டல் முதலிய அவதானவிஷயங்களால் அறிவைப் பெருகச்செய்தும் அந்த அறிவைக்கொண்டே உலகில் கூடகோபுர மாடமாளிகைகள் சமைக்கவும், யந்திர தந்திர விசேஷ வேலைகள்செய்யவும், சாஸ்திரங்களுண்டாக்கவும், உண்டானதை விர்த்தீகரிக்கவும், பலவித தொழில்களாலும் சாமர்த்தியங்களாலும் பூலோகத்தை அலங்கரிக்கவும் செய்கிறேன். அன்றியும் செவியிலே தங்கும் அக்கினியினால் சப்சமறியவும், தோலிலே தங்கும் அக்கினியினால் ஸ்பரிசிக்கவும், நாசியிலே தங்கும் அக்கினியினால் ருசிக்கவும், கண்ணிலே தங்கும் அக்கினியினாலும் விண்ணிலே தங்கும் ஒளியினாலும் சகல சேதனாசேதன சராசரங்களையும் பார்த்தறியவும்; இப்படியே இதய சமத்திலே சதா ஜகஜோதிமயமாய் வீற்றிருக்கும்படியான சிவமயப்பிரகாச சிவாக்கினியை நிறுத்தி பஞ்சபுலன்களின் உபாதைகளிலும் நடந்து உலகத்தை நீடிக்கச்செய்கிறேன். அப்படியே அண்டமென்னும் இப்பிரமாண்ட பூலோகத்திலும், பூலோக மத்தியாயுள்ள அண்டவாயு ஓடிப்போகாமற்படிக்கும், சமுத்திர ஜலமதிகரித்து தன் யதாஸ்தானத்திலிருந்து புரளாமற்படிக்கும், பூமியும் வரம்புகடந்து போகாமற்படிக்கும் கவர்ச்சி சத்தியால் நிறுத்திக்கொண்டிருக்கிறேன் அல்லாமலும் தேகத்திலே மயிர்வளரவும், நகம்வளரவும், தசைவளரவும், தாதுக்கள்வளரவும் இருப்பதுபோலவே உலகத்தில் மலைகளும் குன்றுகளும் மரங்களும் செடிகளும் வளரவும் மாணிக்க முதலிய நவரத்னங்கள்ஒளிபெறவும், இவ்வண்ணம் அண்டத்தையும் பிண்டத்தையும் அநேகாநேக விதங்களாய் சிருஷ்டித்து காப்பாற்றி வருகிறேன். இப்படியாய் சிருஷ்டித்து திதிக்கப்பட்டவைகளான ஜங்கமஜீவராசிகளை நாற்பது வித பேதங்களான பித்தச் சூடென்னும் வியாதிகளாலும், கண்ணொளியும் விண்ணொளியும் மருவுதலால் உண்டான பார்வையென்னும் சக்ஷுவிஷயத்தினால் ஒருவரையொருவர் சங்கரித்துக்கொள்ளவும், கோபாங்காரத்தினால் ஸ்திரீ புருஷ சம்பந்தத்தில் சாகவும், எரிமலைகள் அக்கினிவிபத்து சூரிய தகிப்பு பூமிகொதிப்பு இவைகளினால் மாளவும், சம்பந்த விஷயங்களாலெல்லாமும் என் சங்காரத்தொழிலையும் நடத்தி வருகிறேன். மேற்படி சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொழிலேயன்றி சூரியனைக்கொண்டு என் மாய்கைத்தொழிலாகிய, உண்டாக்குவதும் வளர்ப்பதும் காய்ப்பதும் தீய்ப்பதுமாகிய திரௌபவத்தொ

ழிலும் நடத்திக்கொண்டு வருகிறேன் என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். இதற்காகவே சூரியனைச் சூரிய நாராயணு (மாயவா) எனவு கும்பிடுகிறார்கள்.

இப்பால் அநுக்கிரகத்தொழிலும் நான் எங்ஙனஞ் செய்துவருகிறேனெனிலோ, பூலோகத்திலே சந்திரனின் 27 கலைகளாகிய 27 நக்ஷத்திரங்களும் ஜென்ம நக்ஷத்திரங்களென்று பேர்பெறும். சகல உயிர்ப்பிராணிகளும், சூரிய சந்திர நக்ஷத்திராதிகளாலேயே ஆளப்பட்டு வருகின்றனவென்பது தெரிந்தவிஷயமே. கிரகமென்றால் வீடு. கிரகத்திற்கேற்ற இன்பதுன்பங்களை ஜீவர்க ளனுபவித்து வருகிறார்களென்பது சோதிடநூல்கற்ற பண்டிதாள்களின் துணிபு இக்கிரஹசாரத்தின் தன்மைக்குமிஞ்சி எதுவுமே நடவாது; பிரம்மாவாலும் கூடாதென்று சொல்லுவார்கள். இப்படியிருக்க கிரஹசாரத்தின் தன்மையை மாற்றுவதே அனுக்கிரஹ மென்று சொல்லப்படும். அதாவது முழுதுமே மாற்றுவதல்ல உள்ள கிரஹத்திற்கு ஒத்தாசைக் கிரஹமாய் நிற்பதே. உதாரணமாக ஒரு ஏழை மெத்தவும் வறுமையில் பீடிக்கப்படுகிறான். அது இவனுடைய கிரஹசாரம். யாதொரு புண்ணியவானால் அவன் வறுமைநீக்கப்பட்டால் அது அவனுக்கு அனுக்கிரஹம்செய்ததாகிறது. இதுபோலவே, சீவர்கள் கர்மசம்பந்தத்தினால் ஜனன மரணங்களையனுபவித்துக்கொண்டு வரும் இம்மகா சஞ்சல சாகரத்துள்நின்று மீட்டுக் கரையேறும்வண்ணம் நானாகிய அக்கினியே துரியாதீதஸ்தலத்திலேநின்று அறிவை விசாலிப்பித்து, நாளுக்கு நாள் யுக்தி அனுபவங்களாலே எல்லாம் மித்தை, எல்லாம் பொய் என்று அவர்களே தெரிந்து கொள்ளச் செய்து என் மூலாக்கினியைச் சுழிமுனைக்கேற்றி இம்மூலாக்கினியின் அதிவேகமான முட்டுதலினால் கைலைவாசலாகிய கபாலவழி திறந்துபோக பளிச்சென மின்னி அங்கே என்மயமாகவே, அதாவது என் அக்கினிமயமாகவே தெரியும்படியான ஏதோ ஓர் தோற்றத்தைக்கண்டு, அத்தோற்றத்தின்மீதே எந்நாளும் சிந்தையுடையவர்களாய்ப் பூரண சமாதி கூட்டி கபாலபிரம்ம பீடமாகக்கொண்டு அந்திய காலத்தில் அசைவற்று சுரணையற்று அதனால் இறப்பு பிறப்பை முற்றும ஒழித்துக்கொள்ள அனுக்கிரஹம் புரிகிறேன் நானில்லாமல் பூலோகத்தில் என்னமுடியும்? நானில்லாமல் கருக்கொண்டு பிண்டமாகுமா? நானில்லாமல் முட்டைகள் குஞ்சுபொரிக்குமா? நானில்லாமல் தானியங்கள் விளையுமா? நானில்லாமல் சமயலேது? சாப்பாடேது? அது செரிப்பதேது? நானில்லாமல் போனால் ரசவாதிகளுக்குச் சரக்குகள் கட்டுமா? செம்பு பொன்னாகுமா? ஈயம் வெள்ளியாகுமா? ரசம் குளிகையாகுமா? என் வல்லமைபோல் மற்ற பூதியங்களுக்கு கிடையாதென்றாலும், என் அக்கினி ரூபத்திற்கேற்ற சங்காரத் தொழிலே என்விஷயத்தில் மிகுதியாதலால் ஞானிகளெல்லாம்எ

ன்னைச் சங்கரனென்று பிரதி நாமஞ்சூட்டி கும்பிடுகிறார்கள். நானிவ்வளவு வல்லமையோடு கூடினவனா யிருந்தாலும் இதோ ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வாதாடிகிற்கும் ஆத்மநாதன் சாரீரசன் விஷயமாக எனக்குத் தெரிந்ததெல்லாம் கூடி இது. அதாவது, நான் சரீரத்தினிடமாய் உடல் முழுதும் பூரித்து நிற்கிறேன். அந்தக்கரண வியாபார ஒட்டங்களுக்கும் என்னால் தான் கிரியையுண்டு. ஆனால் நான் என்னவிதத்தினால் ஜடலம் முழுதும் பூரிக்கிறேனோ என்னவிதத்தினால் ஒடுங்குகிறேனோ அது மாத்திரம் எனக்குத்தெரியாது. என்னை யார் கிளப்புகிறார்களோ யார் இழுத்துக் கொள்ளுகிறார்களோ இதை முற்றும் அறியாதவனா யிருக்கிறேன். ஆண்டவனே! எனக்கிவ்வளவுதான் தெரியுமே யன்றி மற்றொன்று மறியேன். கடாட்சித்தருள வேணும்.

அரசர்:—நல்லது உன் சாக்ஷி முடிந்தது தூரம்போய் நில். அடுத்த சாக்ஷி யாரோ அவர் வரட்டும்.

காற்று (வாயு) சாக்ஷி.

வேதாந்த சித்தாந்த விமலனே! வியோம காக்ஷியே! யாக்ஷியே! சரணம், சரணம். அடியேன்பேர் வாயு. இது சமஸ்கிருதபதமாயினும் தமிழிலே இதற்குக் காற்றுஎன்னப்படும். பஞ்சபூதியங்களிலும் அதி முக்கியமான குணங்களுடைத்தானவன் வாயுவாகிய நான்ஒருவனே தான். மற்றொருவரும் எனக்கு நிகாராகார்கள். அண்டகோளகை என்னப்பட்ட இப் பூலோக முழுவதிலும் நான் மேற்போர்வையாய் மூடிக்கொண்டு பூமிக்கு மேலே ஐம்பதுமைல் உயரத்திற்கு ஒரேரூபமாய் பரந்து சந்துள்ள இடமெல்லாம்நுழைந்து வேளைக்கும் இடத்திற்கும் குணத்திற்குமான வெவ்வேறுவித பேர்கள்பூண்டு தன்னிகரற்று ஸ்தாபந்தமற்று ரூபமற்று, எங்கெங்குமோடி சிருஷ்டியாதி பஞ்ச மகா கர்த்தவ்ய கிருத்தியங்களையும்வெகு கிரமத்தோடு நடத்திவருகிறேன். முதலாவது ருஷ்டி தொழிலை நான் எப்படி நடத்துகிறேனெனில்; ஜங்கமப் பிராணிகளாகிய மானிடதேகத்திலே உச்சுவாச நிச்சுவாசத்தினால் எழுபத்திராயிரம் காற்றுகள் பகுப்படைகின்றன. இதில் முக்கியமானது பத்து. அவைகளில் பிராணவாயுவே மற்ற வாயுக்களனைத்திற்கும் மூலமாயிருப்பதினால் இவ்வாயுவானது இடகலை, பிங்கலை, சுழிமுனையாக மூன்றுவித கலைகளாய் பிரிந்து கெட்ட வாயுவை நிச்சுவாசித்தும் சுத்தகாற்றை உச்சுவாசித்தும், நோயில்லாமல் காத்துக்கொண்டிருக்கிறது. அன்றியும் அபானவாயுவி னுள்ள மூல வன்னியை பிராணவாயு ஆதாரமாக மூளையிலே தாக்கி அங்கிருந்து நரம்புகளின் வழியாய் இருதயத்தில் அனலை மூட்டி இருதயவழியாய் வியானவாயுவை தேகமுழுதும் பூரிப்பித்து, காமாக்கினியால் தேகாதியந்தமும் நிரம்பி, தசவாயுக்களையும் ஆநந்தமய மிஞ்சவைத்து, சுக்கில ஸ்கலித நடுவிலே நானே பிராணவா

யுவாக கொலுவிற்றிருந்து கருவூரிலே ஸ்தாபந்தமாக்கி பத்தமா தம்வரையில் கருவூரில் அதைவளர்த்துப் பிண்டமாக்கித் தசவாயு வோடுங்கூடிய பிள்ளையாக உருவமைத்து இப்படி உருவமைக்கப் பட்ட பிள்ளையை தாய்வயற்றிலுள்ள உதானன் அபானன் என் னும் வாயுக்களாதாரமாக கருவூரைவிட்டு வெளியே கொணர்ந்து நாள்ஒன்றிற்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாஸங்களாக சுவாஸிக்கும்படிச்செய்து உடலிலுள்ள மலங்களையெல்லாம் நவத் துவாரங்கள் வழியாக கழிப்பித்து உண்ணவும் நான்தான், உறங் கவும் நான்தான், படுக்கவும் நான்தான், எடுக்கவும் நான்தான், எல்லாவற்றிற்கும் நானாகவேயிருந்து நடத்துகிறேன். இதோடு ம னம் புத்தி சித்தமும் நானாகவே பிண்டங்களுக்குள் குடியிருக்கி றேன். எப்படியெனில் மனம் என்னப்பட்டது வெளியிலே விடு ம் சுவாஸம். சுவாஸமானது எப்படி வெளியேபோவதும் உள்ளே வருவதுமாய் உலாவும்படியான செய்கையை உடைத்ததா யிருக் கிறதோ, அப்படியே பலபல விஷயங்களையும் நிமிஷத்திற்கு நிமி ஷம் நினைக்கிறதற்கு மனம் என்றும் உள்வாங்கும் மூச்சைப் பிடி ப்பதானதே மனம்நினைத்த ஒருவிஷயத்தை விசாரிக்கும்படியான புத்தி தன்மையென்றும் இப்படி விசாரித்தவற்றை உச்சுவாஸம் நிச்சுவாஸமென்னும் இரண்டிற்கும் நடுவிலேநின்ற சுழிமுனை காற் றானது ஸ்தாபிக்கிற தன்மையில் அதற்குச் சித்தமென்றும் பேர் உண்டாகிறது இம்மூன்றுவித காற்றினாலேயே பிரபஞ்ச காரியம னைத்தினையும் நடத்துகிறேன். சங்காரத்தொழிலும் நான்செய்கிற தெப்படியெனிலோ தமரகவாயு மாரடைப்பு வாதம் முதலாகிய நாற்பதுவித வாதரோகங்களாலும், சுழல்காற்று புயல்காற்று கோடைகாற்று முதலிய விபத்துகளாலும், இன்னும் மற்றுமான அபாயங்களாலும் சங்கரித்து இப்படியான முத்தொழில்களையும் நானே நடத்திவருகிறேன். இன்னமும் மாயையின் தொழிலையும் நான்தானே நடத்துவதற்கும் திருஷ்டாந்தம் கேளும்; நான் எப் படி இப்பூலோக சத்திச் சக்கரத்தின்மீது நிமிஷமேனும் நிலையில் லாமல் தத்தளித்தவனா யிருக்கிறேனே, அப்படியே பிரதி ஜீவனை யும் அதனதன் பிண்டத்தினின்ற வாயுக்களை நிலைபெறவொட்டா மல் உச்சுவாச நிச்சுவாசமாக அலைக்கழித்துக் காற்றினது நாட்ட வலுமையினாலேயே புத்திசித்தமுதலிய கரணேந்திரியங்களை ஒடு க்கி ஞானமுத்தி மோக்ஷமடையக்கருதும் விசுவாசத்தைக் கெடுத் து வீணேசாகும்படியாய் திரௌபவித்து என்னுடைய மகாசேஷ் டிப மாயாசேஷ்டையினாலேயே இறந்துபோன பிண்டத்தி லிருந் த உயிராகியவாயுவை ஆகாயத்தில் கிளப்பி மறுபடியும் மழை யோடுகலந்து பூலோகத்தில்தாக்கி புல்முதலிய தாவரவர்க்கங்களு க்குள்ளேயோ, நெல்முதலிய தானிய வர்க்கங்களுக்குள்ளேயோ அவற்றின் உயிராகநுழைப்பித்து இப்புல் தானிய வகைகளைச் சா

ப்பிடும் மிருகபக்ஷிகளுக்குள் தேசத்தின் ஓர் பகுதியிலுள்ள காற்றுகமாற்றி இந்தப் பக்ஷி மிருகங்களை ஆசையோடுண்ணும்படியாய் நரஜீவர்களை ஏவி இவர்களுண்ட பதார்த்தங்கள்செரித்து உதிரமாய், தசையாய், மூளையாய், நரம்பாய் எலும்பாய் இப்படியாக சத்த தாதுக்களாக மாறச்செய்து அதனதன் கர்மத்திற்கேற்க எந்தெந்தவிதமாய் மறுபடி பூலோகத்தில் உருவெடுக்கவேணுமோ அப்படியே சிவப்போ, கருப்போ, கூனோ, குருடனோ, ஏழ்மையோ, ஐஸ்வரியமோ, அறிவுடனோ, மூடதத்துவமாகவோ, அந்தந்த விதத்துக்கேற்ப பிறந்துகொண்டும், இறந்துகொண்டும் தொலையாத பெருஞ்சாகரமாகிய பிறவிக் கடலிலே உழலும்படியாய் நானே செய்துவருகிறேன். இதனால்,மாயையின் கடவுளும் நானென்றேதான் ஒப்புக்கொள்ளப்படும். இப்படி மாய்கை யென்பதை ஒரேவார்த்தையில் முடிக்கவேண்டுமானால் வெளியிட்டு வாங்கும் சுவாஸமே மாய்கை. இதற்குமேல் என் ஐந்தாவது தொழிலாகிய அனுக்கிரகத்தையுங் கொஞ்சம் கேளுங்கள்.

பிராணவாயுவாதி பத்துவிதவாயுக்களாக ஜீவர்களின் கடத்திற்குள்ளே, பகுப்புக ளடைந்திருக்கும் நானாகிய வாயு; லலாட நடுவெளியாகிய சுழிமுனைவரையிலும் மூலத்திலிருந்துகிளம்பி, சுழிமுனையைத்தாண்டி அதற்கப்பால் ஏகாமல் சுழிமுனைக்குக் கீழாகவே நின்று பார்ப்பதற்குக் கண்கள் வழியாகவென்றும்; கேட்பதற்குச் செவி வழியாகவென்றும்; சுவாசிப்பதற்கு நாசி வழியாகவென்றும்; பேசுவதற்கு வாய் வழியாகவென்றும், இதோடு தும்மல், ஏப்பம், கொட்டாவியாகவும்; அபான வழியாகவும்; சிரிக்கவும் கழிந்து போவதினால் மோக்ஷவாசலாகிய சுழிமுனையைத்திறந்து,கபால வெளியாகிய பரலோகத்திற்கேக தடையாய்விடுகிறது. மூலத்திலுள்ள அபான வாய்வானது பிராண வாயுவை திரட்டிக்கொண்டு கண் மூக்காதி நவத்துவாரங்களின் எந்தவழியிலும் ஓடிப்போய் செலவழியாமலே, முன்சொன்ன மோக்ஷவாசலைத் திறந்துகொண்டு கபாலத்திற்கே ஏகவேண்டுமென்பது தான் ஈஸ்வர சித்தம். இதற்குமாறாக இப்பிரபஞ்சத்தைச் சார்ந்ததான ஐம்புல நுகர்ச்சிகளின் விஷய வாசனைகளிலேயே வாயுக்கள் சேதமாய்விடுகிறபடியினாலும் விஷயவாசனையிலே விழுந்து ஆத்துமாக்கள் எந்நாளும் கீழுக்கே அமிழ்ந்து போகின்றன. இங்ஙனம் அழிந்து போகும் ஆத்துமாக்களின் ஈடேற்றத்தின்பொருட்டு என் அநுபோகங்கண்ட ஞானிகளைக்கொண்டே அநேக யோக சாஸ்திரங்களை வெளிப்படுத்தி யிருக்கிறேன். அதின் சுருக்கமாவது சுவாசத்தை உள்ளேவாங்கிப் பிறகு மூலத்திலிருந்து எழும்பும்படியான வாய்வானது கபாலத்தில்முட்டி அங்கிருந்து இடகலை, பிங்கலை, சுழிமுனை மூன்றுவித கலையாக பிரிந்து பன்னிரண்டு அங்குலத்திற்கு வெளியே பாய்ந்து மறுபடியும் சுவாஸிக்கும்போது நாலங்

குலம் குறைந்து 8-அங்குல சுவாசமே உள்ளுக்குச் செல்லுகின்றது. இதிலே பிரதிதினமும் சுவாஸிக்கும்படியான இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாஸங்கள் குறைவடைந்து நாளுக்குநாள் மனிதருடைய பலங்குன்றி, க்ஷீணித்து தசை நரம்பாதிகளெல்லாம் தளர்ந்து, எண்பது-நூறு பிராயத்திற்குள்ளாக மாண்டுபோகும்படியாய் சம்பவிக்கிறது. வெளியில் விடுகிற சுவாஸம் எவ்வளவோ, அவ்வளவு சுவாஸத்தையே உள்ளுக்கிழுப்பதா யிருந்தால் வயது குறைவதற்கு யாதொரு காரணமிராது. இதிலுமோ, இரைப்பெடுக்க ஓடியாடி வேலை செய்வதினாலும், தூங்குவதினாலும், அதிக உணவினாலும், போகத்தினாலும் மேற்சொன்ன கணக்கிற்கும் அதிகப்படவே சுவாஸம் நஷ்டமாகின்றது. இதுநிற்க, மேற்சொன்ன 3-கலைகளாகிய இடகலை, பிங்கலை, சுழிமுனை என்பவைக்கு முறையே சந்திரனென்றும், சூரியனென்றும், அக்கினியென்றும் மறுநாமங்கள் சூட்டப்படும். இதிலே சந்திரனென்னப்பட்டது இடது பக்கத்து நாசியின் துவாரத்திலோடும் சுவாஸமென்றும், அக்கினி என்னப்பட்டது இவ்விரண்டு துவாரங்களிலும் சமரஸ சுபாவமாய் ஓடும் சுவாஸமென்றும் முன்னதாக அறிந்துகொள்ளவேண்டும். அன்றியும் இம்மூன்றினுக்கும் வேறுவித நாமங்களும் சூட்டப்படும்; அதாவது சந்திரனுக்குச் சத்தியென்றும், சூரியனுக்குச் சிவமென்றும், அக்கினிக்குப் பரம் என்றும் சொல்லிக்கொள்ளலாம். சூரியகலையை விட சந்திர கலையே அதிக மூர்க்கங்கொண்ட கலையாதலாலும் சூரியனைவிட மிகவும் மீறியோடும் கலையாதலாலும் முதலாவது சந்திரனையே சூரியனில் கலக்க வேண்டும்; பிறகு சூரியனையும் சந்திரனில் கலந்து இப்படியே சந்திரனைச் சூரியனிலும், சூரியனைச் சந்திரனிலும் கலந்து இவ்விரண்டினையும் சுழிமுனையிலேயே நிறுத்தவேண்டும்; நிறுத்துபக்ஷத்தில் வாசியினுடைய வேகமும் குறைந்து, பத்து வாயுக்களும் ஒன்றாய்க்கலந்து இறுகிப் போவதோடுகூட சரமும் லயமாகி வாசி யோகத்திற்கும் லாயக்காகி அதற்குமேற்பட்ட எவ்வித நிஷ்டை சாதனமும் ஊனமின்றிச் சாதித்தொழுகுவதற்கு உசிதமாய்க் காணப்படும். இவ்வித வாசி யோகஞ்செய்திடில் அக்கினி வாயுக்களால் தேகமுழுதும் பூரிக்கப்படுங்கால் சிரசினிடம் விளங்கும் ஆன்மாவானது ஆகாயத்தில் சூரியனைச் சேர்ந்து, மூவுலகமும் நிகரற்ற ராஜயோகியாய் மெய்ஞ்ஞானாதீத வாழ்வடைந்து சுயம்பிரகாச பதவி சுதந்தரமாகச் செய்யும். இங்ஙனமான பிராணாயாம யோகசத்தியைக்கொடுத்து, பிறவிப் பெருந்துன்பத்தை யறுத்து என் அநுக்கிரகத் தொழிலையும் நிறைவேற்றுகிறேன். ஆனாலும் என் ஆண்டவனே: நான் இவ்வண்ணம் பஞ்ச கிருத்தியத்தையும் நடத்துகிறவனா யிருந்தபோதினும், உமது உன்னத கிருபா விலாச நீதியாசனத்தின் முன் நிற்கும் இந்த ஆத்துமநாதன் சாரீரகன் என்

பவர்களுடைய வழக்கில் யாதொன்றும் எனக்குத் தெரியாது. ஏனெனில் நானோ ஜீவனோடு மாத்திரம் ஏதோ கொஞ்சம் ஐக்கியப் பட்டவன். அதாவது தேகமுழுதும் பூரித்து ஓடவும், ஆடவும், படுக்கவும் எழுந்திருக்கவும், பேசவும், கேட்கவும், முகரவும், ஸ்பரிசிக்கவும் இத்தியாதியான ஜீவக்கூறாக வியாபித்தவனாயிருப்பினும், எனது யதாஸ்தானமாகிய மார்பு முதல் புருவம் வரையிலுமுள்ள மஹேச பாகத்திலேயே நான் கட்டுப்பட்டிருக்க, என்னை யார் தட்டியெழுப்பி யார் இவ்வளவு வேலையுஞ் செய்ய வைக்கிறார்களோ அதையறியேன். என்னை மன்னிக்கவேணும் ஐயனே!

அரசர்:—அப்படியா, நல்லது நீயும்போய் தூரநில். அடுத்த சாட்சி யார் வரச்சொல்

ஆகாயம் (ஆகாஸ்) சாக்ஷி

அகண்டிதாகார பூரணானந்த அதி அகோசரமே! அடியேன் பேர் ஆகாயம். இது சமஸ்கிருதபாஷையில் ஆகாஸ் என்றிருப்பினும் தமிழில் வழக்கமாக ஸகரம் யகரமாகத் திரிவதுபோல எழுத்துத் திரிந்தும் அம் விகுதிபெற்றிருக்கிறது. அல்லாமலும் காயம் என்பது திரவியமான தேகத்திற்குப் பேராதலின், அக்காயத்திற்குப் பெரும்பாலும் எதிரார்த்தத்தைத் தரும்படியான அ, அன், நிர், முதலிய வடமொழி உபசர்க்கங்களில் அ-என்னும் பகுதி காயம் என்பதின் முன்நிற்க அகாயம் அதாவது காயமல்லாதது, கண்ணுக்கு அதிரிவியம் எனப்பொருள்பட்டு, அகாயம் என்பது நீட்டல் விகாரத்தால் ஆகாயமென்று திரிந்ததாக அர்த்தங்கொண்டாலும் கொள்ளலாம். இங்ஙனமிருக்கப் பஞ்சாகார பூத கூட்டத்தின் பேர்வரிசையிலே பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்று கடைசியாக என்பேரைச் சொல்லிக்கொள்வது அடியில்வரும் பெருங்கருத்தை நோக்கியே யாகலான், மற்ற பூதியங்களைப்பார்க்கிலும் விசேஷகுணங்களெல்லாம் படைத்தவன் நான் ஒருவனேயன்றி வேறில்லை. எங்ஙனமெனில், ஆகாயம் என்று சொல்லும்படியான என்னை உலகத்தார் அந்தரம் அம்பரம் உம்பரம் ககனம் வியோமம் வெளி வேணி என்னும் இன்னும் பலவாறான நாமங்களிட்டழைப்பார்கள். இதிலே அண்டம் என்கிற பேரும் எனக்கொன்று உண்டு, இவ்வண்டமென்கிற பதத்தை மனித ரூபமாகிய பிண்டத்திற்குத் தலைமையாக விளங்கும் சிரசிற்கும் ஒப்பிடுகிறதுண்டு. தேகத்திற்குச் சிரசானது எவ்வண்ணம் உயர்வானதாயும் தலைமையானதாயும் விளங்குகிறதோ, அவ்வண்ணமே மற்ற பூதியங்களுக்கும் மேலானதாக நான் ஆதிக்கம் பண்ணுகிறேன். உலக இயலின் சமஸ்த பேதா பேதங்களும் சமஷ்டி வியஷ்டியாக என்னிலிருந்தே தோற்றமாகி, என்னிலேயே ஒடுக்கமாகிறது. சத்திச் சக்கரமாகிய இவ்வுலகமே என்னுள் அடக்கம் என்றால், நானில்லாத ஒருவிடமுமிருக்கின்றதா? எனக்கு ரூப

மில்லை. அளவு சங்கையில்லை, தூரமில்லை, மூலையில்லை, முடிவில்லை. சாக்ஷியாக மேற்சொல்லியபடி எனக்குரிய பல நாமங்களில் ஒன்றாகிய அண்டமென்பதற்கு முட்டையெனும் ஓர் அர்த்தமுண்டு. அங்ஙனமாக ஒரு முட்டையை இங்கிருந்து தொடங்கி இங்கு முடிவாச்சுதென்று கோடிமூடிப்பதற்கு எப்படியியலாதோ, அதுபோலவே என்னை இதுதொடங்கி இம்மட்டென்று சொல்லமுடியாது. என் வாஸ்தவ்விய திகாந்தத்தை அளவிட எவராலாகும்? பூமியின் ஒரு கோளத்தார்மாத்திரம் என் தரிசனீய திகாந்தத்தைக்கண்டு அடிவானம் தொடுவானம் அம்பராந்தம் சக்கிரவாளம் என்றிவை முதலான பேரிட்டழைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனாலுமோ என் உண்மை விஸ்தீரணத்தைக் கண்டறிந்தவர்கள் ஒருவருமிலர். எதினாலெனில் பிரிதிவு என்று சொல்லும்படியான இப்பூமியானது உள்ளும் புறம்புமாய் எல்லா அளவுங்கூடி (838, 25,28,000) எண்ணூற்று முப்பத்தெட்டுக்கோடியே இருபத்தைந்து லக்ஷத்து இருபத்தெண்ணாயிரம் காதவழி தூரம். இங்ஙனமிருக்க எனது ககோள பகோள விலாசத்தில் நின்றிலங்கும் சூரியனானது மேற்படி அளவுகொண்ட பூமியைப்போன்ற உத்தேசம் பன்னிரண்டரை லக்ஷம் பூமியத்தனை அளவுகொண்ட பருமனாயிருக்கிறது, இத்தனைப் பெரிய சூரியனானது, பூமிக்கு 95 லக்ஷத்து 60 ஆயிரத்து 800 காதவழி தூரத்திலிருக்கிறது அல்லாமலும் இச்சூரியனைச் சூழ்ந்துள்ள கிரகங்களும் தூமகேதுக்களுமானவைகளுள் பிரதானமானவைகளாகிய மெற்கூரி (Mercury) என்னும் புதன் கிரகமானது பூமிக்கு ஒருகோடியே 36-லக்ஷத்து 93-ஆயிரத்து 680 காதவழி தூரத்திலும், வினஸ் (Venus) என்னும் வெள்ளிக்கிரகமானது ஒருகோடியே 62-லக்ஷத்து 77-ஆயிரத்து 940 காததூரத்திலும், மார்ஸ் (Mars) என்னும் செய்வாய் கிரகமானது 2-கோடியே 24-லக்ஷத்து 66-ஆயிரத்து 300-காதவழி தூரத்திலும், சீரஸ் (Ceres) என்னும் கிரகமானது சூரியனிலிருந்து 260 மைல் தூரத்திலும், பாலாஸ் (Pallas) என்னுங் கிரகமானது சூரியனிருந்து 226 மைல் தூரத்திலும் ஜூனோ (Juno)வென்னுங் கிரகமானது சூரியனிலிருந்து 300 மைல் தூரத்திலும், வெஸ்டா (Vesta) என்னும் கிரகமானது சூரியனிலிருந்து 225 மைல்தூரத்திலும், (Jupitar) ஜூபிதர் என்னும் வியாழக் கிரகமானது பூமிக்கு 5-கோடியே 99-லக்ஷத்து 15-ஆயிரத்து 520காதவழி தூரத்திலும், சாடர்ன் (Saturn) என்னும் சனிக் கிரகமானது பூமிக்கு 11-கோடியே 35-லக்ஷத்து 15-ஆயிரத்து 300-காதவழி தூரத்திலும், சூரியனிலிருந்து 900-மைல் தூரத்திலும், யூரான்ஸ் (Uranus) என்னும் கிரகமானது சூரியனுக்கு ஓராயிரத்து 800-மைல் தூரத்திலும், சந்திரனானது பூமிக்கு 83-ஆயிரத்து 160 காதவழி தூரத்திலும், நக்ஷத்திர மண்டலமானது பூமிக்கு 25-கோடியே 20 லக்ஷம் காதவழி தூர

த்திலும் ஆக இவ்விவ்வளவு சேணுதீததூரமாய் ஒவ்வொரு கிரகங்களும் நின்றியங்குவதுமன்றி, ஒவ்வொன்றினுடைய பருமனே 7-ஆயிரம், 8-ஆயிரம் 80-ஆயிரம் 70-ஆயிரம் மைல் விஸ்தீரணங் கொண்டவைகளா யிருக்கின்றன. இப்படிப்பட்ட பிரமாண்டமான வான ஜோதிகளெல்லாம் அததன் பிரமாண விதி தவறாது தன் தன் அயனத்தில் சாரி வந்துகொண்டு, உத்தராயணம் தக்ஷிணாயனமென்றும், சூரிய கிரகணம் சந்திர கிரகணம் என்றும், கார்காலம் கூதிர்காலம் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் காலங்களென்றும், வருஷம் மாதம் தேதி வாரம் நாள் இராப்பகல் ஜாமம் நாழிகை வினடி இவை முதலானவைகளைப் பிறப்பித்துக்கொண்டும், பூமிக்கும் அவ்வக்கிரகங்களுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களைக்காட்டிக்கொண்டும்,இராசி சக்கரத்திலேயுள்ள மேஷம் ரிஷபம் மிதுனம் கற்கடகம் சிங்கம் கன்னி துலாம் விரிச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் ஆகப் பன்னிரண்டு ராசிகளும், இவைகளைச் சார்ந்த அஸ்வனி பரணி கிருத்திகை ரோகணி மிருகசீரிடம் திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயிலியம் மகம் பூரம் உத்திரம் அத்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி முதலான 27-நக்ஷத்திரங்களும், அவ்வவ் விராசிகளோடு பாகுபாடடைந்து. ஏறும் இராசி, இறங்கும் இராசியாகக் கிராந்தி மண்டலவரிசையின் ஆரோகணம் அவரோகணம் செய்து, அதுகொண்டு அந்தந்தஜென்ம நக்ஷத்திரக்களுடையவர்களுக்கு இன்பதுன்பம், சுகம் வியாதி, ஆப்த்து சம்பத்து முதலானவைகளைத் தெரிவித்தும்; சம்வர்த்தம், ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரித்தம் துரோணம் காளமுகி நீலவருணம் என்பதாகிய மண்ணீர் பொன் பூ, மண் கல் தீ என்னும் சப்தமேகங்களை வருஷிக்கச் செய்தும், இடி மின்னல் முதலானவைகளை உண்டாக்கியும், அயன வேகங்களால் காற்றைப் பிரபலிக்கச்செய்தும், காலபலத்தால், கன்மலையாதிகளுருகவும்; சமுத்திர நீர் கொந்தளிக்கவும், சுவறவும், இங்ஙனமான அயன சேஷ்டைகளெல்லாம் இந்தக் கிரகங்கள் செய்துகொள்ளத்தக்க அத்தனை விசாலமான இடம் நான் என்னில் கொடுத்துக்கொண்டிருக்கிறது மன்றி, அப்பாலுக்கப்பாலென்று சொல்லும்படியான அகண்ட விலாசத்திலே கிரகங்களானது தனக்குத்தானே சுழன்றுகொண்டிருக்கும் வேகத்தினின்று உதிக்கும் தொனியானது (இப்பூவுலகத்தில் சுரசாஹித்ய சாஸ்திரிகளுக்குமூலாதாரமா யிருக்கும்) ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் எழுவித சுரங்களையும் மேளம் பிசகாது கொடுத்துத் தேவகணங்களை ஆனந்தப்படுத்தி வருவதோடு உலகோர்க்கும் மேற்படி சுரத்தொனி கொண்டமைந்த வாத்தியக் கருவிகளால் இடைக்கிடை ஆனந்த மூட்

டிக்கொண்டு வரும்படியாகவும் என் அங்கத்தில் இடங்கொடுத்து செய்விக்கிறேன். இப்படிப்பட்ட அளவு சங்கையில்லாத காத்திர தேகத்தைக் கொண்ட நான்; சிருஷ்டி, திதி சங்காரமுதலிய கர்த் தத்வத்தொழிலை நடத்துகிறேனென்பதையும் இச்சமுக முன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்—முதலாவது என் சிருஷ்டித்தொழிலைச் சங்கிரகமாய்க் கூறவந்தபோதிலும் பூமியினிடத்தே தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்கு மனிதரான ஜீவ கோடிகளெல்லாம் சூரியனின்றி ஜீவிக்காதென்பது திண்ணம். அந்தச் சூரியனிடத்துள்ள ஒளியும் அனலுமே பூமியினின்று நீரைச் சுவறவைத்து அதையே மழையாகவும் பனியாகவும் மூடுபனியாகவும், திரும்பப் பெய்யவைப்பதும், பூமியை எப்போதும் கசிவுபட்டிராவண்ணம் சூடுதாக்கி, சிலபோது காய்ந்த நிலமாகவும் சிலபோது ஈரநிலமாகவும் ஆக்கி, தானியாதிகளை முளைப்பிக்கச் செய்தும், இன்னும் அகோர தீக்ஷண்யத்தால் பெருமவனாந்தரங்களிலுள்ள மரங்களைச் சுட்டெரித்துக் கரியாக்கி அதே முறையாய் நாளுக்குநாள் சூடுதாக்கி அப்படியே யுகாயுக வருஷங்களாய் சூடு தாக்குவதில் அதை இறுகவைத்துப் பின்னும் பின்னும் அதை உருக்கி லோகத்தைப்போல் மாற்றித் தத்துவப் புதுமையான வஸ்துக்களாய் வேறுபடுத்தியும் இவைகளில் சில பாகங்கள் காலாவதியில் பூமியின் புழுதியால் மறைவுண்டு அனேக கற்பகாலங்கிடந்து வேறு பதார்த்தங்களாக மாறிச் சுரங்க கனிகளினின் றெடுக்கத்தக்க நிலக்கரிகளாக்கியும்; பூமியின் பெருமணல்களை நாளுக்கு நாள் சூடேற்றி இறுகவைத்து ஒளியேற்றி விலையேறப்பெற்ற மணிகளாக்கியும், சங்கு சிப்பி மீன் நத்தை முதலை உடம்பு மேகம் தாமரை வாழை கடுகு கரும்பு செந்நெல் மூங்கில் யானைமருப்பு பன்றிமருப்பு பசுவின்பால் நாகம் கொக்கு கடைசியாக நங்கையர் கழுத்து இவை முதலான 20-விடங்களினின்று முத்துகள் ஜனிப்பிக்கச்செய்தும், சூட்டின் சம்பந்தத்தால் காமத்தைக் கிளப்பி கருதரிக்கச் செய்து கருதரித்த பிண்டத்தை மாதக்கணக்காய் உருப்படுத்தியும்; பக்ஷி, ஊர்வன நீர்வாழ்வன முதலியவைகள் சில ஆண் பெண் அடை காத்துக் குஞ்சுபொரிக்க வைத்தும், சில சூரிய வெப்பத்தாலேயே (சூரியனே சூடுதாக்கிக்) குஞ்சுபொரிக்க வைத்தும், சிலபூண்டுகள் சூரிய ஒளியினாலேயே முளைத்து வளரும்படி செய்தும் இவைபோல்வன வித்திற்பிறப்பனவும் வேர்வையிற் பிறப்பனவும் விதையிற்பிறப்பனவுமாக உற்பத்தியாதிகளை சூரியனைக்கொண்டு நானேசெய்து வருகிறேன். இப்படிப்பட்ட அனலும் ஒளியும்சூரியனிடத்திலேயே விளங்கினபோதிலும் அந்தச்சூரியன் தன் சொந்தமாகவே ஒளியையும் அனலையும்கொண்டிராமற்படி தற்பிரபையற்ற இருண்ட ஓர்வஸ்துவாயிருக்கிறது. அந்தஇருண்டவஸ்துவான சூரியன் தன்

னைச்சூழ்ந்துள்ள சோதிமண்டலங்களிடத்திலின்றே அனலையும் ஒளியையும் கிரகிக்கிறது. அந்த கிரகங்களுக்கும் இயற்கையிலேயே அந்த குணங்களில்லை அவைகளும் மற்றவைகளினின்று தான் கிரகிக்கின்றன. இங்ஙனமே இவைகள் அனலையும் ஒளியையும் கிரகிப்பதற்கு ஆதாரமாய் நின்று ஒன்றிலிருந் தொன்றுக் கிழுத்து விடும் காரணக்கர்த்தா நானே. கிரகங்களின் கவர்ச்சியை ஒன்றுக்கொன்று பொருந்தவைத்து அதினின்று யாவத்து சிருஷ்டித் தொழிலையும் நிறைவேற்றுகிறேன். இப்படியே திதியின் தொழிலையும் நோக்கினாலோ எந்த ஜீவப்பிராணியும் தாயின் வயிற்றிலிருந்து வெளிப் புறப்படும்போதே என்னைத்தான் முதல்முதல் அடையப்பெற்றுக் கொள்ளவேண்டும். ஒரு சிசுவானது தன் தாயின் வயிற்றினின்று பிறந்த அந்த நிமிஷமே ஆகாயமாகிய நான்தான் அதை ரக்ஷிக்க வந்தடைகிறேன். நான் ஆறுதல் கொடுத்த உடனேதான் மேற்படி சிசுவானது தன் தாயின் கருப் பையில் பட்ட சிக்குமுக்கான சங்கடங்களையும் அவஸ்தையையும் ஒழித்துத் திணறி மூச்சுவாங்கி வாய்விட்டுக் கூவுகிறது மல்லாமல் கை கால்களை உதறி, தான் முண்டுகட்டாயிருந்த கஷ்டத்தையெல்லாம் தீர்க்கிறது. இங்ஙனமாகத் தாயின் முலைப்பாலுக்கும் முன்னதாகவே மேற்படி பூக்குழந்தைக்கு நான் ரக்ஷகனாக நேர்ந்துகொண்டு அதே சார்பாகவே உயிரை உஜ்ஜீவிக்கச் செய்துகொண்டு வருகிறேன். அதெங்ஙனமெனில்; காற்று என்று சொல்லும்படியான வாயு என்னுடைய அம்ஸம்தான். என் சலனத்தினால் அதாவது ஆகாய அசைவினால் உதிக்கிறதுதான் காற்று அதற்கு என் குணமாகிய சத்தத்தோடு ஸ்பரிசகுணமும் சேர இரண்டு குணமானதால்தான் அது வேறுபூதமாயானது. எனவே இந்த என் அம்ஸமாகிய காற்றைக்கொண்டு உலகத்திலுள்ள ஜீவராசிகளையெல்லாம் காப்பாற்றுகிறேன். காற்றில்லாவிடில் எந்தப் பிராணியும் பிழைத்திடாது. இதற்குச் சாக்ஷியாக ஒவ்வொரு ஜீவ வர்க்கங்களினுடைய பிறப்பின் துவக்கத்தைக் கவனித்தால் அததும் உற்பத்திப்படுகிற அல்லது தோன்றுகிற நேரத்தில் ஒருவித வெளிறின மஞ்சள் நிறமாய்க் காணப்படும், அந்த மஞ்சள் நிறமானது ஆகாயமாகிய என்னுடைய நிறம் நான் உற்பத்திப் பண்ணுகிறதெல்லாம் என்னிறமாகவே தோன்றும் அப்படித் தோன்றிய கொஞ்சநேரத்திற்குள் என் அம்ஸமாகிய வாயுவைக்கொண்டு அவைகளை வளர்க்கவிடுகிறேன். வாயு அவை அவைகள்மீது வியாபித்தவுடனே சட்டென மஞ்சள் நிறம்விட்டு வெவ்வேறு நிறங்களடைகின்றன. உதாரணமாக காற்றுக்குப் பச்சைநிறமானதால், துவக்கத்தில் மஞ்சள்நிறமாய் முளை கிளம்புகிற விதை பயிர் புல் செடி முதலானவை காற்றின் சம்பந்தத்தால் பச்சை நிறங்களாக மாறுகின்றன. அப்படியே மற்ற உயிர்ப்பிராணிகளின் மீ

தும் வெம்மை தன்மை மென்மை திண்மை நொய்மை சீர்மை சர்ச்சரை முதலிய எட்டுவித ஸ்பரிசகுணங்களால் அவ்வத்தேச சுவாத்தியப்படியும், கால பருவங்களின் படியும் நிறவேறுபாடாகப் பரிணமித்துக் காப்பாற்றச் செய்கிறேன். இப்படி என்சிருஷ்டியையும் திதியையும் நடத்திவருகிறதோடு மிகுந்த ஆகாயத்தைச்சுவாசிப்பதினாலும் ஆகாயத்தின் மிகுந்த அலம்புதலாகிய பிஜண்டமாருதங்களாலும், சூரியனுக்கு அளவுக்குமிஞ்சிய் அனலைக் கொடுப்பதினாலும்' விஷக்காற்று முதலியகெட்ட ஆகாயமாய் மாறுவதினாலும், எரிநட்சத்திரம் முதலிய ஆபத்துகளினாலும், கிரகதோஷங்களாலும் இவைபோல்வன ஆகாயஉத்பாதங்களான என் கொடுமைகளிலெல்லாம் ஜீவர்களைச் சங்கரித்தும், எத்தனையோ உலகங்களைத் தினசிதம் அழித்தும் என்சங்காரத்தொழிலையும் நடத்திவருகிறேன். இதுமாத்திரமேயன்றி என்னிடத்தினின்றுற்பதியான வாயு தேயு அப்பு பிரிதிவு என்கிற பூதங்களைக்கொண்டு அவைகள் ஒன்றோடொன்று கலக்கவும் பிரியவும் செய்து, இன்றைக்கு ரூபமாயிருக்கிறது நாளைக்குமறைந்துபோவதும், நேற்று ஜடமாயிருந்தது இன்று புகைபோல ஒழிந்துபோகவும், சிலநாட்களுக்குமுன் வெறும் மைதானமாயிருந்தவிடம் சிலநாளில் மாடகூடம் தோப்புத்துரவுமாய் காணப்பட்டு அடுத்த சிலநாட்களில் இருந்தவிடமே இல்லாதொழிந்துபோகவும், ஆகாயத்தின்கீழ் காணப்படுமே யாவும் மாயை என்று என் திரோபவத்தொழிலோடு, கடைசியாக எந்தமனுஷரும் பரத்தை நோக்கும்படியான ஒரு அவாவை அவர்களுக்குள் கிளப்பிவைத்திருக்கிறதுமன்றி, உலக விபவமாய் காணப்படும் பிரிதிவை அப்புவிலொடுக்கி அப்புவைத் தேயுவிலொடுக்கித் தேயுவை வாயுவிலொடுக்கி வாயுவை என்னுள்ளொடுக்கி அனுக்கிரகத்தொழிலையும் நிறைவேற்றுகிறேன். இங்ஙனமான பஞ்சகிருத்தியங்களையும் நான் மகா சாமர்த்தியமாக இயற்றிவந்தபோதிலும், என் ஆண்டவனே! நானோ எனக்குக் கண்ணுமில்லை காதுமில்லை வாயுமில்லை கையுமில்லை என்னிருப்பிடமெல்லாம்கூடி மனிதனுடைய உடலத்தில் ஆகாய பாகமென்று சொல்லும்படியான அண்டம் அதாவது சிரசுதான் அங்கிருந்துகொண்டு நான் என்னென்ன செய்கிறேனென்று எனக்கே தெரியாது என்னையும் யாரோ ஒரு சித்தனிருந்து ஆட்டுகிற படியினால் இந்த ஆத்துமநாதன் சாரீரகன் வழக்கில் எனக்கு ஒன்றுமே தெரியாது. மன்னிக்கவும்.

அரசர்:—சரி நீ தூரம்போய் நில். அடுத்தவர் வந்து சாக்ஷி சொல்லட்டும்.

மெய்யின் (தொக்கு)சாக்ஷி.

"சர்வகோடி அண்டங்களிலும் தான் தனியாய் நின்றரசுபுரியும் தயாசாகரமே, சக்கரேஸ்வரரே! அடியேன்பேர் மெய். மெய்

பென்றால் தேகம்; உடல், யாக்கை, சடலம் என்றின்னும்பல அர்த்தங்களிட்டுச் சொல்லிக்கொள்ளுகிற சரீரத்திற்குப்பெயர். சரீரமாகிய எனக்கு மெய்யென்று பேரிட்டுவிட்டுலகிலுள்ள அனேக படித்தவர்கள் கூட என்னைப் பொய் பொய்; இந்த தேகம் பொய்; இதுமாய்கை; நிச்சய மற்றது; மறைந்துபோகிறது; அழிவுள்ளது; செத்துப்போகிறது; நம்பிக்கையற்றது; இல்லாமற்போவது. இச்தேகம் பொய், பொய்யென்று அவர்கள் பொய்யாகவே என்னைப்பொய்யனென்றுசொல்லி வருகிறார்கள். இதனால் எனக்குமெத்த மனவருத்தமா யிருக்கிறது. என்னைப்பொய்யனென்றுசொல்லிக்கொள்ளுகிற படிச்சவர்களும் இடிச்சுவர்களும் ஞானிகளும் பேமானிகளும் அதற்கேன் எனக்கு மெய்யென்று பேரிட்டுவைத்திருக்கிறார்கள்? அந்தபுத்தி அப்போதே இவர்களுக் கில்லாமற்போனதென்ன? இவர்கள் அறிவுபோனவழிக்கு நானென்சொல்லுவேன். ஆ! நான் பொய்யென்கிற பேருக் குரிமையானவனா? நான் சாஸ்வதமும் எந்தக் காலமும் மெய் மெய் மெய்; நிலைபெற்றவன் அழிவில்லாதவன் என்று உமது திருவுளத்திற்குத் தெரிந்ததன்றோ! சரிதை கிரிகை யோகமார்க்கங்களால் ஈஸ்வரானுக்கிரகம் பெற்று ஞானக்கினியால் தேகத்தைப்புடமிட்டு ஆபிரத்தெட்டுமாற்றுக்கும்உயர்ந்த பொன்போலும்வஜ்ரகாயமடைந்துஜனனமரணாதிகளற்று கற்பகோடிகாலம் வாழவேண்டிய என்னை மெய்யென்றுபேரிட்டழைக்காமல்பொய்யென்று பாவிப்பதுஎவ்வளவு விசனமான சங்கதி. இப்படி உத்தமமான பக்தி சுத்தியைப்பெற்றுச்செத்துஞ் சாகாதவர்கள்தான் மனுஷர் அதாவது மனுப்பிறவி என்றும், அவர்களுடைய தேகந்தான் மெய்யென்கிற பேருக்குரிய தென்றும் தெரிந்துகொள்ளாத உலகத்தார், தாங்கள்மேற்படி பத்திசுத்தியால் பரிபக்குவப் படாமலும் வீணே விஷயகாமங்களிலுழன்றும் இருப்பதைக்கொண்டு பிணி மூப்பு சாக்காடு முதலியவற்றால் தங்கள் தேகத்தைப் பயனற்றதாகவே போக்கடித்துக் கொள்ளுகிறதால் இப்படிப் பட்டதுதான் தேகம், இது பொய் என்று அவர்கள் மனதிற்குப் பட்டபடி உண்மை தெரியாமல் இப்படிக்குளறி வழிகின்றனர். இவர்கள் கருதுவது, ஈஸ்வரபக்தி, திரிகரணசுத்தி, முதலியன அற்று உலகில் வாழ்ந்தும் இறந்தும் அழிந்தும்போகிற மனிதர்களென்று பேர்பூண்டவர்களெல்லாருந்தான் மனிதர், அதாவது மனுஷப் பிறவிகளென்று. ஐயோ! மனுஷர்களென்கிறபோ இப்படிப்பட்டவர்களுடையதல்லவே; இவர்கள் மனுஷப் போலிகளேயன்றிப் பரமராஜனாகிய உம் நியமிப்புக்குரிய உண்மை மனுஷர்களல்லவே! அல்லாமலும், "இந்த நமது உடல் அழிவுள்ளதாயிருக்கிறது, இது அழியாமையைத் தரித்துக் கொள்ளவேண்டும்" என்றும் 'சாவுக்கினமாகிய இது சாவாமையைத் தரித்துக்கொள்ளவேண்டும்' என்றும் (1 கொரி 15; 53) பவுல் அப்போஸ்தலனும் சொல்லியிருக்கிறார். இப்படியெ

ல்லாம்உண்மை மனிதர்களா யுள்ளவர்களின் தேகம் உண்மை யென்று குறிப்பிக்கும் மெய்யென்கிற பேர்படைத்த என்னை பொய்யென்றுகூப்பிடுவது மகாபாதகமும் பெருத்த துரோக மாகும். ஆகவே இப்படிப்பட்ட உண்மைத் தன்மைபூண்ட மெ யாகியநான், முதலாவது வான மண்டலத்தையும் பூ மண்டலத் தையும் ஒன்றாய்க் காட்டுகிற ஒரு விநோதக் கண்ணாடியைப்போ லிருக்கிறேன். எங்ஙனமெனில், அண்டத்திலுள்ளது பிண்டத்தி என்கிறபடி அண்டமாகிய என் சிரசினிடத்திலே மூளையின் ச னமானது ஆகாயத்தின் அசைவைப்போ லிருக்கின்றது. இ கண்களும் சூரிய சந்திரர்க் கடையாள மாயிருக்கின்றன. இரு செ விகளின் சப்தமானது மேகத்தின் குமுறலைப்போ லிருக்கின்ற மூக்கின் சுவாசமானது சிறு காற்றுப் பெருங் காற்றுகளைபோ ருக்கின்றன. கண்களில் வீசும் உக்கிர கோபமான துமின்னல், ந நக்ஷத்திரம்போ லிருக்கின்றன. கண்களினின்று புறப்படும்க ணீரானது மழைக்குச் சமானமா யிருக்கின்றது. இப்படியே வ ன மண்டலத்தின் அமைப்புகளெல்லாம் மனிதனது சிரசாகிய அ ண்டத்தினிடத்திலே காணப்படுகிறது போலவே சிரசுக்குக் கீழ கிய பிண்டத்தினிடத்திலும், இருதயம் சூரியனுக் கடையாளமா வும், வியர்வை பனிநீருக்கடையாளமாகவும், அங்கத்தின் நடுக ம் பூமியதிர்ச்சிக் கடையாளமாகவும், ஜலப்பை மலப்பை முதலி ன கடல்சமுத்திரம் இவைகளுக்கடையாளமாகவும், அவ்வண்ணமே கால் கை விரல்கள் முதலியன விருக்ஷம் கொடி செடி முதலியவை களுக் கடையாளமாகவும், உரோமங்கள் புல் பூண்டுகளுக் கடை யாளமாகவும், ஈரல் குலை சுண்டிக்காய் முதலியன குன்றுகள் லைகளுக் கடையாளமாகவும், இப்படியேபிரபஞ்சத்தின் எல்லா தோற்றங்களும் அண்டபிண்டத்தொகுப்பாகிய என் மெய்க்கு ளாகவே அடங்கி யிருக்கின்றன.

என் உள்ளுறுப்பின் பிரமாணத்தின்படி கபாலத்திலேநெ றி அஸ்தி ஒன்று, கபாலத்தின் பின் அஸ்தி ஒன்று, சுவர் எலும் பு 2. கால் அஸ்தி 2. கபாலத்தின் அஸ்திவார எலும்புஒன்று, வாரஎலும்பு ஒன்று, இரண்டு காதிலுமுள்ள சின்ன எலும்பு (மேல்வாயிலே மூச்செலும்பு ஒன்று. அதன் இருபக்கத்திலே ஊ தைந்தோடுபற்கள் 16. கீழ்வாயில் பற்கள் 16. கடைவாயின் ப கத்திலே 2. எலும்புபற்களுடையஅஸ்திவாரத்தின் எலும்புஒன்று ஆக தலையிலே 60 எலும்பும் உள்நெஞ்சில் முள்ளெலும்புகள் 32 பக்கஎலும்புகள் 24; திறப்பு எலும்புகள் 2, முன்னெஞ்சியிலு ள்ள அஸ்தி 3 இடுப்புக்கருகில் எலும்புகள் 6. ஆக அடிப்பிண்ட த்திலே 67 எலும்புகளும்; தோள்எலும்பு 1. கைபட்டைஎலும்பு 1 முன்கையில் பெரியஎலும்பு 1 சிறியஎலும்பு 1 மணிக்கட்டு து வங்கி விரல்மட்டும் சின்ன அஸ்திகள் 12 ஒவ்வொரு விரல்களில் மும்மூன்றாக ஐந்துவிரலுக்கும் துண்டுஎலும்புகள் 14 ஆக 30எலு

புகளும்; இதேபோல மற்றொரு கையின் 30 எலும்புகளையும் கூட 60-எலும்புகளும்; கால்களிலே திடையஸ்தி 2 முழங்கால் ல்லு 2 குதிரை முகச்செலும்பு 2 கெண்டைக்கால் அஸ்தி 2 ணிக்கட்டு துவங்கி விரல்கள் பத்துக்கும் துண்டெலும்புகள் 28 ஆக 60-எலும்புகளும் இப்படியாக தேகமுழுவதுக்கும் மொத்த எலும்புகள் 249 பொருத்துகளாய்க்கொண்டு உருவமாய்க் கட்டப்பட் டிருக்கிறேன். இப்படிக்கட்டப்பட்ட அஸ்திக் கூடுகளி ன்மீது பேசிகளென்றும் வன்னசைகளென்றும் சொல்லும்படி யான சதை ஏறக்குறைய 68 இராத்தால் கொண்டதாய் நிறைந்து அதன்மேல் சலன நரம்பு ஸ்பரிசநரம்பு என்கிற 31-ஜதை நரம்புகளான உதிர நரம்புகளும் நாளங்களும், சல்லி நரம்புகளென்னும் நரம்புக் கூந்தல்களும், சரீர முழுவதும் பரம்பி அதன்மேல் லனநரம்பு ஸ்பரிசநரம்பு என்ற 13-ஜதை நரம்புகளான உதிர நரம்புகளும் நாளங்களும் சல்லி நரம்புகளென்னும் நரம்புக் கூந்தல்களும், சரீர முழுவதும் பரம்பி அதன்மேல் உள்சருமம், மேல் சருமம் என்று சொல்லும் தோல்கள் மூடப்பட்டும், அத்தோல்களில் இரண்டரைக்கோடி உரோமத் துவாரங்களும் இத்தனையும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுடலுக்குள்ளே நெஞ்சினிடத்தில் இருதயமானது கோபுரம்போலே அஸ்திவாரம் அகலமாயும், நுனிகூர்மையாயும் இடதுபக்கத்தில் சாய்ந்ததாயும் பெரியஇரத்தத்தாரையை யுடைத்ததாயும் சுமார் ஆறுவிரற்கடை நீளமாயும் அஸ்திவாரப் புறத்திலே முள்ளெலும்புகளோடு பொருந்தியதாயும் அமைக்கப்பட்டிருக்கின்றது அல்லாமலும் அஸ்திவாரப் பக்கத்திலே நாலு பெரிய இரத்தத் தாரைகள் கொண்டு அதில் இரண்டுகுழல் இருதயத்துக்கு இரத்தத்தை வீழப்பண்ணியும் இரண்டுகுழல் அதிலிருந்து வேறுவழியாக இரத்தத்தை ஓட்டியும் அதிசயமான தொழில் செய்துகொண்டிருக்கும்! இதற்கு தாது என்று சொல்லப்படும். இப்படியே இருதயத்தினுடைய இடப்பையிலே நின்று இரத்தமானது மகா பலத்தோடு புறப்பட்டு பெரிய தாதுக்குள்ளே தள்ளுண்டு சீவாக்கினிகளைக் கொண்டிருக்கிற தாரைகளில் ஓடியும், ஒருபக்கத்திலே தாதுவழியாக கால்பட்டை கை முதலான இடங்களுக் கோடியும் மற்றொருபக்கத்தில் தலையின் தாதுவழியாயேறி மூளையினுடைய தத்துவங்களுக்குள் பிரவேசித்துக்கீழே போகிற தாதின் வழியாகப் பற்பல நரம்புகளைக்கொண்டு வரும்போது உதிரம் வடி கட்டப்பட்டும், மூளையிலே சீவ அணுக்களும், வாயிலே உமிழ் நீரும், வயிற்றின் கீழ்ப்பாகத்திலே புளித்த நீரும், நல்லீரலிலே வாதமும், மாங்காயிலே சிறுநீரும், ஸ்திரீகளுடைய மார்பிலே பாலும் இவ்விதமாக வடிக்கட்டப்பட்டு விளங்குகிறது. கடைசியாக இரத்தம் இருதயத்தில் எம்மாத்திரம் விழுமென்று விசாரிக்கில் ஏறக்குறைய பெரிய தாதிலே ஒவ்வொரு முறைக்கு ஒவ்வொருபலம் தள்ளப்படுகி

றது. அப்படி தள்ளப்படுகிறதால் இரண்டரை நாழிகைக் கொரு முறை 3840-பலம் இரத்தம் தாதுவழியாக ஏறியும் அப்படியே ஒருநாளாகிய 24-மணிநேரத்தில் 92160-பலம் இரத்தம் தாதுக்களுக்குள்ளே ஓடியும் தேகமெங்கும் வியாபிக்கிறது.

அல்லாமலும் இருதயத்தின்கீழ் வயிற்றின் தன்மையைக் கவனிக்கில், வயிறானது ஆகாரத்தையும் தண்ணீரையும் கொண்டிருக்கிற ஒரு பாத்திரம்போலிருக்கிறது. அவ்வயிறு நெஞ்சையும் குக்ஷியையும்பிரிக்கிற ஒருசவ்வினால் வேறுபட்டிருக்கிறது. அது கொஞ்சமாய்சாப்பிடுகிறவர்களுக்கும்பெண்களுக்கும் சிறியவயிறும், புருஷர்களுக்கு பெரியவயிறுமிருக்கும். மேலும் வயிறு நீளமாயிருந்தாலும் உருட்சியாயும்வெள்ளையாயும், உட்பக்கம் மெழுகப்பட்ட நிலம்போலும் பள்ளமும் மேடுமாய் சிவப்பாயும் மூன்றுதோலால் மூடப்பட்டதாயுமிருக்கும். அங்கே பசியெடுக்கும் நரம்புகளுமிருக்கும். வயிற்றுப்பையிலே விழுந்த ஆகாரமானது கொதித்துக் கூழாகுகையில் அப்புகைமீண்டும் மேலேறுகபடி அங்கொரு கதவிருந்து அதை மூடிக்கொள்ளும் கூழாய்ப்போன பிறகு வலதுபக்கத்திலே யுள்ள ஒரு வாசல் வழியாகச்செல்லும். அக்குழல்களின் தன்மை ஏதென்றால், அது வட்டமாயும் வயிற்றினுடைய வாசல்வழிதொடங்கி அபானவாய்மட்டும் போகிறதாயும், 28 முழ நீளமுள்ளதாயுமிருக்கும் அல்லாமலும் அக்குடல் மெல்லீசான ஒருவித சீலைபோன்ற தத்துவத்தைச் சுற்றிக்கொண்டு மாங்கிஷமுள்ளெலும்போடே கட்டப்பட்டும் மடிந்துமடிந்து சுற்றிக்கொண்டுமிருக்கும். இப்படி மடிந்தில்லாமல் குடல் ஒரேநீளமாய் நீண்டிருந்தால் சாப்பிடும் அன்னம் அப்போதே சுக்கப்போது மலவாய் வழியாகச் சரசரென வெளியே ஓடிவந்துவிடுமாகையால் அப்படிவராதிருக்க அவ்வளவு சூட்சமாய்க் குடலை முழுக்கி அமைத்து வைத்திருக்கின்றது. இதுநிற்க, நல்லீரலானது சிவப்பாயும் மாட்டினுடைய குளம்புபோல இரண்டாய் பிரிந்தும், பித்தத்தைப் பிச்சிப் பையில் ஒட்டியும் இரத்தத்தைச் சுத்திகரித்தும் வேலை செய்து கொண்டிருக்கும். வாலீரலோ குட்சியினுடைய இடது பக்கத்திலேயிருக்கிறது. அதினுடைய நீளம் ஒருவிரற்கடையும் அகலம் 3-விரற்கடையுமிருக்கும். சிலேஷ்மங் கலந்த நல்லீரல் கருப்பு நிறமாயும் வயதுசென்றவர்களுக்குக் கெட்டுப்போன பச்சை நிறமாயுமிருக்கும். அதிலே இரத்தம் வடிக்கட்டப்படுகிறபோது புளித்தஇரசம் புறப்படும். அதுமஞ்சள் வர்ணமாயிருக்கும். இப்படிப்பட்ட சாரம் குடலுக்குள் சென்று குடலிலேயுள்ள வெள்ளை ரசத்தை வெளியே தள்ளும். அல்லாமலும் நரம்புகளினுடைய தன்மையோ, ஒவ்வொரு மாங்காய்வழியாய் ஒவ்வொரு பெரியதாது ஓடுகிறது. அதிலேயுண்டான இரத்தம் மாங்காயிலே வடிகட்டப்பட்டு அதுதான் சிறுநீராய் இரண்டு தாரை வழியாக மூத்திரப் பையிலேவிழும் இப்படிப்பட்ட ஆச்சரியமான அமைப்புகளையெ

ல்லாம் என்னுள் ளடக்கிக் கொண்டிருப்பதுமன்றி, சுரணை நரம்புகளில் வெய்யில் பனிமழை தூரிகாற்று முதலானவைகளை ஸ்பரித்தால் உணர்ந்து தேகத்திக்கு யாதொரு ஆபத்துவராமல் காப்பாற்றிக்கொண்டு வருகிறேன் இதுவுமன்றி வயிற்றுச் சாமியாகிய நான் இல்லாவிடில் உலகமேயில்லை. எப்படியெனில் என்வயிற்றுக்கு எப்போதும் பசியின்றித் தாராளமாகவும் சுகமாகவும் சத்துவமாகவும சந்தோஷமாகவும் இருந்தால்தான், வாய்பேசும், கண்பார்க்கும், காதுகேள்வியடையும், மூக்குமுகரும், கால்நடக்கும், கைவேலைசெய்யும், தசைகளில்இரத்தபுஷ்டி யுண்டாகும் நரம்புகளுக்கு வலுவுண்டாகும் இந்தத்திமிரினால் காமராஜன் சித்தத்தில குடிகொள்ள சேர்க்கைநடத்திப் பிள்ளைக்குட்டிகளைப்பெறுகிறேன்; உழைக்கிறேன், சம்பாதிக்கிறேன், காப்பாற்றுகிறேன், பேசுகிறேன், கட்டுகிறேன், இடிக்கிறேன். இப்படியே உலகத்தைவிர்த்தி பண்ணிவருகிறேன் நானில்லாவிடில் நாடில்லை நகரில்லை; இராஜா இல்லை, மந்திரி இல்லை; தாயில்லை தந்தையில்லை; குருஇல்லை சிஷியனில்லை, கோவிலில்லை குளமில்லை; கடசியாகச் சொல்லப்போனால் சாமிகூடப் பிழைத்திருக்கிறதற்கு ஏதொரு மார்க்கமுமில்லை. அந்தச் சாமிக்கே இங்கொரு வேலையுமில்லையென்பது தங்கள் திருவுளத்திற்குத் தெரிந்தகாரியம். இப்படியாக மச்சை மேதை சருமம் நரம்பு உதிரம் எலும்பு சுக்கிலம்என்னும் எழுவகை தாதுக்களால் சூழ்ந்து எல்லாவற்றிற்கும் எல்லாம் நானே இருந்து காரியம் நடத்திப்போனாலும் என் சுயமாகவே நானொரு விஷயத்தையும் நடத்தச் சக்தியற்றவன். என்னை எந்த ஒரு சூக்ஷசாரியோ ஆட்டுகிறபடி ஆடுகிறேனேயன்றி மற்றபடியில்லை. ஆகவே இவ்விருவர்கள் வழக்கில் எனக்குயாதொன்றும் தெரியாது. என் ஆண்டவனே என்னைமன்னிக்கவும்.

அரசர்:—சரி; வெகு நீட்டமான பிரசங்கம் உன்னுடையது ஆயினும் காரியத்திற் பசையில்லை, நீபோ, அடுத்தசாக்ஷியாரது? வரட்டும்.

நாவின்(சிங்குவை)சாக்ஷி.

ஆதிமத்தியாந்தரஹித அருட்பெருஞ் சோதியே! ஐயனே! அடியன்பேர் நாவு. நான் உருவத்தில் மூன்றங்குலப் பிரமாணமுள்ளவனாயிருந்தாலும் இவ்வுலகமுழுதும் என்னுள்ளடக்கமாயிருக்கிறது. நானில்லாவிடில் உலகமேயில்லை. "உந்தி விட்டெழுந்த உயிரெனுநாதம் தந்தம் மூக்குத் தலைக்குட் சிக்கி" உதிக்கிற ஒலிவடிவான எழுத்துக்களுக்கு நாவாகிய நான் என்சிறுரூபத்தை மேல் அண்ணத்திலும் தாழ்வாயிலும் பல்விளிம்புகளிலும் சப்தத்துக் கேற்றதுபோல, வெகு வெகு இசைவாக தடித்தும் குறுகியும் வளைந்தும் நீண்டும் அகன்றும் ஒட்டியும்

ஒட்டாமலும் தட்டாமலும் இப்படியாகவெல்லாம் வெகுவெகு பொருத்தமாக ஊடாடி சப்தத்தை எழுத்து வடிவாக்கி அவ்வெழுத்துப் புணர்ச்சியை வார்த்தைகளாக்கிஅவ்வார்த்தைகளைப்பெயர்ச்சொற்களாகவும் வினைச்சொற்களாகவும் பிரயோகித்து அச்சொற்களாலேயே பிரபஞ்சத்தின் பொருட்கள்உள்ளது இல்லாததுமாய்க்காட்டியும்; கிரியாபதம் என்கிறசொற்களால் கட்டளை நீதி சட்டம் தண்டனை ஆளுகை கற்பனை வியவகாரம் உற்பத்தி ரக்ஷிப்பு தீர்மானம் நிச்சயம் ஸ்தாபனம் முதலிய கிரியைகளையெல்லாம் நடத்தியும்வருகிறேன். 'நாவசைய நாடசையும்' என்பதாகநான் அசைந்தால்தான் உள்ளங்களின் இரகசியங்களும் மனோபாவனைகளும், மாற்றங்களும் தோற்றங்களுமெல்லாம் ஒலிவடிவ ன வார்த்தைகளாக ஒருவருக்கொருவர் அறிந்துகொள்ளும்படி விளங்கப்பெறும். இப்படியே வேதபோதனைகளெல்லாம் என்னாலேதான். தேவதோத்திரங்களும் என்னாலேதான். பகவத்கீதைகளும் என்னாலேதான், ஞானிகளின் வாக்குகளும் தத்துவக்காரர்களின் முடிவுரைகளும், இராஜாக்களின் ஆளுகை விதிகளும், புருஷன் மனைவிகளின் வார்த்தைப்பாடுகளும், தாய்தந்தையர்களின் குலாவுதல்களும் என்னாலேதான். சத்தியமிடுதல் சத்திய மறுத்தல் என்னாலேதான். சாந்தவார்த்தை என்னாலேயே; கொடியபேச்சு, தூற்றி இகழ்தல் என்னாலேயே; கோள் குண்டிணி புறங்கூறல் அபதூறுபொய் முதலானவகளெல்லாம் என்னாலேதான். ஒருவரையொருவர் சிநேகிக்கவைத்தலும், ஒருவரோடொருவர் சண்டையிட வைத்தலும் ஒருமதத்தினின்று மற்றொரு மதத்திற் பிரித்தலும், இராஜாக்களோடு இராஜாக்கள் போரிடவைத்தலும், இராஜ்ஜியங்களையே தலைகீழாய்ப்புரட்டிப்போட வைத்தலும் புது இராஜ்ஜியங்களை உற்பத்தியாக்கலும், புதுமதங்களை எழுப்புதலும், எல்லாம் என்னாலேதான். இன்னமும், ஒருவரை ஆசீர்வதிக்கிறதும், இந்த நாவே: ஒருவரைச் சபிக்கிறதும இந்த நாவே, ஒருவரை மரணத்தீர்ப்புக்குள்ளாக்குகிறதும் இந்தநாவே, ஒருவரை தண்டனையினின்று மீட்கிறதும் இந்தநாவே, ஒன்றை நிலைநாட்டுகிறதும். ஒன்றை இல்லையென்றே அடித்துப்போடுகிறதும் இதே நாவே. அல்லாமலும் ஜீவர்களை அன்னாகாராதி உணவுகளால்போஷித்துவருகிறதும் நான் தான், எங்ஙனமெனில்; நாவாகியஎன்னிடத்தில், இனிப்பு கசப்புபுளிப்பு துவர்ப்புஉவர்ப்பு கார்ப்புஎன்னும் அறுசுவையை அறிந்துகொள்ளக்கூடிய சுபாவம்இருக்கிறதோடுகூடஎன் உருவமைப்பின் மேல்நாக்கில் நீர் ஊறும்ஜவ்வு மூடப்பட்டும், நாக்கடு என்னும் சிறுசிறு கூரானமுட்கள் பொருந்தியும் இருப்பதினால் அவை ஜீவர்கள் உண்ணும்உணவுகளை அருவிநீரென்னும் உமிழ்நீரைக்கொண்டு ஜீரணிக்கச் செய்து வருகிறேன். இதுமாத்திரமேயல்ல, சில ஜீவன்களை நாவாகிய நானே தேகசுத்த

மூண்டாக்கியும், பிணி நோக்காடு முதலியன தவிர்த்தும் வருகி றேன். எப்படியெனில். பூனை, நாய், மாடு' குதிரை சிங்கம், ஒட் டை முதலான பலவித மிருகங்கள் தேகத்தின் அழுக்கு, அல்லது நமை முதலியதை நாவினால் நக்கியும் உராய்ந்து தேய்த்தும் தங்க ளைச் சுத்தப்படுத்திக்கொள்ளுகிறதுமன்றி காயம் நோக்காடுமுத லியன உள்ளவிடங்களிலும் அவைகள் தம் நாவினால் சுரண்டியு ம் ஒத்தடங்கொடுத்தும் அக்கஷ்டத்தைச் சாந்திப்படுத்திக் கொ ள்ளுகின்றன. அன்றியும் அம்மிருகங்கள் தம் குட்டிகுழந்தைக ளை நாவினால் நக்கி நக்கி அதுகளின் அன்பைக்காட்டியும் கொள் ளுகின்றன. இதுமாத்திரமோ, மானிடர் தங்களைத் தாங்களே கெ டுத்துக்கொள்ளுகிறதற்குங்கூட நானே காரணமாயிருக்கிறேன். நாவைக்காவாதவன் தன்னைச் கெடுத்துக்கொள்ளுகிறானென்று', ஒரு யூதஞானியும்; 'யாகாவாராயினும்'நகாக்கஎன்று இந்துஞானி யும் சொல்லியிருக்கிறபடி என்மட்டில் வெகு ஜாக்கிரதையைக் க ற்பிக்கப்பட்டிருக்கிறது இதற்காகத்தானே (பற்களென்னும் 32-கடுமையான போர்வீரர்களை எனக்குக் காவல்போட்டுச்சிறை யுள் அடைத்துவைத்திருக்கிறது. இவ்வளவு மகத்துவமெல்லாம் நான் பெற்றிருந்தும் என் ஆண்டவனே! நான் ஒரு சிறிய சதைத் துண்டுதான். என்னை நானே இயக்கிக்கொள்ள எனக்கு யாதொ ரு சக்தியுமின்றி யாரோ என்னை ஆட்டுகிறபடியெல்லாம் நான் ஆ டுகிறதால், இந்தஆத்துமநாதன், சாரீரகன் வழக்கில் ஏதொரு ச ங்கதியும் எனக்குத் தெரியாது மன்னிக்கவும்.

அரசர்:—அப்படியா, நல்லது நீயும்போய்தூரநில்; அடுத்தசாக்ஷி யார் வரச்சொல்.

கண்ணின் (சட்சு) சாக்ஷி.

"அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரே, அக்ஷயரே, வந் தனம். அடியன்பேர் கண் (நாங்கள் இரட்டைப்பிள்ளைகளா யிரு நதாலும் ஒருமைப்பேரால் வழங்கப்படுகிறது)கண்ணாகிய நான் உலகத்திற்கு வெகு பிரயோஜனமானவன் கண் மகா அருமையா னதும் பூச்சியமாகக் கொள்ளப்படத் தக்கதுமாயிருக்கிறது. கண் ணை வெகு அருமையாய்ப் போற்றாதவர்களும், அதைப் புகழாத வர்களும் உலகத்தில் யாருமில்லை கண் வெகு உச்சிதமானதென் றுதான் அங்கவுறுப்பினிடத்து இதற்கும் உயர்த்தியானது வேறி ல்லையென்று கண்ணையே ஒப்பனைக்காட்டி 'கண்ணே! என்கண்ணி ன்மணியே" என்று கடவுளை துதிக்கிறதற்கும் 'என் அருமைக் க ண்மணியே' என்று மக்களை அன்போடழைக்கிறதற்கும், 'அடி என்கண்ணுட்டி'யென்று அன்புள்ள மனைவியரைக் கூப்பிடுகிறத ற்கும், 'கண்ணுக்குக்கண்ணாய்ப் பாவிக்கிறேன்' என்று ஒருவர் மீதுள்ள பற்றுதலைப்பூரித்துப்பேசுகிறதற்கும் இப்படிப்பட்ட அ

ருமைவிஷயங்களுக்கெல்லாம் கண்ணையே விசேஷமாய் எடுத்துக் கொள்ளுகிறதாயிருக்கிறது. அல்லாமலும் கண்ணானது வெகு உயர்வுபெற்றதென்றுதான் ஞானத்திற்கும் கல்விக்கும்கூட கண்ணை ஒப்பிட்டு கண்ணுடையரென்போர் கற்றோர்' என்றும். எண்ணும எழுத்தும் கண்ணெனத்தகும்' என்றும் 'கண்ணில்லாக் குழவி போல'என்றும் பெரியோர்களெல்லாம் அதைப் பெருமைபடுத்திப்பேசியிருக்கிறார்கள். கண்ணாகிய நான் மனிதர்களுக்கு வெகு அருமையானவனாயிருக்கிறபடியாலேயே விலையேறப்பெற்ற மாணிக்கத்தைத் தங்கப்பெட்டியில் வைத்து பத்திரம் பண்ணி வைத்திருப்பதுபோல முகத்தின் உயர்ந்த பாகத்தில் பெட்டியைப்போன்ற கண்குழியை யமைத்து அதற்கு வெகு காவலாக இரு கதவுகளைப்போன்றஇரப்பைகளையும் இவ்விரப்பைகளின் ஓரத்தில் தூசுபோக்கும் விசிரிபோன்றமயிர்ச்சரங்களையும் இணைத்து அதின்நடுவிலே வெகு கண்சாணிப்பாய் அமைத்து வைக்கப்பெற்றிருக்கிறேன் இந்தக்கதவுகளாகிய இரப்பைகளின் தன்மை யென்னவென்றாலோ, கண்ணின்,மேல் இரப்பைப் பெரியதும் கீழ் இரப்பைச் சிறியதமாய் இருக்கின்றன. அதேனென்றால் கண்ணுக்கு ஆபத்து நேரிடாமற்படிக் குச்சிறிய, இரப்பையானது தான், அடுத்தடுத்துக் கிளம்பி பெரிய இரப்பையைப் போய்த்தீண்டி அதைச்சட்டென மூடித்திறக்கச்செய்யும்; அப்படி மூடித்திறக்கிற செய்கை அவைகளுக்கு எந்நேரமும் வேலையாயிருக்கின்றன. இப்படியாகச் செய்வதில் பலவித அநுகூலங்கள் காணப்படுகின்றன. அதாவது கண்ணுக்கு மோசம் வராமல் காப்பதொன்று, கண்ணில் படும் அழுக்குகளை அப்போதைக்கப்போது துடைத்து ஓர் மூலையில் ஒதுக்கித் தள்ளுவதொன்று. மற்றொன்றென்னவெனில் இரப்பை அப்படி சட்டுச் சட்டென மூடித்திறவாமல் சற்றுநேரம் கண்திறந்தபடியேயிருந்தால் கண்ணொளியின்சூடானது, கண்ணில் எரிச்சலைக்கொடுத்து சற்றுநேரத்துக்குள் (கண் எப்போதும் குளிர்ச்சிபட்டிருக்கும் வண்ணம் உள்ளமைப்பில் வைத்திருக்கும் ஜலாசயத்திலிருக்கிற) கண்ணின் தண்ணீரை கரகரவென வெளியிலே கொண்டுவந்து விடுகிறதுமன்றி கண்ணெரிச்சலும்கொடுக்கும் ஆனதுகொண்டே அப்படி நேராதிருக்க இரப்பைகள் சடுக்குச்சடுக்கெனமூடி அந்த ஜலத்திற்குக் குளிர்ச்சியை உண்டாக்குகிறது இவ்வளவு காபந்தாய் இக்கண்ணை வெகு உசிதமாகப் போற்றும்படியான தன்மையில்வைத்து இருக்கிறது. என் அருமை இவ்வளவிலிருக்க என் தொழிலும் வெகு ஆச்சரியமானதுதான். எப்படியெனில் உள் அந்தரங்கத்தின் தன்மையெல்லாம் கண்ணாகிய நான் வெகு தெளிவாக வெளியில் காட்டுகிறேன். ஒருவர்மீது மனதில் இரக்கங் கொண்டால் அவ்விரக்கம் கண்ணில் நன்றாய்க்காட்டும் அதற்கு'கி

ருபாநோக்கம்’ என்று சொல்லுகிறார்கள். கிருபாகடாட்சமென்
று சொல்லுகிறதற்கு அர்த்த மென்னவெனில்: கிருபை இரக்கம்,
கடை=கடைசி; அட்சி=கண்’ அதாவது ,:கபவுநிறைந்த கடைக்
கண் பார்வை, என்று சொல்வது ஏனெனில் நேர்பார்வையானது
இரக்கத்திற்கு அடையாளத்தைக் காட்டாது. மையக்கருவிழி
யானது கண்ணின் ஒருஓரத்தில் ஒதுங்கினால்தான் இரக்கத்தி
ன் அடையாளத்தைக் காட்டும். ஆனதுகொண்டே கடாட்சமென்
பது. அப்படியே ஒருவர்மீது அடங்காக்கோப முண்டாயின் அ
கையும் கண் வெகு தீர்க்கமாய்க் காட்டிவிடுகிறது அந்நேரத்தில்க
ண்களில் அக்கினிப்பொறி பறப்பதுபோல் உக்கிர கடூரமாய்தோ
ற்ற ,,இது கோபப்பார்வைஎன்றுஎதிரி அறிந்து நடுநடுங்கிப்போ
கிறான். இப்படியாக உள்ளத்தின் தன்மையை நான்தான் விளக்கு
கிறேன் அல்லாமலும் ஒருவரை யொருவர் சிநேகிக்க விரும்பும்
போதும் அல்லது ஒருவரிடம் யாசகம்பெற வந்தபோதும் அல்ல
து ஒருதேக சகாயம்’ வாக்குச்சகாயம் முதலியவைகளைக் கேட்டு
க்கொள்ளவந்தபோதும் அப்படி வருகிறவர்கள் முதலாவது அவ
ர்கள் கண்களைத் தான் நோக்குகிறார்கள். இவனுடையது நல்லபா
ர்வையாயிருந்தால் அவர்கள் நினைத்து வந்ததை ஏதும் சங்கையி
ன்றித் தாராளமாய்க் கேட்டுக்கொள்ளுவதுமன்றி அவர்களகோ
றிவந்தது கிடைத்தும் விடுகிறதால், அந்த ஐயாவுடைய பார்
வை மகாநல்ல பார்வை என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள இப்
படியே பார்வையில் வெகு விசேஷமெல்லாமிருக்கிறன. திருட்டு
ப்பார்வை’கூர்ந்தபார்வை’மோகப்பார்வை’கெட்டபார்வை கீழ்க
ண்பார்வை ,கெடுமதிப்பார்வை’முதலானவைகளெல்லாம் இந்தக்
கண்ணினிடத்தே விளங்கிவிடுகின்றன. ஒருவன் தேக முழுவதையு
ம் கண்ணாகிய நானேகாப்பாற்றுகிறேன்· எனவே’கண்மிகபிரயோ
ஜனமுள்ளது. ஆ! கண்ணிழந்தவர்கள் உலகத்தில் என்ன நிர்ப்பா
க்கியர்கள் அவர்கள் பூமியில் நடைபிணந்தானே. அவர்களுள்ள
மென்னபரிதாபத்தில் நிறைந்திருக்கிறது. அவர்கள் உலகத்தின்
பொருட்களை காணக்கூடாமல் அதற்காக என்னென்ன சிந்தனை
பண்ணிப் பெருமூச்சு விடுகிறார்கள் அவர்களுக்கு உலகம் இல்லா
மலிருக்கிறதே! ஆம் மெய்யாகவே கண்ணிருந்தால்தான் உலகமி
த்தன்மையதென்றும் அதின் இன்பதுன்பங்கள்இ வ்விதமென்றும
தெரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது. இதற்காகத்தானே ஒ
ருவருக்கொருவர் சாபமிடும்போது ,உன் கண்ணவிந்துபோக எ
ன்றால் அதனால் மெத்தகோபம் பிறந்துவிடுகிறது! ஏனெனில்க
ண் அவ்வளவு உபயோகமான உறுப்பானதால்தான். இவ்வளவா
ன நான் ஒரு சிறிய அளவுள்ள அங்க உறுப்பும்,என்னை நானே
யியக்கிக்கொள்ள சக்தியற்றவனுமாய், என்னை யாரோஒருவர் தூ
ண்டுவதுபோல நான் நடப்பதால் இவ்வழக்கில் எனக்கொன்று

மேதெரியாது என்னை.மன்னித்தருளவும்.

அரசர். —சரி அந்தமட்டும் நீ மெத்த கெட்டிக்காரன்
தான்; அப்புறம்போய் நில்' அடுத்தசாக்ஷி வரச்சொல்

மூக்கின் (ஆக்ராணம்) சாக்ஷி.

"அகில புவன சராசரங்களை யெல்லாம் ஆட்சிபுரியும்
அண்ணலே' அமலரே' என்பெயர் மூக்கு.நானில்லாமற்போனால்
ஜீவர்களுக்குப்பிராணன் என்கிற குறிப்பே கிடையாது நானின்
றி ஒரு ஜீவ ப்பிராணியும் ஜீவிக்காது. ஒவ்வொரு ஜடத்திலும்.
பிராணன் இருக்கின்றதென்பதும் இல்லையென்பதும் என்னால்
தான் தெரியவரும் தாயின் கருப்பாசயத்தினின்று சிசு வெளிப்
பட்டவுடனே முதல் முதல் நான்தான் ஆகாயத்தை அதின் சுவா
சப்பைக்கு கொண்டுபோகிறேன். அதிலிருந்து அந்தந்த ஜடலத்
தினிடத்தும் இரவும்பகலும் நான் என்தொழிலை நடத்திக்கொண்
டே யிருந்தால் தான் அவர்களுக்கும் உயிரிருக்கிறதென்கிற நம்பி
க்கையுண்டு. இதனால் மானிடர்களுக்கெல்லாம் என்மேல் மெத்த
மதிப்பு ஒவ்வொருவர் சாகிற தருணத்தில் கூட மூக்காகிய என்
னண்டை கையைக் கொண்டுவந்து வைத்துவைத்துப் பார்த்துக்
கொஞ்சம்தைரியமும்' கொஞ்சம் சந்தேகமும் பட்டுக் கொள்ளு
கிறதுவழக்கம். இப்படி நான்எந்நேரமும் மூச்சை வெளியில் வி
ட்டுக்கொண்டும் உள்ளுக் கிழுத்துக்கொண்டும் இருக்கிறதானது
உயிரிருக்கிறதெனனும் உண்மையைக் காட்டுகிறதற்குமாத்திர ம
ல்ல ஜீவர்களைக் காப்பாற்றுகிற ஒரு தொழிலையும் அதுகொண்டு
நடத்துகிறேன் அதாவது மனுஷர்களிடத்திலுள்ள கரியமில வா
யு அவர்களினின்று தினமும் வெளிப்பட்டு போய்விட்டால்மனு
ஷர்கள் அவ்விஷ வாயுவினாலேயே உடனுக்குடனே மாண்டுபோ
வர். ஆனதுகொண்டு அக்கரியமில வாயுவை எந்தநேரமும், வெ
ளியே கொண்டுவந்து அதை தாவரவர்க்கங்களாகிய கொடி செடி
இலை தழை முதலானவைகளுக்கு ஆகாரமாய்க் கொடுத்து, அச்
செடிகளினின்று புறப்படும் பிராணவாயுவை இழுத்துஜீவர்களுக்
கு உட்செலுத்திப்பிழைக்கவைத்துக்கொண்டுவருகிறேன்.இது ஜீ
வர்களைக் காப்பாற்றி வருகிற ஒருபெரியவேலையும மெத்த ஆச்ச
ரியமானது மல்லவா? இதுவுமன்றி மூக்கு என்கிற என் உருவல
ட்சணமானது வெளிக்கு ஒரு அங்குல அளவாய்ச்சிறிய இருது
வாரமுடைத்ததாய்க் காணப்பட்டாலும்- நாசியானது மூக்கிலிரு
ந்து அண்ணத்திற்குமேலே வலமிடமாய்த் தொண்டைவரைக்கும்
நீண்டு சென்று உள்ளேவிரிந்த இரண்டுகுழாய்களுடைத்தாயிருக்
கின்றன. அங்கு கந்தம்என்னும் இருவிதநாற்ற அணுக்களை மூளை
க்குச்செல்லவைக்க நாசி ஜவ்வும் அதனிடம் நாற்றநரம்பு கூந்தல்
களும் செறிந்திருக்கிறன. இந்தப்புலமை நரம்பு கூந்தல்களை நற்
கந்தம் துர்க்கந்தங்களை அறிந்து உணவுகளை உட்கொள்ளவும் வெ

மூக்குக் கள்ளிவிடவும் செய்கின்றன. இதற்காகவே மூக்கரிய என்னை வாய்க்குமேல் அதற்கடுத்தாப்போலவே ஏற்படுத்தி வைத்திருக்கிறது. இம்மட்டுமாத்திர மல்ல, இன்னும்: என் கந்தத்தொழிலைக்கொண்டு இருட்டுகாலங்களில் மிருகங்கள் தம் தம் இனத்தையும் அல்லது தம் எஜமானர்களையும் முகர்ந்துமோப்பம்பிடித்து அறிந்துகொள்ளவும், ஸ்திரீகள் தம் சொந்தபுருஷரையும், புருஷர் தம் சொந்த மனைவியரையும் வாசனையாலறிந்துகொள்ளவுமான அருமையான தொழிலை நிறைவேற்றுகிறேன். (இவ்வனுபவம் தெரிந்த ஸ்திரீ புருஷர் இதை இல்லையென்று சொல்லமாட்டார்கள்.) ஏனெனில் மனிதர்களில் பலவிதஜாதிகளுண்டு. ஒருவித ஸ்திரீகளிடம் செந்தாமரைவர்சம் பரிமளித்திருக்கும்; ஒருவித ஸ்திரீகள் மீது முடைநாற்றம் வியாபித்திருக்கும்: மற்றொருவிதத்தார் மீது மிருகநாற்றம் அடிக்கும், சிலர்மீதுபச்சைபயிறுநாற்றம் வீசும் சிலர்மீது கொக்குச்சதைநாற்றக் கவுச்சியடிக்கும் புருஷர்களுக்கும் அப்படியே நாற்றமுண்டு. இந்த நாற்றக்கிரகிப்பு அந்தசதிபதிகளுக்குத்தான் தெரிந்திருக்குமாதலால், இதுகொண்டு ஒருவரையொருவர் வாசனையால் கண்டுபிடித்துக் கொள்ளுகிறார்கள்.) இப்படி ஜீவர்களைக் காப்பாற்றுகிறதும் தெரிந்துகொள்ள வைக்கிறதுமான பிரயோஜனத்தொழிலை நானே நடத்துகிறேன் இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக இன்னொரு பெரியகாரியத்தையும் நான் நடத்துகிறதைக் கேளுங்கள் சரம் பார்த்தல் என்கிற சாஸ்திர முறைப்படி பிராணிகளுடைய தேகத்தின் அந்தர் தத்துவத்தின் மூலாதாரத்தில் உற்பத்தியாகி ஸ்வாதிஷ்டானாதி ஐந்துஸ்தான சக்கரங்களிலும் பிரிதிவு அப்பு தேயுவாயு ஆகாஸ என்கிற பஞ்சபூதங்களிலும் சஞ்சரித்து, சூரிய சந்திர அக்கினியென்ற மூன்றுமண்டலங்கள் வரையில் வியாபித்து வருகிற இடாபிங்களாசுஷும்ணா என்கிற அக்கினி சந்திர சூரிய சரமானது எந்தெந்த நேரங்களில் எதெதுபாய்கின்றதென்று மூக்கண்ணடைக் கை வைத்துப்பார்த்து அவரவர்களுக்குநேரிடப்போகும் ஆபத்து துக்கம் சந்தோஷம் பிணி நஷ்டம் மரணம் முதலானவைகளை அவரவர்களே தெரிந்துகொள்ளும்படி செய்கிற அங்கப் பெரி தெய்வதத்வமான வேலையையும் நான் என்னில் நடத்துகிறேன் இங்ஙனமான தொழிலெல்லாம் நான் நடத்திவந்தபோதினும். என்னில் நானே நடத்துகிற வல்லமை எனக்கில்லை. என்னையும் யாரோ ஒருவர் இருந்துகொண்டுதான் இவ்வேலையெல்லாம் செய்விக்கிறார்; ஆனதுபற்றி இந்த ஆத்துமசரீரவழக்கில் எனக்குஒன்றுமே தெரியாது. பொருத்தருளும் ஆண்டவனே!,

அரசர்:—நீயும்மெத்த கெட்டிக்காரன் தான். தூரப்போய் நில், அடுத்த சாக்ஷி ஆர்?

செவி (ஸ்ரோத்ரம்) சாக்ஷி

"நித்தியாந்த நிர்மல நிருபனே; நிஷ்களங்கவடிவே! அடியயன்பேர் காது. தங்கள் சமுகத்தில் இப்போது நான் ஒருமையில் பேசுகிறதாய்க் காணப்பட்டாலும் என்சகோதரனொருவனும் என் கூடவே இருக்கிறான். நாங்கள் இரட்டைப்பிள்ளைகள். இருவரும் ஒரேவிதமாயிருப்பதினால் எங்களில்பன்மைகிடையாமல் ஒருமையாகவே வழங்கப்படுகிறோம். என் ஆண்டவனே நான் வெகு பிரமாண்டமானவன் இப்பிரபஞ்சசிருஷ்டிப்பின் மூலபுருஷனை விராட்புருஷனுக்குத் திக்குகளே காதாக அமைந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு தென்கிழக்கு தென்மேற்கு வடகிழக்கு வடமேற்குஎன்னும் அஷ்டதிக்குகளும் என்னுடையசார்பே. எங்ஙனமெனில் ஒருமனிதன் கண்ணுக் கெட்டியதூரம் எவ்வளவோ, அதுவேதான் அவனுக்குத்திகாந்தமாய்த்தோணுகிறது அப்படியிருக்க அவன்வாய்சத்தமானது வெளிப்பட்டவுடனே அதுகாற்றினால்சிறியவளைவு போலாகி அப்படிச் சிறியவளைவிலிருந்து படிப்படியே பெரியதாய் அதற்கும்பெரியதாய், அதற்கும் பெரிதாய். அதன்மேலும்: பெரிதாய் சுழன்று சுழன்று வட்டமிட்டுவியாபித்து மீள அச்சத்தம் தன் காதுக்கே கொண்டுவரப்படுகிறது. இதற்குள் அதாவது, அவன் வாயினின்று பிறந்த சப்தம் அவன் காதுக்கு கேட்கிறதற்குள் அவன்கண்ணுக்கெட்டிய தூரமான திசைவரையில், சென்று வந்து விட்டதாக கொள்ளவேண்டும். அந்தச்சப்தம் தனக்குத்தானே கேட்டுக்கொள்ளுகிறது இயல்பாயினும் கேள்விக்கருவியால் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ளநேர்ந்தால் எத்தனையோ காததூரத்திற்கு ஒருவருக்கொருவர் கேட்டுப்பேசி அறிந்து கொள்ளுகிறார்கள் இன்னொருசிறிய திருஷ்டாந்தரம் சொல்லுகிறேன்; சில அரைச்செவிடர்கள் கோவில்களிலும் பிரசங்காலயங்களிலும் பிரசங்கிகளினுடைய வார்த்தையை கிரகித்தகொள்ள ஒரு உபாயஞ்செய்கிறார்கள், அதாவது தங்கள் கையிலுள்ள தடிகளையாவது தொப்பிகளின் ஓரத்தையாவது தங்கள் பல்லில் கடித்திருக்கிறது. அப்படிகடித்திருப்பதில் பிரசங்கியின்சப்தம் அத்தடியில்பட்டு தடிமூலமாய்த் தன்பல்லில் படவும் பல்லுக்கும் செவிப்புலனுக்கும் நரம்பசப்பந்தமிருப்பதால் வெகுதெளிவாய்ச்சப்தம் கேட்கிறதை அறிந்துகொள்ளுகிறார்கள் ஆனால் இது முழுசெவிடருக்கில்லை, அன்றியும் உலகமேகேள்விமயம். கேள்வி செவிப்புலனினுடையது, கேள்வியால் ஒருவன் அறிந்து கொளளாதவனாயிருந்தால் பிரபஞ்சத்தின்வஸ்துகள் என்னவொன்றும் அவை என்னென்னபேருடைத்தனவென்றும், முதலாவது கடவுள் என்றபேர் தானுமேதெரியாதவனாய் போகிறான். அப்போது உலகம் அவனுள்வியாபிக்கிறதில்லை. அதாவது இந்தபொருளுக்கு இ

ந்தப்பேர் என்று சொல்லக் கூடியவனு யில்லாமற் போகிறுன். ஆனல் கட்புலனுல் பார்த்து இன்னின்ன பொருள் இன்னின்ன உபயோகத்திற் குரியது என்று அனுபவத்தில் தெரிந்துகொண்டு வந்தாலும் அவனதை ஒலிவடிவாய்ச் சொல்லிக் காட்டக்கூடாதவனுய்ப் போகிறுன். இதனல் உலகம் கேள்வியா யிருப்பதுகொண்டு, நானே உலகமாயிருக்கிறேன் என் உருவெல்லாம் கூடி ஒரு சிறிய ரந்தரம். அந்த ரந்தரத்தின் முகிவிலே ஆனகம் என்கிற ஒரு மெல்லிய ஜவ்வு விரிந்திருக்கிறது. அதைத்தான் பறையென்றும் சொல்லுகிறது. அப் பறையைத் தாண்டி ஒரு சிறிய கெபியுண்டு, அதிலே ஆகாயம் நிறைந்திருக்கிறது, இந்த ஆகாயத்தின் தன்மைதான் உள்பேச்சை உள்ளுக்கே கேட்க வைக்கிறது. அதாவது, சப்தம் அந்த ஜவ்வில் அடிப்பட, அந்த மேளத்தின்மீது கேள்வி நரம்புகளாகிய கூந்தல்சள் நீரின்மீது நீந்திக்கொண் டிருப்பதுபோல நீந்தி யிருப்பதினுல் சப்தம் இயங்கி வார்த்தையாய் உருட்படுகிறது. இப்படிப்பட்ட நானில்லாவிட்டால், கல்வி கேள்வியில்லை, சாஸ்திர உணர்ச்சியில்லை. சங்கீத சாஹித்யமில்லை. அதனல் மனதிற்கு உற்சாகம் சந்தோஷமில்லை. அவ்வுற்சாகத்தால் சரீரம் சுகமடைகிற ஒரு ஏதுவுமில்லை; துக்க ஓசையுமில்லை; சந்தோஷ கீதமுமில்லை. கடைசியாக இரசசியமுமில்லை; பராசியமுமில்லை. இவ்வளவான தன்மையைக் கொண்ட நான் என்னை நானே இயச்கிக்கொள்ளும் சக்தி யற்றவனு யிருக்கிறேனென்றும் யாரோதான் என்னை நடத்துகிறுர்களென்றும் உமது திருவுளத்திற்கு நன்றுய்த் தெரியுமாதலால் இந்த வழக்கில் எனக்கு யாதொன்றும் தெரியாது. என்னை க்ஷமிக்கவேண்டும் என் ஐயனே!''

அரசர்:—சரி நீயும் விலகிப்போய் நில், அடுத்தசாக்ஷி யாரது?

பஞ்சாயத்தார்:—அரசே! முன்னே வந்துபோன மெய்வாய் கண் மூக்கு செவி என்கிற ஐந்து பொறி யென்னும் ஞானேந்திரியங்களும் ஒரு ஜதைக்கராகள். இப்போது வரப்போகிறவர்களும் அவர்களைப் போலவே, சத்த ஸ்பரிச ரூப ரசகந்தம் என்னும் ஐவரும் ஞானவிஷயம் அல்லது புலன் என்கிற பேர்படைத்த ஒரே ஜமைக்காரர்கள். இவர்களே அவர்களுக்குக் காரியஸ்தரா யிருக்கிறவர்கள்.

அரசர்:—அப்படியானல் ஞான விஷயங்களாகிய புலனுளிகளே, ஐவரும் வரிசையாய் நில்லுங்கள்!

சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், சாக்ஷிகூறல்.

சத்தம்

அருள்மூர்த்தி நாதனே! அடியேன்பேர் சத்தம்! நான் ஆகாய பூதத்தினுடைய ஒரே குணத்தைப் பெற்றவன். என் இருப்

பிடம் உட்செவியின் ஆனகம் என்னும் ஜவ்வுக்கும் பின் தொண்டைக்கும் நடுவில் என் தொழில், சத்த நரம்பு வழியாய்ச் சத்தத்தைபிறப்பிக்கிறதும் செவிவழியாய் சத்தத்தை வாங்குகிறதும் தான் ஆனாலும் நான் செவிக்கேதான் உயிர்க்கூறு மற்றபடி என் உடந்தையாகிய காது முன்னே சாக்ஷிபகர்ந்த எல்லா செய்கைகளும் என்னைக் கொண்டுதான் அவன் நடத்துகிறான் நானில்லாவிட்டால் அவனால் ஒன்றும் முடியாது. என்றாலும், நானும் செவிப்புலமைநரம்பின் தன்மைபெற்றவனேயன்றி என் சுயமாய் நானொன்றும்செய்ய சக்தியற்றவன். என்னை எவராட்டுகிறாரென்று எனக்கே தெரியாது. எனவே இந்த வழக்கில் நானொன்றுமறியேன் மன்னிக்கவும்.

பரிசம்.

ஆனந்தவடிவான என் அரசே! அடியன்பேர் ஸ்பரிசம், ஸ்பரிசமென்றால் ஊறு, அல்லது உணர்ச்சி. நான் வாயு பூதத்தின் சத்தஸ்பரிஸமென்னும் இரண்டு குணங்களில் ஸ்பரிஸ உணர்ச்சியைமாத்திரம்பெற்றவன். நானும் உலகத்தில் விசேஷமானவன்தான். எப்படியெனில், நானில்லாமற்போனால் தொக்கு என்னும் மனுஷருடைய சரீரம் வீணே உணர்ச்சிகெட்டழிந்துபோகும். நெருப்புச் சுடுகிறதென்றுதெரியாமல் அதிலே வெந்துபொசுங்க நேரிடும். தண்ணீர் குளுமையென்றுதெரியாமல் அதிலே சிலிர்த்துவெளுத்துச்சாக முடியும், காற்றை அளவுதெரியாமல் சுவாசித்துத் தடியடிபோன்ற நோக்காடடைந்து சாக நேரிடும்; தடிப்பும் சுரசுரப்பும், கனதியுமான பொருட்களின் தன்மைதெரியாமல் அதில்தேய்ந்து, அல்லது அழுந்திச்சாக நேரிடும்; மெல்லிய சிசுக்கள் அல்லது ஸ்திரீகளின்மிருது தேகத்தன்மை தெரியாமல் அவர்கள்மேல் அழுந்திச் சாகவைக்கநேரிடும். முக்கியம் உள்ளுறுப்புநோய்களின் அளவும் அதன்நோக்காட்டுத்தன்மையும் தெரிபவராமல் பிணியை வளர்த்திக்கொண்டு சாகநேரிடும். இவைகளெல்லாவற்றையும் பார்க்க தேசக் தோல்மீதுள்ள வேர்வைத்துளைகளில் வியர்வை வெளிப்படுவதினாலே அன்றாடம் தேகப்பிணி அற்றுவருவதின் பிரயோசனந் தெரிந்துகொள்ளாமல் வீணே மானுஷ்யர்கள் அழிந்து போகிறதும் உண்டு. இப்படிப்பட்டதையெல்லாம் தெரிந்துநடத்தும் இந்தப்பெரிய பிரயோஜனம் என்னால் நிறைவேறுகிறது. அல்லாமலும் முன்னே சாக்ஷி சொன்ன, மெய் என்னும் தொக்கு எடுத்துக்காட்டிய வல்லமையெல்லாம் என்னால்தான் உண்டாகிறதேயன்றி அவனால் ஒன்றும் ஆகிறதில்லையாதலால், நான்தான் உடலுக்கு உயிர்க்கூறு. நான்தான் உணருகிறவனும் உணர்த்துகிறவனும் ஆனாலும் என்னுடைய இருப்பிடமெல்லாங் கூடி சரணைநரம்புகளின் கூந்தலினிடத்திலேதான். அதுமட்டுமே நான் வ்யாபகனானதால், நான் செய்வ

து என் சுயேச்சையாகவே செய்கிறேனென்று எனக்குத்தெரியவில்லை. எனக்கு அந்தச் சக்தியில்லவே யில்லை. யாரோ ஒருவரிருந்துகொண்டுதான் என்னை நடத்துகிறார். ஆகவே இந்தவழக்கில் எனக்கு யாதொன்றும் தெரியாது. என் மன்னவரே என்னை மன்னிக்கவேண்டும்.

ரூபம்.

இறையவர்கோனே, எழில்பெருமானே; அடியன்பேர் ரூபம் நான் சத்த ஸ்பரிச ரூபமென்னும் மூன்று குணங்கள் பொருந்திய, தேயுவினுடைய ஒரு அம்ஸமாகிய ஒளியைப்பொருந்தியவன். நானில்லாவிட்டால் உலகம் இஃதிஃதால் நிறைந்துள்ளது என்றுதெரிந்துகொள்ளவே முடியாது; நான்தான் ஒவ்வொரு வஸ்துவையும் படம்பிடித்ததுபோல ரூபமாய்க் கவர்ந்திழுத்து அப்படியே அறிவுக்குக் கொண்டுபோய்க் காட்டுகிறேன். பிரபஞ்சத்தின் எல்லா ஜீவப்பிராணிகளிலும் மனுஷனே சிரேஷ்டம் என்கிற ஒரு மகிமைபாவது ரூபமென்கிற என் ஒரு சக்தியின் தன்மையால்தான் விளங்குகிறது. எங்ஙனமெனில் தாழ்ந்த எல்லாஜீவன்களும் மனுஷனுக்குப் பயந்தும் அடிமைப்பட்டும்போகிற வழக்கமுண்டாயிருக்கிற தெதினாலென்றால், எல்லா ஜீவராசிகளுக்கும் கண்ணிருந்தும் மனுஷர் கண்ணில்மாத்திரம் எதிர்ப்பட்ட பொருட்களை அப்படியே இழுத்துப் பிரதி பிம்பித்துக் காட்டுகிற ஒரு சக்தி யிருக்கிறதினாலேதான். மற்றவைகட்கெல்லாம அந்த சக்தியில்லவேயில்லை. அந்தப் பிரதி பிம்ப சக்தியின் வல்லமை எதோ ஒரு சூட்சமா யிருப்பதினால், அதுதெரிந்த மகான்களுக்குத்தான் தெரியும். இதற்காகத்தானே

> "சுவை யொளி யூறோசை நா றமென் றைந்தின்
> வகைதெரிவான் கண்ணே யுலகு"

என்று பெரியோர் கூறியுள்ளார். அல்லாமலும் இந்தக் கண்ணொளியின் சக்தி மாக ரகசியமான செயல்களெல்லாம் செய்கிறது. அதாவது ஒருவர் சாப்பிடுவதை ஒருவர் சமீபத்தில் ஊன்றிப்பார்த்திருந்தால் அச்சாதம் விஷமப்படுகிறது இதனால் சாதத்திற்கும் கண்ணொளிக்கும் என்னமோ கவர்ச்சி சக்தியிருக்கிறதென்னலாம் உதாரணமாக், கண்ணோயுள்ளவர்களுக்குச் சோற்றை ஒத்தடம்கொடுப்பதினால் தெரிந்துகொள்ளலாம். இப்படியேஒருவர் நன்றாய் உடுத்திக்கொண்டாவது பொன்னாபரணங்கள் பூட்டிக்கொண்டாவது, அல்லது நன்றாய்ப் பிரசங்கித்தாலாவது, பாடினாலாவாதுவிளங்கினால் இன்னொருவனுடைய கண் அவர்களை ஊன்றிப்பார்க்க அதனால் கண் திருஷ்டிப்பட்டு வருந்துவதைக் கேள்விப்பட்டிருக்கலாம். இதுவும் என் ஒளிஉருவ சக்தியே, இன்னமும் ஒரு அன்னியபுருஷனை ஒருஸ்திரீ கண்ணால் மயக்கினாளென்பதும், ஒருகன்னிகையை ஒருபால்யன் கண்ணால் வசிய

மிட்டானென்பதும் கேள்விப்படுகிறோம். இதுவுமென்ன? கண்ணினின்றெழும் ஒருவித சுவர்ச்சி சக்தியே. இப்படி கண்ணொளியில் வெகுமகிமையிருப்பதினால்தான் ஜெபம்செய்யும்போதாவது ஒன்றை மனனம் பண்ணும்போதாவது கண்ணை மூடிச்செப்பவேண்டுமென்பதும், அப்படியே செய்துவருவதும் வழக்கமாயிருக்கிறது. சிலருக்கு ஒரு யுக்திபிறப்பதற்குக்கூட கண்ணைச்சற்று மூடி ஒளியை லலாடஸ்தானத்தில்கொண்டு போனால் சட்டென அந்த யுக்தி பிறந்துவிடுகிறது. சிலருக்கு மறந்திருந்த வார்த்தைபை உடனேநினைவுக்குக் கொண்டுவருகிறது. இன்னும் ஆகாரப்பொருள்களின் தன்மையையும், சந்தோஷத்தையுண்டாக்கல், துக்கத்தைக்கிளப்பல் இவைமுதலானதெல்லாமும் என் ஒளி சக்தியினாலேயே கிரகித்துக்கொள்ளக் கூடியசயிருக்கிறது. இவ்வளவான பேராச்சரியமெல்லாம் என்னால் நிகழப்பெற்றும்என்னிருப்பிடமெல்லாம்கூடி கண்ணுக்குள்ளே தரிஸ்யம் என்னும் ஜவ்வாகப்பரந்து விரிந்துகிடக்கிற கட்புலன் நரம்பினிடத்திலேதான் முன்னே சாக்ஷிசொன்ன சட்சு என்னும் கண் எடுத்துச்காட்டிய வல்லமையெல்லாம் அவன்செய்கிறதல்ல; கண்ணின் உயிர்க்கூருகிய நான்செய்கிறதுதான் நான் உயிர்க்கூறு கொளுத்தாவிட்டால் அவனால்ஒன்றும் செய்யமுடியாது. ஆயினும் நானும்என் சொந்தமாகவே செய்கிறவனல்ல. என்னையும் யாரோ ஒருவரிருந்துகொண்டு ஆட்டுகிறார் ஆகவே, இந்தவழக்கில் எனக்கொன்றும் தெரியாது ஐயனே மன்னியும்.

ரசம்.

ஈறுமுதலில்லா ஏகாந்தமே! அடியன்பேர் ரசம். ரசமென்றால் சுவை அல்லது ருசி நான் அப்பு பூதத்தின் சத்த ஸ்பரிச ரூப ரசமென்னும் நாலுகுணங்களில் ரசமென்னும் குணத்தைப்பெற்றவன். நானுமே உலகத்தில் ஒருபிரமாதமானவன்; என்னுடைய சக்தியென்னவென்றால் உலகத்திலே கணக்கிடக்கூடாதபொருள்கள் நிறைந்திருக்கின்றதால், அவைகளிலே நல்லது கெட்டது உயிர்பிழைக்கவைக்கிறது, உயிரைக் கொல்லுகிறது என்கிறபேதங்கள் தெரிந்து ஜீவர்களைக் காப்பாற்றுகிறதுதான். நானில்லாமற்போனால் புளிப்பின் மிதந்தெரியாமல் உண்டு சூடுஜாஸ்திபட்டுச் சாகவேணும்; உப்பு மிதந்தெரியாமலுண்டு பேதியுண்டாகிச் சாகவேணும் காரம் தெரியாமல் மிகுதியுண்டு குடல்எரிச்சல் கொள்ளவேணும்; கசப்பு மிதந்தெரியாமல்உண்டு பித்தம், மயக்கம்கொண்டு சாகவேணும். உவர்ப்பு தெரியாமல் உட்கொண்டு ஜீவரத்தம்கெடும், இனிப்பும் மிதம் தெரியாமல் உண்டு, மதுமேகம் தித்திப்பு மூத்திரம் பித்த சோகை முதலான நோய்களடைந்து சாகவேண்டும். இப்படிப்பட்ட அறுசுவை யுண்டியிலும் மிதந்தெரிந்து உள்ளு

க்கனுப்வுகிறவன் நான் தான். இதுமாத்திரமல்ல, இனிப்பாகிய பதார்த்தமே ஒருவன் சாப்பிடுகிறுனென்று வைத்துக்கொள்ளு வோம். அல்லது அவனைப் பிழைப்பிக்கிற சாப்பாடே சாப்பிடுகி றுனென்று வைத்துக்கொள்ளுவோம், "அளவுக்குமிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு' என்பதுபோல அவ்வன்னமே விஷமாக மாறு மென்பது எனக்குத்தெரியவந்து அவனுக்கு வேண்டுமட்டும் அதாவது அந்த அளவுமட்டும் அவன் சாப்பிடப் பார்த்திருந்து, அதே அன்னமே அல்லது இன்பண்டமே அவனுக்குத் தனக்குத்தானே தெவிட்டிப்போக அல்லதுவெறுப்புண்டாக ஒருசூக்ஷமத்தை நான் செப்கிறேன். இதனுல் அவன் அளவுபோஜனத்தில் நின்று விடுகிறுன் இதில் எவ்வளவு பெரிய ஆச்சரியம் பண்ணுகிறேன் பாருங்கள். இவ்வளவே மாத்திரமல்ல; இன்னெருபெரியவேலையும் செய்கிறேன்: அதாவது தின்பண்டத்தில் மாத்திரம் என் ருசியைக் காட்டவில்லை; சங்கிதம் பாடுவதிலும் நாவில் ஒரு ருசியுண்டாகிறது; அதனுல் ஒருவன்பாட மற்றவனுக்கும் நாவில்தண்ணீர் ஊறி வெளிப்படுகிறதுமுண்டு; அல்லது அந்த ஊறலால், நாவசைய பாட்டைத் துவக்கி விடுகிறதுமுண்டு. இதற்காகவே "பாட்டுக்கற்றவன் வாய் சும்மாயிராது என்று சொல்லிகொள்ளுகிறுர்கள். இப்பட்ட வல்லமையெல்லாம் என்னிடத்திலிருந்தும், என்னிருப்பிடமெல்லாங்கூடி நாவின்மேல் சிறுகோளங்களாய் முட்கள்போலிருக்கும் சுவைப்புலனின் நரம்புகூந்தலினிடத்திலேதான். முன்னே என் உடந்தையாகிய நாவு சொன்னசாட்சியில் எவ்வளவு வல்லமை கூறினுனே, அதெல்லாம் என்னுடைய செயல்தான்; நான்தான் அவனுக்கு உயிர்க்கூருயிருக்கிறேன். நானின்றி அவனென்றும் செய்ய இயலாது என்றுலும் மேற்படி செய்கையாவும் நானும் என் இயல்பாகவே செய்கிறதல்ல; என்னை யாரோ ஒருவரிருந்து தூண்டுகிறதால்தான் நான்செய்கிறேன். ஆகவே நான், இந்தஆத்ம சரீர வழக்கில் என்னத்தைக்கண்டேண்; எனக்கு ஒன்றுமேதெரியாது; மன்னியும் அரசே

கந்தம்

உலகெலாம் புரக்கும் ஒருதனிக்கோனே அடியன் பேர் கந்தம். கந்தமென்றுல் வாசனை, மணம், நாற்றம் என்பது. நான் பிருதிவி பூதத்தினுடைய சந்தஸ்பரிச ரூப ரச கந்தமாகிய ஐந்துகுணங்களில் கந்தமென்னும் ஒருகுணத்தைப்பெற்றவன் நானும் உலகத்திற்கு ஒருபெரியவன்தான் என்னுடையது வாசனையறியுமதொழில் ஆனதால் அனேகமாய் சொல்லவேண்டியது இங்குஒன்றுமில்லையானுலும், நான்நடத்துகிற இரண்டொரு பரம காரியங்களை மாத்திரம் தெரிவிக்கிறேன். ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்றத்தாழ்வு படுகிறதையும் நான் தான் காட்டுகிறேன். எப்படியெனில், ஒருவனுக்கு மிகக்கொதிப்பினுல் ஜலதோஷமுற்று நாசி உள் ஜவ்வில்

நீர் சுரந்து நின்றால் அவனுக்கு வாசனைத்தெரியாது, வாதத்தால் பெருஞ்சுவாசம் கொண்டாலும் பித்தத்தால் நாசி வறட்சியுண்டானாலும் இவற்றால் நாற்றம் வேறுபாடடைந்து காட்டும். இதனை தேகத்தைக் காப்பாற்ற உசார்படுத்துகிறவன் நான் தான் இதற்கும் மேலாக இன்னொன்று செய்கிறேன் அதாவது, மனுஷருக்குத் தம்மினத்தில் சமீபமாய் நிவைவேறப்போகிற சாவுஇழவு சேதி இவைகளின்குறியாக முன்னதாய் ஒருவித கவுச்சிநாற்றத்தை அவர்கள் நாசியில் வீசக்காட்டுகிறேன். இது அனுபோகத்தில் கண்டவர்கள்இல்லையெனமாட்டார்கள். முனனே மூக்குசொன்ன சாக்ஷியில் எடுத்துக்காட்டிய வல்லமையெல்லாம் அவன் என்னைக் கொண்டுதான் நடத்தினன். நான்தான் அவனுக்குஉயிர்க்கூறு இவ்வளவு அருமைத்தொழிலை நடத்துகிறேனென்றாலும், என்னிருப்பிடம்நாசியின்உள் துவாரத்தின் முனையில் சிங்காணச்சில்லி என்கிற ஜவ்வின்மேல் படர்ந்திருக்கும் நாற்றநரம்பின் கூந்தல்களிலே தான். ஆகவே நானும்என்சுயமாகவே யாதொன்றும் நடததாமல் என்னை யாரோஒருவர் தூண்டுகிறபடிசெய்கிறதால். இவ்வழக்கில் எனக்குயாதொன்றும்தெரியாது, ஆண்டவனே மன்னித்தருளும்

அரசர்:—சரி, நீங்களெல்லாம் ரொம்ப கெட்டிக்காரர்கள் தான். அப்படிப்போய் நில்லுங்கள்; அடுத்த சாட்சுகள் யார்?

கர்மேந்திரியம்:—அடியேம் சரணம். நாங்கள் வாக்கு, பாதம், பாணி. பாயுரு, உபத்தம் என்னும் கர்மேந்திரியக் கூட்டத்தார். இதோ சாட்சி கூறுகிறோம்.

வாக்கு சாக்ஷி

எப்பொருட்கு மிறைவனே! இன்பரசத்தேனே! என்பெயர் வாக்கு. வாக்கென்றால் வார்த்தை. வார்த்தையினாலே உலகின் சர்வகாரியமும் நிறைவேறுகிறதென்று நான்சொல்லாமலேயமையும் மோக்ஷசாம்பிரதாயத்திற்கு மார்க்கமாகிய திரிகரணசுத்தியில் வாக்குச்சுத்தியையும் சேர்த்திருப்பது என்னத்திற்சென்றால், இது மகாசாரியத்தையெல்லாம் நடத்துவதால் தான். இன்னும்என்னைப் பற்றி என்உடந்தையாகிய நாக்கு, தன்சாட்சியில் அனேகமாய்ச் சொல்லிவிட்டிருக்கிறான். ஆனபோதிலும் நான் ஒரேவிஷயம்மாத்திரம் சொல்லப்போகிறேன்; வார்த்தையாவது நாவாவது எதுவும் வாயின் சம்பந்தமானதுதான். இந்த வாயே,சிருஷ்டி திதி சம்மார கர்த்தாக்களாகிய பிரம்மவிஷ்ணு ருத்திரர்களை ஒன்றாய்ச் சேர்த்து அடக்கிக்கொண்டிருக்கிறது. எப்படியெனில் வாயுள்ஒரு கன்னத்திலிருந்துசுழித்துஅங்கிருந்து மறுகன்னம்வரையில்கோடிழுத்துவந்தால் அது ஓம் என்னும் குடிலையட்சரம்போல விளங்குகிறது. இந்த ஓம் அட்சரத்துக்குள்ளாகவே, அ--உ--ம்என்னும் திரிமூர்த்திகள் அடங்கியிருக்கிறார்கள். குடிலையென்றால் பிரணவ

ம். இந்தப் பிரணவாக்ஷரந்தான் ஆதியிலேயிறந்தது. இதினின்றே உலகமும் உதித்ததுஎன்பது துணிபு. 'ஆதியிலே வார்த்தையிருந்தது' என்பதும் இதற்குச் சாக்ஷியாயிருக்கிறது. இதைப்போலவேதான் சிருக்கள்முதலாவது பேசவாய்திறந்தவுடனே (ம்ஃஅ) மா என்று தொடங்குகின்றன. இதற்குமேலும் என்வல்லமையை நான் என்சொலல? என்றாலும்நான் சுயதத்துவமுடைய வனல்ல. யாரோ சித்தர் ஒருவரிருந்துதான் என்னை நடத்துகிறார். ஆகவே இவ்வழக்கில் எனக்கு யாதுந் தெரியாது ;மன்னிக்கவும்.

பாதத்தின் சாக்ஷி,

ஏகவெளியே; இணையிலாச்சோதியே! என்பெயர் பாதம். (நாங்கள் இரட்டைப் பிள்ளைகளா யிருந்தாலும் ஒருமைப் பெயர்வழக்கப்படுகிறது.) பாதமாகிய நான் வெகுஈனமாய்த் தாழ்வானபாகத்தில் அமையப்பெற்றிருக்கிறேன். என்னைப் பார்க்கிறவர்களுக்கு நான்வெகு நீசமும் என்னை நானேசொல்லிக் கொள்ளுவதற்கு வெகுவெட்கமுமா யிருந்தபோதிலும், என் மகத்துவம் மகாப்பெரியது. நடைபினால் நிகழப்பெறுகிற எத்தனையோசெயல்களெல்லாம் இருந்தாலும் இருக்கட்டும், இரண்டொன்றைமாத்திரம் இங்கு சொல்லிக்காட்டுகிறேன். அதாவது மனிதர்கள் சதா விட்டுக்கொண்டிருக்கிற சுவாசமானது நாசித் துவாரங்களில்மாறிமாறி பாய்கிறதே, அதற்கு மூலம் என்னிலிருந்துதான். அதாவது பாதப் பெருவிரலினின்று உற்பத்தியாகி முதுகின் முள்ளந்தண்டின் வழியாகச்சென்று அங்கே கத்திரிக்கோல் மாறலாகி இடதுநாசி வலதுநாசியிற் பாய்ந்திருப்பதினால் அந்த மாறுபாட்டுக்குச் சாவி என்னிடத்திலேயே இருக்கிறது. இதற்குச் சாட்சியாக ஒருவன் சிலநேரம் பெருவிரலை ஊன்றி நடந்தால் சுவாசக்கிரமத்தில் மாறுபாடு தோன்றும் அல்லாமலும் சுவாசம் தடைபட்டும், தலைநோயும் கொண்டிருக்கிற ஒருவன் சற்றுநேரம் பெருவிரல்ஊன்றி நடந்தால் அது லகுவுபடும்என்று இப்போது வைதியசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.மேலும் மிகுபோகத்தால் கால் சத்துவம் அற்றுவந்தால் முதுகும் வில்வளைவாய்ப் போகிறதும்உண்டு. உடல்வளைவதற்கும் நிமிர்வதற்கும் என்னிடத்திலேயே பிருவிருக்கிறது.இதற்காகவேதானே யோகிகளெல்லாம் தங்கள் முகத்திலிருக்கின்றது கண்ணல்ல; பெருவிரல் நகமே கண்ணென்று என்மேல் நாட்டம்வைக்கிறார்கள். என்னிடத்தில் இவ்வளவிருந்தும் என்ஐயனே நான் சுயாதீனனல்ல. யாரோ ஒருவர் என்னைஇயக்குகிறவர் இருக்கிறார். ஆனதால் இந்தவழக்கில் எனக்கு எதுவுமே தெரியாது. பிழைபொறுக்கவும்.

பாணியின்சாக்ஷி

தேசோமயானந்தமே திருவுருவே சரணம்; என்பெயர் பாணி. பாணிஎன்றால் கை அல்லது கரம். நான்தேகத்திலே கண்டத்திற்குக் கீழ் மார்பினின்று இருகிளையாய்ப் பிரிந்துதொங்குகிறவன், என்றாலும் என்செய்கை மகாவல்லமைபெறறது. தேகத்திற்குச் சிரசே பிரதானமென்று சொல்லுவார்கள். அப்படியல்ல; கையே பிரதானமென்று நான் தைரியமாய்ச் சொல்லிக்கொள்ளுகிறேன். எப்படியெனில் சிரசில் கண் காது மூக்கு வாய் முதலிய விசேஷஉறுப்புகள் இருப்பதால் சிரசைப் பிரதானமென்று சொன்னபோதிலும், கண்ணானது தன்னிருப்பிடத்திலேயே நின்றுதான் தன்தொழிலைப்புரிகிறது காதானது அதனிடத்திற்த வந்துவிழும் சப்தத்தை மாத்திரம் தான்கேட்கக்கூடும். மூக்கானது தனக்கெட்டிய வாசனையை மாத்திரம்தான் அறிந்துகொள்ளக்கூடும். வாயானது உணவு தன்னில்விழுந்தால்தான் அதையருந்துகிற வேலையைச் செய்கிறது. கையாகியநானோ, இவர்களைப்போலல்ல, இவர்களுக்கெல்லாம் என்னுடைய உதவியே முக்கியம்வேண்டியதாயிருக்கிறது. இவர்கள் செய்கிற வேலையெல்லாம் நான் செய்கிறேன். எப்படியெனில், குருடருக்கு கண்ணில்லாதிருந்தாலும் நானே அவர்களுக்குகண்போலிருந்து தம் கையினால் தடவிததடவித் தாராளமாய்ப் போகவர உதவியாயிருக்கிறேன். அப்படியே வாய்சத்துவமற்ற ஊமையர்கள் கைசைகையினாலேயே தங்கள் பேச்சுகளைக்காட்டி எதிரியின்பேச்சை கைசைகையா லறிகிறார்கள். செவிடர்களுக்கு அப்படியே கைசைகைபேச்சாய் வழங்குகிறது. ஒவ்வொருவனுக்கும் அறிவுபிறந்தவுடனே கடவுளைத் துதிக்க கையால்தான் கும்பிடுபோடுகிறான். அப்படிக்கின்றி தலையைமாத்திரம் தரையில் முட்டிநட்டுக்கொள்ள மாட்டான். அல்லது கண்மூக்காலே சாமியைக் கும்பிடமாட்டான். உலகையாளுகிற அரசர்கள் நீதியின் செங்கோலை ஏந்துவது இந்தக்கையே சிரசாக்கினைக்காவது அருஞ்சிறையிருப்புக்காவது குற்றவாளிக்குத் தீர்மானம் எழுதுவது இந்தகையே. வீரகட்கத்தை ஏந்தி பெருஞ்சமராடி புஜபல பராக்கிரமரென்று பேரெடுக்க வைப்பது இந்தக் கையே. சத்துருசங்காரஞ்செய்து ராஜியங்களைஜெயித்து சமாதானவாழ்வில் அகங்களிக்கச்செய்வது இந்தகையே. அருமையாகிய பெரும்பெருங் காரியங்களெல்லாம் செய்து முடிப்பது இந்தகையே. தொடர்ச்சியான பெருங் கன்மலைகளை யெல்லாம் வெட்டித் தகர்த்தும், குடைந்தும் வழிகளுண்டாக்குவதும், மலைகற்களை வாரி பெரும் பாதாளபள்ளங்களைத் தூர்ப்பதும், சமனான பூமிகளை வெட்டி நதிகளும் வாய்க்கால்களும் ஏரிகளும் குளங்களும் உண்டாக்குவதும் இந்த கையே. பிரமாண்டமான காடுகளையழித்தும்

ங்களை உண்டாக்குவதும், நகரங்களை அழித்துவெட்டவெளியாயர்க்குவதும் இந்தக் கையே; கூடகோபுரங்களையும், மாடமாளிகைகளையும் வானத்தையளாவிய சிகரங்கள் மணிக்கூண்டுகள் முதலியவைகளையும் நிர்மாணித்தெழுப்புவது இந்தக் கையே; சமுத்திரங்களில் பாதைகளைச் சரிப்படுத்தியும், அவைகளில் நீராவிக் கப்பல்களை யோட்டியும், சமுத்திர ஆழங்களில் சிலதைத் தூர்த்தும், சிலதை ஆழமுண்டாக்கியும் வருவது இந்தக்கையே; புகை யந்திரங்கள், பேசுங் கருவிகள், மின்சார தந்திகள், வேலைச்சாலைகளின் யந்திரங்கள் முதலானவைகளை ஏற்படுத்துவதும் இந்தக்கையே; பர்வதங்களின் கர்ப்பஸ்தானங்களிலிருக்கின்ற ரத்தினங்களையும் பூமியின் இதயஸ்தானத்தில் சுரங்கஞ்செய்து அந்தக் கெனிகளிலிருக்கும் ரத்தினங்களையும் பொன்வெள்ளி முதலாகிய லோகங்களையும், சமுத்திர அடிவாரங்களிலிருக்கும் ரத்தினங்களையும் முத்துப் பவழ முதலாகிய விலையேறப்பெற்ற பொருட்களையும் கண்டுபிடித்தெடுப்பதெல்லாம் இந்தக் கையே; அளவிடக்கூடாப் பெரும்பரப்பாகிய ஆகாயவீதியிலுலாவும் சூரிய சந்திர நக்ஷத்திராதிகளையும் கிரகமண்டலங்களையும் அப்படியப்படியே கண்டுபிடிக்கத்தக்க தூரதிஷ்டிக் கருவிகளையுண்டாக்குவதும் இந்தக்கையே; பெரியோர்களுக்கு மரியாதை காட்டும்படி கரங்குவிப்பதும், பிள்ளைகளை அரவணைப்பதும், ஸ்திரீ புருஷர்கள் அன்பு காட்டும் குறிப்பாய் கராலிங்கனம் பண்ணுவதும் இந்தக்கையே; தேகத்திற்கு நேரிடும் சகல ஆபத்துகளுக்கும் நாலண்டையும் தடைபடுத்திக் காப்பாற்றிவைப்பதும் இந்தக்கையே; தேகத்தைச் சுத்தம் பண்ணுவதும், புண் காயம் முதலியவைகளுக்குச் சிகிச்சை செய்கிறதும், உடல் வளர உணவு ஊட்டுகிறதும், அப்படி உணவு ஊட்டுதற்கு வேலைசெய்து பொருள் சம்பாதிக்கிறதும் இந்தக்கையே; இவைகளெல்லாவற்றையும் பார்க்க இன்னொரு பரமார்த்தமான விஷயமும் கையாகிய என்னிடத்தில் விளங்கியிருக்கிறது. அதாவது, சாமுத்ரிகா ஜோதிட ரேகா லக்ஷணசாஸ்திரம் என்று சொல்லும்படியான கைபார்க்கும் சாஸ்திரமும் என் உள்ளங்கையிலே யடங்கியிருக்கிறது. அதிலேயே ஒவ்வொரு மனிதனுக்கும் தன் ஜீவியகால முழுவதும் சம்பவிக்கிற நன்மை தீமை, சுகம், துக்கம், சம்பத்து தாரித்ரியம்; புத்திரபாக்கியம், ஸ்திரீபாக்கியம், பிணி, ஆபத்து. பெருமை ஞானம் கடைசியாகச் சொல்லப்போனால் வயசின் அளவு, மரணம் இவ்வகைகளையெல்லாமும் ரேகையினால் அவரவர்களே அறிந்துகொள்ளக்கூடியபடி ஸ்பஷ்டமாய்க்காட்டுகிற விதியமைப்பைப்பெற்றிருக்கிறதும் இந்தக்கையே. கையிலுள்ள ரேகையைத்தான் பிரம்மாவிதித்திருக்கிற விதியென்றும், மற்றப்படி தலையில் விதி யெழுதிவைத்திருக்கிறதென்பது இல்லையென்றும் சில விவேகிகள் ஒப்புகிறார்கள். இப்படிப்பட்ட

மேலான செய்கையெல்லாம் நிகழ்ந்திருந்தாலும் நான் கொஞ்சம் எலும்பினுலும் சில நாடிநரம்புகளினுலும் கொஞ்சம் சதையினுலும் இணைக்கப்பட்டவனுயிருப்பதில் மேற்படி செய்கையெல்லாம் நான் சுயமாகவே செய்கிறதில்லை. என்னையும் யாரோ ஒருவர் இருந்து ஆட்டிக்கொண்டு இருக்கிருர். ஆகவே இந்தவழக்கில் எனக்கு ஒன்றும் தெரியாது.

பாயுரு சாக்ஷி.

அறிவினுக்கெட்டா அதி அகோசரமே! என்பெயர் பாயுரு; பாயுரு என்றால் குதம், அல்லது மலவாயில். என் ஐயனே! நான் என்ன ஒரு அசங்கிதமானவன்! நானும், என் கூட்டத்தாராகிய வாக்கு, பாதம், பாணி, உபத்தம், என்பவர்களும் தங்கள் பெருமை படித்துப் பேசினுலும். என்னைப்போலவே அவர்களும் கர்மேந்திரியக் கூட்டத்தார்களேயன்றி, பெருமையுள்ளவர்களல்ல; உயர்த்தியானவர்களல்ல; கர்மேந்திரிய மென்றால் கர்மம்—வினை செய்கிறவர்கள் தான். ஆகவே என் வினையானது,இந்த மலவாயி லென்னும் பாயுருவாயிருக்கிறேன். ஆனல் நானே இல்லாமற் போனல் ஜீவர்களுக்குச் சுகம் கிடையாது. சுத்தங்கிடையாது. வாயாலேதின்று வாயாலேயே பேண்டுக்கொள்ளவேணும். ஒவ்வொருவரும் அவர்கள் இராஜா, ராஜாத்தியாயிருக்கட்டும், குரு சுவாமியாராயிருக்கட்டும், காலையிலெழுந்தவுடனே என்னைத் தரிசனம் பண்ணிக்கொள்ளாவிட்டால் முடியாது. மனிதர்கள் ஸங்கோசத்தினுலும் மானத்தால் மறைவிடந்தேடுவதினுலும் மலவிசர்ஜ்ஜன நேரத்தில் அதை அடக்கி அடக்கிவைப்பதினுலுந்தான், வெகு சீக்கிரத்தில் அவர்களுக்குக் கண்ணொளி மழுங்கி, காது செவிடுபட்டு, பல்லீறுகள் கெடுகிறது. அதற்கெனவே அந்தந்த நேரத்தில் நான் அவர்களைத் தொந்தரித்தும்,சிலபோது என் மலவாயை திறந்துகொள்ளுவதுமுண்டு; இதனல் எவ்வளவு நன்மை செய்கிறேன் பாருங்கள்! அல்லாமலும் மனிதர் மரணமடையும் போது ஜீவனை என வழியாய்த்தான் விட்டு விடுகிருர்கள். இதற்கும் உபயோகமாயிருக்கிறேன். விசேஷமாய், மிகு காமிகள் இடைவிடாமல் சம்போகத்தி லடிபடுவதில் காங்கை அதிகப்பட்டால் குதமாகிய நான்தான் மோகச்சூடாகிய அந்தக் கர்மத்தைத் தாங்கிக்கொள்ளுகிறேன். இன்னொரு விஷயமும் சொல்லப் போனல், யோகிகள் மூச்சையடக்குவதில் நானே வெகு ஒத்தாசையாயிருந்து அபானத்தில் தாங்கி அவர்களைக் காப்பாற்றுகிறேன்.இப்படிப்பட்ட நான் என் சொந்தமாய் யாதொன்றும் நடத்தாமல் யாரோ என்னைத் தூண்டுகிறபடி செய்கிறேனதால் இவ்வழக்கில் எனக்கு ஒன்றுந் தெரியாது ஐயனே ரட்சியும்.

உபத்தத்தின் சாக்ஷி.

ஆனந்தவிபுவே,அரும்பொருளே! என்பேர் உபத்தம். உபத்

தமென்றால் ஆண்குறி பெண்குறி என்கிறது. என் தொழில்தான் ஒவ்வொரு ஆண்களுக்கும் பெண்களுக்கும் நன்றாய்த் தெரியுமே. உலகம் பிரஜாவிர்த்தி யடைகிறதும் ஜீவராசிகள் பல்கிப் பெருகுகிறதும் என் வேலையினாலே தான், என் தன்மையைப்பற்றி நான் மெத்த சொல்லக்கூடும்; ஆயினும்; அரசே, நின் சமுகத்தில் என் இரகசியங்களை வெளியிடுவதில், சர்வ சாமியாகிய உமது சட்டத்திற்கு விரோதமாய்க் காணப்படாமற்போனாலும் தற்கால துரைத்தன போலீஸ் சாமிகளின் சட்டத்திற்கு விரோதமாய் காணப்படுமானதால் என் வாயை அடக்கிக்கொள்ளுகிறேன். என் வல்லமை உலகத்திற்கெல்லாம் தெரிந்தபாடுதான். என்றாலும் எந்த விஷயமும் நானே சுயமாய் செய்கிறவனல்ல; என்னையும் யாரோ தூண்டுகிறார்கள். எனவே, இவ்வழக்கில் எனக்கு யாதொன்றும் தெரியாது, மன்னிக்கவும்.

அரசர்:—சரி; அந்தமட்டும் நீங்களும் வெகுகெட்டிக்காரர்கள் தான்; தூரம்போய் நில்லுங்கள், அடுத்தசாட்சி யார் வரவும்.

கர்மவிஷயம்:—அடியேம் சரணம்; நாங்கள் வசனம், கெமனம், தானம், விஸர்க்கம், ஆனந்தம் என்னும் ஐவர்.

கர்மவிஷயக் கூட்டத்தார் சாக்ஷி.

வசனம்:—அருளாழி வேந்தே ஐயனே! என்பெயர்வசனம். வசனமென்றால் வார்த்தை; வார்த்தையைப்பற்றி ஏற்கனவே என்னுடந்தையான வாக்கு விஸ்தாரமாய் சாட்சி பகர்ந்து விட்டிருப்பதினால் மீளவும்நான் சொல்லிக்கொண்டு வரவேண்டிய நிமித்தமில்லை. அந்த வாக்குக்கு வசனமாகிய நான் உயிர்க்கூறு. ஆனதால் வாக்கு நடத்துகிற செய்கையெல்லாம் என்னுடைய பலத்தினாலேயே யென்று நின் சமுகத்திற்குத் தெரியவரும். நானில்லாவிடில் வாக்கு ஒரு எழுத்தையும் உச்சரிக்க முடியாது, நானேதான் அதற்குச் சுரனை இயக்கத்தை யுண்டாக்குகிறவன். ஆயினும் என்னரசே நானும் என்னியல்பாக யாதொரு காரியமுஞ் செய்யாமல் என்னையும் யாரே ஒருவர் தூண்டுகிறார். ஆனபடியால் இவ்வழக்கில் எனக்கொன்றுந் தெரியாது.

கெமனம்:—ஆண்டவனே அரசே! என்பேர் கெமனம். கெமனமென்றால், போதல், நடத்தல், உலாவுதல் என்று அர்த்தமாகும். பாதமென்னும் என் உடந்தையாளி பாதத்தின் செயல்களையெல்லாம் தன் சாட்சியில் விஸ்தரித்து விட்டிருப்பதினால் மீளவும் நான் சொல்லத்தேவையில்லை. பாதத்திற்கு நான் உயிர்க்கூறு. ஆகவே பாதஞ்செய்கிற வேலையெல்லாம் நான் செய்கிறதுபோலத்தான். என்றாலுமோ நானும்சொந்தமாகவே இயங்கும் சக்தி பெற்றவனல்ல. என்னையும் யாரோ ஒருவரிருந்து ஆட்டுகிறார். எனவே இவ்வழக்கில் எனக்கொன்றுந் தெரியாது, மன்னிக்கவும்.

தானம்:—இறைவனே அரசே! என்பெயர் தானம். தான

மென்றால் கொடுத்தல், ஈதல் என்னும் கையின்செய்கை. இந்த கையின் செய்கையைப்பற்றிப் பாணியென்னும் என்னுடந்தையாளி தன்சாட்சியில் வெகுவாய் சொல்லிவிட்டிருப்பதினால் மீளவும் நான் சொல்லவேண்டிய நிமித்தமில்லை. பாணிக்கு நான்தான் உயிர்க்கூறு. என்றாலும் நானும் சுயமாய் செய்கிறவனல்ல. என்னையும் யாரோ ஒருவரிருந்து இயக்குகிறார். எனவே இவ்வழக்கில் எனக்கொன்றுந் தெரியாது, மன்னிக்கவும்

விசர்க்கம்:—திவ்விய சொரூபமே, தேவே! என்பெயர் விசர்க்கம்; விசர்க்கம் என்றால் மலங்களைவெளியில் கழித்தல் அல்லது தள்ளுதல். பாயுருவென்னும் என்னுடந்தையாளி விசர்க்கத்தின் தன்மையை தன் சாட்சியில் சொல்லி விட்டிருக்கிறான். நானும் சொல்லவேண்டிய அக்கறையில்லையே. ஏனெனில் பாயுரு என்னும் மலவாசலுக்கு விசர்க்கமாகிய நான்தான் உயிர்க்கூறு என்றாலும் நானும் சொந்தமாய் செய்யும் சக்தியற்றவன் என்னையும் யாரோ ஒருவரிருந்து செய்துவைக்கிறார். எனவே இவ்வழக்கில் எனக்கும் ஒன்றுந்தெரியாது மன்னியும்.

ஆனந்தம்:—சர்வலோக தயாபரா சுவாமி, என்பெயர் ஆனந்தம். ஆனந்தமென்றால் கிளர்ச்சி, பூரிப்பு, மகிழ்வு, சந்தோஷம் என்ற அர்த்தமாகும். இந்த ஆனந்தத்தின் தன்மை மகா இரகசியமானது. ஸ்திரீ புருஷர்களுக்கு அந்தரோத்தில்தான் என் தன்மை தெரியும். ஆண், பெண், குறியின்மேல் நான் என் தன்மையைச் செலுத்துகிறவன். ஆனதுகொண்டு உபஸ்தத்திற்கு நான் உயிர்க்கூறு. இன்னும் நான் விஸ்தரித்துச் சொன்னால் அசங்கிதமாய்த் தோன்றும். ஆகவே என் வாயை அடக்கிக்கொள்ளுகிறேன் இப்படிப்பட்ட ஆனந்தமாகிய நான் தானாகவே எழும்பிச் செயல் செய்கிறவனல்ல என்னையும் யாரோ ஒருவரிருந்து நடத்துகிறார்; எனவே, எனக்கும் இந்த வழக்கில் யாதொன்றும் தெரியவராது. தயைபாலிக்கவும்.

அரசர்:-சரி நீங்கள் போயிருங்கள்: அடுத்த சாக்ஷிகள் வரட்டும்.

அந்தக்கரணர்:—ஐயனே, அடியார் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நால்வர். இதோ சொல்லுகிறோம்.

மனம் சாக்ஷி

“மனோவாக்குக் காயங்களுக்கெட்டாத மகாதேவே! அடியன் பேர் மனம். என்னை நான் இன்னபடியானவனென்றும், இவ்வளவு பிரமாண முடையவனென்றும், இன்ன ரூபமுடையவனென்றும், சொல்லுவதற்கு என்னாலேயே கூடாது. அதற்கேற்ற வார்த்தையுங்கிடையாது. சிலர் என்னைக் குரங்குக்கும், சிலர் ஆட்டினுடைய குட்டிக்கும் ஒப்பிட்டுப் பேர் வைத்திருக்கிறார்கள். ஏனெனில் குரங்கு கொஞ்ச நேரமும் தன் கை காலை அமரிக்கையாய் வைத்துக்கொண்டிருக்கிற வழக்கமில்லை. சேஷ்டை செய்து

கொண்டேயிருக்கும்; அதற்குத்தான் குரங்குசேஷ்டையென்கிற து. இதுபோலவே தான், மனமும் சற்று நேரம் அடங்கி சும்மா இருக்கிறதில்லை. ஆட்டின் குட்டியுடைய தன்மையென்னென்று லோ; அதற்கு யாதொரு முகாந்தரமின்றியே சட்டெனநினைத்துக் கொள்ளுகிறதும், நின்றவிடத்திலிருந்தே குதித்து எழுந்து கால்க ளை உதறிக்கொள்ளுகிறதும், கண்ட கண்ட விடத்திற்கும் கண்மு கந் தெரியாமல் ஓடியாடுகிறதும் விழுகிறதும் எழுகிறதும். தாயை ப்பிரிந்து கூச்சல் போட்டலைகிறதும், ஆட்டுக் குட்டியினுடைய கு ணம். மேலும் துள்ளுகிறதும், கைக்குப் பிடிபடாமல் ஓடுகிறதும் அதன்வழக்கம். இதுபோலவே மனமும், இருக்கும்போதே யா தொரு முகாந்தரமின்றியே நினைத்தவிடங்களுக்கோடுகிறதும் அ லைகிறதும், ஒரு ஏதுவுமில்லாமலே விபரீதமாய் சந்தோஷித்துத் துள்ளுகிறதும், துக்கத்தில் விழுகிறதும், அங்கலாய்க்கிறதும், இப் படிப்பட்ட வேலையெல்லாம் செய்கிறது. ஆனதுகொண்டு மேற்ப டி இரண்டு மிருகங்களுக்கும் என்னை ஒப்பிட்டிருக்கிறார்கள். அத னால் நான் அவ்வளவே தன்மையில் மாத்திரம் அமைந்தபோனவ னல்ல என்தொழிலும் ஆளுகையும் மகா மகாப்பெரிது. மனோ வேகம் வாயுவேகம் என்று வழங்குகிறார்களே, அது என் தன்மை யைக் கண்டுதான் சொல்லிவைத்தார்கள்; வாயுவாவது சற்றுத் தா மத கதியாய் ஓடும்; மனமாகிய நானோ, ஒருசிட்டிகைப் போடுகிற தற்குள்ளே ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்ட ங்களையும் எட்டிப்பிடிப்பேன். அவ்வளவு தீவிரகதிஎன்னுடையது. இதைத்தான் மனோகதி என்பது. இது மாத்திரமா? மனோராஜ்ய ம், மனோபாவனை, மனோவியாபாரம், மனோக்கியம், மனோகதம், மனோசலனம், மனோபவம், மனோசன், மனோற்சகம், மனோ தீரம், மனோரகம், மனோரதியம், மனோராஜி, மனோலம், ம னோவ்வியம், என்பனவாதி அம்ஸங்களையெல்லாம் என்னில் நா னே கொண்டவன். இதிலே மனோராஜ்ய மென்றால், மனசிலே புது புது உலகங்களை அப்போதே உண்டாக்கிக்கொள்ளுகிறதும், ஊர் களையும் பட்டணங்களையும் நாடுநகரம் முதலானவைகளையும் நிமி ஷகெடுவிலே உண்டுபடுத்துவதும், அரமனைகள், கோட்டைகள், கொத்தளங்கள், கோவில்கள் கோபுரங்கள், வயிரமணி மேடைக ள், கொலுக்கூடங்கள், தங்கமதில்கள் முதலானவைகளை விநாடி நேரத்தில் கட்டுவதும் இடிப்பதும; சிங்காரவனங்கள், தோட்டம் துறவுகள், முதலானவைகளை அந்நேரமே ஏற்படுத்திக்கொள்ளு வதும் என்பனவாதி முடிக்கிறதுதான்.—மனோபாவனையென்றால் உலகத்திலேயே இல்லாததும், அல்லது தொலைதூரமான அன் னிய நாடுகளிலும் தேசங்களிலும் இருப்பதாகக் கேட்டு மாத்தி ரம் அறிந்துகொண்டதும், தம் கண்ணினால் பார்த்தே யிராதது மான என்னென்னமோ நூதன நூதனமான வஸ்துக்களையும், அ

பூர்வமான பொருள்களையும், இப்போது அவைகள் எதிரிலேயே இருப்பதுபோல தம்மனம் போனபடி இந்திந்த மாதிரியாயிருக்கிறதென்று வினாடிநேரத்திலேயே பாவனை பண்ணிக்கொள்ளுகிறது.—மனோவியாபாரம் என்றால் ஒரு நினைவைப் பத்தாக்குகிறது, பத்தைப் பதினாயிரமாக்குகிறது, பதினாயிரத்தைப் பத்துக் கோடியாக்குகிறது, அதை ஒன்றோடொன்று கலக்குகிறது, பிரிக்கிறது, கூட்டுகிறது குழப்புகிறது, இறைத்துப்போடுகிறது. காசிப்பட்டணத்து விஷயத்தை ராமேஸ்வரத்தில் கலக்கிறது,இதைச் சீனாவோடு ஒப்பிடுகிறது; இவையெல்லாவற்றையும் காஸ்மீரத்தோடு உறவாக்குகிறது, அங்கிருந்து தூக்கிஇங்கே கொண்டுவருகிறது, இங்கிருந்து தூக்கி இன்னோரிடத்தில் கொண்டுபோகிறது, இப்படிப்பட்ட வியாபாரம் நொடிக்குள்ளே பண்ணுகிறதுதான்-மனோக்கியமென்றால், கண்ணாலே பார்த்தேயில்லாத வெகு வெகு விசித்திரமான காட்சிகளையெல்லாம் தனக்குத்தானே உண்டாக்கிக்கொள்ளுகிறதும், இனியில்லா அழகுடைத்த ஸ்திரீயை உருப்படுத்திக் கொள்ளுகிறதும், அதைப் பார்த்துப் பரவசப்பட்டு பூரிக்கிறதும் தான்.—மனோரதிய மென்றால், தேவாமிர்தத்திற்கும் மேலான ஒரு ருசியை அவதானித்துக் கொள்ளுகிறதும், கேட்டிராத ஒரு கீதத்தை உற்பத்திப்பண்ணிக் கொள்ளுகிறதும், இல்லாத பண்டங்களை உண்டுபோல்ஏற்படுத்திக் கொள்ளுகிறதும், அவைகளை ருசித்து அல்லது அனுபவிப்பதுபோல வினாடிக்குள் சரிப்பண்ணிக்கொண்டு சுவைப்பதுந்தான்.-மனோசலனமென்றால், தண்ணீரின் மீது சடையாடுவதுபோல கொஞ்ச நேரமும் நிலையின்றி தன்னோடு உலகமெல்லாம் ஆடுவதுபோல அசைந்துகொண்டிருப்பதுதான் —மனோசன் என்றால், காதால் கேட்டதும், கண்ணால் பார்த்ததும், புஸ்தகங்களில் படித்ததுமான அழகுள்ள ஸ்திரீகள் ஆயிரம் ஆயிரம்பேரை அந்தந்தநேரமே அனுபவிக்கிறதுபோலவும் ஆசை தீருகிறதுபோலவும்,அவ்வளவுக்கும் ஊடாடிச் சமாளித்துச் சுகமடைகிறவனாகிய தான் ஒரு மன்மதனைப்போலென்றும் வினாடிநெடுவில் மனதால் இன்பத்தை நுகர்ந்துகொள்ளுகிறது தான்.—மனோற்சாகமென்றால் துக்கத்தையே மனசுக்கு கொண்டுவராதபடி தனக்குள். உடம்பெல்லாம் என்ன கடனாயிருந்தாலும் சரி,தனக்குச் சோறு தண்ணிக்கு வழியில்லாமற்போனாலும் சரி, தன் பிள்ளை பெண்டீர் பறிபோய் விட்டிருந்தாலும் சரி; தன் பெற்றவர் இறந்துபோனாலும் சரி; தன் துணிமணி சிறுத்து அரைமனிதனாய்க் காணப்பட்டாலும் சரி; எப்படிப்பட்ட சன தரித்திராம்ஸையிலும் மனதிலே துக்கமடையாமல் ஒரு மாதிரியான உற்சாகமாகவே அதைக்கழித்துக்கொண்டு காலந் தள்ளுகிறதுதான்.—மனோராஜி யென்றால்,நன்மைக்கோ தீமைக்கோ சுகத்திற்கோ வருத்தத்திற்கோ, வீணுங்கோ பிரயோஜனத்திற்

கோ, கொலைக்கோ ஜீவகாருண்யத்திற்கோ, சந்தோஷத்திற்கோ துக்கத்திற்கோ, சமாதானத்திற்கோ சண்டைக்கோ, வைராக்கியத்திற்கோ வசத்திற்கோ, அழகுக்கோ அந்தக்கேட்டுக்கோ, அசங்கிதத்திற்கோ சுத்தத்திற்கோ, ரூபத்திற்கோ, குரூபத்திற்கோ, கடனுக்கோ உடனுக்கோ, ஆபத்திற்கோ, பிணைக்கோ, பெரும் விலங்குக்கோ, சுமைபாரத்திற்கோ, சுலபவிபத்திற்கோ, வேலைக்கோ களவுக்கோ காமத்திற்கோ விபசாரத்திற்கோ வேசிகமனத்திற்கோ பழிக்கோ பாவத்திற்கோ, துறவித்தன்மைக்கோ இல்வாழ்வுக்கோ, எல்லாவற்றிற்கும் ஒரு க்ஷணப்பொழுதில் மனதிசைகிறதுதான்—மனோதீரமென்றால் என்ன இடிபடைவந்தாலும் எத்தனை சங்கடங்கள்மேல் சங்கடம் தலைமேலேறினாலும், எத்தனை நஷ்ட கஷ்டங்களுண்டானாலும், எத்தனை பாரத்தின்மேல் பாரம்ஏறினாலும், என்னென்ன காரியம் கவைகள் கெட்டுப்போனாலும், எத்தனை பயங்கரஞ் சூழ்ந்தாலும், ஏதேது வஞ்சனை வைஷம்மியங்களுக்குள்ளகப்பட்டாலும், என்ன பாடுபழிநேர்ந்தாலும், எத்தனை குத்துப்பகை வெட்டுப்பகை எதிர்த்தாலும், அந்தந்த நிமைப் பொழுதுக்கு மனஞ் சலியாது தீரத்தை எழுப்பிக் கொள்ளுகிறதுதான்.—மனோகதம் என்றால், யானைபேறலாம், குதிரை ஏறலாம் இராஜாவாகலாம், பெரிய விடங்களில் பெண்கொள்ளலாம், பிரபுவாய் நடிக்கலாம், ஆயிரம்பேரைவைத்து வேலைவாங்கலாம் கால்பிடிக்கக் கைபிடிக்க தாதிகள் வைத்து வாழலாம். யவ்வன ஸ்திரீகளோடு உல்லாச வாழ்க்கை வாழலாம், வித்வானாகலாம், சாஸ்திரியாகலாம், பொன் முத்து பவளம் ரத்தின முதலிய களஞ்சியங்கள் சேர்க்கலாம், என்றின்னும் என்னென்னமோ எண்ணமும் விருப்பமும் கொள்ளுகிறதுதான்.—மனோசாத்யம் என்றால் தனக்கு அகப்படக் கூடாததும் அனுபவிக்க இசையாததுமான எந்தெந்த பொருளைப் பார்த்தாலும், அவை அன்னியனுடையதா யிருந்தாலும், அருமையானதாயிருந்தாலும், ஆகாசத்திலேயிருக்கிறதாயிருந்தாலும், அப்படிப்பார்த்த பொருள்கள்மேலெல்லாம் இச்சைகொள்ளுகிறது, மனோபவம் என்றால், மனசில் என்னென்ன பிறக்கிறதோ அதெல்லாம் இருக்கிறதாகப் பாவித்துக்கொண்டே நூதன நூதனமான தோற்றங்களை யெல்லாம் பிறப்பித்துக்கொண்டு சிந்தனை பண்ணுகிறது.—மனோலம் என்றால், மனதிற்குள்ளாகவே ஒருவன் நன்றாய் நாணயமாயிருந்தால் அவனை வெறுக்கிற பாவனையாய் அவன் மாட்டைப்போல், குரங்கைப்போல என்று பரிகாசம் பண்ணிக்கொள்ளுகிறது; ஒரு அன்னியனுடைய மனைவி அழகாய் சிலாக்கியமாய்க் காணப்பட்டால் அவள் லக்ஷணமாகவேயிருந்தும் அவளைப்பார்க்க மனம் கதகதப்பாகி அவளை நிந்திக்கிற பாவனையாய் அவள் நாயைப்போல, வண்ணான் வீட்டுக் கழுதைபோல கோணைநடைக்காரி, தடிச்சி, சப்பைஎன்று தனக்குள்ளாகவே பரிகாசமாய்ச் சொல்லிக்கொள்ளுகிறது ஒவ்வொரு விஷயங்களை மனதாலேயே இன்னொருவிதமாக விகட அர்த்தம் பண்ணிக்கொண்டு தனக்குத்

தானே சிரித்துக்கொள்ளுகிறது. இப்படியான பரிகாசம்பண்ணிக்கொள்ளுகிறதுதான்—மனோரதம் என்றால், தாம் எவ்வளவு நல்லதேகம், சத்தம் சுகம், அழகு, அந்தஸ்து உடையவர்களாயிருந்தும், அசுத்தமும் அரோசிகமுமான விஷயங்களுக்கெல்லாம் உட்படுகிறது. அதாவது ஒருவனுக்கு ரதியைப்போன்ற சிலாக்கியமும் அந்தமுமுள்ள மனைவியிருந்தும், அவளைச் சுகிக்க இஷ்டமின்றி, குஷ்டம் பிடித்தவளை வெகு அருமையாகப்பாவித்து அவளோடு இன்பத்தை அனுபவிக்கிறது. அவளது துர்க்கந்தம் அழுகின அங்கம், சீழ் இரத்தம்வடிதல் முதலானவையும் தன் கண், மூக்கு வாய் இவைகளுக்கு அந்த நேரங்களில் தெரியாதபடி மனமே முதன்மையாய் நின்று அவள்மீதே சுகத்தை நாடிக்கொண்டிருக்கிறது சிலர் குதிரை, கழுதை, நாய், பசுமாடு முதலிய மிருகங்களையும் சேருகிறது. அந்நேரத்தில் தங்களையும் ஒரு மிருகமாகவே எண்ணிக்கொண்டு அவ்வின்பத்தை நுகருகிறது. அப்படியே ஸ்திரீகளும் தமக்கு மன்மதனைப்போலவும் சுகதேகியாகவும், செல்வ வானாகவும், சம்ரக்ஷணைக் கர்த்தாவாகவுமிருக்கும் சொந்த புருஷரோடு சுகத்தை அனுபவிக்க . இஷ்டமின்றி, எவனாவது குஷ்டம் பிடித்தவனுடைய இன்பசுகமே வெகு பெரிதாய்நாடி அவனையே தழுவிக்கொண்டு வருகிறது. மிருகங்களையும் தழுவுகிறது—மனோபீஷ்டமென்றால், தேன், கற்கண்டு, பஞ்சாமிர்தம் முதலானவெல்லாம் வெறுப்பாயிருப்பது, வேப்பெண்ணெய் எட்டிக்கொட்டை இலுப்பை சாராயம் முதலானது இஷ்டமாயிருப்பது—மனோவிகாரம் என்றால் வெல்லத்தை உருட்டி வாயில் போடும்போதே அது உண்மையான வெல்லந்தானெனினும் அது பேதிமருந்தோ என்று மனமருட்கிகொண்டு சாப்பிடுவதில் அதே வெல்லம் பேதிமருந்தாகி ஒக்காளமும், குமட்டலும், பேதியும் உண்டாகிறது. அப்படியே ஒரு புழுபுழுத்த பண்டத்தைக் கிலேசமின்றி வெகு இனிப்பான பண்டமாய் நினைத்துச் சாப்பிடுவதில் அது மனதை யாதொரு விகாரமும் படுத்துகிறதில்லை. அல்லது சாப்பாட்டில் ஈ செத்திருக்க, அதை ஒப்பிச்சாப்பிட்டால் தீது ஒன்றும் செய்யவில்லை. சற்றுமனம் திரிந்தால் வாந்தி, அருக்களிப்பு உண்டாக்குகிறது. இவை முதலானவைகளே மனதின் விகாரம்—மனப்போக்கு என்றால் ஒருவனுக்கு எல்லா சவுக்கியமுமிருக்க தன்வீடு, தாய்தந்தை முதலானவர்களை விட்டுப்போட்டுத் தான் எங்கே நினைத்துக்கொண்டானோ எதை நினைத்துக் கொண்டானோ அதன்படி ஓடிப்போகிறது. படித்தவர்கள் என்னென்னத்தை நினைத்துக் கொள்ளுகிறார்களோ அதன்படியெல்லாம் கண்டவிடம் ஓடியலைகிறது. போக்கிரிகளும் மூடர்களுங்கூட அப்படியே தம்மனம் போனபடி கண்டவர்களை அடித்துத்தொந்த

ரைப்பன்னி அவதியில் மாட்டிக்கொள்ளுகிறது.—மனோ நிர்ணயம் என்றால், தாம் எதன்மேல் நாட்டம் வைத்தார்களோ அதையே சலஞ்சாதிக்கிறது. ஒருவன் ஒரு இப்பந்தி ஜாதிப்பெண்மீது நினைவுவைத்து அவளையேதான் மணஞ்செய்துகொள்ளவேணுமென்று சாதிக்கிறான். அப்படியே ஒரு கன்னிகை, தன்மனதில் நிர்ணயித்த அந்தப்பையனையேகூடி வாழவேணுமென்று சாதித்துக்கொள்ளுகிறாள். அதுபொருத்தமாயிருக்கட்டும், விருத்தமாயிருக்கட்டும், நிர்ணயித்தது நிர்ணயித்ததே அதனால் பழிவரட்டும், பாவம்வரட்டும்; குடும்பத்திற்கே வெறுப்புவரட்டும், அல்லது துன்பத்தின்மேல் துன்பம் வரட்டும் மனம், சாதித்தது சாதித்ததே. இதுதான் மனோநிர்ணயமென்பது.—மனோ லவுலியம் என்றால், மனதால் பேயைப்போலவும், பூதங்களைப்போலவும், இருண்ட பயங்கர ரூபங்களைப் போலவும், தோண்டான், குட்டிச்சாத்தான், கோட்டான், கூகை முதலியவை போலவும், இரிச்சி, காட்டேரி போலவும் தன்னெதிரே நிழலாடுவதைக் காணுகிற வீண் மனோ தோற்றங்கள் தான் இப்படியே இன்னும் மனோசஞ்சலமென்னும் துக்க விசாரங்களும், மனோவாதனையென்னும் மனநோக்காடும், மனோவாசம் என்னும் மனவெறுப்பும், மனோவிகற்பமென்னும் மனமாறுபாடுகளும் இப்படிப்பட்ட செய்கையெல்லாம் என்னுடைய நொடிக்கெடுவான வேலைகளே.

அல்லாமலும் என்னுடைய ரூபத்தைச் சொல்ல ஒரு ஒப்பனையே கிடையாது ஒரு உத்தேசத்திற்கு பூமியிலிருந்து கிரகமண்டலத்திற்கு 25,20,000 இருபத்தைந்து கோடியே இருபதுலக்ஷம் காததூரமிருக்குமென்று வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள் இந்த ஸாஸ்திரிகள் ஆயிரத்தெட்டு அண்டங்களில் இவ்வண்டத்தைப் பதினாலுலோகங்களாகப் பிரித்து ஒவ்வொரு உலகங்களுங்கு ஒவ்வொரு நூறு யோசனை காததூரமென்று ரூசனை பண்ணியிருக்கிறார்கள். ஆகாசம் இந்த தூரங்களையெல்லாம் கடந்து இன்னும் அப்பாலும் ஒடியிருக்கிறதல்லவா? இப்படிப்பட்ட ஆகாசத்திற்கும் பூமிக்கும் பூமியின்கீழ் பாதாளத்திற்கும், நான்கு திசைகளுக்கும் ஏகமாய் விசாலித்து ஒரே விஸ்வரூபம் நான் என்றாலும் பொருந்தும். இந்தரூபமும் ஒரே விநாடியி லெடுக்கிற ரூபம்தான். இவ்வளவான எனக்கு மிஞ்சினவர்கள் உலகில் யாரிருக்கிறார்கள்? எல்லாம் என்னுள் அடக்கம். உலக முழுதும் என்னுடையதே. உலகமுழுதும் நானே, இவ்வளவான நான், மேற்கண்ட விபரீதமான அனேக செயல்களெல்லாம் செய்தும் அவற்றிற்கும் மேலான ஒரு பெரியவேலையும் செய்கிறேன். அதாவது, பிரபஞ்சத்தின் படைப்புகளையெல்லாம் அந்தந்தச் சாயலாகவும், ரூபமாகவும், அப்படியப்படியே படமெடுத்ததுபோல் எடு

த்து எல்லாம் என்னில் வைத்துக்கொண் டிருக்கிறதுதான். அப்போது என்னில் எவ்வளவு பெரியபண்டகசாலை யிருக்குமென்று நினைக்கிறீர்கள்! ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே வால்மீக முனி எழுதிவைத்த ராவணன் சண்டை இந்த மனதி லிருக்கலாம். 200-ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே விஷ்ணுவெடுத்த நரசிங்காவதாரம் இன்னும் என்மனதில் படம்பிடித்தாப்போ லிருக்கலாம். ஆறாயிரம் வருஷமுன் இருந்த மோசே உருவம் என்மனதில் படிந்திருக்கலாம். இவ்வளவை யடக்கிவைத்துக்கொண் டிருக்கிற நான் எவ்வளவு பெரியவனென்று பாருங்கள். அல்லாமலும், யமதர்மராஜனுக்கு சித்திரகுத்தனென்கிற ஒரு கணக்கப்பிள்ளை யிருக்கிறதாகவும், அவன் உலகத்தின் மனுஷர்கள் நிமிஷந்தோறும்செய்துவருகிற பாவபுண்ணியங்களை யெல்லாம் கணக்கெடுத்து எழுதிவருகிறதாகவும் ஒரு கதை வழங்குகிறதே. அந்தச் சித்திர குத்தன் யார்? மனமாகிய நான்தான். என்னையே அந்தப் பேரிட்டு வைத்திருக்கிறது. நான்தான் நிமிஷந்தோறும் அவரவர் செய்கிற செய்கைகளை யெல்லாம் மனச்சாட்சியாகப் பார்த்துக் கொண்டு அப்போதைக்கப்போது அவைகளைப் படமெடுப்பது போலச் சித்திரம் தீர்த்து வைத்துக்கொண் டிருக்கிறேன். அந்தக் காலத்தில் அவரவருடைய பாவ புண்ணியங்களை உருவுருவாய் நிஜநிஜமாய்க் கணக்கெடுத்துக் காண்பிக்கப்போகிறது நான்தான். ஆகவே இப்படிப்பட்ட என்னை யாதொருவரும் வசப்படுத்திக் கொள்ளப் பார்ப்பது மகா அசாத்தியம். நான் யார்வசத்திற்கும் வசப்படவே இயலாது. என்னை வசப்படுத்த வேணுமென்றுதான் வேதங்களெல்லாம் முறையிடுகின்றன. சாஸ்திரங்கள் யுக்தி போதிக்கின்றன; குருக்கள், தவசிகள், முனிகள், யோகிகளெல்லாம் தவமா தவமிருந்தும் முட்டி நெட்டிக்கொண்டும் சாகிறார்கள். அவ்வளவு இலேசிலா நான் வசப்படுகிறது? யாதொருவன் என்னை மாத்திரம் வசமாக்கிக்கொண்டால் உலகம் அவனுடையது தானே, கடவுள் அவனுக்குச் சொந்தந்தானே, மோட்சம் அவனுடைய காணியாட்சிதானே, ஆனதுபற்றி பக்தியையும் நல்வழியையும் நாடுகிற அனேகருக்கு என்மீதேயே கியாபகம். என்னைப்பிடித்துக்கொள்ள முடியாமல் அனேக ஞானிகள் அழுதார்கள்; அழுகிறார்கள். இவ்வித மகா யோகபோக, விவேக, பிரதாப அதிவீரதீரனாகிய என்னைக் கட்டிப்பிடித்து மடக்கி முடக்கி வசப்படுத்திக்கொள்ள ஒரேயொரு சூட்சக்கயிறு இருக்கிறது. அதாவது, வாசியோக மென்னும் சுவாச பந்தனமே. மனிதனுக்கு ஒருநாளையில் பாயும் இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசத்தை, வாசி யோகத்தால் நாளாவட்டத்தில் குறைத்துக் கொண்டே வந்து கும்பித்து உள்ளே பூரித்துவிட்டால், அதனால் ஐம்புலனடங்க மனமாகிய நான் அந்த வாசிக்கயிற்றினால் கட்டுண்டு அடங்கிப் போவேன். இதற்

காகத்தான் சொல்லுகிறது "குந்தினையா குரங்கே உன் சந்தடிய டங்க" என்று. அதாவது மனக்குரங்காகிய நான் சேஷ்டையற்று க் குந்திவிடுவேன். நான் கட்டுண்டுபோனால் பொறி புலன்களியா தொரு வேலையும்செய்யாது. அப்போது தான் நிலையான பக்தி கைகூடும்; இதற்குத் திருஷ்டாந்தம் பார்க்கவேண்டுமானால், ஒரு விஷயத்தின்மீது ஊன்றிக் கவனிக்கும்போது மூச்சும் சற்று நிதானமாய்ப் பாய்கிறது; யாதோ ஒரு விஷயத்திற்காகச் 'சற்றுமனம் பிடியடா' என்றால் மூச்சைத்தான் பிடித்துக் கொண்டு கவனிக்கிறதைக் காணலாம். ஆகவே என் ஆண்டவனே, இவ்வளவு மகத்துவம் பொருந்தியவன் நானென்று உமது திருவுளத்திற்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் என்னுடைய இருப்பிடமெல்லாம் கூடிச் சுரணை நரம்புகளும், சலன நரம்புகளும், புலமை நரம்புகளும் வந்து கூடியிருக்கும், சிரசின் மூளையில் முன்பாகமாயிருக்கும் மூளையினிடத்தே தான், இங்கிருந்துகொண்டுதான் அந்தந்தப் புலன்களையும் எவற் பணிவிடைகள் வாங்கிக்கொண்டிருக்கிறேன். புலன்களைப் புலமை நரம்புகளின் மூலமாய் வேலை வாங்கிவந்தாலும் நானே என் சுயஇஷ்டமாய் நடத்துகிறதில்லை. என்னையும் யாரோ ஒருவர் இருந்துகொண்டு தான் இயக்குகிறார். ஆகவே இவ்வழக்கில் எனக்கு ஒன்றும் தெரியாது. தயை செய்வீராகவும்.

அரசர்:—ஆம், நீ மகா பெரியவன்தான்; அப்படியே உன்னுடைய பிரசங்கமும் வெகு நீட்டமாயிருந்தது. நீ ஒதுங்கி நிற்கலாம்; அடுத்த சாக்ஷி வரட்டும்.

புத்தியின் சாக்ஷி.

"புத்திக் கடங்காப் புராதனமே! புண்யமூர்த்தியே! என்பேர் புத்தி; அந்தக்கரணத்தில் ஓர் அம்ஸமானவன், என்னைப் பற்றி நான் சொல்லவேண்டியது ஒன்றுமேயில்லை "புத்திவான் பலவான்" என்றிருப்பதினாலே, இந்த முதுமொழியே நான் எத்தன்மையானவனென்று தெரிவித்து விடுகிறது, என்னைத் தேடாதவர்கள் உலகில் ஒருவருமேயில்லை; என்னை யடைந்து கொள்ளுகிறவர்கள் ஒருக்காலும் கெட்டுப்போகிறதேயில்லை; ஏழையாய்ப் பிறந்தவனோ, தாழ்ந்த ஜாதியோ, அங்கவீனனோ, அழகு கெட்டவனோ, நோய் பிடித்தவனோ, நோஞ்சவனோ, எப்படிப்பட்ட ஈனஜாதியாயிருந்தாலும் சரியே; புத்தியாகிய என்னை அடையப்பெற்றிருந்தால் அவன் இராஜசிம்மாசனம் வரையில்கூட உயர்த்தப்படுகிறான். அது மாத்திரமல்ல; அவன் ஜீவிய காலமெல்லாம் யாதொரு ஆபத்திலும் அகப்படாமல் நல்லஜீவனமாய் ஜீவிக்கிறான்; அவனைப் பூமிநோகாத புண்ணியவானென்று உலகம் வாழ்த்துகிறது, அவன் தன்னைத்தான் சீராய்க் காப்பாற்றிக்கொள்ளுகிறது மாத்திரமேயன்றித் தன்னைப்போன்ற அநேக ஜீவாத்மாக்களைக்

காப்பாற்றும் தலைவனாகவும் நல்லஅந்தஸ்துடையவனாகவும் விளங்குவான்; புத்தியுள்ள அவனை ஆயிரம் பதினாயிரத்திற்கு நம்புகிறார்கள். அவன் பதினாறுவயதுடையவனாயிருந்தாலும் அவனிடம் அறுபதுவயதுள்ளவர்கள் தானும்வந்து புத்தி படித்துக்கொள்ளுகிறார்கள் புத்தியானது சத்தியத்திற்கு மாளிகையென்று சொல்லலாம். ஏனெனில் என்முக்கியதொழிலானது மனதின் தோற்றங்களனைத்தையும், விசாரித்துவருகிற பகுத்தறிவே. இதனால் தீமையால் வருவது இன்னின்ன, நன்மையால் வருவது இன்னின்னவென்றுபிரித்துக்காட்டுவதில், சத்தியமானது பெருமையடைய நானேயதற்கு சிங்காரமாயிருக்கிறேன். இதுமாத்திர மல்ல, ஞானத்திற்கு நான்தான் முதற்படி, ஞானிகளுக்கெல்லாம் நானே வழிகாட்டி ஆனாலும் என்தொழிலையும் நானே சுயமாய்ச் செய்கிறவனல்ல; என்னையும் யாரோ ஒருவர் சூட்சமாய் நடத்துகிறபடியால், இந்த வழக்கில் யாதொன்றும் எனக்குத் தெரியாது. மன்னிக்க."

அரசர்.—சரி, நீயும் அப்புறம்போயிரு; அடுத்தசாக்ஷியார்?

சித்தத்தின் சாக்ஷி.

"சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே! என்பெயர்சித்தம். உலகின் எல்லாவேலையும் என்னால்தான் நிறை வேறுகிறது. மனம் என்னென்னத்தையோ வெல்லாம் நினைக்கும், புத்தி அவைகளை இப்படியல்ல அப்படி, அப்படியல்ல இப்படி என்றும், நல்லதோ கெட்டதோ என்றும், விசாரணையாகிய கிழட்டு வேலை செய்துகொண்டிருக்கும்; இவை இரண்டினாலும் இதுதான் ஆகுமேயன்றி மற்றொன்றும் ஆகாது. சித்தமாகியநானோ அதுநன்மையாயிருக்கட்டும் தீமையாயிருக்கட்டும், செய்தே தீர்த்துப் போடுகிறதுதான் என் வேலை 'சித்தம் வைத்தால் முடிந்தது' என்பது சுலோகமல்லவா? அதுபோல நாட்டை யுண்டாக்குகிறவன் நானே, வீட்டைக் கட்டுகிறவன் நானே; கல்வியையும் சாஸ்திரங்களையும் ஞானங்களையும் எழுத்தாய் எழுதிப் புத்தக ரூபமாய் வெளிப்படுத்துகிறவன் நானே, இப்படி உலகிலுள்ள வஸ்துக்களெல்லாம் என்னாலேயே முடிந்துகொண்டு வருகிறது, நானில்லா விட்டால் எந்தவிஷயமும் நினைத்து நினைத்து அந்தநினைப்பின் அளவிலேயே ஒழிந்துபோகும். "சித்தத்திற்குப் பித்தம் தூர்மந்திரி, துரைசித்தமோ க்ஷணப்பித்தமோ" என்று சொல்லவேண்டும். ஏனெனில் சித்தமானது பித்தம் எம்மாதிரி கிளப்பிவிடுகிறதோ அதுபோலச்செய்து தீர்த்துவிடும்; ஒரு காரியத்தைச் செய்யச் சொல்லி நாலுரூபாய்ச் செலவிட்டு நடத்தும்; நடத்தும்போதே அது அப்படியல்ல, அதுவேண்டாம் அழித்துப்போட்டு வேறுவிதமாய்ச் செய் என்று உத்தரவிடும். அப்போது இவனென்ன பித்தம் பிடித்தவனோ என்கிறார்கள். இந்தச் சித்தமாகிய என்னை நேர்மை

யாய் நடத்திச்சொல்லப் பபின்றவர்கள் உலகத்தில் என்ன பாக்கியவான்கள்! அல்லாமலும் சித்தந்தான் பிரஜாபி விருத்தி, பிரபஞ்ச அமைப்பு. முடிவாகச் சொல்லப்போனால் உலகம் படைத்த கடவுளுக்குங் கூட சித்தம்தான் தனது பெருந்தன்மைக் குரியதாயிருக்கிறது, "ஆண்டவனே! நின் சித்தப்படி ஆகக் கடவது என்றும் அனேகர் விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறது வழக்கமாயிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சித்தமாகிய நான் அந்தக்கரணத்தின் ஓர் அம்ஸமாயிருப்பதினால் நானும் என் சித்தப்படி ஒன்றும் இயற்றுகிறவனல்ல, யாரோ ஒருவரிருந்துகொண்டுதான் என்னையும் கிளப்புகிறார். எனவே இந்த வழக்கில் யாதும் எனக்குத் தெரியாது; மன்னிக்கவும்.

அரசர்-அப்படியானால் நீயும்போய் தூரநில் அடுத்தசாக்ஷியார்?

அகங்காரம் சாக்ஷி.

சத்துசித்தானந்தமே, ஜகசோதியே! சரணம். அடியன்பேர் அகங்காரம். அகங்காரம்என்று சொன்னவுடனே உலகத்தார் வேறுமாதிரியாய் என்னைச் சம்யோகத் தொழிலுக்குரிய ஆங்காரி என்று நினைப்பார்கள். அந்த விஷயத்திற்குத்தான் அகங்காரம்ஆங்காரம் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அது தகாது. அகங்காரமென்றால் அந்தத் தொழிலுக் கர்த்தமல்ல. அதற்கு ஆனந்தமென்று பெயர்; எனக்கு அகங்காரமென்று பெயர். அகங்காரம் என்றால், சித்தம் முடிவு பண்ணினதைக்கொண்டு, மேலும் மேலும் எழும்பிச் செய்கிறதுதான். என்னிடத்தில் 'அகங்காரத்திரயம்' என்கிற மூன்றுவித அம்ஸங்களிருக்கின்றன. அதாவது முக்கிய அகங்காரம்; முக்கியா முக்கிய அகங்காரம்; அமுக்கிய அகங்காரம் என்பவைகளே முக்கிய அகங்காரமென்றால், அவசியம் ஆகவேண்டிய ஒரு காரியத்திற்குச் சத்துவமும் பலமும், முயற்சியும் கொண்டு அதாவது தனக்குள் தானே எழுப்பிக்கொண்டு அதைச் செய்து முடிப்பது. முக்கியா முக்கிய அகங்காரமென்றால், அவசியமோ அவசியமில்லாததோ எதுவானாலுஞ்சரி; செய்யத் துணிந்துவிட்டதைச் செய்தே தீர்த்துப் போடுகிறதென்கிற ஓர் கர்வம் கொள்ளுகிறது. திருஷ்டாந்தமாக, ஒருவன் தன் குடும்பத்தில் நாலு குமாரத்திகளையுடைத்தானவனாயிருக்கிறான். அதில் ஒரு குமாரத்திக்கு வாழ்வுவந்தது. பெண்ணைக் கட்டிக்கொடுப்பதில் அவள் பிறன்வீடுபோய் வாழ வேண்டியவளாகிறதால் அவளுக்காக விசேஷம் செலவுசெய்ய வேண்டிய நிமித்தமில்லையென்று தெரிந்தும் அவள் கலியாணத்திற்காகத் தன் வீடு முழுவதையும் விற்றுச் சுட்டு விண்செலவிட்டுக் கடன்காரனாகிறான். இதிலே கலியாணம் அவசியம்; செலவு அனாவசியம்; இஃதிரண்டையும் சம்பந்தித்து நடுவிலே எழுந்த அகங்காரமே முக்கி

யாமுக்கிய அகங்காரம்; ஒருவனுக்கு விசனமுண்டானது; அதற்குக் கொஞ்சம் குடித்தால்தான் விசனம் மாறுமென்று வைத்தியர் சொன்னார். அதன்படி குடிக்கப்போய் ஒருதிராணுக்கு மிஞ்சிஇரண்டுபுட்டி சாராயத்தைக் குடித்துவிட்டுச் சண்டையிட்டு மண்டையுடைத்துக் கொண்டான் இதிலே கொஞ்சங்குடி அவசியம், ஜாஸ்திக்குடி அனவசியம்; இதன் நடுவிலே உற்பத்தியானதோ. குடித்தே தீருகிறதுபோ; என்கிற ஒருவித கர்வமே. இப்பால் அமுக்கிய அகங்காரமென்பது: பிரயோஜனமில்லாத காரியங்களிலெல்லாம் புகுந்து தலைவிரித்தாடுகிறது. வீணுக்கெல்லாம் உடைந்தைப்பட்டு விருதுகூறிக் கொக்கரிக்கிறது. வேண்டியிராத விஷயங்களில் வேண்டுமென்று தலைதூக்கிக்கொண்டு தன் பலாத்கிரமத்தைக் காட்டுகிறது. தனக்கெதிரியில்லாத பேதைகள் மீதும் தன்தேகத்தின் திமிரைக்காட்டித் துன்பப்படுத்துகிறது இவைகளெல்லாம் அமுக்கிய அகங்காரம். இந்த மூன்றுவிதமான அகங்காரத்தை நடத்துகிறவன் நான் இதற்குமேல் பிரம்மத்தினிடத்து தாமஸ அகங்காரத்தினிடமாய் உலகம் உதித்ததை ஆன்மவாதி விவரித்திருக்கிறபடியால் மீண்டும் நான் செப்பவேண்டியதில்லை. இவ்வளவிலே நானிருந்தும், நானும் என்சொந்தமாகவே யாதும் செய்கிறவனல்ல. என்னையும் யாரோ ஒருவரிருந்து ஆட்டுகிறபடி நான் செய்கிறேனாதால், இந்த வழக்கில் எனக்குயாதொன்றுந் தெரியாது; மன்னிக்கவும்.

அரசர்:—நீயும்போய் தூரநில்; இப்போது அடுத்த சாக்ஷியார் வரவும் ?

அறிவின் சாக்ஷி.

அறிவினுக்கறிவாய் ஆனந்தமயமாய் நிற்கும் அண்ணலே ! அடியன் பெயர் அறிவு. ஆண்டவனே என்னை நானென்னென்று சொல்லுவேன். சிலர் அறிவே ஆன்மா என்கிறார்கள்; சிலர் சைதன்னியம் என்கிறார்கள்; சிலர் புத்தி யென்கிறார்கள்; சிலர் உணர்ச்சி யென்கிறார்கள்; சிலர் உண்மை யென்கிறார்கள்; சிலர் காட்சியென்கிறார்கள்; சிலர் ஞாபகம் என்கிறார்கள்; சிலர் ஞானமென்கிறார்கள்; சிலர் புலனென்கிறார்கள்; சிலர் பொறியென்கிறார்கள்; சிலர் அறிவே சிவம், அல்லது சிவன் என்கிறார்கள்; சிலர் அறிவே குரு என்கிறார்கள்; எவரெவர்கள் எப்படி வைத்துக்கொண்டாலும் அப்படியெல்லாம் நானிருக்கிறேன்; தண்ணீரென்றால் தண்ணீர்தான்; அதைச் சமுத்திரமென்றாவது, கடலென்றாவது, நதியென்றாவது, கால்வாயென்றாவது, மதகென்றாவது, ஓடையென்றாவது, ஏரியென்றாவது, குளமென்றாவது, கிணறென்றாவது, ஊற்றென்றாவது என்னென்னமாய்ப் பேரிட்டு அழைத்துக் கொண்டாலும் அந்தத் தண்ணீர் தண்ணீர்தானே! அதுபோல ஞான சத்து

வமான எல்லாப்பேரும் எனக்கேதான் என் தொழிலோ என்னை நானேகண்டு மகிழ்ந்திருத்தல்தான். ஆகவே எனக்கும் மேலான யாரோ இருந்து எனக்குச் சுடர்சொருத்துவதால் இந்த வழக்கில் யாதொன்றும் எனக்குத் தெரியாது. ஆண்டவனே மன்னிக்கவும்.

அரசர்:—மற்ற சாக்ஷிகள் யார், வரட்டும்

தச நாடிகள்:—அடியேம் சரணம்.

பஞ்சாயத்தார்:—அரசே! இப்போது சாக்ஷி பகர்ந்த 30-பேரும் முதல் தத்துவக் கூட்டத்தார் என்று சொல்லப்படுகிறவர்கள். 96-தத்துவத்தில் இன்னும் 66-பேரிருக்கிறார்கள். இவர்களையும் விசாரிப்பது உத்தமம். இதோ சமுகத்தில் வந்து நிற்கிறார்கள்.

அரசர்:—நீங்கள் யார்; உங்கள் பேரென்ன; தொழிலென்ன; இந்த வழக்கில் என்னத்தை அறிவீர்கள்? வரிசையாய்ச் சொல்லுங்கள்.

தச நாடிகள் சாக்ஷி.

உலகாதியந்தமும் கடந்தொளிரும், உயர்கோனே! அடியோர் பேர் தசநாடிகள். நாங்கள் பத்துப் பேரும் ஒரே பிறப்பு. நாங்கள் தான், ஒவ்வொரு மனிதனையும் நிலையாய் நிறுத்திப் பலன்கொண்டு வாழவும், அவர்கள் உலக விஷயங்களை யெல்லாம் ஓர்ந்து உஜ்ஜீவிக்கவும், அவனவனுக்குச் சத்துவ மளிக்கிறவர்கள். ஆகவே, எங்கள் பேரையும், தொழிலையும் ஸ்தானத்தையும் வரிசையாய்ச் சொல்லுகிறோம்.

இடகளாநாடி:—நான் ஒவ்வொரு மனிதனின் வலதுகாற் பெருவிரலிலே நின்றெழும்பி மூதுகண்டைக் கத்திரிக்கோல் மாறலாகி இடது நாசியண்டைப் பாய்ந்து சுவாசம் கொடுத்துக்கொண்டிருக்கிறவன்

பிங்களாநாடி:—நான் அதேமனிதனின் இடதுகாற் பெருவிரலிலே நின்றெழும்பிக் கத்திரிகை மாறலாகி வலதுநாசியைப்பற்றி சுவாசங் கொடுக்கிறவன்.

சுஷும்னாநாடி:—நான் மூலாதாரத்திலே தோன்றி ஆறுதாரமும் பாய்ந்துகொண்டு சகல நாடிகட்கும் ஆதாரமாக நடுவே நடுநாடியாகச் சென்று சிரசளவு (உச்சித் துவாரம் வரையில்) முட்டி நிற்பவன்.

சங்கினிநாடி:—நானும் மூலாதாரத்திலே தான் தோன்றி லிங்க உஸ்தங்களைப்பற்றி நின்று, மற்றுமான ஒரு நாடியைக் கூட மிஞ்சவொட்டாமற் செய்துகொண் டிருக்கிறேன்.

குருநாடி:—நானும் மூலாதாரத்திலே தோன்றி, நாபியிலே நின்று ஈரலைப்பற்றி குடலைப்புரட்டி, வாய்நீர் கழட்டிவைக்கிறது மன்றிக் குய்யத்தையும் பற்றி நிற்பவன்.

காந்தாரிநாடி:—நான், நாபியில் தோன்றி சத்த மேழுக்கும் எழு நாடியாகக் கண்டத்தில் நிற்பவன்.

அலம்புடைநாடி புருடநாடி	நாங்களிருவரும் செவியண்டை நாற்றிருபது நரம்புகளோடு கூடியிருப்பவர்கள்.
அத்திநாடி சிங்குவைநாடி	நாங்களிருவரும் பத்து நாடிகளோடு கூடி கண்களண்டை நிற்பவர்கள்.

இவ்வண்ணம் தசநாடிகளும் அந்தந்த வேலைகளை மாத்திரம் செய்துகொண்டு போகிறோமேயன்றி, நாங்கள் சொந்தசக்தியுடையவர்களல்ல. எங்களை யாரோ அசைத்துவருவதின்படி ஆடுகிறோமாதலால் இவ்வழக்கில் எங்களுக்கு ஒன்றுந் தெரியாது; மன்னிக்கவும்.

அரசர்:—சரி நீங்கள் போங்கள், மற்ற சாட்சிகள் யார்?

தச வாயுக்கள்:—ஆண்டவனே! அடியோர் நாங்கள் பத்துப் பேர் வாயு கூட்டத்தார். இதோ சொல்லுகிறோம்.

(1) பிராணவாயு:—நான் மனிதனது மூலாதாரத்திலே தோன்றி சித்திரநாடியிலே விழுந்து இடகலை பிங்கலையிலோடி கபாலத்தைச்சுற்றி நாசிவழியாய்ப் பன்னிரண்டு அங்குலம் புறப்பட்டு, அதில் நாலங்குலம் குறைய மீண்டும் எட்டங்குலமாய் மேற்படி மூலாதாரத்திலேயே போய்த் தாக்கி, இப்படியே நாழிகைதோறும் உச்சுவாசம் நிச்சுவாசம் பண்ணிக்கொண்டிருக்கிறவன்.

(2) அபானவாயு:—நானும் மூலாதாரத்தில் தோன்றி, குதம் குய்யத்தைப்பற்றி நின்று, மலசலாதிகளை வெளியிற் கழித்துக்கொண்டிருப்பவன்.

(3) வியானவாயு:—நானும் மூலாதாரத்தில் தோன்றி சரீர முழுவதும் வியாபித்து, மனிதனுக்குக் களையையும் தாகத்தையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறவன்.

(4) உதானவாயு:—நானும் மூலாதாரத்திலே தோன்றி நாபியில் நின்று உதிராக்கினியை எழுப்பி, மனிதன் உண்ணும் உணவுகளின் சாரத்தை சகல நாடிநரம்புகட்கும் இரத்தமயமாய் ஊட்டுவித்து, மனிதன் உடலை வளர்த்துக்கொண்டிருக்கிறேன்.

(5) சமானவாயு:—நானும் மூலாதாரத்தில் தோன்றி, தேகத்தில் வாத பித்த சிலேட்டுமங்களை மிஞ்ச வொட்டாமலும் சகல வாயுக்களும் ஏற்றத் தாழ்வுபட வொட்டாமலுஞ் சமானஞ் செய்துகொண்டிருப்பவன்.

(6) நாகன்வாயு:—நானும் மூலாதாரத்திலே தோன்றி, உடல், எலும்பு, கண்டம், முதலிய விடங்களில் நின்று, நீட்டலும் முடக்கலும் கிடக்கலுஞ் செய்து, கொட்டாவி, விக்கல், வேர்வைக் கழலுதல் முதலியன செய்துகொண்டு வருகிறேன்.

(7) கூர்மன் வாயு:—நானும் மூலாதாரத்திலே தோன்றி கண்களில் நின்று இருவிழியையும் இமைப்பிக்கிறதுமன்றி, தேதாதி உரோமங்களை யெல்லாம் புளகதப்படுத்திக்கொண்டு வருகிறேன்.

(8) கிருதரன்வாயு:—நானும் மூலாதரத்தில் தோன்றி புருவமத்தியிலே நின்று, சினமும் வெம்மையும், தும்மலும், அழுகையும் உண்டாக்கிக்கொண்டு வருகிறேன்.

(9) தேவதத்தன்வாயு:—நானும் மூலாதரத்திற் றேன்றி, கரசரணாதிகளிற் பாய்ந்து, ஒட்டியும் உலாவச்செய்தும் உயித்தியம் செய்யவைத்தும், வாயில் வார்த்தையைக்கிளப்பியும் தொழில்செய்து வருகிறேன்.

(10) தனஞ்செயன் வாயு:—நானும் மூலாதாரத்திலேதோன்றி சித்திர நாடியிலே விழுந்து பிராணன் தேகத்தைவிட்டு நீங்கியும் நான் சட்டென நீங்காமல் உள்ளேயிருந்து சரீரத்தை வீங்கவைத்தும் விரியவைத்தும், மூன்றுநாளில் கபாலத்தைப்பிளந்துகொண்டு வெளியே ஓடிப்போகிறவன், இப்படியாக நாங்கள் பத்துப்பேரும் தனித்தனியான வேலைகள் செய்துவந்தபோதிலும், இவ்வேலைகளை எங்கள், சுயமாகவே செய்யாமல் எங்களை யாரோ ஒருவரிருந்து தட்டியெழுப்பி வேலை வாங்குகிறதால் ஆண்டவனே! இந்தவழக்கில் எங்களுக்கு ஒன்றும் தெரியாது; மன்னியும்.

அரசர்:—சரி, அடுத்த சாட்சிகள் வரட்டும்

வசயங்கள்:—அடியேம் சரணம் சுவாமி

அரசர்,—உங்கள் பெயரென்ன? தொழிலென்ன? இவ்வழக்கில் உங்கள் சாக்ஷியென்ன?

ஆண்டவனே! எங்கள்பெயர் வசயம். வசயமென்றால் குற்றமான இடம் என்று பொருள் கொள்ளலாம்; எனவே நாங்களிருப்பதெல்லாம் குற்றமான இடத்திலேயே.எங்கள் ஐவரில் அமாவசயம், அன்னமும் ஜலமும் இறங்கும் இடமாகும்.—பருவவசயம் அன்னத்தையும் ஜலத்தையும்பிரிக்குமிடமாகும்—மலவசயம் மலக்குழியில்இறங்குமிடமாகும்,—சலவசயம் நீர்க்குழியிலிறங்குமிடமாகும்—சுக்கிலவசயம் இந்திரியம் பிரியுமிடமாகும்; இவ்வளவேதான் எங்களுடையது. இப்படிப்பட்ட நாங்கள் யாதொன்று மறியாதவர்களாதலால்இவ்வழக்கில்எங்களுக்கொன்றுமேதெரியாது

அரசர்;—சரி, அடுத்த சாட்சிகள் வரட்டும்.

கோஸங்கள்:—ஆண்டவனே! நாங்கள் அன்னமய கோஸம், பிராணமய கோஸம், மனோமய கோஸம், விஞ்ஞானமயகோஸம், ஆநந்தமய கோஸம் என்னும் ஐந்துபேர் ஒருகூட்டாளிகள் இதிலே அறுவித சுவைகளாகியஆகாராதிகளால் போஷிக்கப்பெற்று விகாரமடைந்திருக்கும் இந்த ஸ்தூலதேகமே அன்னமயகோஸ

மென்பது.—பிராணன் கை, கால், வாய், அபானம், ஆண் பெண் குறியென்கிற கன்மேந்திரியங்களும் கூடியது பிராணமய கோஸம்—மனதும் அதோடு கால், கை, வாய், அபானம், ஆண்பெண் குறி இவைகள் சேர்ந்தது மனோ மயகோஸம்—புத்தியும் அதோடு மெய், வாய், கண்மூக்கு செவியென்கிற ஞானேந்திரியங்களுந் தாம் கூடியது விஞ்ஞானமய கோஸம்; கடைசியாக காரணசரீரமே ஆநந்தமயகோஸம்—இப்படியாக நாங்கள் தேகத்தோடுசம்பந்த பட்டவர்களா யிருந்தும், சொந்த சத்துவமற்று யாரோ ஒருவர் கிளப்புகிறபடி நடக்கிறவர்களானபடியால்,இவ்வழகில் எங்களுக்கொன்றும் தெரியாது; மன்னியும்

அரசர்:—சரி. நீங்கள் போங்கள்; அடுத்தசாட்சிகள் வரட்டும்.

பஞ்சாயத்தார்:— அரசே! இப்போது வந்து சாட்சி சொன்ன முப்பது நபர்களும், இடைத்தத்துவமென்னும் ஓர்கூட்டத்தார். 96-தத்துவக்காரர்களில் இதோடு 60-பேரை விசாரித்தாயிற்று; இன்னும் 36- பேரிருக்கிறார்கள். இதுவரையில் சாட்சிசொன்ன 60-பேரையும் வரிசைக்கிரமமாய் விசாரணையிட்டதில், அவர்கள் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொண்டு, எல்லாம் ஒரேபாடமாக இவ்வழக்கில் "ஒன்றும் அறியேன், ஒன்றும்அறியேன்" என்று கை கழுவுகிறார்கள். ஆனதால் இப்போது வந்திருக்கும் முப்பத்தறுவரை முன்னும்பின்னுமாக்கி ஒருவருக்கொருவர் கலக்கவொட்டாமல் வைத்து சாட்சி விசாரிக்கவேண்டும். இந்த ஒருயுக்தி எங்கள் மனதிற் படுகிறது.

அரசர்:—ஆனாலப்படியே ஆகட்டும், இப்போது பின்முன்னாக ஒருகூட்டத்தார் எதிரில் வரவு;

அவஸ்தைகள் —ஆண்டவனே! அடியோர் சரணம். நாங்கள் அவஸ்தைகள் ஐவர் இதோ சொல்லுகிறோம்.

சாக்கிராவஸ்தை சாக்ஷி.

ஐயனே, அரசே! என் பெயர் சாக்கிரம். சாக்கிரமென்றால் விழிப்பு; ஒவ்வொரு மனிதனுக்கும் நானிருக்கு மட்டுந்தான்உலகம்; நானில்லையேல்,உலகமென்பது அவரவருக்கும்இல்லாமலே போகிறது. எப்படியெனில். ஒருவன்விழித்திருந்தால்தான் அவன் கண் பார்க்கிறது, காது கேட்கிறது,வாய்பேசுகிறது, மூக்கு முகருகிறது; என்னழிப்புச் சற்றுத் தளர்ந்தால் இவைகள் யாதொரு வேலையுஞ் செய்யாது. இதற்காகவே எனக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி—சத்த ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்:—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்;—வசனம், கெமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்;—பத்துவாயு; மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆக இந்த முப்பத்திநாலு கருவிகரணங்களும் இராஜசேவகர்களைப்போல நியமிக்கப்பட்டு, என்விழிப்பின் வேலையைச்செய்கிறார்கள். இந்த 34 துணைவர்களையுங் கொண்டு உலக காரியங்

களை நடத்திக்கொண்டும் பார்த்துக்கொண்டும் வருகிறேன். எனக்குச் சத்துரு மறதியென்னும் அஞ்ஞானம். இந்த மறதிதான் உண்டாகக்கூடாதென்றும், எப்போதும் விழிப்பிலேயே இருக்கவேண்டுமென்றும் ஞானிகளெல்லாம் என்னையே கோருகின்றார்கள். இதிலே விழிப்பென்றால், கண் காது வாய் முதலியவைத் திறந்துகொண்டிருக்கிறதென்கிற அர்த்தமல்ல; இந்தமேல் தோற்றமாகிய அங்க உறுப்பான கண்கள் மூடிக்கொள்ளட்டும். சாதுகள் அடைந்து கொள்ளட்டும். வாய் பொத்திக்கொள்ளட்டும்; தூங்காமல் தூங்கும் பாவனையைக்காட்டி உட்புலனாகிய உயிர்க்கூறுகள்தொழில் செய்துகொண்டிருக்கிறவிழிப்பென்பது தான் கருத்து. இந்த உள்விழிப்பை வசமாக்கின மகான்களன்றோ ஜாக்கிரம நிலைக்காரர்கள்; மற்றவர்களெல்லாம் இறந்துகொண்டும் பிறந்துகொண்டும்வருகிறவர்களென்று திருஷ்டாந்தங்காட்ட, மாலையில் தூங்கியும் காலையில் விழிப்பதுமாயிருப்பவர்கள் தான். ஆகவே இப்படிப்பட்டநான் ஒரு அருமையானவனாயிருக்கிறேன் ஆயினும்என்னைச் சுடர்கொளுத்துகிறவர்எவரோ இருப்பதாலேயே என்விழிப்பின்தொழிலை நான்நடத்துகிறேன். எனவே இவ்விருவர் வழக்கில் எனக்கொன்றுந்தெரியாது, மன்னியும்

சொப்பனம் சாக்ஷி

திவ்யஸ்வரூபமே, சின்மயானந்தமே! என்பெயர் சொப்பனம். சொப்பனமென்றால்கனவு கனவாகிய என் மகா ஆச்சரியமான வேலையை, நாளதுவரையில்ஒருவரும் கண்டுபிடிக்கமுடியாமல் தவிக்கிறார்கள். பல சாஸ்திரிகளும் பல பலவிதமாய் என்னைப்பற்றி அபிப்பிராயப்படுகிறார்கள். கனவு காண்பதைச்சிலர்எண்ணம்போல் துக்கத்தில் வருகிறதுதானென்கிறார்கள். சிலர், ஒருவிஷயத்தைப்பற்றி அடுத்தடுத்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருந்தால் அதுவே கனவாய் வருகிறதென்கிறார்கள். சிலர் பலவீன முள்ளவர்களுக்குத்தான் அனேகமாய்க் கனவுகளுண்டாகிறதென்கிறார்கள். சிலர் தேகம் மெத்த அலுப்புண்டாகிறவர்களுக்குக் கனவு ஜாஸ்திஎன்கிறார்கள். அதற்குத் திருஷ்டாந்தம், குழந்தைகள் மெத்த ஆட்டம் ஆடுகிறதால் அதுகள் இராத்திரிக்கெல்லாம் அனேக கனவுகளைக்கண்டு பயந்தும், தொனப்பியும் வருகிறதைக் காணலாம் என்கிறார்கள். சிலர் கனவு பித்தத்தின் சேஷ்டை யென்கிறார்கள். சிலர் மூளைக்கு அதிக வேலை கொடுப்பதினால் கனவு உண்டாகிறது என்கிறார்கள். சிலர் உடலுயிர் விசித்திரத்தைப் போன்று அறியக்கூடாதஅது ஒரு சித்து என்கிறார்கள் சிலர் நனவே கனவு என்கிறார்கள். சிலர், மனோவிகாரமே கனவு என்கிறார்கள். சிலர் அதுஒரு நித்திரைபங்க வியாதி என்கிறார்கள். சிலர் சூக்மதேக வியவகாரம் என்கிறார்கள். இப்படிப் பலருடையதும் பலவித கோட்பாடாயிருக்கின்றன. இருந்தாலுமென்ன? என்

னுடைய செய்கை மகா ஆச்சரியகரமானது, இப்படிப்பட்டசோட்பாடுகளுக்கெல்லாம் இது வேறுபட்டதாயுமிருக்கிறது.

என்னுடைய விநோதமான செய்கையைக்கேளுங்கள். ஒருவன் இன்று ராத்திரியில், அவன் கடலில்விழுந்து தவிப்பவனைப்போலவுங் கிணற்றில் அல்லது பாதளத்தரவில் தலை கீழசாய்விழுந்து அமிழ்ந்தி திக்குமுக்காடுகிறவனைப்போலவுங்கனவு காணுகிறானென்றால், அடுத்தநாள் அவன் ஜலதோஷம் குளுமை ஜுரம் முதலிய நோயில் எதாவதொன்றை யடைகிறான். இன்றுராத்திரியில் ஆகாயத்தில் பறப்பதுபோலக் கனவுகண்டால், மற்றாநாள், வாதநோயில் சிக்குப்படுகிறான். அப்படியே வீடு பற்றியெரியவாவது, அக்கினிக்குண்டத்தில் தான் அகப்பட்டுக் கொண்டது போலவாவது கனவு கண்டால் மற்றாநாள் பித்தநோய்அல்லது அதிசச்சூடு முதலிய நோய்அடைகிறான். நாலாம்வீட்டில் எட்டாம்வீட்டில்ஒருவர்நாளைக்குச் சாகப்போகிறதென்றால்,இன்றிராத்திரியில் ராஜசேவகர்கள் வந்து தன்னை விசாரிப்பது போலவும், தன்வீட்டில் யாரையோ தேடுவதுபோலவும் கனவு காணுகிறான். ஒருவன் ஒரு துக்கமான கனவுகண்டுகொண்டேயிருந்து, அக்கனவிலேயே இன்னொருவன் அழுகிறதும் புலம்புகிறதும்போலக்கனவுகண்டுகொண்டு விழித்த, அதே நேரத்திலேயே மெய்யாகவே ஒருவன் துபரப்புலம்பல் பரடிக்கொண்டுதான்இருக்கிறான். அதேபுலம்பல்தான் கனவில் இவன் கேட்டதாய் இருக்கிறது. ஒருவன் காமக்கனவினால் தாதுஸ்கலிதமடைகிறான்; அடுத்தநாள் அவன் தேகம் நெருப்புக்குச் சமானமான சூடுகொண்டிருக்கிறது. ஒருவன் தனக்கு நாளைக்கு அகத்தியம் கிடைக்கப் போகிற பணத்திற்குக் காத்திருக்க அன்றிரவு அப்பணம் கையில் கிடைத்து விட்டதுபோலக் கனவுகாண, மற்றாநாள் அப்பணம் கிடைக்காமலே போகிறது. ஒருவன் ஒருஸ்திரீயைக்கையைப்பிடிக்கிறப்போலவும் அவள் அவனை உதறிப்போட்டு ஓடிவிட்டது போலவும் கனவுகாண, அதற்குஎதிர்மாறாக மற்றாநாள் அந்தஸ்ரீயே அவனுக்கிசைந்து தன்னிடம் வந்து விடுகிறாள். ஒருவன் தன் நேசன் செத்துப்போனதாகவே இன்றிராத்திரி கனவு கண்டால், மற்றாநாள் அப்படியே அச்சிநேகன் செத்துப்போயிருக்கிறான். ஒருவன்வெகுதூரமான ஒருஊரில் வசிக்கிற தன் அண்ணன், தம்பி, சகோதரி. வியாதிபட்டதாகக் கனவுகண்டால்,மறுநாள் காலை மெய்யாகவே அவர்களிலொருவர் வியாதிபட்டிருப்பதாகச் சேதிகேட்கிறான். ஒருவன் இன்றிராத்திரிக்குக் கனவு கண்டு மறு நாள்எனக்குப்பணம்கிடைக்கிறது, பொருள் கிடைக்கிறது என்றுநிச்சயமாய் நம்பிக்காத்திருக்கிறான்; அப்படியே அவனுக்குக்கிடைக்கிறது. ஒருவன் தான் இச்சித்திருக்கிற ஒரு ஸதிரீயோடுபடுத்திருப்பதுபோலவே கனவு கண்டு கையைக்காலை அசைத்தால்,மெய்யா

கவே அந்த ஸ்திரீ தன் பக்கத்தில் படுத்திருப்பதைக் கண்டுஆச்ச ரியப்படுகிறான். ஒருவன் அருமையானஒருபதத்தின் அர்த்தத்தை ப்பற்றி நினைக்கிறான், நினைக்கிறான் ஒருநாளெல்லாம்நினைக்கிறான்; அவனுக்கு அது விளங்கவே,இல்லாதிருந்து, கனவில் அந்த அர் த்தம் அவனுக்கு விளங்கிவிடுகிறது. ஒருவன் தான் ஒருக்காலும் கண்டேயில்லாததும்,கேட்டில்லாததும் தான்படித்துங்கூட இல்லா ததுமான, ஒரு நூதனதேசத்தையும், விநோதமான மாடமாளி கைகளையுங் கூடகோபுரங்களையுமெல்லாம் கனவுகாணுகிறான்;க ண்ட அந்தக் கனவு என்னவென்றே தெரியாமல்காலையில் மறந் துபோகிறான். மற்றொருவன், ஒருவித கனவுகண்டு, அந்த கனவி லேயே, தான்விழித்துக்கொண்டது போலும் அந்த விழிப்பில் தான் கண்டதுகனவாகலான் அது ஒன்றுமில்லையென்று சொல்லி கொண்டதுபோலும் அதையும் கனவிலேயே கண்டுகொண்டு அப்பால்சரியான விழிப்பில் இதென்ன! கனவுக்குள்ளொருகன வுகண்டோமென்று ஆச்சரிப்படுகிறான்; ஒருவன் தனக்கு துக்க ம், துயரம், வறுமை, ஆபத்து முதலானவை நேர்ந்த நேரத்தில், தன்இறந்துபோன தாய் தகப்பன் சகோதரர் முதலியவர்களை நி னைத்து அழுகிறான். அன்றிவு அந்த ஆத்துமாக்கள் வந்து அவ னுக்கு ஆறுதல் சொல்லி ஏதோ உபகாரவழியைக்காட்டினது போலக்கனவுகண்டு, அதேபோலஏதோ ஒரு உபகாரத்தையடை ந்து ஆச்சரிய மடைகிறான். இன்னும் இவைபோல்வன பலபலவி தமான கனவுகள் காணுகிறதுமன்றி; சூரியன், சந்திரன், யானை, குதிரை, சங்கு மான் முதலியவைகளைக்கண்டால் உத்தமமென் றும்; ஆல், புன்னை, அத்தி, புளியமரம், நல்லசர்ப்பம், தேள் முத லானதைக் கனவில்கண்டால் வெகுநல்ல ததன்றும்; காகத்தையு ம்மழைபொழியவும், வெள்ளைப்புடவைக்கட்டிய ஸ்திரீ, தாசியை அரசரை, இவைமுதலான வைக்கண்டால்செல்வமும் சுகமும்வரு மென்றும்;கைம்பெண்ணோடுபடுக்கக்கண்டாலும் பன்றியைகண் டாலும், நாய், பருந்துஇவைகளைக்கண்டாலும்,தரித்திரமும் நாச மும் என்றும்; மரம்முறிந்து விழவும்,வெள்ளம்வரவும்,புல்,விறகு, பிணம் இவைகளைக்கண்டால் வியாதியும்மரணகண்டமும்நேருமெ ன்றும்;யாதொருவஸ்துக்கள் பற்றிஎரியக்கண்டால் அடுத்தநாள் தன்குடும்பத்தில் பிரவிடையாகிறதும்; மலத்தைக்கண்டால் பண ம் வருமென்றும்,சாப்பாடுசாப்பிடக்கண்டால் அடுத்தநாள்நோய் என்றும், பல் விழக்கண்டால் குடும்பத்தில் யாராவது சாகிறதெ ன்றும்' இவைபோல்வன வெல்லாம் வழக்கத்தில் சொல்லிக் கொ ள்ளுகிறார்கள்; அல்லாமலும் என்னிடத்தில் இன்னொரு அதிசய மென்ன வென்றால். ஒவ்வொருவரும் தனக்கு நேரப்போகிற மா ணத்தையும்பிள்ளைப் பேற்றையும்,தனக்குத்தானே கனவில் அறி ந்து கொள்ளச் செய்கிறேன். அதாவது சமுத்திரம் நதி உலரக்க

ண்டாலும், படுகுழியில் விழக்கண்டாலும், தன்சிரசு தனக்குமறைந்துபோனதாகக்கண்டாலும், ஒரு மாதத்திற்குள்ளே அவனுக்குச் சாவு சம்பவிக்குமென்றும், இளநீர்குறும்பையைக்கண்டால்ஆண்பிள்ளை பிறக்குமென்றும் பூஞ்சோலையைக் கண்டால் பெண்பிள்ளை பிறக்குமென்று, இப்படிப்பட்ட முன் குறிகளும்மன்னுலே விளங்குகிறது. ஆயினும் இப்படிப்பட்ட விசேஷங்கள் செய்யும்என்னை, இதுதான் என்று கண்டுபிடிப்பது மனிதருக்கு அசாதியம். இப்படிக்காணும் கனவுகளில் சாப்பிட்டுப் படுத்த முன்னேரத்தில் காணும்கனவு ஒன்றுமேஇல்லாத அதமம் என்றும்; நடுநிசியிற்காணும்கனவுஎதிர்விரோதமான மத்திமமென்றும்பின்னிரவான விடியல் நேரங்களில் காணுங்கனவு பெய்யாசவே சம்பவிக்கிறஉத்தமமென்றும் சிலர் சொல்லுகிறார்கள் ஆனாலும் ஞானிகள்மாத்திரம் காணுகிறதெல்லாம் கனவல்ல, அது நனவு. அவர்கள் தூங்காமல் தூங்குகிறதால் அதில் காணுவதெல்லாம் உண்மையே என்று நம்புகிறார்கள். அப்படியே அதுஉண்மையாகவேயிருக்கிறது. அதுதான் திரிகாலவர்த்தமானங்களை யறிதல் என்னும்விசேஷம்' சாதாரண மானிடர்களுக்கு வாதபித்த சிலேஷ்மமென்னும் மூப்பிணிகள் ஏறியும் குறைந்தும், ஒன்றோடொன்று மேற்கொண்டும் கோஷ்டம் புரிவதால், இவர்கள் காணும்கனவுகள்ஒழுங்கும்உண்மையும்பெறாததென்றும், ஞானிகள்யோகிகளுக்வாதபித்தசிலேஷ்மம் ஒரேரீதியாய்நடக்கிற தன்மையுண்டாயிருக்கிறதானதால அவர்கள்கனவுயாவும்உண்மையே என்றும் நம்பப்படுகிறது. இப்படிகனவைஉண்மையாக்கிக் கொள்ளுகிறதும் ஞானிகளுடைய கடமைகளில் இதுஒருமுக்கியகடமை. இதற்கும்வெகுபாடுபட்டுத்தான் கண்டடையப்பெறுகிறார்கள். இப்படிப்பட்ட நான், செற்பன உலகத்தான். அதாவது, மெய், வாய், கண், மூக்கு செவி—சத்த ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்— வாக்கு, பாதம் பாணி, பாயுரு, உபத்தம்;—வசனம், கெமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், பத்துவாயு—மனம், புத்தி,சித்தம், அகங்காரம், ஆகிய 34-பேரில், பொறியும் கர்மேந்திரியமும் ஆக 10-பேர்நீங்கிப்போய், புலன் ஐந்தும், கர்ம விஷயம்ஐந்தும், வாயுபத்தும், கரணம்நான்கும் ஆக 24 பேருடன் கண்டஸ்தானத்திலே இருப்பவன்தான் நானுதலால் நான் சுயேச்சையான மனிதனல்ல; என்னை யாரோ ஆட்டுகிறபடி செய்கிறேன். எனவே இந்த வழக்கில் எனக்கொன்றும் தெரியாது. ஆண்டவனே மன்னியும்.

சுழுத்தி சாக்ஷி.

அந்தரர் துதிபுரி சுந்தர வடிவே. ஐயனே! என்பேர் சுழுத்தி. சுழுத்தி யென்றால் மயக்கமான நித்திரை; அதாவது; தன்னைத்தான் மறந்த தூக்கம். நான்உலகத்திலுள்ள அனேகரைப் போலிகளென்று காட்டும் அறிகுறியா யிருக்கிறேன். நான்தான்

யாவரையும் உண்மை மனுஷர்களா யல்லாதவர்களென் றுக்கிப் போடுகிறேன். என்னாலேயே மனுஷர்களுக்கு ஞானஜோதியென் பது அற்றுப்போகிறது எங்ஙனமெனில், ஒருவன் இன்றுமுழுவ தும் ஒரு செய்யுளைப் பாடம்பண்ணுகிறனென்று வைத்துக்கொ ள்ளுவோம்; அன்றிராத்திரி கடந்து மறுநாள் நினைத்தால் அது மறந்துபோகிறது அப்படிப்பட்டதை நான்செய்கிறேன். ஆனாலு ம் அதை என்மறைப்புக்கு விடாமல்மறுநாளும் நினைவிற்கொண்டு வருகிற சத்துவத்தைப்பெறுவது வியாபகசுத்தி. இந்தக் வியாபக சுத்தியைமென்மேலும் விர்த்திபண்ணிவந்தால்தான்ஞானக்கனல் மூண்டு ஞானஜோதி நிலையாய்நின்றுவிடும். இந்தப் பழக்கமும் ஞானிகள்கொள்ளுகிறார்கள். அதனால், தூக்கமாகிய எனக்கு அவர்கள் இடமேகொடுக்கிறதில்லை. எந்நாளும் தூங்கவேமாட்டார்கள். அல்லாமலும் தூக்கமானது மனிதனுடைய முழுஆயுள்நாளில் சரிப்பாதிநாளைக்கொள்ளைகொள்ளுகிறது. இதுவும் மகா பரிதாபமானது ஆனால் தூக்கம்தான், நோயாளிகளுக்கு ஆறுதலும், கஷ்டவாளிகளுக்குச் சுகமும் தருகிறதென்று ஆயுள்வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். அல்லாமலும் பிரதி மனுஷனும் தூங்கி யெழுந்திருப்பதில், பகல் முழுவதும் அவனவனின் உள்தத்துவம் அதாவது யந்திரங்கள் வேலைசெய்திருப்பதால் அவைகளுக்குப் புதுப்பலனும் முயற்சியும் உண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆம், இதுசாதாரணமாய்ப் பிறந்தும் அழிந்தும் போகிற மனிதர்களுக்குத்தான் விதி. உண்மையானமனுஷர்களுக்கல்ல. ஞானிகள் நிலைப்பது இரவு பகலற்ற விடமல்லவா? ஆகவே, தூக்கமாகிய நான் அவர்களுக்கொரு சத்துரு. இப்படியான நான் மனிதனின் கண்டஸ்தானத்திற்குக் கீழ் இதயஸ்தானத்தில், சித்தமும் அகங்காரத்துடனும் மாத்திரம்இருப்பவனாதலால் நான்சொந்த சக்தி யுள்ளவனல்ல. என்னையும் யாரோ ஒருவர் ஆட்டுகிறார். எனவே இவ்வழக்கில் எனக்கொன்றும் தெரியாதுமன்னிக்கவும்.

துரியம் சாக்ஷி

அப்பனே அருள்மூர்த்தி! அடியன் பெயர் துரியம், துரியம் என்றால் தன்னை மறந்தநிலை. அதை சுத்தநிலை யென்று சொல்லுவாருமுளர். அத்தன்மை யென்னவென்றால்; கையும் ஆடவில்லை, காலும் ஆடவில்லை, உடலும் அசையவில்லை; தேகம், விழுந்தபிணம் விழுந்தமாதிரியே அசைவற்றுத் தூங்குவதுதான் ஆனால் இதிலே ஒன்று மாத்திரமுண்டு; என்னிடமாகிய நாபிக்கமலத்தில் அந்தக்கரணங்களில் ஒன்றாகிய சித்தம் மாத்திரம் அந்த நேரத்தில்என்னோடிருக்கும். ஒவ்வோர் வேளையில் என்னையும் அறியாமலே அந்தச் சித்தம், தான் சித்தப்பட்டதைச் செய்துவிடும் இவ்வளவே நானறிவேனாதால், இந்த வழக்கில் யாதொன்றும் எனக்குத் தெரியாது. மன்னியும்!

துரியாதீதம் சாக்ஷி

துரியமுங் கடந்து நின்ற தூர தூர தூரமே! துரையே! என் பெயர் துரியாதீதம்; துரியாதீதமென்றால் துரியநிலையாகிய சுத்த நிலையையுங் கடந்து, எட்டாதநிலை; அல்லது மேற்பட்டது; அல்லது கடந்தது என்கிற நிலைதான். இது பரமரகசியமான நிலை. இதுவே இலிங்கஸ்தானத்தில் விளங்குகிற நிலையென்று சொல்லுவது. தன்னில் மகிழ்ந்திருக்கும் நிலை இதுவாகலான், இங்கேதான் பிரபஞ்ச விருத்திக்கு ஒரு மகத்துவம் பிறந்தது என்று சொல்லியிருப்பதும் ஒக்கும். இதற்கு மேலும் நான் ஒன்றும் சொல்ல வியலேன். இம்மாத்திரமேயன்றி என்னையும் யாரோ ஒருவரியக்குவதால், இந்த வழக்கில் யாதொன்றும் அறியேன், மன்னியும்.

அரசர்:—சரி, அடுத்த சாட்சிகள் யார்?

நல்வினை தீவினை சாக்ஷி

நல்வினை:—சர்வஜீவ தயாபரரே, சாமி! நான் நல்வினை. என்னுடைய தொழிலைச் சொல்லவேண்டுமானால், காலமும் போதாது, உலகமும் கொள்ளாது; ஆபினும் சிலவற்றை மாத்திரம் சொல்லுகிறேன். நல்வினை யென்றால் நற்செய்கை என்று பொருள். ஆனால் புண்ணிய மென்றும், அறம் என்றும், தருமமென்றும் கூடச் சொல்லப்படும். அறம் 32 விதமாய்ப் பிரித்திருக்கிறார்கள். அது இருக்கட்டும்; நற்செய்கை யென்பது முதலாவது உலகத்தின் எந்த மனிதர்களையும் சகோதரமாய் பாவிப்பது. இதிலிருந்தே ஜீவகாருண்யம் வைப்பது. தன்பசியை அல்லது தன் வருத்தம், துக்கம் முதலானவைகளை எப்படி உணருகிறோமோ, அப்படியே பிற மனுஷரின் பசி, வருத்தம் முதலியதைக் கவனிப்பது. ஆபத்தில் உதவுவது. தெரிந்த அரும் விஷயங்களை ஒளியாமல் வெளிபிட்டு வைப்பது. ஒருவருக்கும் ஒரு பொல்லாங்கும் தேடாதிருப்பது- ஒரு குடியைக் கெடுக்காதிருப்பது. ஒருவர் வாழ்வதைப் பார்த்து பொறுமைப் படாதிருப்பது யாவர் மீதும் புறங்கூறுதிருப்பது குண்டுணிகோள் முதலியன சொல்லாதிருப்பது. வசைச் சொல்லால் பிறர்மனம் நோகச் செய்யாதிருப்பது. வாக்குசகாயம், தேகசகாயம் செய்வது. பெரியோரை வணங்குவது. குருக்களை எற்றிப்போற்றுவது, தாய் தந்தையரைப்பூசிப்பது சகோதரர் சகோதரிகளைக்கனம் பண்ணுவது. நன்றிசெய்தவர்களை எப்போதும் நினைப்பது. ஒருவரிடம் அற்பநன்மையைப்பெற்றாலும் அதைமலைபோலஎண்ணி அவர்கள்புகழ்படிப்பது எப்போதும் கோபம்கொள்ளாதிருப்பது. கோபம்பிறக்கநேர்ந்தபோது, அந்தச் சமயத்திற்குஏதோ ஒரு சுவாமிஜெபமாவது நூறுஎண்கணக்காவதுசெய்து அந்நேரத்தைக்கழியவைப்பது. தன்னை அடுத்தவர்களை கூடினவரையில்ரக்ஷி

ப்பது, பிள்ளைகளுக்குத் தெய்வபயத்தைபோதித்துவருவது, பூமி நோகாமல் நடப்பது, கூடினவரையில் பொறிபுலன்களின் சேஷ்டையை அடக்குவது, எந்தவிஷயத்திலும் ஒழுக்கமாயிருப்பது, மூர்க்கரைக்கண்டால் பயந்து ஒளிந்துகொள்ளுவது, மாடு குதிரை கழுதை முதலியதை மிகுதிவேலை வாங்காதிருப்பது, அதன்பசிதெரிந்துஊட்டுவது, மனதைக் களங்கமற்றதாய் வைக்கிறது, தேகத்தை தினநிதமும் சுத்தம்செய்கிறது, கூடினவரையில் தேகத்தைக் காப்பாற்றுகிறது, வார்த்தை எப்போதும் சுத்தமாய்ப்பேச முயற்சிசெய்கிறது, தன்சத்துராதியும் தன்னைநல்லவனென்று சொல்லப் பேரெடுப்பது, திட்டுதிக்காணியில் மோசம்பண்ணுகிறவர்களை அவர்கள் நரகத்தின் பிள்ளைகளென்று ஏறெடுத்தும் பாராமல் விட்டுவிடல், தன்சத்ராதிக்கும் தீமைவிளைக்காதிருத்தல், கடைசியாக எல்லாவற்றினும் முக்கியமாய் எந்தஸ்திரீகளைப் பார்த்தாலுஞ்சரி எல்லாப்பெண்களும் தன்னைப்பெற்ற தாய்மார்என்றுமதித்து அவர்களை மரியாதையோடுபார்ப்பதும், பயபக்தியோடு வார்த்தையாடுவதும் இவைமுதலானதெல்லாமும் என்னுடையதொழிலாகும். என்னையடைந்தவர்களுக்கு ஒருக்காலும்நரகமில்லை. உலகத்திலேயும் அவர்களுக்குஆபத்தில்லை, துக்கமில்லை, அவர்களுக்குமோட்சம் காணியாட்சி, எனவேஞானிகளும், தவசிகளும் என்னைவழிபிடித்துத்தான் தங்கள் காரியசித்தியடைகிறார்கள். என்றாலும் என்செய்கையும் யாரோஒருவர் அரூபமாயிருந்து தான்செய்யவைக்கிறாரானதால், இந்தவழக்கில் எனக்கொன்றும் தெரியாது; மன்னியும்.

தீவினை—பகரரிய பகாப்பொருளே சாமி! அடியன்பெயர் தீமை. தீமையென்றால் தூர்ச்செய்கை, அல்லதுபாபம். என்தொழிலென்னவென்றால் எனக்குமுன்னதாகச் சாட்சி பகன்ற என்கூட்டாளியின் செய்கைக்கெல்லாம் எதிர்விரோதமானவைகளைச் செய்துவருவதேதான். ஆனால்உலகத்தின் முக்கால்பங்குஜனங்கள்அநேகமாய் என்னைத்தான் ஏற்றுக்கொண்டு என்மீதுதான் வெகுவாய் ஆசைவைத்து என் கட்டளைபோலவே நடந்துவருகிறார்கள். முக்கியமாய் எங்களிருவர் மகிமையைப்பற்றி விசாரிக்க வேண்டுமானால் உலகில் மனிதர்கள் தங்கள்வாழ்வின்சுகத்திற்காக சம்பாதிக்கிறதும் சேர்க்கிறதுமான எந்தஆஸ்திபூஸ்தி, மனைவி, மக்கள், பெற்றவர், சுற்றத்தார், அழகு, பெருமை யாதொன்றும் அவர்கள் செத்துப்போன காலையில் அவர்களுடன்கூடப் போகப்போகிறதில்லை. "பற்றித் தொடர்வது இருவினை புண்ணிய பாவமுமே" என்றபடி. நாங்களாகியஇருவரில் ஒன்றில் புண்ணியமாவது, ஒன்றில் பாவமாவது, யாராவது ஒருவர் தான் கூடவே அவர்களை விடாது பற்றிப்பிடித்துப்போகிறவர்கள். இதற்குதிருஷ்டாந்தமா

க ஒருவன்செத்தவுடனே அவன்பிணம் போகும்போதாவது, சுடலையில் வைக்கும்போதாவது அவனைப்பற்றி பலபேர்வாயிலும்பேசிக்கொள்ளப்படுகிறதை கவனித்தால், மேற்படி இறந்த மனிதன் துன்மார்க்கனுயிருந்தால், அவன் துன்மார்க்கத்தைப்பற்றியும், சன்மார்க்கனுயிருந்தால், சன்மார்க்கத்தைப் பற்றியும் பேசிக்கொள்ளுகிறதைக் காணலாம். மேலும் "செத்தால் தெரியுமே செட்டியார் வாழ்வு" என்பதும் எங்களைப்பற்றித்தான் சொல்லி யிருக்கிறது. எனவே உலகத்தில் எங்களிருவரின்பேர் வெகு விசேஷம் என்றாலும் நாங்கள் எங்கள் சுயமே யாதொன்றும் நடத்தாமல் யாரோ எங்களைத் தூண்டுகிறபடி செய்கிறதால் இந்தவழக்கில் எனக்கு யாதொன்றும் தெரியாது; மன்னியும்,

அரசர்:—அடுத்த சாட்சிகள் யார் ?

இராகம்:—ஆண்டவனே! அடியோர், இராகமென்னும் கூட்டத்தார் எட்டுப்பெயர். இதோ சொல்லுகிறோம்.

என் பெயர் காமம்:—காமமென்றால் ஆசை, நான் இராகமென்னும் விகாரத்தில் எட்டுப்பெயரிலொருவன். என்தொழில் எல்லாவற்றின்மீதும் ஆசைபட்டுக் கொண்டே யிருக்கிறது.

என் பெயர் குரோதம்:—குரோத மென்றால் சினம். என் தொழில் கோபத்தை யெழுப்பிக்கொண்டே யிருக்கின்றது.

என் பெயர் லோபம்:—லோப மென்றால் ஈயாமை, என் தொழில் ஒருவருக்கும் ஒருதவியும் செய்யாமல் தடுக்கிறது, என் சினேகம் பிசுணர்களிடத்தில் தான் மெத்த, தருமத்திற்கு நான் எதிரி, லோபியின் தன்மையும் தேனீக்களின் வேலையும்சரி, லோபியின்செல்வம் பாம்பின்தலை மாணிக்கம்போலும், சமுத்திரத்தின் உவர்நீர்போலும் இருக்கிறது.

என் பெயர் மோகம்:—மோகமென்றால் ஆசையிலே மயங்கிநிற்பது. இது தோன்றினவுடனே, ஒருவன் தன்னிலையை அந்த நிமிஷத்திற்கு அப்படியே மறந்துபோகிறான்.

என் பெயர் மதம்:—மதமென்றால் கர்வம், அரசர்கள்முதல் ஏழைகளின்வரையில் இந்த அகந்தை இருந்துகொண்டுதான் அவர்களைக் கெடுத்து வருகிறது.

என் பெயர் மாச்சர்யம்:—மாச்சர்ய மென்றால், உட்பகை; என் தொழில் உள்ளுக்குள் பொறாமைகொண்டு உறவுபோலவேயிருந்து அன்னியனை அழியப்பண்ணுவது. இப்படியான உட்பகை உள்ளத்தில்வைத்திருப்பவன் அந்தஎரிச்சலாலேயே தானும் சுட்டெரிக்கப்பட்டு சாகிறானென்று வெகுபேர்க்குதெரிகிறதில்லை.

என் பெயர் இடும்பை:—இடும்பை யென்றால் உதாசனிக்கிறது. என் தொழில் யாரையும் எடுத்தெறிந்து பேசிவிடுகிறது எவரையும் அசட்டை பண்ணுதல்.

என் பெயர் வேட்கை:—வேட்கைஎன்றால் கண்ணுக்குப்படுகிற ஸ்திரீகள் மீதிலெல்லாம் காதல் கொள்ளுவது.

நாங்களெட்டுப்பேரும் இவ்வளவுதானறிவோம். மற்றென்றும்தெரியாது. ஆகவே இந்தவழக்கில் நாங்களொன்றும் அறியோம்; மன்னியும்.

அரசர்:—அடுத்த சாட்சிகள் யார்?

இராஸத குணம்;—ஆண்டவனே! என்னுடையது மன ஊக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி என்னும் எட்டுக் குணங்கள்.

தாமஸகுணம்:—ஆண்டவனே! என்னுடையது பேருண்டி, நெடுந்துயில், சோம்பல், நீதிவழு, அழுக்காறு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை இவையெல்லாம் என் தாமசகுண சம்பந்தம்.

சாத்வீக குணம்:—ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கல் எனும் எட்டுக்குணங்கள் என்னுடையது.

இப்படி மூவருடையது மூன்றுகுணங்களா யிருந்தாலும், உலகத்தை சிருஷ்டிக்கவும், காப்பாற்றவும், அழிக்கவும் நாங்களே காரணமாயிருக்கிறோம். ரஸோகுணம் சாத்வீககுணத்தின் சம்பந்தமாக கடவுளிடத்தில் உதித்த ஓர்மகத்துவத்தின் மூலமாய்ப் பிறந்த வைகாரி அகங்காரம், அதேச்ச வகங்காரம், தாமஸஅகங்காரமென்னும் மூன்றில், தாமஸ அகங்காரத்தில் லிங்கம் பிறந்து, அதில் ஆகாசம், ஆகாசத்தில் வாயு, வாயுவில் தேயு, தேயுவில் அப்பு, அப்புவில் பிரிதிவி உண்டாயிற்று. பிறகு வைகாரி அகங்காரத்தில் தேவர்கள் உண்டாயினர். அதேச்ச வகங்காரத்தில் பொறி புலன் கரணம் முதலியன வுண்டாயின. இப்படியே உலகம் எங்களால் உண்டாகி எங்களால் நடைபெற்று வருகிறதாயினும் நாங்கள் சொந்த சத்துவமற்றவர்கள். எங்களையும் யாரோஒருவர் ஆட்டுவதால் இவ்வழக்கில் ஒன்றுமே தெரியாது மன்னியும்.

அரசர்:—அடுத்த சாட்சிகள் யார்?

இக்ஷணை:—ஐயனே தெண்டம். நாங்கள்மூவர் ஒரு கூட்டம்.

(1) என்பெயர் அர்த்த இக்ஷணை:—என்தொழில் பொருள் சம்பாதிப்பதிலேயே முயற்சிபண்ணிக்கொண்டு சூதிலோ, வாதிலோ, பொய்யிலோ, புனைசுருட்டிலோ, திருட்டிலோ, உருட்டுப் புரட்டிலோ, எந்தெந்த விதத்திலோ தனத்தைத்தேடி அதிலேயே மகிழ்ந்திருப்பது. இதை ஈஷணையென்று சொல்வாருமுளர்.

(2) என்பெயர் புத்திர இக்ஷணை:—என்தொழில் எத்தனை பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டாலும், இன்னுமின்னும் பிள்ளைகளின் மேல் ஆசைப்பிடித்து அதனால் தன்தேகம்பலமும் ஒடுங்கிப்போ

வதுகூட தனக்குத் தோன்றுதபடி அப்பிள்ளைகளின்மீதேயே அவாவும் மகிழ்வும் கொண்டிருப்பது.

(3) என்பெயர் உலக இக்ஷணை:—என் தொழில் உலகத்தின் சர்வதோற்றங்களையும் நம்பிக்கொண்டும் அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துகொண்டும், உலகமே என்கிற அதே ஆசை பிடித்துக்கொண்டும் இருப்பது தான்.

இப்படி நாங்கள் மூவரும் மூன்று ஆசைப்பிடித்தவர்கள், மனிதர்களில் ஒவ்வொருவரும் எங்களில் நன்றாய்ச் சிக்கியிருக்கிறார்கள். ஆயினும் எங்களை நாங்களே நடத்திக்கொள்ளுகிறவர்களல்லவாதலால், இந்த வழக்கில் எமக்கொன்றுந் தெரியாது, தெரியாது; மன்னிக்கவும்.

அரசர்:—அடுத்த சாக்ஷிகள் வரவும்.

முப்பிணி சாக்ஷி.

ஆண்டவனே! நாங்கள்மூவர். எங்கள்பெயர் வாத, பித்த, சிலேஷ்மம். எங்களை திரிதோஷமென்று கூறுவாருமுளர். எங்களுடைய சங்கதியைச் சொல்லப்போனாலோ, வெகுவேடிக்கை! ஒவ்வொரு மனுஷருடைய தேகமென்னும் வீட்டையும் நாங்கள்மூவருமேதான் குடிக்கூலிக் கெடுத்துக்கொண்டு குடித்தனம் பண்ணுவது வழக்கம். ஒருவரைவிட்டு ஒருவர்பிரிந்தே இருக்கிறதில்லை. ஆயினும் நாங்கள் ஒருவருக்கொருவர் எப்போதுமேஆகாது. ஜன்ம சத்துருக்களென்று சொன்னால் எங்களுக்கேதான் தகும். எந்நேரமும் ஒருவருக்கொருவர் மிஞ்சிக்கொண்டும், தாழ்ந்து கொண்டும், எதிர்த்துக்கொண்டும், மேலுங் கீழுமாய் ஒருவரையொருவர் குடுமிபிடித்துக்கொண்டும், உருண்டு புரண்டுகொண்டும் சண்டைபோட்டுக் கொள்ளுகிற வண்ணமாகவே இருப்போம். இதனால் நாங்கள் குடியிருக்கிற வீடெல்லாம் எப்போதும் நசகுசலாகிக்கொண்டேயிருக்கிறது வழக்கம். எங்களை அடித்து உதைத்துப் புத்திபண்ணிக் கொட்டினவாயி லடக்கி குந்தவைக்கிற கார சார அவுஷதப்பண்டிதர்கள்வந்து குறடாபோட்டுத்திருப்புமட்டும்எங்கள் மயிர்பிடி மடிபிடி சண்டை ஒழிகிறதில்லை. அப்படி யென்றால் அந்தநேரத்திற்கு மட்டுந்தான் சற்று அடங்குவோம்; மறுபடியும் துவக்கிக்கொள்ளுவோம். மேலும் அப்படிப்பட்ட குறடா கொடுக்கிறவர்களைக்கூட நாங்கள் திருப்பிக்கொண்டு விழத்தாட்டினாலோ அவர்கள் பாடும் பெப்பேகொட்டி, அந்நேரம் அவர்களுக்கொரு பண்டிதன் வேண்டியதாக நேரிடும் இப்படி நாங்கள் மூவரும் மூன்றுவித மூர்க்கம்பிடித்தவர்கள். ஒருவன்(தேயுவின்) பித்தகோபி, ஒருவன் வாயுவின் கோபம்அதிகரித்தவன். மற்றொருவன் (அப்பு) நீரின்கோபங்கொண்டவன். இப்படி மூவரும் மூ

ன்றுவித கோபங்கொண்டவர்களானதால் அவனவனுக்கு கோபம் வந்தபடியெல்லாம் மேற்படி (தேக) வீட்டை நசித்து நாசமாக்குகிறோம். எங்களுக்கு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டுவியாதிநாதர்கள் துணையாளிகள். அந்தவியாதிகளுக்கெல்லாம் குருபீடம் நாங்களே; அவர்களெல்லாம் எங்கள்கூடவே யிருப்பதால் எங்கள்சண்டை மகாஆரவாரம். எங்களை சமாதானப்படுத்தி வைக்க ஒருவராலுமே முடிகிறதில்லை. அப்படி சமாதானப்படுத்துவதற்கென்றுதான் கடவுள்கூட எங்களுக்காக வெகுவேலையெடுத்துக்கொண்டு காடுநாடுகளிலெல்லாம் மூலிகைகளை உண்டாக்கிவைத்தார். பூமியெல்லாம் வீரம்,பூரம், கெந்தி, கவுரிமுதலிய லோகச்சரக்குகளையும் உண்டாக்கிவைத்தார். அவர் உண்டாக்கிவைத்தது ஒருபுறமிருக்க, முனிவர்கள், சித்தர்களெல்லாம் மூலிகைகளின் குணாகுணங்களைக் கண்டுபிடித்துக்கொண்டுவரும் வேலையைஎடுத்துக்கொண்டார்கள். அப்படியிருந்தும் சாமியாலும்எங்களைசமாதானப்படுத்தமுடியவில்லை. சாமியின்குட்டிகளாகிய சித்தர்முத்தர்களாலும் எங்களை சமாதானப்படுத்திவைக்க முடியவில்லை. எங்கள் கோபத்தைக்காட்டுகிற ஒருதுடிப்பு அவரவர்கள் கையண்டையும் காணப்படுகிறதால், அங்குமாத்திரம் தொட்டுதொட்டுப் பார்த்து பித்தநாடியோடுது, வாதநாடி யடிக்குது, சிலேஷ்மநாடி மிஞ்சினது என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதிலும் எங்கள்கோபமும் சண்டையும் மிஞ்சியிருந்ததோ அவங்கப்பாணை எங்கள்மேல் கைவைக்கவே பயப்படுவார்கள். இப்படிப்பட்ட அசகாய சூரர்கள் நாங்கள். எங்களை சமாதானத்தோடு குடியிருக்கவைத்துக்கொள்ளுகிறவர்களின் (தேக)வீடு இடியப்போகிறதேயில்லை. அந்தசூக்ஷம்கண்டுபிடிக்கிறவர்கள் உலகத்தில் வெகுசிலரே. அதற்கும் எவ்வளவோ கஷ்டமிருக்கிறது. அவர்களுக்கும் எப்போதும் எங்களைப்பற்றிபயந்தான். எங்கள்கோபத்தை தேடிக்கொள்ளமாட்டார்கள், அவர்களே ரிஷிகள். என்றாலும் எங்கள்ஐயனே! நாங்களும் மேற்படி சேஷ்டைகள்செய்கிறது எங்கள் சொந்த சித்தமாயில்லாமல் யாரோ எங்களை கிளப்பிக்கொண்டிருப்பதால் இந்தவழக்கில் யாதொன்றும் எங்களுக்குத்தெரியாது, பொறுமை தரவேணும்.

அரசர்:-நல்லது நீங்கள்போய் நில்லுங்கள். அடுத்தசாக்ஷியார்?

மும்மலம்:—அடியோர் சரணம்.

(1) ஐயனே; என்பெயர் ஆணவம்; ஆணவமென்பது அகங்காரம், அல்லது தற்போதம் என்று சொல்லுவது. இந்த ஆணவமே சிதாபாச சொரூபமாகலான், தன்னையுந் தலைவனையும் அறியாமல் இவ்வுடம்பை 'நான்' என்று கொண்டிருப்பது.

(2) அப்பனே; என்பெயர் காமியம். காமியமென்றால் ஆசையின் புதையல், ஆசைக்கோர் அளவில்லை யல்லவா? அந்த ஆசை

எவ்வளவு தூரத்திற் கோடுகிறதோ, அவ்வளவுக்கும் விட்டுக்கொடுத்துக்கொண் டிருக்கிற பெரும் காமபேழைக்குச் சமானம் நான். ஆசையின் பிரிவுகளுக்கெல்லாம் மூலஸ்தானம் நானே. மூலகாமியாகிய என்னிலிருந்தே ஆசையென்று அர்த்தங்கொள்ளும் பல பெயர்களும் வியாபிக்கின்றன.

(3) ஐயனே, அரசே! என்பெயர் மாயை.

(இங்கே மாயை வந்ததும் சபைமுழுவதும் ஒருகலக்கம் கலங்கிப்போனது. ஏன்! மாயையின் கூந்தலழகும், நெற்றியழகும் புருவ அழகும், சுழலமிடும் விழியழகும், கொவ்வைக் கனி போன்ற வாயழகும், மெல்லியபுஷ்பம்போன்ற கன்னத்தழகும், சங்குபோன்ற கந்தரத்தினழகும், பொற்கலையம்போன்ற மார்பழகும், மிருதுவான கரங்களினழகும், சுழிகுளம்போன்ற வயிறழகும், தொடையழகும், கணைக்காலழகும், பாதவழகும், விரல்களழகும், இடையழகும், நடையழகும், அசைப்பழகும், நொடிப்பழகும் கிளிபோன்ற மொழியழகும் கண்டவுடனே முதலாவது அரசராகிய அகண்டாகண்டரே அசைவற்று அப்படியே மயக்கத்தில்மூழ்கினர். பஞ்சாயத்தார், வாதிகள், இவர்கள் மனமும் பதபதவென் றடித்துக்கொண்டு, கண் வாய் முதலான புலன்கெட்டு புத்திகெட்டு தலைசுழன்றார்கள். குற்றவாளியாய்நின்றிருந்த ஆத்மநாதன் சாரீரகன்கூட தங்கள் தண்டனையின்நேரத்தைமறந்து இவள்மேல்கொஞ்சம் கண்போட்டார்கள். (இப்படி சற்றுநேரத்துள்எல்லாம் ஒருபுரள்புரண்டது. இப்பால் அவரவர்கள் நிதானம் அவரவர்களுக்குவந்தபின்)

அரசர்:—நீ பெண்பாலாயிருக்கிறாய், உன்னைக் கடைசியில் விசாரிக்கிறோம்; சற்று மறைவாய்ப்போய் நின்றிரு.

மாயை:—அப்படியே ஆகட்டும் ஐயே!

அரசர்:—அடுத்த சாக்ஷிகள் யார்?

மும்மண்டலம்:—அடியோர் சரணம். இதோ சொல்லுகின்றோம்.

சர்வ காரண காரியங்களாய் விளங்கும் தன்மயமே! எங்கள் பெயர் அக்கினிமண்டலம், சூரியமண்டலம், சந்திர மண்டலம் எனும் மும்மண்டலம். மானிடதேகத்துள் எங்கள் இருப்பிடமானது நாபியில்அக்கினியும், இருதயத்தில் சூரியனும், சிரசின்நடுவில் சந்திரனுமே. மூலத்திலே நின்றெழும்பும் பிராணவாயுவானது எங்கள் மூவரையும் ஊடுருவி பாய்ந்திருக்கின்றபடியினால்தான் மனிதன் நிலைத்திருப்பதற்குக் காரணமாயிருக்கின்றது. இந்த மூன்று மண்டலங்களே அண்டத்தையும் பிண்டத்தையும் அதாவது சிரசையும் உடலையும் ஒன்றாக்கி வைத்துக்கொண் டிருக்கிறது. இம்மும்மண்டலங்களாலேயே தெரிந்துந் தெரியாதவிதமாய் எல்லாந்

தோன்றுகிறதென்று தெரிந்தவர்களுக்குத்தெரியும். உள்நாட்டங் கொண்டவர்களுக்குதான் எங்கள் தொழில் விளங்கும். ஆயினும் நாங்கள் சுயசக்தி யற்றவர்களானதால் இந்த வழக்கில் எங்களுக்கு ஒன்றுமே தெரியாது, மன்னிக்கவும்.

அரசர்:—அடுத்த சாக்ஷி யார் வாருங்கள்.

ஆறுதாரம்:—அடியேம் சரணம், இதோ சொல்லுகிறோம்.

(1) அண்ணலே! என் பெயர் மூலாதாரம். என்னிருப்பிடம் மனிதனின் தேகத்தில் குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில்முக்கோண பீடம். என் வர்ணம் நீலம். இதிலே மூலாதாரக் கணபதியிருந்து அரசுபுரிந்து வருகிறார். அவர் அக்ஷரம் (ஓம்) என்கிற பிரணவம்.

(2) என்பெயர் சுவாதிஷ்டானம். என்னிருப்பிடம் மூலாதாரத்திற்கு இரண்டு அங்குலத்திற்குமேல் அடிவயிற்றில் சதுஷ்கோணபீடம். என்வர்ணம் செம்பொன்னிறம். இதன்நடுவில் பிரம்மா அரசுபுரிகிறார். இவருடையது (ந) என்கிற அட்சரம்.

(3) என்பெயர் மணிபூரகம். என் இருப்பிடம் சுவாதிஷ்டானத்திற்கு எட்டு அங்குலத்திற்குமேல் நாபி ஸ்தானத்தில் பிறைகோணம். என் வர்ணம் மரகதநிறம். இதில் விஷ்ணு வீற்று அரசுபுரிகிறார். இவ்விடத்திற்கு (ம) என்னும் அட்சரம்.

(4) என்பெயர் அநாகதம். என் இருப்பிடம் சுவாதிஷ்டானத்திற்குப் பத்து அங்குலத்திற்குமேல் இருதய ஸ்தானம் இதில் உருத்திரன் வீற்றுஆளுகை பண்ணுகிறார். என் வர்ணம் ஸ்படிக நிறம். இதற்கு (சி) என்னும் அட்சரம்.

(5) என் பெயர் விசுத்தி, என் இருப்பிடம் அநாகதத்திற்குப் பத்து அங்குலத்தின்மேல் அறுகோணமாயிருக்கும் கண்டஸ்தானம். இதில் மயேஸன் அரசுபுரிகிறார். இதன் வர்ணம் மேக நிறம். இதற்கு (வ)என்னும் அக்ஷசரம்.

(6) என்பெயர் ஆக்ஞை. என் இருப்பிடம் விசுத்திக்குமேல் 12அங்குலத்தில் வட்டமாயிருக்கும் நெற்றிஸ்தானம். இதில் சதாசிவம் வீற்று அரிசுபுரிகிறார். என்வர்ணம் சுத்தவெண்மை. இதில் உள்ளது (ய) என்னும் அட்சரம்!

இப்படியான எங்களாலேயே தேகம் நிலைபெற்றும் செய்கைகள் நிறைவேறிக்கொண்டும் வருகிறது. எங்களைவிட்டு உடல்இல்லையாதலால் மனிதனில்லை. மனிதனில்லையாயின் உலகமுமில்லை. இதற்குமேல் ஆயிரத்தெட்டிதழ் சோதிநிறம் பராபரி தோற்றம். இதிலேதான் எல்லா வர்ணமும் கலந்து விடுகிறது. வர்ணங் கலந்த வேமுத்தி. அதுதான் தன்னை ஒன்றுமில்லாததாகக் காட்டுகிறது.

(இப்படி சொல்லிக்கொண்டு வரும்போதே அரசர் சொல்லுகிறார்)

அரசர்:—ஆம் ஆம், நீங்கள் சொல்லிவரும்போதே கவனித்தேன். முன்னே தொண்ணூறு தத்துவக்காரர்களும் சொல்லிவந்ததில் அவர்களிடம் யாதொரு கர்த்தாக்களான மூர்த்திவடிவங்களிருந்து அரசுசெய்கிறதாகத் தெரியவந்ததில்லை. உங்கள் அறுவரில் தான் மூலாதாரத்தில் கணேசரும், சுவாதிஷ்டானத்தில் பிரம்மாவும், மணிபூரகத்தில் விஷ்ணுவும், அனாகதத்தில் ருத்திரனும், விசுத்தியில் மயேஸனும், ஆக்ஞையில் சதாசிவனுமான கர்த்தாக்களிருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த உலக வியாப்தமான காலாகோலங்களெல்லாம் செய்கிறதாகக் காணப்படுகிறது. அவர்கள் தான் குற்றவாளிகளாகிறார்கள். அந்த ஆறுபேர்களு மெங்கே?

கிங்கரர்:—ஸ்வாமி பராக்கு! இதோ! பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மயேஸன், சதாசிவன், ஐவர்கள் அஞ்சு பஞ்சாயத்தாராக குந்தியிருக்கிறார்களே இவர்கள் தான். பிள்ளையார் கடைத்தெருவுக்குப் போயிருக்கிறார்; அவரையும் பிடித்து வரட்டுமா?

அரசர்—முன்னே இந்த ஐவர்களையும் பிடித்துக்கட்டுங்கள், ஓடிவிடப் போகிறார்கள். இருவர்போய் பிள்ளையாரைப் பிடித்து வாருங்கள்.

(இங்கே பஞ்சாயத்தாரான பஞ்ச கர்த்தாக்களைப் பிடித்துக்கட்டி குற்றவாளிகள் ஸ்தானத்தில் நிற்க வைத்து விட்டார்கள். பிள்ளையாரைப் பிடித்துவந்ததில் அவர் புலம்புகிறார்.)

பிள்ளையார்:—ஐயையோ! நானல்ல; இந்த ஐந்துபேர் தான் பஞ்சகர்த்தாக்கள். இவர்கள்தான் சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களை நடத்துகிறவர்கள். நானென்னவோ, "என் வயிறே வனவாசம் கடுப்பே கயிலாசம்" என்று வயிற்றுப்பாட்டுக்கு எந்நேரமும், நடுத்தெருவிலும் கடைத்தெருவிலும் குந்திக்கொண்டு, மூசுருண்டை, மொச்சைக்கொட்டை, பயிறு, வெல்லம், தேங்காய், தோசை பணியாரங்களைக் கொதுக்கிக்கொண்டு வயிறு அடங்காமல் அந்த வேலையிலேயே இருக்கிறேன். நானிதில் ஒன்றுமே அறியேன். ஆனால் 'ஓம்' என்கிற பிரணவஎழுத்து என்னுடையது என்று சொல்லப்படுகிறது. அது (ஓம் என்கிற வடிவு நானாகிய பிள்ளையார் முகம் போலிருக்கிறதால் அப்படி வைத்துக்கொண்டாலும், அந்த ஓம் என்பதின் அ-உ-ம் மூன்றெழுத்துங்கூட இந்த சிவன் பிரம்மா விஷ்ணுதான். ஆகவே என்னை விட்டுவிடுங்கள். வயிறுபசிக்கிறது.

அரசர்:— அப்படியானால் நீர்போகலாம். இந்தப் பஞ்சகர்த்தாக்களையும் பிடித்து ஒரே கட்டாய்க் கட்டுங்கள்.

(கட்டும்போது பஞ்சமூர்த்திகளும் சொல்லுகிறார்கள்.)

"ஐயனே! அப்பனே! பஞ்சகிருத்தியங்கள் நடத்திவருகிறவர்கள் நாங்களாகவேயிருந்தாலும், அவை எங்களால் நடத்தப்படவில்லை

யாரோ ஸ்திரீஜாதிகள் சத்துவத்தைக்கொண்டு தான் நாங்கள் நடத்துகிறோம்; எங்களை வீணிலே தண்டனைக்குள்ளாக்குவது நன்றாயில்லையே !

(இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, தம் புருஷர்மார் குற்றவாளிகளாய்ப்போய் கட்டுண்டு கிடக்கிறார்களென்று கேள்விப்பட்ட பிரம்மாவின் மனைவி சரஸ்வதி, விஷ்ணுவின் மனைவி இலக்ஷுமி, சிவன் மனைவி பார்வதி, மயேஸன் மனைவி மயேஸ்வரி, சதாசிவன் மனைவி மனோன்மணி, இந்த ஐவரும் கூந்தலை அவிழ்த்துப் போட்டுக்கொண்டும் அழுது புலம்பிக் கொண்டும் முன் தானையை அவிழ்த்துக்கொண்டு வந்து மங்கிலியப் பிச்சைக் கேட்கிறார்கள்.)

"ஐயே ! அரசே ! எங்கள் புருஷர்மாரைக் கொல்லுவதினால் நாங்கள் ஐவரும் விதவைகளாய்ப் போகிறோம். எங்களுக்குச் சக்களத்திகளாயிருந்து வேலை நடத்துகிறவர்கள் வேறு ஐந்துபேரிருக்கிறார்கள். அவர்களில், ஒருத்தி உயிர்க்கு ஒளியாய் இருப்பவள் சிற்சத்தி; பிராணன் முதலிய வாய்வுகளுக்கு இருப்பவள் பராசத்தி; பஞ்சபூதமாயிருந்து ஆட்டுபவள் இச்சாசத்தி; ஐம்பொறியுணர்ச்சியாயிருப்பவள் ஞானசத்தி ; மற்றச் செய்கைகளுக்கெல்லாம் துணையாயிருப்பவள் கிரியாசத்தி ; அவர்கள் தான் சத்தியாயிருந்து இந்தக் காரியங்களை நடத்தி வருகிறவர்கள். எங்களையும் எம் பத்தாக்களையும் மன்னித்துவிட வேண்டும். எங்களுக்கு மாங்கில்ய பிச்சைத் தரவேண்டும் அரசரே !

அரசர்:—ஆனால் அவர்களைப் பிடித்துக் கட்டுங்கள்.

கிங்கரர்:—சுவாமி பராக்கு ! இதோ பிடித்து வந்தோம்.

(சத்திகள் ஐவர் முறையிடல்)

"ஐயனே, "உலகம் சத்திமயம்" என்பதாக நாங்கள் தான் சத்தியாயிருந்து வேலை நடத்துகிறோமென்றாலும் எங்கள் சத்தி வருக்கத்தில் ஒருத்தியாகிய மாயா சத்தி யென்னும் மாயை உங்களுக்குச் சாட்சி சொன்னாளா ? இதைத் தயை செய்யவேண்டும்.

அரசர்:—ஓ ! ஓ ! மறந்துபோனேன் ; அதோ அந்த மறைவிலே நின்றிருக்கும் மாயையை அழைத்து வா ; தன் சாட்சியைச் சொல்லட்டும்.

மாயையின் சாட்சி

"என் துரையே, துரை சிகாமணியே! நான் என் கதையை என்னென்று சொல்லுவேன், எவ்வள வென்று எடுத்துக் காட்டுவேன், நான் மற்றபடி வேத வேதாந்தப் பிரகார மில்லாமல், உலகத்தார் என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளுகிற மட்டில் விவரிக்கப் போனால்; எனக்குப் பிறப்புமில்லை, இறப்புமில்லை; நான் பெரிய உருவுமல்ல, சிறிய உருவுமல்ல, நான் இளந்தையுமல்ல, கிழமுமல்ல, நான் பிள்ளையு மல்ல, சிசுவு மல்ல, நான் உடலுமல்ல, உயிருமல்ல, நான் அறிவுமல்ல, தெளிவுமல்ல, நான் ரூபமல்ல, அரூபமுமல்ல, ஆனால் இவைக ளெல்லாமும் என்னிலேயே. என்னாலேயே, அண்டமும் நானே, பிண்டமும் நானே, ஆகாயமும் நானே, அஞ்சு பூதியமும் நானே, நிலமும் நானே, நீரும் நானே, நெருப்பும் நானே, காற்றும் நானே, உலகம் நானே, இராஜ்ஜியங்கள் நானே, திக்குகள் நானே, தீவாந்தரங்கள் நானே, சமுத்திரங்கள் நானே, சத்த மேகங்கள் நானே, மலைகள் நானே, குன்றுகள் நானே, அடவிகள் நானே, அத்வானங்கள் நானே, பேய்கள்நானே, பூதங்கள் நானே, மிருகங்கள் நானே, பட்சிகள் நானே, ஊர்வனங்கள் நானே, மச்சமகரங்கள் நானே, இரத்தினங்கள் நானே, முத்துகள்நானே, பவழங்கள் நானே, பயிர் பச்சைகள் நானே, பொன்னும் நானே, பொருளும் நானே, மண்ணும் நானே, மனையும் நானே, மகளும் நானே, அவள் தாயும் நானே, மனைவியும் நானே, அவள் புருஷனும் நானே, பாட்டியும் நானே, அவள் பேத்தியும் நானே, அப்பனும் நானே, மகனும் நானே, பாட்டனும் நானே, பேரனும் நானே, மாமனும் நானே, மைத்துனனும் நானே, மாமியும் நானே, மருமகளும் நானே, நகைகளும் நானே, நாணயங்களும் நானே, உடையும் நானே, உணவுகளும் நானே, சந்தோஷமும் நானே, துக்கமும் நானே, அழகும் நானே, அந்தக் கேடும் நானே, மேனியும் நானே, கருகலும் நானே, சிவப்புத் தோலும் நானே, கறுப்புத் தோலும் நானே, புஷ்டியும் நானே, கச்சலும் நானே, எலும்பும் நானே, சதையும் நானே, இரத்தமும் நானே, மூளையும் நானே, சுக்கிலமும் நானே, சுரோணிதமும் நானே, இரதியும் நானே, மன்மதனும் நானே, மோகமும் நானே, தாபமும் நானே, விருப்பமும் நா

னே, வெறுப்பும் நானே, பிள்ளை யுற்பத்தியும் நானே, பிறந்து சாகிறதும் நானே, செத்தவர்களும் நானே, அதற்கு-அழுகிறவர்களும் நானே, பிணமும் நானே, அதைப் புதைக்கிறவர்களும் நானே, தன் பெண்ஜாதியும் நானே, அன்னியன் பெண்ஜாதியும் நானே, தன் புருஷனும் நானே, அன்னிய புருஷனும் நானே, தன் தேகமும் நானே, அன்னிய தேகமும் நானே, கல்வியும் நானே, சாஸ்திரமும் நானே, ஞானமும் நானே, மோனமும் நானே, போதனையும் நானே, சாதனையும் நானே, நற்கந்தமும் நானே, துற்கந்தமும் நானே, சுகமும் நானே, பிணியும் நானே, அவுஷதங்களும் நானே, பாஷாண வகைகளும் நானே, சித்தும் நானே, வித்தையும் நானே, யந்திரங்களும் நானே, தந்திரங்களும் நானே, வித்துவான் நானே, மூடனும் நானே, அரசனும் நானே, ஏழையும் நானே, உயர்ந்த ஜாதியும் நானே, தாழ்ந்த ஜாதியும் நானே, எஜமானனும் நானே, அவன்-அடிமையும் நானே, குதிரையும் நானே, அதன்மேல்-ஏறியிருப்பவனும் நானே, தண்டனையும் நானே, தண்டனைப் படுகிறவனும் நானே, எல்லாம் நானே, ஆனால் நான் பெண்மயமாயிருப்பதால், தேவர்களெல்லாம் என்னில் மயங்கினர். சாஸ்திர விற்பன்னர்களெல்லாம் என்னில் மயங்கினர். வேதபோதகர்களெல்லாம் என்னில் மயங்கினர். நன்னெறியாளரெல்லாம் என்னில் மயங்கினர். வீராதி வீரர்களெல்லாம் என்னில் மயங்கினர். பராக்ரம சாலிகளெல்லாம் என்னில் மயங்கினர். உயர்ந்த ஜாதிகள் ஈன ஸ்திரீகளிடமாய் என்னில் மயங்கினர். இம்மேரையே உலகமெல்லாம் மாய்கை வேடிக்கை காட்டுகிறது நான்தான். கடைசியாகச் சொல்லப்போனல் சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரக மென்கிற பஞ்ச கிருத்தியங்களும் நானே, அந்தக் கிருத்தியங்களைச் செய்கிற பிரம்ம, விஷ்ணு, ருத்திர, மயேஸ, சதாசிவ என்கிற பஞ்ச கர்த்தாக்களும் நானே, அந்த பஞ்ச கர்த்தாக்களுக்கும் வேலை வைக்கிற பரப்பிரமும் நானே, 'ஆதியல்ல செம்பினுறை களிம்புதானும், ஆராயில் அதற்கதுவு மனதியாகும்' என்றபடி அந்த அனதி வஸ்துவிலே கலந்திருக்கும் மூலப் பிரகிருதியும் நானே தான். அந்தப் பிரம்மம் எப்படி யிருக்கிறதோ, அப்படியே தான் நானும் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல, அதுவுமல்ல, இதுவுமல்ல, எது

வுமல்ல. நான் மாயை; மாயை; மாயை! இதோ என் ரூபத்தைப் பார்.

(என்று சொல்லும்போதே, மாயை தன் அலங்கார ஆடையை அவிழ்த்தனள். அவிழ்த்த அதே சமயம் அங்கு யாதொருவரையும் காணோம். எல்லாம் மாயையாய் மறைந்துபோனது. அரசரையும் காணோம், பஞ்சாயத்தாரையும் காணோம், ஆன்மவாதி சரீர வாதியைக் காணோம், நீதி சபா மண்டபத்தையும் காணோம், கடைசியாக அந்தப் பட்டணத்தையே காணோம், நின்றவன் பிரசாது ஒருவனே.)

இப்படியாக விஷயம் நடந்து மறைந்துபோகவும், இங்கு பிரசாது பார்த்தான், தன்னையன்றி யாரையும் காணவில்லை. தனக்கு தயாநிதியம்மாள் காட்சி கொடுத்த ஜம்னு நதி தீரத்தில் தான் நிற்கிறான். இங்கே இவனுக்கு உலக விஷபங்களெல்லாம் தெரிந்து விட்டது. இந்த மாயையில் மூழ்கியிருந்த நிமிஷகெடுவிலே, உடலுக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தா சம்பந்த வழக்கில் எல்லாம் கேட்டறிந்து கொண்டானல்லவா? சர்வ விஷயமும் இவனுக்குச் சொல்லாமல் சொல்லிக் காட்டிவிடப்பட்டதல்லவா? இப்போது தான் இவனுக்கு "ஆண் முந்தியா பெண் முந்தியா" என்கிற சங்கை ஒழிந்தது. ஆணும் முந்தியில்லை பெண்ணும் முந்தியில்லை, எல்லாம் பகவத் சூட்சமே என்று தீர்மானித்துக்கொண்டு அந்த ஞானப் பெண் தயாநிதியம்மாளை தேடிப் புறப்பட்டான்.

(அடுத்த வால்யத்தில் இதை சம்பந்தித்த கதை எழுதப்படும்.)